வாழ்க்கையின் நாதம்

அல்லது

வானக் குயில்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

41-ஆவது நாவல்

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, கோடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

 [ரூ. 1—4.

ஸ்ரீ

வாழ்க்கையின் நாதம்

அல்லது வானக்குயில்



1

"உலகத்தையே மயக்கும் நேரங்களில் அந்தி நேரம் ஓர் தனி மகிமை பெற்றதல்லவா? மாலைப் பொழுது சூரியன் உஷ்ணம் தணிந்து
ாந்த ரூபமாய் மேற்கு நோக்கிச் சென்று விட்டான். சிலு சிலுப்
ான காற்றும், மனோரம்யமான அந்தி வேளையின் அழகும்

திண்ணைமேல் உட்கார்ந்து வேடிக்கை பார்த்து ஆனந்தப்பட்டு கொண்டிருந்தார்கள்.

நாம் பட்டாசு விடுவதைப் பார்த்து இவர்கள் சந்தோஷி பதைக் கண்டு சகியாது பொறாமை கொண்ட அந்த குழந்தைக இவர்களை விரைக்க விரைக்கப் பார்த்தார்கள். இந்த கள மற்ற தூய்மையான குழந்தைகளுக்கு அது ஒன்றும் புரியவில் யாதலால் அங்கேயே உட்கார்ந்து பக்கத்து வீட்டுப் பெண்ணை கிழவரையும் ஆவலோடு நோக்கி,

வாஸ:—தாதா! நாங்களும் அங்கே வந்து பட்டாசு சுட டுமா? சிவகாமி! நானும் வரட்டுமாடீ?....

சிவகா:—நாங்க ஏன் குடுப்போம்? ஒங்கப்பாவெ வா குடுக்கச் சொல்லு. பிச்சை வாங்கி பட்டாசு சுட வெக்கமில்லா வரயொ?....

கிழவர்:—தெ குட்டி! பேசாமெ இரு. இதோ ஒரு நிமி அவாளெ வெறட்டி புட்ரேன் பாரு.....

என்று கூறிக்கொண்டே ஒரு பட்டாசைக் கொளுத்தி ரா வாஸந்திகா உட்கார்ந்திருந்த இடத்தில் கொஞ்சமும் ஈவிர மற்றுப் போட்டுவிட்டு, குழந்தைகளோடு கடகடவென்று சி தார். என்னே அக்ரம நெஞ்சின் அழுத்தம்! பராக்காக பா துக் கொண்டு உட்கார்ந்திருந்த குழந்தைகளின் பக்கம் பட்டா எறிந்ததும், குழந்தைகள் மிரண்டு, நடு நடுங்கிப் போய் உரு யடித்துக் கொண்டு, க்ரீச் சென்று கூவியவாறு எழுந்து ஓட் பிடித்தார்கள். இதற்குள் பட்டாசும் டபீரென்று வெடித்த அந்த வெடியின் ஒலிக்குமேல் கிழவரின் நகைப்பும், குழந்தைகள நகைப்பும் சப்தித்தன என்றால் அவர்களின் மனோ நிலைமை கூற வேண்டுமா?

2

மக்கள் பலராலும் கௌரவிக்கப் படுவதும், பூஜிக்கப் படுவதும் அவர்களின் உத்தமமான நல்லொழுக்கத்தினாலும், நன்னடத்தையினாலுமே யன்றி வேறினாலில்லை. அவ்வூரில் 'மகா சாது, மகா யோக்யன்' என்று தையல்கார திருமூர்த்தியைப் போற்றாதோர் கிடையாது. திருமூர்த்தியின் வம்சம் வெகு மேன்மையான பரம்பரையைச் சார்ந்ததாகும். அவனது பிதா தமக்கிருக்கும் சொல்ப நிலங்களில் உழுது வயிறாற உண்டு காலந் தள்ளி வந்தார்.

ஆனால் யார் விதி யாரை விடுகிறது? பஞ்ச காலத்தின் தாண்டவம் ஆரம்பித்த உடனே பயிர்களை யழிக்கும் பூச்சிகள் பயிர்களில் நிரம்பி விட்டதால் விளைவுக்குப் பஞ்சம் ஏற்பட்டுச் சாப்பாட்டுக்கும், வரிப்பணம் செலுத்துவதற்குமே வெகு கஷ்டமாகி விட்டது. இந்நிலைமையில் சில வருஷங்கள் பலவித கஷ்டப்பட்டு முயற்சிகள் செய்தும் பலனற்றதாகி விட்டதால் அந்த கிராமத்து ஜனங்களே பிழைப்பை நோக்கி வேறு நகரங்களுக்கு ஓடவாரம்பித்தார்கள். அவர்களோடு திருமூர்த்தியின் தாய் தகப்பனாரும் சிறுவனாகிய திருமூர்த்தியுடன் ஓடி வந்தார்கள். அங்கும் பிழைப்பதற்கான சாதனங்கள் ஒன்றுமே கிடைக்கவில்லை.

படிப்போ ஒன்றுமே தெரியாது. இந்நிலைமையில் ஒரு தையற்கார சாயபு இவருக்கு சிநேகமாகி, இவரைக் கடையில் வைத்துக் கொண்டு தையல் வேலை கற்றுக் கொடுத்து கால் வயிறு கஞ்சி வார்த்து வந்தான். நாளடைவில் அவர் நன்றாக சகல வித வெட்டுக்களும் தாமே வெட்டித் தைக்கும் சாமர்த்தியம் பெற்று விட்டார். சில வருடங்கள் சாயபுவின் கடையிலேயே ப்ரதான தையல்கார வேலை செய்து வந்தார்.

சாயபு காலமாகிவிட்ட பின்னர் அவரே தனிமையில் தையல் கடையொன்று வைத்து, அதில் தன் மகனுக்கும் ஆதி முதல் இதையே கற்றுக் கொடுத்து வந்தார். அத்தொழில் கால க்ரமத்

தில் இவர்களுக்குப் போதிய ஆதரவும், லாபமும் கூடக் கொடுத்து வந்தது. திருமூர்த்தி சிறு பிராயம் முதலே கை தேர்ந்த தையல் காரனாகி விட்டான்.

திருமூர்த்திக்கு ஏற்ற நிழல் போன்ற திருவேணி என்ற வனிதாமணியை விவாகம் செய்வித்தார்கள். அவளை, க்ருக தர்மத்திலும் ஒற்றுமை மிகுந்த தம்பதிகள் என்ற புகழ் தேவி ஸ்வீகரித்தாள். அவனுடைய பிதா காலமாகிய பின்னர், தன் பிதா நடத்திய தொழிலைச் சற்றும் சளைக்க விடாமல் நடத்தி வந்தான். வெகு விரைவிலேயே இரு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டான்.

எந்த காலத்திலும், எந்த ஒரு தனிப்பட்டத் தொழிலும் அதற்குப் போட்டி இல்லாமல் நடந்ததே இல்லை. எத்தகைய காரியமாயினும், தொழிலாயினும் அதற்குப் போட்டியும், எதிரிகளின் பொறாமையும், அதனால் நஷ்டமும், துன்பமும் ஏற்படுவது சகஜமாகிவிட்டது. திருமூர்த்தி மற்ற சில தையற்காரர்களைப் போல ஊரில் இருக்கும் துணிகளை எல்லாம் வாங்கிக்கொண்டு "இதோ தைத்துக் கொடுத்து விடுகிறேன்; நாளைக்குக் கொடுக்கிறேன்" என்று கூறி, குறித்த நேரத்தில் கொடுக்காமல் ஏமாற்றியும், ரவிக்கை, ஜாக்கெட்டு, சொக்காய், கவுன், பாவாடை முதலியவைகளைச் சரியாய் வெட்டி அளவுபடி அழகாய் தைக்காமலும், துணிகளைத் திருடிக் கொண்டும், கலுக்கியும், அழுக்காக்கியும், கவனியாது அலக்ஷியமாகப் போட்டும், சில சமயம் எலியும் கடிக்கும்படி வைத்தும் இதுபோல் ஒழுங்கற்ற முறையில் ஒரு நாளும் நடக்கவே மாட்டான்.

தன்னால் சாத்யமான வரையில்தான் துணிகளை வாங்குவான். குறித்த தவணை தவறாது தைத்துக் கொடுப்பான். இதனால் திருமூர்த்தி யோக்யமானவன் என்ற பொதுஜன வாக்கையும், ஆதரவையும் பெற்றுவிட்டான். இவனைப்போல் இதே தொழில் செய்யும் இரு தொழிலாளிகள் தமது குற்றத்தையும், ஒழுங்கற்ற வேலை முறையையும் அடியோடு மறந்துபோய், திருமூர்த்தியினால் தான் தமக்குத் தொழில் சரியாக நடக்காமல் நஷ்டம் வந்துவிட்டதென்ற ஓர் எண்ணம் உண்டாகி, அவன்மீது கோபமும், ஆத்திரமும் கொண்டார்கள்.

"எனக்கு இரு கண்களும் போனாலும் பாதகமில்லை; பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு கண்ணாவது போய்விட்டால் போதும்" என்று ஒரு புண்ணியவான் நினைத்ததாகப் பழமொழியுண்டு. அதே போல் அந்த தையற்காரர்களும், இன்னும் சில தையற்காரர்களுடன் கூட்டம் போட்டுப் பேசி ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டார்கள்.

அதாவது,—ஒவ்வொரு துணிக்கும் கூலியைக் குறைத்துவிடுவது. தனியாக ஸ்பெஷல் ஆட்களை வைத்து வீடு வீடாகச் சென்று துணிகளை வலுவில் வாங்கி தைத்துக் கொடுப்பது. சில ஏழைகளுக்கு துணியும் தாமே கை விட்டு வாங்கிக் கொடுத்து நாளடைவில் பணம் வாங்கிக் கொள்வது, தடபுடல் ப்ரசாரம் செய்வது என்று ஆரம்பித்தார்கள்.

இதற்கு ஏற்றாப்போல் நாகரிகமும், தினே தினே விருத்தியாகிக்கொண்டே வருவதன் மூலம் ஒவ்வொரு பெரிய மனிதரின் வீட்டிலும் கை மிஷினும், கால் மிஷினுமாக தையல் மிஷின்கள் வாங்கி, சிமாட்டிகளே தமக்கு வேண்டியவற்றைத் தைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மேற்கண்ட போட்டியும், வீட்டுத் தையல்களும் ஒன்று சேர்ந்து வெகு விரைவிலேயே திருமூர்த்தியைத் தாக்கியதால் அவனது தொழில் குன்றி வருவாயே இல்லாமல் கேவலமான நிலைமைக்கு வந்து விட்டது. "எல்லாம் சோதனைக் காலம். கடவுளின் திருவுள்ளமிது" என்று தம்பதிகள் மனந் தேறுவார்களே யன்றி அப்போதும் அவர்களது விரோதிகளின்மீது பகையோ, கோபமோ கொள்ளாது, தம் தலை விதி என்றே எண்ணித் துணிந்தார்கள்.

திருமூர்த்தி மகா மானியாகையால் தானாக வலுவில் சென்று பல்லிளித்துக் கெஞ்சிக் கூத்தாடி, கூழைக் கும்பிடு போட்டு கள்ளப் பேச்சு பேசி, அட்டகாஸம் செய்யும் மனிதனல்ல. தன்னை நம்பி மதித்து யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு பழய ஒழுங்கு மாறாது தைத்துக் கொடுப்பான். சில சமயம் தையல் மெஷினுக்கு வேலையே இல்லாமல் சும்மா தூங்கும்; அந்நிலையில் அதைப்

பார்க்கும்போது திருமூர்த்தியின் மனம் மிகவும் வருந்தும். தன் குழந்தைகளை விட அதிகமான பாசத்துடன் அந்த தையல் மெஷினை அவன் நேசித்து வந்தான்.

மெஷின் வேலை செய்யும்போது உண்டாகும் ஓசையை அவன் ஓர் உயர்ந்த சங்கீத நாதம்போல் எண்ணிப் பூரிப்பான். அதையே அவன் வாழ்க்கையின் ஜீவநாதமாகவும் நினைப்பான். இம்மாதிரி நிலைமையில் தொழில் க்ஷீணமடைந்து மாதா மாதம் சாப்பாட்டிற்கும், வீட்டு வாடகைக்கும், குழந்தைகளின் போஷணைக்கும் கூட வருவாய் காணுமல் கஷ்ட திசையே தலை தூக்கித் தாண்டவமாடத் தொடங்கியது. சுகஜீவியாக இருந்த காலம் மறைந்து கஷ்ட ஜீவனத்தில் ப்ரவேசித்தார்கள். மூர்த்தியின் தாயார் தன் மகனுக்குச் சம்பவித்த போட்டி நஷ்டத்தைக் கண்டு மனமுருகினுள். ஆனல் அவள் தள்ளாத கிழவி என்ன செய்ய முடியும்?

தையலுக்கென ஓர் தனி விடுதியை வைத்திருந்தது போய் ஒரே அறையில் தையலும், குடும்பமும் நடக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமையில் சுழன்றுழலும் பலர் தையல் கடைகளை வைத்து விட்டார்கள். பல குடும்பப் பெண்மணிகள் தனியாகத் தையல் கடை வைத்து பெண்களுக்குப் பெண்கள் தைத்துக் கொடுப்பதாக ப்ரசாரம் செய்து வந்தார்கள். எல்லாம் சேர்ந்து திருமூர்த்தியின் தொழிலுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. குடும்பமும் பெருகி தொழிலும் க்ஷீணமாய் விட்டால் எப்படிப் பிழைப்பது? இந் நிலைமையில் நாலைந்து வருடங்களாகி விட்டன. எல்லா மாதங்களையும்விட இம்மாதம் அடியோடு வருமானமே இல்லை.

திருவேணி:—நேற்று யாரோ தேடினரே அவர் இன்னும் வரவில்லையா? கார்த்திகைப் பண்டிகைக்கு இன்னும் மூன்று நாட்கள் தானே இருக்கின்றன.

திருமூர்த்தி:—வேணீ! நமக்கு இப்போது சரியான வேளை இல்லை போலிருக்கிறது. நேற்று வந்தவரை அந்த கடைக்காரரின் கடையில் பார்த்தேன். இனிமேல் அவர் இங்கு என்

வருவார் ? 'கார்த்திகை வந்து விட்டதே, வருடம் ஒரு நாள் வரும் அழகான பண்டிகைக்கு செய்வதற்குக் கூட நம் கை தற்சமயம் வரண்டு கிடக்கிறதே' என்று என் மனம் தவியாய்த் தவிக்கிறது. குழந்தைகள் பட்டாசு சுடும் ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டு ஏங்கி நிற்கிருர்கள். அதைப் பார்க்கும்போது மனம் பதறுகிறது. என்ன செய்வேன் ?

திருவேணி :—பட்டாசு இல்லாது போனாலும் போகட்டும். அரை வீசை எண்ணெயும், அதற்கான திரி, அகல் முதலியனவும் வாங்கி, நைவேத்யத்திற்கு ஒரு பழமாவது வைத்து கார்த்திகைப் பண்டிகையை நிறைவேற்றும்படியான உதவி கிடைத்தாலும் போதும். வருடத்திற்கு ஒரு முறை வரும் உயர்ந்த பண்டிகையல்லவா இது ?

அச்சமயம், பட்டாசை எறிந்ததனுல் மனங் கலங்கிப்போன குழந்தைகள் அழுதுகொண்டே உள்ளே ஓடி வந்து பெற்ருேரின் மீது விழுந்து கட்டிக் கொண்டு விக்கி விக்கி அழுதபடியே,

வாஸ :—அம்மா! அம்மா! பக்கத்தாத்து பொண்ணு பட்டாசு சுட்டுண்டிருக்கா. நாங்க அங்கே நின்னு வேடிக்கை பாத்தோம். அதுக்கு அந்த தாதா பட்டாசெ கொளுத்தி எங்க மேலெ போட்டுட்டாம்மா (விக்கி விக்கி அழுகிருள்) நாங்க ஓடியே வந்துட்டோம்.

திரு :—அம்மா ! வாஸந்தி ! நீ அப்படீல்லாம் போய் நிக்கக் கூடாதுன்னு சொன்னேனே....எம்மா அங்கே நிக்கணும் ? அவாளுக்கு ஒன்னே கண்டா எளப்பமா இருக்கு. நீ இனிமே அவாளோடே பேசாதேம்மா ! (குழந்தையைத் தடவிக் கொடுத்து சமாதானம் செய்கிருள்.)

ரங்க :—அப்பா ! இனிமே அவாத்துப் பக்கமே போகமாட்டோம். எங்களுக்கு எம்பா பட்டாசு வாங்கித் தரல்லே ? பட்டாசுப்பா ! எனக்கும் அக்காக்கும் சுடணும்னு ஆசையா இருக்குப்பா ! தீபாவளியும்போது கொஞ்சமா வாங்கிக் குடுத்துட்டு கார்த்திக்கு ரொம்ப வாங்கித் தரேன்னு சொன்னயேப்பா ! இப்ப எம்பா இன்னும் வாங்கல்லே?

திருமூர்த்தி:—கண்ணு! ராஜு! கார்த்தி பண்டிகைக்கு இன்னும் மூணு நாள் இருக்கே, அதுக்குள்ளே ஸ்வாமி எனக்கு பணம் குடுத்தா ஒடனே நெறய பட்டாசு வாங்கித் தரேன். இப்போ கையிலே காசில்லேடா கண்ணு. (கண்ணில் ஜலம் ததும்புகிறது.)

வாஸந்தி:—(அப்பா மடியில் தாவி உட்கார்ந்து) அப்பா! ஒங் கையிலே இப்பொ பணமில்லே?....

திருமூர் :—இல்லேடா கண்ணு!

வாஸந்தி:—எப்பா ஒனக்கு மாத்ரம் பணமில்லே? எல்லா ராத்து பசங்களும் பட்டாசு சுட்ராளே! அவா அப்பாக்கு மாத்திரம் பணம் எதுப்பா?

திருமூர் :—வாஸந்தி! அவாள்ளாம் புண்ணியம் பண்ணவாப்பா! நான் பாவத்தைப் பண்ணவன். அதனாலேதான் கடவுள் எனக்குப் பணத்தெ குடுக்கல்லே. இதோ பாரு வாஸந்தி! ராஜு! காஸைப் போட்டு பட்டாசு வாங்கி அதை கொளுத்தி கரியாக்ரதுலே என்ன லாபம் சொல்லு. நமக்கு இப்ப கொஞ்சம் பணம் கடவுள் குடுத்தாக்கா அதைக் கொண்டு நெறய வௌக்கு ஏத்தி ஸ்வாமிக்கு வைத்தா ரொம்ப நல்லது. புண்ணியமுண்டு. பார்க்க ரொம்ப அழகா இருக்கும். கடவுளுக்கும் அது ரொம்ப சந்தோஷமாயிருக்கும்.

வாஸ:—அப்படின்னு பட்டாசு வாங்கித் தரமாட்டயா? இப்ப பட்டாசு சுட்ரவாள் மேலே எல்லாம் கடவுளுக்கு கோபம் வருமா? போப்பா! அது பொய். கடவுளுக்கு கோபமே வராதுன்னு அம்மா கதை சொல்லி இருக்காளே, அந்த கடவுள் எப்பா நமக்கு மட்டும் பணங் குடுக்கல்லே?

திருவேணி:—வாஸந்தி! நீ சமத்தோதான்னோ! அப்பா கையிலே காசிருந்தா உங்களுக்கு வாங்கித் தராமே இருப்பாரா! நீ தான் பாக்கரேயப்பா நாலு நாளா ஒரு ரவிக்கைகூட பாருர் தெக்க தரல்லே. மடிச்சே வெச்ச எடத்துலேயே இருக்கு. அப்பாவெ வெறுமெ தொந்தரவு செய்தா அவருக்கு வருத்தமா இருக்காதா! ஸ்வாமி நமக்கு குடுக்கட்டும். அதுலே நாம்ப முதல்லே கார்த்திக்கு விளக்கு ஏத்தர வேலெதான் செய்யணும். அதுக்கு மேலே, பட்

டாசு வாங்க முடிஞ்சா வாங்கித் தரேன். விளக்கு எத்தறதுதான் முக்கியம்.

வாஸ:—எம்மா! அப்படின்னா சாமியெ வேண்டிண்டா குடுக்கமாட்டாரா? யார் யாரோ சாமியெ வேண்டினா; ஏதேதோ குடுத்தாருன்னு நீ கதெ சொல்றயே! அப்படி நமக்கும் கொடுப்பாரா! (கொஞ்சலாக தந்தையை நோக்கி) அப்பா! நீ வருத்தப் படாதே! நாங்க சாமியெ வேண்டிண்டு ஒனக்கு நெறய பணம் குடுக்கச் சொல்ரோம். அப்ப வாங்கித் தரயாப்பா! அடே ராஜு! நீ எந்து வாடா! நாம்ப சாமியெ வேண்டிக்கலாம்.—

என்று கூறிக்கொண்டே ராஜுவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே வெளியே ஓடினாள். தம்பதிகளின் கண்கள் தடாகம்போல் நிரம்பின. பெரு மூச்சு மார்பைப் பிளந்துகொண்டு வந்தது. வேணி பூமாதேவியைப் பார்த்தாள். மூர்த்தி வேணியைப் பார்த்தான். இருவரும் பதுமைபோலானார்கள்.

3

குழந்தைகளின் மனத்தில் விவரிக்க இயலாத பெருத்த விசனமும், குழப்பமும் உண்டாகி விட்டன. அவர்கள் மனத்தில் கடவுளை வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற பெரும் ஆவல் தாண்டவமாடுகிறது. இடை இடையே அங்காங்கு சப்திக்கும் பட்டாசின் சப்தம், இவர்களின் மனத்திலுள்ள உறுதியைக் குலைத்து ஆசையைக் கிளறுகிறது.

இருவரும் தெருப்பக்கம் போனார்கள். தாங்கள் கடவுளை எப்படி வேண்டுவது? தங்களுக்கு ஒன்றுமே தெரியாதே என்று சற்று விழித்தார்கள். மீண்டும் உள்ளே வந்தார்கள். அப்போது மூர்த்தி எழுந்து வெளியே சென்றான். வேணி குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீருக்காகக் குழாய்ப்பக்கம் சென்றாள்.

இச்சமயத்தை யறிந்த குழந்தைகள் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

இவர் தம் பெற்றோர்கள் பூஜை செய்யும் படத்தருகில் சென்று நமஸ்காரம் செய்தார்கள். "ஸ்வாமீ! எங்கப்பாக்கு நெறய பணம் குடுக்கமாட்டியா! ஊர்லே எல்லாரும் பட்டாசு சுட்றாளே! எங்களுக்கு மட்டுந்தானே ஒன்னுமில்லே? சாமீ! எங்கப்பாவும், அம்மாவும் நித்தியம் ஒன்னே வேண்டிக்கிறாளே! அவாளுக்கு நீ ஏன் பணங் குடுக்கமாட்டேங்கறே? எனக்கும், என் தம்பிக்கும் பட்டாசு சுடணும்னு ஆசெ அடிச்சுகிறதே. பட்டாசுக்காவது பணங் குடுக்கமாட்டியா?" என்று வாஸந்தி ஸ்தோத்திரம் செய்தாள். ராஜு "அக்கா! ஸ்வாமிக்குப் பாட்டு பாடினாதான் ரொம்ப இஷ்டம்னு அம்மா சொல்றாளே! உனக்குப் பள்ளிக்கூடத்லே சொல்லிக் குடுத்தாளே அந்தப் பாட்டே இப்ப பாடி சாமியெ வேண்டலாண்டீ!" என்றான். வாஸந்தி அதை உடனே ஆமோதித்துப் பாடவாரம்பித்தாள்.

ராகம்—மால்கோஸ். ஏக தாளம்.

கதி இலை கருணை செய்வாய் மதுசூதனனே!
மனம் மிக நொந்தேன். (கதி)

1. விதியினை மாற்றிடும் வேந்தன் நீ யல்லவோ!
மதுவெறியன்போல் மயங்கிடல் நீதியோ! (கதி)

2. பக்தரைக் காத்திடும் பணி மறந்தாயோ!
உத்தமனே இன்னும் உறக்கம் கொள்ளாதே! (கதி)

"ஸ்வாமீ! எங்கம்மா, அப்பா அழுதாக்கா எங்களுக்கும் அழுகை வரது. நீ அவாளே அழாமெ பாத்துக்க மாட்டியா! பணம் குடுக்கமாட்டியா! எங்க ஆசெயெ பூர்த்தி செய்யமாட்டியா! சாமீ! பெருமாளே!" என்று குழந்தைகள் மனங் குழைந்து வேண்டும்போது இடுப்பில் தண்ணீர் குடத்துடன் திருவேணி இதைப் பார்த்துக்கொண்டே வந்துவிட்டாள்.

குழந்தைகளின் தூய்மையான இதய வேகத்தின் உணர்ச்சி வெள்ளமும், இனிமையாக மழலை மொழியில் பாடும் பாட்டும் அவள்

மனத்தைப் பரவசமுறச் செய்தன. கண்ணீர் பெருகி விட்டது. தான் வந்ததைக் குழந்தைகளறிந்தால், பாட்டை நிறுத்திவிடப் போகிறார்களே என்று கதவின் பக்கத்திலேயே நின்று இவர்கள் பக்தியைக் கண்டு சந்தோஷமடைந்துகொண்டிருந்தாள்.

குழந்தைகள் மீண்டும் "ச்வாமீ! நீ எங்கப்பாக்கு நெறய துணியெ தெக்க வாங்கி குடு. அப்பா எனக்குப் பட்டாசு வாங்கித் தருவா. அந்த பட்டாசெ ஒன் முன்னே வச்சு ஒனக்கே பூஜை பண்ணிட்டு ஒன்னெதிரேயே சுட்டுடரோம். ஒனக்கு இன்னும் நெரய வௗக்கு ஏத்தி வைக்கரோம்" என்று வேண்டிக்கொண்டு நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்து வந்தார்கள். வேணி அப்போதே வந்தவள் போல் உள்ளே சென்று குடத்தை வைத்தாள். சந்தோஷப் பெருக்குடன் குழந்தைகள் ஓடிவிட்டார்கள்.

தாங்கள் ச்வாமியை வேண்டிக்கொண்டு விட்டதால் உடனே ச்வாமி தங்களுக்குப் பணம் கொடுத்துவிடுவார் என்ற ஓர் நம்பிக்கை அவர்கள் மனத்தில் ஊன்றிவிட்டதால், தங்கள் வீட்டுக்கு யார் வருவார்கள்? யார் துணி கொடுப்பார்கள்? என்கிற எதிர் பார்ப்பும், அதே எண்ணமான ஏக்கமும் உண்டாகிவிட்டன. தன் பிதாவுக்கு யாராவது துணிகள் தைக்கக் கொடுத்தால்தான் பணம் இல்லாவிட்டால் இல்லை என்ற திட்டம் மட்டும் வாஸந்திகாவுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

எதிர் சாரியிலுள்ள மூர்த்தியின் போட்டிக் கடைக்கு ஏராளமான ஜனங்கள் செல்வதைப் பார்க்கும்போது இளமையும், தூய்மையும் கலந்த இளந்தளிர் போன்ற வாஸந்திகாவின் இதயத்திலும், தன் பிதாவுக்கு இம்மாதிரி வரவில்லையே என்ற எண்ணமும் அந்த உணர்ச்சியும் உண்டாகியது. அன்று வெகு நேரம் வரையில் வீதியிலேயே நின்று பார்த்தாள். ஒருவர் கூட வராமையினால் வாஸந்திகாவின் மனத்திற்கு சற்று சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டு விட்டன.

வாஸந் :—ராஜு! சாமிக்கு கொஞ்சங்கூட புத்தியே இல்லேடா! நாம்ப இத்தனே வேண்டிண்டும் அப்பாவுக்கு வேலெ குடுக்க யாருமே வரல்லே. எதிர் கடைக்கு மட்டும் எத்தனெ பேர் போரா பாத்தியா! சாமி ரொம்ப கெட்டவர்டா!

ராஜூ:—ஆமாம் அக்கா! சாமிக்கு எரக்கமே இல்லெ. அக்கா நான் ஒன்னு செய்யட்டுமா! அந்த கடைக்கி எதிரெ நின்னுண்டு துணி கொண்டுவரவாளெல்லாம் பாத்து எங்கப்பா கிட்டெ குடுங்கோ! ரொம்ப நன்னா தெச்சு தருவார்னு கூட்டிண்டு வரட்டுமா?—என்றான்.

வாஸ:—ராஜூ! நான்கூட அதான்டா நெனச்சேன். நீயே சொல்லிட்டே. நாம்ப ரெண்டு பேரும் அந்த மாதிரி சேசு ரெண்டுபேரெயானு அழைச்சுண்டு வந்துட்டமானுக்க ஒரு துணிக்கார பணம் பட்டாசுக்கும், இன்னொரு துணிக்கார பணம் வெளக்கு ஏத்தரத்துக்கும் ஆகும். அப்பாக்கு தெரியாமெ அப்படி தான்டா செய்யணும். வாடா—என்று ராஜூவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு திண்ணையை விட்டிறங்கினாள்.

அப்போதுதான் இதைக் கேட்டுக்கொண்டே வந்த திரு மூர்த்தி இவர்களிருவரையும் தடுத்து "நில்லுங்கள்: நீங்க ரெண்டு பேரும் நல்ல புத்திசாலி, சமத்துன்னு பாத்தேனே! இப்படியா அசட்டுத்தனமா ஓடுவா? சீச்சி! இந்த மாதிரி செய்யவே கூடாது. ச்வாமி நமக்குன்னு குடுத்தாதான் நாம்ப வாங்கிக்கலாமெ தவிர எதிராளிக்கு வரதெ நாம்ப தடுக்கறது ரொம்ப பாவம். தெரியுமா? நமக்கு இல்லாபோனாலும் கஷ்டப்படலாம். அசலாரெ கெடுக்கவே கூடாது. சாமி கண்ணெ குத்திடும். பிச்செ வாங்கப் போறாப் பலே இப்படிப்பட்ட காரியம் செய்தால் இனிமெ அடிப்பேன். பத்ரம். வாருங்கோ உள்ளே" என்று அதட்டியபடியே இழுத்துக்கொண்டு போய் விட்டான்.

குழந்தைகளின் தவிப்பும், துக்கமும் இன்னும் அதிகமாய் விட்டன. இரவு சாப்பாடும் கொள்ளவில்லை; சரியான நித்திரையும் கொள்ளவில்லை. தாங்கள் பட்டாஸ் வெடிப்பதுபோலும், விளக்கு நிறைய ஏத்தி வைத்திருப்பதுபோலும் கனவு கண்டுகொண்டே வாய்ப் பிதற்றும் குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்ட தம்பதி களின் விசனமும், ஏக்கமும் அதிகரித்தன. கடவுளைத் தொழுது வேண்டியபடியே எப்படியாவது குழந்தைகளின் ஆவலை ஓரளவு பூர்த்தி செய்தால் போதுமே! என்ற ஏக்கம் பிடித்துக் கொண்டது.

மைதிலிக்கு வயது இன்னும் 15 பூர்த்தியாகவில்லை. 'பால் வடியும் முகம்; சந்திர பிம்பம் போன்ற முகம்' என்றால் அவளுக்கே தகும். ஆனால் அம் முகத்தைப் பார்த்த யாரும் "இத்தனை அழகிய முகம் ஏன் இப்படி வாடி வதங்கிச் சோபையற்றுக் கிடக்கின்றது?" என்று தம்மை மறந்து கூறிவிடுவார்கள். அவளுடைய பூர்வோத்திரம் அவளுக்கே தெரியாது என்றாலும் மிகை யாகாது.

மைதிலிக்கு தனியரசியைப் போன்ற ப்ரம்மாண்ட பங்களாவும், அதற்கான மற்ற சகல சவுகரியங்களும், பரிபூர்ண செல்வமும் இருந்தும் ஏன் இந்த வாட்டம்? இவ்வளவு சோகம்? அடிக்கடி விடும் பெருமூச்சின் போராட்டமென்ன? இவைகளை அவ்வழகிய நங்கை தனது 12 வயதான பிறகே அறிந்தாள். அன்று முதல் இன்று வரையில் அவள் அறிந்த விபரீதமான விஷயம் அவளையே விழுங்க வரும் பேய்போலாயிற்று.

அதாவது,—மைதிலியின் பெற்றோர்கள் மிகுந்த செல்வவந்தர்கள். ஏராளமான செல்வக் களஞ்சியத்திற்கு மைதிலியே பொறுப்பாளி. அவளுடைய துரதிருஷ்டம், அவளுடைய தாயாரை அவள் பிறந்த அன்றே விழுங்கிவிட்டது. தந்தை அவளை வைத்துக் கொண்டு வளர்க்கும் முறையில் வெகு ச்ரமப்பட்டார். மனித சகாயத்திற்காக தன் உடன் பிறந்த சகோதரியின் குடும்பத்தையே வீட்டில் கொண்டு வைத்துக்கொண்டார். குழந்தை வளர்ப்பில் பெரும் கவனத்தைச் செலுத்தி வந்த பிதாவும், மைதிலியின் மூன்றாவது வயதில் திடீரென்று இதய வெடிப்பினால் அகால மரணத்தை யடைந்துவிட்டார்.

ஆனால் ப்ராணன் போகும்போது தன் சகோதரியின் கையில் தன்னருமை கண்மணியைப் பிடித்துக் கொடுத்து அவளைக்

காப்பாற்றும்படி வேண்டிச் சென்றார். மூன்று வயது குழந்தை என்னதான் தெரியும்? தன்னிடம் அன்பாயிருந்த ஒரு ஆள் முகம் மறைந்து போயிற்றே என்று வெளியிட்டுக் கூற முடியாத ஏக்கமும், தாக்கமும் கொண்டு அழுது அழுது மெலிந்து நோயாளியைப் போலாய்விட்டாள்.

மைதிலியின் அத்தையும் அவளிடம் அதிக பக்ஷமாகவே இருந்து துக்கம் தெரியாமல் வளர்த்து வந்தாள். நாளடைவில் அத்தையின் ஆவல் முற்றும் மைதிலியின் திரண்ட செல்வத்தின் மீதே பாய்ந்துவிட்டது. "அவள் பெண் குழந்தையாகையில் அத்தனை சொத்தும் அவளை யார் மணக்கிறார்களோ அவர்களுக்குத் தானே சேர்ந்துவிடும்? மற்றபடி அதை எவ்விதமும் அசைக்க முடியாது. அச்சொத்தை நாம் அபகரித்து எடுத்துக்கொண்டாலுங்கூட அவள் பெரியவளாகிய பிறகு நம்மீது அவள் விவகாரம் நடத்தக்கூடும். ஆகையால் அவ்வாறு ஏதும் வராதபடிச் செய்துவிடவேண்டும். எவ்வகையில் அம்மாதிரி செய்யலாம்?" என்று சதா அதே யோசனையுடன் இருந்தாள்.

அவளுடைய சதியாலோசனைக்குத் தக்கபடி அவளுடைய மகனின் இரண்டாவது சம்சாரம் திடீரென்று விஷபேதியால் இறந்துவிட்டாள். குழந்தை குட்டிகள் அதிகமில்லை. இறந்த மருமகளுக்கே 35 வயதாகிறது. அவளே இரண்டாந்தாரம் என்றால் அந்த அத்தையின் மகனுக்கு 50 வயதிற்குப் பஞ்சமே இல்லை. அத்தையின் எண்ணம் முற்றும் தன் யோசனைக்கு முடிவு கிட்டுமா என்று இருந்தது; அதற்கு அனுகூலமான முடிவே கிடைத்துவிட்டது.

தன் மகனுக்குச் சரியானபடி உரை ஏற்றி "இச்சொத்துக்களை நீயே அடையவேண்டுமாயின், மைதிலியை நீயே மணந்துகொண்டு ஒருவிதமான பேச்சுக்கும் இடமில்லாது செய்துவிடலாம். திரண்ட செல்வமும், இளம் பெண்ணும் ஒன்றாகக் கிடைப்பதே துர்லபம். ஆகையால் யோசனையே வேண்டாம்." என்று தூபம் போட்டாள்.

ஆனால், 50 வயதான வாலிபன் தாயின் மொழியை உடனே ஆமோதித்துவிட்டார்; எனினும் "அம்மா! வயசு குழந்தை

யாயிற்றே! அதை மணந்து...." என்று முடிப்பதற்குள் தாயார் இடை மறுத்து "ஆமாண்டா! பெண்கள் வெகு சீக்கிரம் வளர்ந்து பக்குவமாய் விடுவார்கள். இன்னும் 7 வருடம் ஓடி மறைந்து விடுகிறது. இதற்காக இத்தனை செல்வத்தை விடுவார்களோ!" என்றாள்.

அப்போதும் அவர் "ஒருகால் குழந்தைக்கு இஷ்டமில்லை என்றால் என்ன செய்வது?" என்றார். தாயார் முறைப்பாகப் பேசத் தொடங்கி "ஆமாண்டா! இஷ்டமும், மண்ணும் அதற்கு இப்போது என்ன தெரியும்? உன்னுடைய நன்மைக்குத்தான் சொல்லுகிறேன். சொத்து வருவதற்கு மட்டுமல்ல. நான் கிழட்டுப் பிணம். என் கண் மூடிவிட்டால் உனக்கு ஒரு ஆதரவு வேண்டாமா? உன்னுடைய காலத்திற்கும் ஒண்டிக் கட்டையாகவா இருப்பாய்? அதோடு இனிமே உனக்குப் பெண் குடுப்பதும் துர்லபம். சிறு குழந்தையில் விவாகத்தைச் செய்துவிட்டால் எல்லாம் சரியாகிப் போய்விடும்.

என் காலத்திற்குப் பிறகு நீ தரையில் விழுந்தால், கஞ்சி வார்க்கவும், ஐயோவென்று சொல்லவும் ஒருவர் வேண்டாமா? அதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன்" என்று திட்டமாகக் கூறிவிட்டாள். இதற்குமேல் அப்பீலே ஏதுமில்லாது இரண்டு மூன்று மாதத்திற்குள் அவர்கள் வெளியூருக்குச் சென்று குழந்தை மைதிலியை அந்தக் கிழட்டு வாலிபனுக்கு மணம் செய்து, அவளது கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டார்கள்.

குழந்தை மைதிலிக்கு, கல்யாணம் என்றால் என்ன என்னும் வார்த்தையே புரியாத நாளில் ரகஸியமாயும், வெளியூரிலும் நடந்து விட்ட இந்தக் கல்யாணத்தையும், அவள் கழுத்திலுள்ள தங்கத் தாலியையும் அவள் ஏதோ ஒரு விளையாட்டாக நினைத்ததுமட்டுமன்றி, தனக்கொரு புதிய நகை கிடைத்ததாகச் சந்தோஷப் பட்டாள்.

இந்த அனியாய விவாகம் நடந்ததை அறிந்த ஊர் ஜனங்கள் அத்தையின் அக்ரமத்தை பலமாகக் கண்டிக்கவாரம்பித்து "இப்படியும் ஒரு குழந்தையின் வாழ்க்கையைப் பாழ் படுத்தலாமா?"

என்று கேட்டதற்கு அத்தை வெகு தந்திரமாக தான் பெண்ணை ஜோடித்து வைத்திருந்தபடி "ஆமாம். என்னை ஊராருக்குத்தான் அதிகமாக அக்கறை வந்துவிட்டதே லிருக்கு. அக்குழந்தையின் நன்மையை உத்தேசித்து என் னாவது தாலி கட்டினேனே அதைப் பாருங்கள். அந்தப் பெ ணின் தேகத்தில் துர் வ்யாதி இருப்பதை நானல்லவோ அ வேன். இன்னும் வயதாக ஆக அந்த வ்யாதி முற்றிவிட்டா அவளை யாரும் கண்ணால்கூடப் பார்க்கமாட்டார்கள். கண் கழியவும் முடியாத அவமானம் வந்துவிட்டால் அதை எப்ப தாங்கமுடியும்? இந்தக் காரணத்தினால்தான், என் தம்பிக்கு நா கொடுத்த வாக்குப்படி செய்து முடித்தேன். இன்னும் வயசா விட்டால் இவளையும் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேனென்று ஏதாவது தடபுடல்கள் செய்யலாம். அம்மாதிரி செய்தால் நான் இவளை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

அதோடு என் காலம் வரையில் கஷ்டப்பட்டுக் கட்டிக் காத்துவிடுவேன். என் கட்டை சாய்ந்துவிட்டால், இந்த சிறு பெண்ணை யார் கேட்பார்கள்? கல்யாணமும் ஆகாமல், ஆதாரமும் இல்லாதிருந்தால் கெட்ட பெயரும், விபரீதமான ஆபத்துமல்லவா சம்பவிக்கும்? அம்மாதிரி ஏதாவது வந்துவிட்டதென்றால் அவள் கதி என்னவாகும்? பிறகு அவள் பிழைப்பு கால் காசுக்கு உபயோகப்படுமா? நாலு பேர் காரியுமிழ்ந்து கைகொட்டியல்லவா சிரிப்பார்கள். என்னமோ! அவளோடுகூடப் பிறந்த பாசத்திற் காக, இந்த பயங்கரங்களை எல்லாம் யோசித்துத்தான் இம்மாதிரி ஒரு காரியத்தைச் செய்து வைத்தேன். பெண்கள்தான் கிழவிகளாய் விடுவார்கள். ஆண்களுக்கென்ன அப்படியே ராஜா மாதிரி இருப்பார்கள். என் பிள்ளையும் இளமையே மாறாத குமரன் போலத்தான் இருக்கிறான். அவனுக்கென்ன குறைச்சல்?" என்றெல்லாம் பெரிதாக வ்யாக்யானம் செய்து மழுப்பிவிட்டாள்.

ஸ்வர்ண விக்ரகம் போன்றுள்ள மைதிலிக்கு கொடிய வ்யாதி இருப்பதாக இந்தப் பேராசைக்காரி டமாரமடித்து வரும் விஷமப் பிரசாரத்தின் விபரீதத்தை அந்த இளஞ் சிறுமி, பால் மணம்

மாருத பாலகி, உலகமறியாத இளங் குருத்து எங்ஙனம் அறிவாள்? அவள் விளையாட்டும், அவள் படிப்பும், அவளுடைய கும்மாளமும் ஓர் தனித்த இன்பத்துடன் 12 வயது வரையில் கழிந்துவிட்டன.

பள்ளிக்கூடத்து சகபாடிப் பெண்களில் இரண்டொருத்திக்கு விவாகமாகிய பொழுது "ஏண்டீ மைதிலி! உனக்கு எப்போ கல்யாணம்? நீ யாரை மணக்கப் போகிறாய்?" என்று கேட்கும் போதுதான் மைதிலிக்கு வெட்கம் பாதிக்கும். அக் கால உணர்ச்சிகள் அவளைச் சூழ்ந்துகொள்ளும். அவர்களின் கல்யாணத்தைப் பார்க்கும்போது, அவள் மனத்திலும் கல்யாண ஆசை சிறிது தோன்றி, இந்தக் கல்யாண மாப்பிள்ளையை விட அழகான மாப்பிள்ளையாகப் பார்த்து, தான் மணக்கவேண்டு மென்று ஆசை கொள்வாள்.

சில சமயம் அவள், தனக்கு மிகவும் வேண்டியவள் அத்தை தான் என்பதை யறிந்திருப்பதால் "என் அத்தை! எனக்கு எப்ப கல்யாணம் செய்வே? கல்யாணம் பண்றப்போ அழகான பிள்ளையை நானே பொறுக்கிப் பாத்துதான் கல்யாணம் பண்ணிக்கி வேன்" என்பாள். அப்போது அத்தை "சீ அசடே! உனக்கு தான் கல்யாணம் ஆய்ட்டுதே. அத்தான்தான் உன் ஆமடையான்" என்று சொல்லும்போது, அது விளையாட்டு வார்த்தை என்று எண்ணி "ஊம். அத்தானை நான் பண்ணிக்கவே மாட்டேன். அவர் தாதான்னு" என்று கூறிக்கொண்டே ஓடி விடுவாள். இவைகளெல்லாம் பத்து வயதுக்குட்பட்ட லீலையாக முடிந்தது.

ஒரு சமயம் மைதிலியின் சினேகிதைக்கு விவாகம் நடந்த போது அவள் அந்த விவாக வீட்டிலேயே இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் அவள் மனத்தில் இம் மாதிரி தனக்கும் ஒரு அழகிய கணவன் வந்து தானும் மண வைபவங்கள் நடத்திக் களிக்கவேண்டும் என்று தனக்குள் ஆசைப் பட்டுக்கொண்டே இருந்தாள்.

கல்யாணப் பசங்களுக்கு நலங்கு இடும்போது, பிள்ளை வீட்டாரில் ஒரு அம்மாள் மைதிலியைக் காட்டி "இந்தப் பெண் யாரு?

வெகு அழகாக இருக்கிறது. பாட்டும் குயில்போல் பாடுகிறது. இதைப் பார்த்தால் எனக்கு மிகவும் பிடிக்கிறது. இதைப் பேசி முடித்தால், நம்ப சுப்புணிக்கே இவளைக் கல்யாணம் செய்துவிடலாம். இவள் யார் வீட்டுப் பெண்?" என்று விசாரித்தாள்.

இவ்வார்த்தைகள் மைதிலியின் காதில் விழும்போதே அவள் மனத்தில் ஒருவிதமான ஆனந்தம் உண்டாகியது. அவள் மெல்ல திரும்பிப் பார்த்தாள். அந்தம்மாள் ரதி போன்ற அழகுடன் விளங்கியதால், அவள் மகனும் அவளைப்போலவே அழகாகவிருப்பான்; தான் அவனை மணக்கலாம் "கன்யா வரயதே ரூபம்" என்ற ச்லோகத்தின்படி முடிவு செய்துகொண்டாள்.

இதற்குள் அங்கிருந்த பெரியம்மா ஒருத்தி "போதும்; இந்தப் பெண்ணைத்தானா நீங்க மாட்டுப் பெண்ணாக அடையணும். இந்தப் பெண்ணைப்போல் பாபாத்மா உலகத்திலேயே இல்லை. திரண்ட செல்வத்தில்தான் பிறந்தது. ஆனால் பிறந்த உடனே பெற்றோரை விழுங்கிவிட்டது. அத்தை நாசகாலி இருக்கிறாள். அவள்தான் இந்தப் பச்சை குழந்தையை எடுத்து வளர்த்து பணத்திற்காக ஆசைப்பட்டுக்கொண்டு, இல்லாத பொல்லாத கட்டுக் கதைகளை எல்லாம் கட்டி, இந்தப் பெண்ணுக்கு துர் வ்யாதி இருப்பதாகக் கூறி, பறை சாற்றி, தன்னுடைய 50 வயதான மகனுக்கே இந்தப் பெண்ணை 5 வயதிலேயே கல்யாணத்தைச் செய்துவிட்டாள்" என்று முடிப்பதற்குள், அந்த அம்மாள் "ஐயையோ! இதுக்கா கல்யாணம்! கிழவனுக்கா குடுத்தார்கள்? அட அக்ரமமே! கிளியாட்டம் அழகும், குயிலாட்டம் பாட்டும், ஐயோ! பாழாய்ப் போய்விட்டதே" என்று கையைத் தட்டி விசனத்துடன் கூறினாள்.

இதுபரியந்தம் மனத்தில் பலவித உணர்ச்சியுடனும், ஆனந்த ஸ்வரூபியாயும் உட்கார்ந்திருந்த மைதிலியின் காதில் இவ்வார்த்தைகள் விழுந்த க்ஷணமே, அவள் தலைமீது எரிமலையே புரண்டுவிட்டதுபோலும், தான் உட்கார்ந்திருக்கும் பூமியே வெடித்துவிட்டதுபோலும் அதிர்ச்சி உண்டாகிவிட்டது. கண்கள் இருண்டு அந்தகார உலகத்தில் அவளை இழுப்பதுபோல் தோன்றியது.

தம்பதிகளின் தடபுடலான நலங்கின் வேடிக்கையில் எல்லோரும் ஆழ்ந்திருந்த சமயம், தான் இங்கு இனி நிற்பது கூடாது என்ற வெறுப்பும், துக்கமும், எல்லாமும் ஒன்று கூடியதும், ஏதோ சூனியத்தில் நடக்கும் பொம்மைபோல் மைதிலி மெல்ல நழுவி தன் வீட்டிற்கு வந்து, தன்னறைக்குச் சென்று தடாரென்று கட்டிலின்மீது விழுந்துவிட்டாள். இன்றோடு தன் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி விழுந்துவிட்டதாயும், தன் பிறப்பின் சகாப்தம் முடிந்துவிட்டதாயும் தோன்றிவிட்டது.

இனி 'விம்மினாள், அழுதாள், முட்டிக்கொண்டாள்' என்று கூறவேண்டுமா? அவளுக்கு ப்ரக்ஞை வந்து கண்ணைத் திறந்து பார்க்கும்போது, மத்தியில் சில தினங்கள் ஓடி மறைந்துவிட்டதை அறிந்தாள். அவள் பக்கலில் அத்தையும், (அத்தானை தாதாவென்று தான் மைதிலி கூப்பிடுவாள்) அந்த தாதாவும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் தன் வாழ்வை அள்ளிக் குடித்த எம ஸ்வரூபங்கள் என்பதையறிந்ததும், கண்ணை கெட்டியாக மூடிக்கொண்டு குப்புறப் படுத்துவிட்டாள்.

கல்யாண வீட்டிலிருந்து வந்த அன்றிமுதல் மைதிலி ஊமையாகிவிட்டாள் என்றால் மிகையாகாது. யார் என்ன கேட்டபோதிலும் பதில் பேசுவதையே அடியோடு விட்டாள். தன் எதிர்காலத்தின் பயங்கர எதிரொலியே அவள் காதில் கோரமாக சப்தித்து, உயிரை உறிஞ்சும் பூதத்தின் நாதம்போல் த்வனித்தது. தனக்கா துர் வ்யாதி என்று கட்டுக் கட்டி கயிறு திரித்தாள்? இந்த வார்த்தை ஊரில் பரவியதனால்தான் சிலர் தொட்டு நெருங்கிப் பழகாமலிருந்தார்கள் என்பதை உணர்ந்ததும் அவள் தேகமே தீயினால் எரிவதுபோல் தோன்றியது.

ஒரு தினம் பட்டப்பகலில் வீராவேசங் கொண்டவள் போல் ஒரு ப்ரபல டாக்டர் வீட்டிற்குச் சென்றாள். டாக்டர் வெகு மும்முரமாக வேலை செய்துகொண்டிருக்கையில், இந்த சிறுமி அங்கு சென்று "டாக்டர்! நான் வேலையைத் தடை செய்வதற்கு மன்னிக்கவேண்டும். தாங்கள் என்னை முதலில் சரியாக பரிசோதித்து என் உடம்பில் என்ன வ்யாதி இருக்கிறதென்பதைக் கூற வேண்டும்" என்றாள்.

இச்சிறுமி இப்பாதிரி கேட்பது டாக்டருக்கே மிக்க ஆச்சரியமும், வேடிக்கையுமாகத் தோன்றியது. "அம்மா! உனக்கென்ன உடம்பு என்று இப்பாதிரி கேட்கிறாய்? உனக்குப் பெரியவர்கள் யாரும் வரவில்லையா?" என்றார். மைதிலி சிறிதும் தயங்காமல் "எனக்கு நானேதான் பெரியவள். இதோ உங்களுக்குப் பீஸ் தயாராகக் கொண்டு வந்திருக்கிறேன். என்னைப் பரீக்ஷித்துக் கூறியனுப்புங்கள். எனக்கு ஏதோ கொடிய வ்யாதி இருப்பதாக யாரோ குட்டி டாக்டர் சொல்லிவிட்டதால் எனக்குப் பயமாயிருக்கிறது. அதற்காகத்தான் சந்தேக நிவர்த்திக்கு வந்தேன்" என்றாள்.

இதை நம்பிய டாக்டர், இச்சிறுமியைப் பரிசோதித்து "பெண்ணே! உனக்கு எந்த விதமான வ்யாதியும் இல்லை. நீ பரிசுத்தமாக இருக்கிறாய். உன்னுடைய ஆத்திரந்தான் தலைதூக்கித் தெரிகிறது; வேறு ஒன்றுமே இல்லை. பயப்படாதே! எனக்கு பீஸும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். கற்றுக்குட்டி டாக்டர்களின் வார்த்தையை நம்பி கண்ட மருந்துகளையும் தின்று பாழாகாமல் புத்திசாலியாக வந்து சந்தேக நிவர்த்தி செய்துகொண்டாயே! அதுவே எனக்குப் பெரிய சந்தோஷம். போய் வாம்மா!" என்றார்.

மைதிலி நோட்டை மேஜை மீதே வைத்துவிட்டு வயிற்றெரிச்சலுடன் வீட்டுக்கு வந்தாள். பிறகு அவளை வெளியில் யாருமே கண்டிருக்க முடியாது. பள்ளிக்கூடமும் நின்றது. தன் சினேகிதைகளையும் தானே வரவேண்டாமென்று தடுத்துவிட்டாள். வயது 13 ஆக விருப்பினும் பாரபுத்தியும், மனோ திடமும் அபாரமாகப் பெருகிவிட்டன. அத்தையும், தாத்தாவும் எத்தனை கேட்டும் என்ன சொல்லியும், ஊமையாவது தன்னுடைய பே.... பே....பாஷையில் பதில் கூறும், மைதிலி அதுவும் அற்று மவுனமாகவே விளங்கினாள்.

பொங்கி வரும் வெள்ளம் போன்ற மூர்க்க வைராக்யத்துடன் இரண்டு வருட காலம் ஒரே இடத்தில் அடைபட்டுக் கிடந்து பைத்தியம் போலானாள். உடல் மெலிந்து அழகு குன்றிப்

போய்விட்டாள். தன்னுடைய வயது 15 கடந்துவிட்டது என்பதை யறிந்தபொழுதே பாழும் வயதாவது வளராது குழந்தைப் பருவமாக இருக்கக்கூடாதா வென்ற ஏக்கம் உண்டாகியது. தான் இப்படியே கிடந்தால் எங்கே பயித்தியம் பிடித்து விடுமோ என்ற பயமும் உண்டாகியது.

எத்தனை காலமும் தான் இம்மாதிரியே இருந்தால் தனக்கு விடிவு, விமோசனந்தான் ஏது என்ற ஒரு சிறு எண்ணம் ஒவ்வொரு சமயத்தில் தோன்ற வாரம்பித்தது. "ஏன் ? நம்மையும் இவ்வுலகந்தானே ஈன்றது. இவ்வுலகந்தானே சுமக்கிறது. இவ்வுலகத்தில் எனக்கு மட்டும் இயற்கையின் தோற்றங்கள் சொந்தமில்லையா ! அதை நான் மட்டும் ஏன் அனுபவிக்காமல் இருக்க வேண்டும் ? ஆகாயம், பூமி, சூரிய சந்திராதி தாரகைகள், மேகக் கூட்டங்கள், பக்ஷி இனங்கள் முதலிய சகலமும் எல்லோருக்கும் சொந்தந்தானே."........என்ற ஓர் நூதன உணர்ச்சி அவள் மனத்தில் தானே உதயமாகியது. அது முதல் மைதிலி மெல்ல மேன் மாடத்தில் சென்று இயற்கை தேவியின் அழகைக் கண்டு களிக்க வாரம்பித்தாள். சில சமயம் அவ்வூரிலிருக்கும் நதிக்குச் சென்று மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் உட்கார்ந்து கண்ணீர் உதிர்ப்பாள். அந்த நதியில் இறங்கிவிடலாமா வென்றும் நினைப்பாள். ஆனால் "நான் ஏன் சாகவேண்டும் ! என்ன தப்பிதம் நான் செய்தேன் ?" என்று தானே தீர்மானிப்பாள்.

பருவ காலத்தை யடைந்த பெண்மணி இம்மாதிரி தனியாகச் செல்வதை உலகம் ஏற்குமா ! கிழவரும் அவளைத் தனது வலையில் வீழ்த்தப் பலவிதமான தந்திரங்களையெல்லாம் கையாண்டு பார்த்தார். மைதிலியா அதற்கு பயப்படுகிறவள் ? ஒரு கடிதத்தில்,

> "என்னுடைய சகலமான சொத்துக்களையும், வீடு வாசல், நிலம் புலம் முதலிய யாவற்றையும் என் மனப் பூர்வமான சுய உணர்வுடன் வேதாசலத்திற்கு சர்வ சுதந் திரத்துடன் இஷ்டம்போல் அனுபவிக்கும் உரிமையைக் கொடுத்துவிட்டேன்"

என்று எழுதிக் கிழவரிடம் கொடுத்துவிட்டாள். இந்த செய்கை கிழவரையும், அத்தையையும் ப்ரமிக்கச் செய்தது.

எத்தனை விதத்தில் பேசிப் பார்த்தும் மைதிலி வாயைத் திறக்கவே இல்லை. மவுனம், மவுனம்; முற்றிலும் மவுனமாகி விட்டாள். மனக்கோட்டைகள் பல கட்டலாம். சதிபாலோசனை சூழ்ச்சிகளும் பல செய்யலாம். ஆனால் அவர்களின் வாணாள் அவர்களுக்குச் சாச்வதமல்ல என்பதை அவர்கள் அறிவதில்லை.

இத்தனை அனுகூலங்கள் செய்த மகா புண்யவதியான அத்தை கண் மூடி மவுனியாகி பரலோக ப்ராப்தியாகி விட்டாள். அதையும் மைதிலி லக்ஷ்யமே செய்யவில்லை. கிழவர் கேட்டதற்கு பதில் சொல்லவும், வீட்டில் உலாவவும் ஆரம்பித்தாள். கிழவர் பார்த்தார். இனிமேல் தான் அதிகாரத்திலேயேதான் நடக்க வேண்டுமென்றும், விளம்பரங்களில் காணும் பால்யம் திரும்பும் மருந்துகளை எல்லாம் கணக்கற்றதாக வாங்கிக் குடித்து பருவ காலத்தை யடைந்து யௌவனமாகிவிட்டால் மைதிலியைத் தன் வயப்படுத்தி விடலாம் என்ற எண்ணத்துடனும் ஆரம்பித்தார். இந்த கொடுமையையும் மைதிலி அறியாமலில்லை. மிகவும் ஆப்தமான ஒரு கிழவர் வாலிபம் திரும்பும் மருந்துகள் வாங்குவதற்கு இவருக்கு ஆப்த சகாவாகச் சேர்ந்ததால் அத்தொழிலில் இருவரும் இறங்கினார்கள்.

மைதிலியின் ஆதி சரிதையை ஒருவாறு அறியும் பொருட்டு விளக்கிவிட்டோம். இந்த கட்டங்களை எல்லாம் தாண்டி நம் கதையாரம்பிக்கும்போது, நாம் முதலில் தெரிவித்தது போல் மைதிலி விசனமே உருவான பிம்பம்போல் ஓர் சோபாவில் வீற்றிருந்தாள்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய காலெண்டரின் அன்றைய தேதி அவள் கண்ணில் அகஸ்மாத்தாகப் பட்டதும் தீயை மிதித்தவள் போல் துள்ளினாள். ஏனெனில், அதே மாதம் அதே தேதி தான் சில வருடங்களுக்கு முன்பு அவள் வாழ்வு பாழாகி விட்ட ரகஸியத்தை சினேகிதையின் கல்யாண வீட்டில் அறிந்த நாள். ஆகையால் அதைப் பார்த்த உடனே அந்த நாளின் நினைவும், அன்று நிகழ்ந்த சகல சம்பவங்களும் அந்த காலெண்டருக்குள்ளேயே படக்காட்சி போல் தோன்றின. சோபாவின்மீது அப்படியே சாய்ந்துவிட்டாள்.

எனது நன்றியறிதல்

—(0)—

அறிவிற் சிறந்த சகோதர சகோதரிகளே!

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமானின் ஜாயமான கருணையினாலும், மோகினிச் செல்வியின் அன்பர்களாகிய உங்களது இணையற்ற பேருதவியினாலும் மோகினிக்கு 14 ஆண்டுகள் சந்தோஷத்துடன் கடந்து, 15-வதாண்டு குதூகலத்துடன் பிறந்துவிட்டது. இன்பமயமான கல்யாண கோர்ட்டு திறக்கும் மங்களகரமான புது வருடம் தை மாதம் பொங்கல் பண்டிகையுடன் பிறக்கப் போகின்றது.

புது வருடத்தில் நம்மெல்லோர் வீட்டிலும் பால் பொங்கவும் சந்தோஷம் பொங்கவும், திடகாத்திர ஆரோக்யாதி ஐச்வர்யம் பொங்கவும், தேச க்ஷேமம் பொங்கவும், எல்லாம் வல்ல இறைவன்—ஆண்டவன்—அருள் புரிந்து காக்கும்படி அவனடி தொழுது வேண்டுகிறேன்.

நாம் சென்ற இதழில் தெரிவித்தபடியே இவ்வருடத்திற்கு ஓர் புதிய சிறிய நாவல் "உளுந்த இதயம்" என்பது வெளியாகிவிட்டது. ஏற்கெனவே பல நண்பர்கள் புது வருட (**1938**-வது வருட) சந்தாவையும், புதுப் புத்தகத்திற்கும் சேர்த்து அனுப்பி பேருதவியை மோகினிக்கு அளித்துவிட்டார்கள். அவர்களுக்கு எனது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, மற்ற நேயர்களையும் அதேபோல் உதவி புரிந்து ஆதரிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். மோகினியின் அன்பர்கள் தம் தம் சிநேகிதர்களையும், உறவினர்களையும் சேர்த்துக்கொடுத்து மோகினியின் சக்தியை இன்னும் பலப்படுத்தி ஆதரிக்கும்படியும் வணக்கத்துடன் பிரார்த்திக்கின்றேன்.

வழக்கம்போல இம் முதல் சஞ்சிகை எல்லோருக்கும் வந்துவிடும். இரண்டாவது சஞ்சிகை சந்தா செலுத்தியவர்களுக்கு மட்டும்தான் வரும் என்பதை தாழ்மையுடன் ஞாபக மூட்டுகின்றேன்.

தங்கள் நன்றியுள்ள
சகோதரி
வை. மு. கோதைநாயகி.

1938 ஸ்ரீ ஜனவரி மீ 31-ம் தேதி வரையில்தான்

தனிப் பரிசு

பழைய சந்தா நேயர்கள் கவனிக்கவும்

11-வதாண்டு முதல் சேர்ந்தார்ப்போல சந்தா நேயர்களாயிருந்து, 15-வதாண்டின் சந்தாவை 1937 டிசம்பர் 20-ம் தேதிக்குள் அனுப்பினால் ரூ. 2 பெறுமான நாவல்கள் இனாமாக கொடுக்கப்படுமென்று, சென்ற 11-12 இதழ்களில் தெரிவித்திருந்தபடி அநேகர் புது வருஷ சந்தாவை அனுப்பி, இனாம் நாவல்களைப் பெற்றுக் கொண்டு விட்டனர். மற்றும் சிலர், புது வருஷ சந்தாவை ஜனவரிக்குள் அனுப்புவதாகவும், அதுவரையில் மேற்படி தனிப் பரிசுக்கான கால நிபந்தனையை ஒத்தி வைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்வதால், அப்படியே ஜனவரி முடிவுக்குள் சந்தாவையும், தபால் செலவுக்காக அணா 4-ம் அனுப்பலாமென்பதை தெரிவிக்கிறோம்.

குறிப்பு :—10-வதாண்டிலிருந்து 14-வதாண்டு வரையில் சந்தா செலுத்தியதற்காக ஏற்கெனவே இனாம் நாவல்கள் பெற்றவர்களும், 11-வதாண்டுக்குப் பிறகு சந்தா நேயர்களாகச் சேர்ந்து மேற்கண்ட பரிசுக்கு வேண்டிய உரிமையைப் பெறாதவர்களும், பலர் புது வருஷ சந்தாவுடன் 4 அணா சேர்த்தனுப்பிவிட்டு இனாம் நாவல் வேண்டுமென எழுதுகிறார்கள். அவர்கள் அனுப்பிய நான்கணாவுக்கு புதிதாக வெளிவந்த ஊருந்த இதயம் எனும் நாவலை அனுப்புகிறோம்.

15-வதாண்டுப் பரிசுகளின் விவரம்

1937-ம் டிசம்பர் மீ 20 தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க்கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு நெ.	ரூ.	சந்தா நெ.		
1.	20	G.	136	ஸ்ரீ. எஸ். கோவிந்தஸ்வாமி, ஸாங்கி.
2.	15	A.	268	,, ஏ. அப்துல் காதர், சோலான்.
3.	10	G.	141	,, டி. கே. கோபாலன், வேலூர். (சேலம்)
4.	5	R.	228	ஸ்ரீமதி. ருக்மிணி அம்மாள், போலாரம்.
5.	5	C.	125	,, சந்திராபாய், சௌகார்பேட்டை சென்னை.
6.	5	S.	743	ஸ்ரீ. எஸ். கே. சுப்பைய்யா ரெட்டியார், கொழும்பு.

பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களை குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்கு கீழ்க்கண்ட தொகையுள்ள புத்தகங்கள் பரிசாக கொடுக்கப்படும்.

ரூ. 15	ரூ. 10/-ல்	ரூ. 5/-ல்
முதற் பரிசு	இரண்டு பரிசுகள்	மூன்று பரிசுகள்

அச்சமயம் கிழவர் அட்டகாஸமான அலங்காரத்துடன் அங்கு வந்தார். மைதிலியின் கண்ணீர் கன்னத்தில் வழிந்தோட அவள் சோகப் பதுமையைப்போல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து முகத்தைச் சிடுத்துக்கொண்டு "மூஞ்சியைப் பாரு. எப்போ பாத்தாலும் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி உட்கார்ந்திருக்கயே!........மூதேவி!....ஒம் மூஞ்சிலே சிரிப்பே வராதோ?" என்றார்.

மைதிலி :—(தன் வயிற்றெரிச்சலுடன் கிழவரை ஒரு பார்வை பார்த்தாள். தலையைக் குனிந்துகொண்டு) ஆமாம். விளக்கெண்ணெயைக் குடித்தால் தேகத்திற்காவது ஆரோக்கியமுண்டாகும். படுமோச பாதக விஷத்தைக் குடித்திருக்கிறவள் மூஞ்சிலே சிரிப்பு எப்படி வரும்?

கிழவர் :—ஓகோ! என்னடீ! என்னமோ ஒளர்றே. இதோ பாரு கண்ணுடிலே! என்னே நானெ பாத்தாலுங்கூட மன்மதன் போலிருக்கிறேன். எனக்கென்னடீ குறைச்சல்? ராஜாதிராஜன் போல் அழகான........என்று முடிப்பதற்குள் மைதிலி காதைப் பொத்திக்கொண்டு சடக்கென எழுந்து ஜன்னலண்டை சென்று நின்றாள்.

கிழவர் பின்னாலேயே பல்லிளித்துக்கொண்டு வந்து நின்று "ஏண்டீ மைதிலி! கார்த்திகை பண்டிகைக்கு உனக்குப் புடவை வாங்கிண்டு வந்திருக்கேன், இதோ பாரு, என்ன அழகான சேலை!" என்றார். ஆனால் மைதிலி அதைத் திரும்பிகூடப் பார்க்கவில்லை.

அச் சமயம் வீதியில் ஒரு ஜோயிச்சி பிச்சைக்காரி உடம்பெல்லாம் தெரியும்படியான கந்தல் சேலையுடனும், ஒரு கந்தத் துணியில் தூளி கட்டி தோளில் போட்டு அதில் ஒரு குழந்தையை விட்டுக்கொண்டும், "தாயே! தர்மலட்சுமி! குளிர் நடுக்குது தாயே! கொயந்தெ வெரச்சு போவுது தாயே! ஒரு கந்தெ குடுங்க தாயே! மானத்தெ காப்பாத்த ஒரு முழந் துண்டு குடுங்க தாயே!" என்று கத்தும் பரிதாபமான குரல் மைதிலியின் காதில் விழுந்ததும் அவ்வுருவத்தைக் கவனித்தாள்.

அவளால் சகிக்க முடியாத துக்கம் பொங்கிவிட்டது. உலகத்தில் இப்படியும் ஒரு வறுமைப் பேயின் தாண்டவம் இருக்கிறதா வென்று மனம் புழுங்கினாள். தடதடவென்று வீதிப் பக்கம் வந்தாள். இதற்குள் அந்தப் பிச்சைக்காரி இவள் வீட்டுக்கே வந்துவிட்டாள். மைதிலி வாயைத் திறக்காமல் கிழவர் அங்கு வைத்த சேலையை எடுத்து "ஜோயிச்சி! இந்தா இதை ரெண்டா கிழிச்சு பாதியை நீ கட்டிக்கோ, பாதியை தூளி கட்டி குழந்தையை விடு. இந்தா இந்த புடவையையும் எடுத்துக்கோ" என்று அங்கு கொடியிலிருந்த சேலையையும் எடுத்துக் கொடுத்தாள்.

இந்த செய்கையைப் பார்த்த கிழவர் "ஐயோ! ஐயோ!" என்று வாயிலும், வயிற்றிலும், தலையிலும் அடித்துக்கொண்டு "அடி பாவி! படுபாவி! இந்த பிச்சைக்கார நாய்களுக்கா இப்படிப் பட்ட புடவைகளைக் குடுப்பது? நீ நாசமாப் போக!" என்று கூறிக் கொண்டே மைதிலியை அடித்துவிட்டு, பிச்சைக்காரி யிடமிருந்த சேலையைப் பிடுங்கிக்கொண்டு அவளையும் அடித்து "தரித்திர மூதேவி! மானங்கெட்ட முண்டே! போடி வெளிலே, போடி வெளிலே" என்று பிச்சைக்காரியின் கழுத்தைப் பிடித்து இழுத்துத் தள்ளினார்.

பிச்சைக்காரி வயிறு எரிந்து "அடே பாவி! இட்றவங்களையும் வாணாம்னு தடுக்கும் புண்யாத்மாவே! ஒனக்கு எந்த நரகந்தான் கடவுள் குடுப்பாரோ? இந்த சொத்தெ ஒன் தலெலெ தான் போட்டு கொளுத்தப் போறாங்க" என்று திட்டிக்கொண்டே போய் விட்டாள்.

கிழவர் ஆத்திரத்துடன் "என்ன! என்ன!! பிச்சைக்கார நாயிக்கு இத்தனை வாயா! ஆகா! எல்லாம் இந்த ஊமை மூதேவி யாலேதான் வந்தது" என்று தலையிலடித்துக் கொண்டு தாண்டவ மாடினார்.

5

மாலை 5 மணியாயிற்று. எங்கும் படபடா பட்டாசின் பேரொலி காதைத் துளைக்கிறது. அந்த ஓசையைக் கேட்கக் கேட்க வாஸந்திகாவுக்கும், ராஜுவுக்கும் ஆசை இன்னும் அதிகரித்து விட்டது. அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டே தமது ஏக்கத்தையும், ஆவலையும் முகத்தினாலும், பார்வையாலும் வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

ராஜு :—அக்கா! சாமிக்கு புத்தியே இல்லேக்கா! நாம்ப எத்தனெ வேண்டினோம், பாடினோம். எது செஞ்சாலும் காசு குடுக்கல்லயே. இனிமே சாமியெ கேக்கவே வாண்டாம் அக்கா!

வாஸந் :—ஆமாம் ராஜு! சாமியுமாச்சு; பூதமும் ஆச்சு. பட்டாசு நெனவிலே, இன்னிக்கி பள்ளிகூடத்திலே சரியா பாடம் வாசிக்கலேன்னு வாத்தியாரம்மா அடிச்சா. அப்பகூட எனக்கு சாமி மேலேதான் கோவம் வந்துது. (வீதியில் பார்த்துவிட்டு அலறி பயந்தபடியே) ஐயையோ! ராஜு! எங்க வாத்தியாரம்மா வராடா. நான் உள்ளே பூட்றேன். அப்பாகிட்ட சொல்லராப்பலெ இருக்குடா!

இதற்குள் வாத்தியாரம்மா படி ஏறி விட்டாள். வாஸந்திகா பயந்து கொண்டு ஓடுவதைப் பார்த்ததும், நகைத்துக் கொண்டே "வாஸந்திகா! ஓடாதே; நில்லு. நில்லு. இப்ப உன்னெ அடிக்க நான் வரல்லெ. பயப்படாதே; இங்கே வா!" என்றாள். வாஸந்தி பயந்து நடுங்கியபடியே மிரள மிரள விழித்துக் கொண்டு மெல்ல நடந்து வந்து,

"டீச்சர்! நாளெக்கி பாடத்தை நன்னா படிச்சுட்டறேன். எங்கப்பாகிட்ட சொல்லாதீங்கோ டீச்சர்! அப்பா அடிப்பா. (கண்ணில் ஜலம் வந்து விடுகிறது. கண்ணைக் கசக்குகிறாள்.)

ராஜு :—ஆமாம் டீச்சர்! அக்கா மத்யானம் பிடிச்சு அழுதுண்டே இருக்கா! அவளெ பாத்தா எனக்கும் அழுகெ வரது.

அப்பாகிட்டே சொன்னுக்கா இன்னும் அடிக்க புடிவா. சொல்லா தேங்கோ டீச்சர்! அக்கா! அழாதேடா! (வாஸந்திகாவை கட்டிக் கொள்கிறான்.)

டீச்சர் :—(குழந்தைகளைக் கட்டிக் கூடவிக் கொடுத்து இருவரையும் இரு கைகளாலும் அணைத்துக் கொண்டே) குழந்தைகளே! அழாதேயுங்கள். நான் அப்பாகிட்ட சொல்லவும் வரல்லே. இனிமே ஒன்னெ அடிக்கவும் மாட்டேன். இதோ பாரு. அப்பா உள்ளே இருக்காரு?

ராஜு :—ஓ! இருக்கார் டீச்சர்! வாங்க உள்ளே அழைச்சிண்டு போறேன். ஏன் டீச்சர் அப்பாகிட்டெ சொல்லிடுவுங்களா?

டீச்சர் :—இல்லே ராஜா! நான் சொல்லமாட்டேன்; வா— என்று கூறியதும், உள்ளே சென்றார்கள். வாஸந்திகாவும், ராஜுவும் முன்னால் உள்ளே ஓடினார்கள்.

திருமூர்த்தி தையல் மெஷினுக்கு எண்ணெய் போட்டு க்ளீன் செய்து கொண்டிருந்தான். வேணி அம்மியில் துவையல் அறைத்துக் கொண்டிருந்தாள். இருவர் முகத்திலும் விசனக் களை குடி கொண்டிருந்தது. அச்சமயம் குழந்தைகள் இருவரும் "அப்பா! அப்பா! எங்க வாத்தியாரம்மா ஒன்னே தேடிண்டு வந்திருக்காப்பா! நாங்க பள்ளிக்கூடத்துலே தப்பே பண்ணலெப்பா! அடியே வாங்கலெப்பா! சமத்தா படிக்கிறோம்பா" என்று தங்கள் குறையை முன் கூட்டியே சொல்லியதைக் கேட்ட வாத்யாரம்மாளுக்கு கடகடவென்று நகைப்பு வந்து விட்டது.

வேணியும் கையலம்பிக்கொண்டு எழுந்து வந்து "வாருங்கம்மா....(ஒரு பாயை எடுத்துப் போட்டு) இப்படி உட்காருங்கள்" என்றாள். மூர்த்தியும் மெஷின் துடைத்தபடியே "வரணும் குழந்தைகள் எப்படி படிக்கிறு? விஷமத்தனம் பண்ணுமெ இருக்காளா! சமத்தா படிக்கிறாளா! ஒதை வாங்காமெ இருக்கிறாளா" என்று கேட்கும்போது, குழந்தைகளின் முகத்தில் அசடு வழிகிறது. வாத்தியாரம்மாவின் முகத்தையே பார்த்தார்கள்.

வாத்தியாரம்மாள் தன் அன்பைக் காட்டி, குழந்தைகளை இரு கைகளாலும் கூடவிக் கொண்டே நகைத்தவாறு "குழந்

தைகள் வெகு சமத்தா படிக்கிறார்கள். அடியே வாங்குகிற தில்லையே. அவாளைப்பத்தி கவலையே வேண்டாம். இந்த வருஷம் பரீக்ஷையில் பரிசு கூட வாஸந்தி அடித்து விடுவாள் பாருங்கள்" என்று சொல்லியபோது, வாஸந்தியின் முகத்தில் அபாரமான சந்தோஷக் களை தாண்டவமாடியது. அவளுடைய இரு விழிகளும் ஆநந்தத் தடாகம்போல் ப்ரகாசித்தன. தன் பெற்றோரையும், சகோதரனையும் ஒரு முறை பார்த்தாள். வாத்தியாரம்மாவைப் பார்த்தாள். "டீச்சர்! டீச்சர்! எனக்கா டீச்சர் ப்ரைஸ் வரப்போறது?" என்று ஆவலே வடிவாகக் கேட்டாள்.

டீச்சர் :—ஆமாம். நீ நல்ல அக்கரையோடெ படிச்சேன்னுக்கா கட்டாயம் ப்ரைஸ் வரும். இன்னும் சமத்தா படிக்கணும் தெரியுமா!....சரி. நான் வந்த காரியம் வெகு முக்கியமும் அவசரமுமானது. என் சினேகிதை யொருத்தி வெளியூரிலிருந்து வந்திருக்கா. அவள் நாளைக் காலே 10 மணிக்கு புறப்படும் ரங்கோன் கப்பலில் போகணும். அவசரம். இன்னிக்கித்தான் சில துணிகள் வாங்கினா; அதை தைத்துக் கொண்டு போகணுமாம். நீங்க எப்படியாவது காலே எட்டு மணிக்குள் தைத்துக் கொடுக்க முடியுமா? நாலு பாவாடை, நாலு கவுன், 8 சொக்கா, ஆறு ஜாகெட்டு, மூன்று ட்ராயர் இவைகள்தான். ஒரே இரவில் தைப்பது கஷ்டந்தான் தெரியும். அவசரம். வேறு இடங்களில் விசாரித்ததில் மூன்று நாள் அவகாசம் வேணும் என்றார்கள். அதனால் இங்கு வந்தேன்.

இச் சொல்லைக் கேட்ட உடனேயே வேணியின் இதயத்தில் அவளை யறியாத ஒரு சந்தோஷக் கொந்தளிப்பு, ஒரு விகசிதம், முகத்தில் ஒரு சோபை, கடவுள் காட்டிய வழியை எண்ணி ஒரு தனி பக்தி இத்தனையும் ஏக காலத்தில் உதயமாயிற்று. மூர்த்தியின் உள்ளத்தில் இதைப்போன்ற எண்ணங்கள் பளிச்சென்று தோன்றியபோதிலும் "இத்தனையும் எப்படி ஒரே இரவில் தைத்துக் கொடுக்க முடியும்? வாக்கு நாணயம் தவறாது செய்து முடிக்க முடியுமா?" என்ற பெருங் குழப்பமும் சேர்ந்தது.

குழந்தைகளின் கண்களில் ஒரு புதிய ப்ரகாசமும், ஜீவகளையும் உண்டாயின. இதை ஒப்புக் கொள்ளும்படிக் கெஞ்சுவது

போன்ற உணர்ச்சியுடன் தந்தையை நோக்கினார்கள். தந்தை இவ் வேலையை முடித்துக் கொடுத்தால், தங்களுக்கு கட்டாயம் பட்டாசு கிடைக்கு மென்கிற பேராவல் மனத்தில் கடலைப்போல் பொங்கி எழுந்தது.

வாஸந்திகா, ராஜூவின் காதோடு "அப்பி! சாமி அப்பாவை ஒத்துக்கும்படி பண்ணணுமே. பண்ணுவாராடா?" என்றாள். ராஜூவும் "அக்கா! நாம்ப நேத்தி சாமியெ வேண்டிண்டோமோன்னோ! அதுனாலெதான் இப்போ துணி வந்துது. நாம்ப இன்னும் சாமியெ வேண்டிக்கிவோம். அப்பா ஒத்துக்குவார். கண்ணை மூடிண்டு வேண்டிக்கலாம்." என்று குசு குசுவென்று கூறிக் கொண்டே கண்ணை மூடிக் கொண்டு கையைக் குவித்த வாறு "சாமி! எங்கப்பாவெ இந்த துணியெ தைக்க ஒப்புக்கச் சொல்லு. சாமீ! நீ நல்லவரோன்னோ?" என்று தனியாகச் சொல்வதை முதலில் யாரும் கவனிக்கவில்லை.

ஆனால் அடுத்த நிமிடமே மூர்த்தி கவனித்து விட்டான். குழந்தைகளின் ஆவல் எவ்வளவு வேகத்துடன் பொங்குகின்றது என்ற எல்லையை அவன் இதயம் அறியும்போது அவன் மனத்தில் இருந்த சிறிது குழப்பமும் விலகிப்போய் விட்டது. எப்பாடாவது பட்டு இரவு முற்றும் கண் விழித்துத் தைத்துக் கொடுத்து குழந்தைகளின் ஆவலைப் பூர்த்தி செய்வது என்று முடிவு கட்டிக் கொண்டான்.

"அம்மணீ! ஏதோ என்னால் முடிந்த வரையில் இரவு முற்றும் வேலை செய்து முடிக்கப் பார்க்கிறேன். அப்படி இரண்டொன்று நின்று விட்டால் மன்னிக்க வேண்டும். அளவுத் துணிகள் இருக்கிறதா?" என்றான்.

இச் சொற்கள் குழந்தைகளின் காதில் பட்டவுடனே அவர்களின் உள்ளத்திலிருந்து எழுந்த ஓர் அபூர்வ உணர்ச்சியின் சக்தி வேகத்தை அளவிடவே முடியாது. ஒரு குதி குதித்தார்கள். சாமியை வேண்டியதற்குப் பலன் கை மேல் கிடைத்து விட்டதாக ஓர் பெரும் நம்பிக்கையான பக்தி இதயத்தில் ஊன்றியது.

"ராஜூ! நான் வேண்டிண்டதாலேதான் சாமி சீக்கிரம் வரம் குடுத்துட்டார்." என்றாள் வாஸந்தி. ஆனால் ராஜூ அதற்கு

இசைவானு? "இல்லேக்கா! சின்னப் பையன் நான் வேண்டிண்டேன். அதான் சாமிக்கும் மனசு எறங்கித்து" என்முன். இவர்களின் குட்டிச் சண்டையையும் மூர்த்தி கடைக் கண்ணுல் கவனிக்காமலில்லே.

உடனே வாத்தியாரம்மாள் தன்னோடு வந்த வேலைக்காரி கொண்டு வந்த மூட்டையை அவிழ்த்து புதுத் துணிகளேயும், பழய அளவுத் துணிகளேயும் முறையே காட்டினுள். மூர்த்தியும், அவைகளே சரியாக கவனித்துக் கொண்டான். குழந்தைகளின் மனது ஒரு நிலேயுள்ளதல்லவென்பதற்கு அக்காட்சி வாஸந்தியும், ராஜுவும் பகவத் பக்தியிலிருந்து குட்டிச் சண்டைக்கு வந்து, அதிலிருந்து இந்தப் புதிய துணிகளின் மேல் பாய்ந்து விட்டதே போதும். அவர்கள் நிதியைக் கண்டவர்கள்போல் இந்த உடைகளினுல் கவரப்பட்டு ஓடி வந்தார்கள். குட்டிச் சண்டை மறைந்தது. ராஜு "பாத்தியா அக்கா! என்ன அழகு பாத்தியா?" என்று கூற, இருவரும் விநோதக் காட்சியில் மூழ்கி விட்டார்கள்.

வாத்தியாரம்மாள் உடைகளேக் கொடுத்துவிட்டு நாளேக் காலே எட்டு மணிக்கு வருவதாகச் சொல்லி "குழந்தைகளே! நான் வருகிறேன்" என்று கூறிப் போய்விட்டாள். கடவுளே நம்பினேர் கைவிடப்படார் என்ற பழமொழியின் உண்மை இந்த இளந் தம்பதிகளின் உயர்ந்த எண்ணத்தில் உயரிய இடம்பெற்றுப் பதிந்தது.

வாஸந்தியும், ராஜுவும் ஏக காலத்தில் தந்தையின் காலேக் கட்டிக் கொண்டு "அப்பா! நாங்க சாமியெ வேண்டினேம்பா; அதான் சாமி வேலெ குடுத்துட்டார். இனிமே எங்களுக்கு பட்டாசு உண்டாப்பா?" என்முர்கள். மூர்த்தியின் இதயத்தில் ஆநந்தம் பொங்கியது. "கண்மணிகளே! சாமியெ இப்படிதான் இடை விடாமெ பக்தி பண்ணுங்கோ; எல்லாம் உண்டாகும். சரி! நீங்க வினேயாடப் போங்கோ; நான் துணி தைக்கணும். இங்கே தொந்தரவு செய்யக் கூடாது. தெரியுமா?" என்முன். உடனே குழந்தைகள் துள்ளிக் குதித்து ஓடி விட்டார்கள்.

மூர்த்தி துணிகளே வெட்ட உட்கார்ந்தான், "வேணி! விளக்கு நிறைய எண்ணெயைப் போட்டு ஏத்தி வை. நீயும் கொஞ்சம்

சகாயம் செய்யணும்" என்றான். அப்போது அவன் தொனியில் ஒரு புதிய ஜீவன் தொனித்தது. வேணியும் சந்தோஷத்துடன் "இதுக்கு சொல்லணுமா: நான் காத்துண்டிருக்கேன்" என்றாள். புருஷனும், மனைவியும் ஒற்றுமையாக வேலை செய்ய வாரம்பித்தார்கள். மூர்த்தி மெஷினில் தைக்க, வேணி துணிகளை அளவு ப்ரகாரம் கத்தரித்து ஒட்டல் ஒட்டி வைத்து உதவி புரியவாரம்பித்தாள்.

6

மூர்த்தியின் தாயாருக்கு ஒருவிதமான வாதத்தின் கொடுமையால் நடக்க முடியாது நகர்ந்து கொண்டே செல்லும் கதி ஏற்பட்டு விட்டதால் பட்டின வாஸத்தில் இச் சிறிய விடுதிக்குள் தானும் கூட விருந்து மகன் படும் கஷ்டத்துடன் இன்னும் கஷ்டம் கொடுக்க ப்ரியப்படாமல் கிழவி, கிராமத்தில் இருக்கும் தனது சகோதரியின் வீட்டில் தான் இருப்பதாகவும், மாதா மாதம் ஏதேனும் கொடுத்தனுப்பியும், அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருந்தால் போதுமென்றும் கூறிச் சென்று விட்டாள்.

மூர்த்தி தமக்குச் சாப்பாட்டுக்கு இல்லை எனினும் மாதம் எப்படியாவது கஷ்டப்பட்டுத் தன் தாயாருக்கு 5 ரூபாய் சேமித்தும், கடன்பட்டும் அனுப்பி வந்தான். இரண்டு மாதத்திற்கொரு முறை தாயாரைப் பார்த்துவிட்டு வருவான். இப்போது அடியோடு வருவாய் குறைந்துவிட்டதன் பயனால் ஆறு மாத காலமாய் ரயில் செலவுக்குப் பணம் அகப்படாமல் தாயாரைப் போய் பார்க்கவே முடியாது தவிக்கிறான். தான் ரயிலுக்குச் செலவு செய்வதை அவர்களுக்கு அனுப்பி வைத்தால் உபயோகமாயிருக்கும் என்று எண்ணத்துடன் நாட்கள் கடந்து விட்டன.

இன்று இந்த வேலை வந்தவுடனே மூர்த்தியின் மனத்தில் குழந்தைகளின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்குண்டான சந்தோஷத்தை விடத் தன் தாயாரை எப்படியாவது போய் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற பேராவலும், தாயின் பிம்பம் கண்முன்பு தெரிவதுபோலானத் தோற்றமும் உண்டாயின. வேணி குழந்தைகளுக்குச் சாப்பாடு போட்டுப் படுக்க வைத்தாள். புருஷனுக்கு எழுந்து வந்து இலையில் உட்கார்ந்து சாப்பிடும் நேரமும் வீணாகாமல், வேணியே கலந்து அவன் தைத்துக்கொண்டிருக்கும்போது வாயில் போட்டவாறு, "என்ன! நாளைக்கு கார்த்திகையானதும் மறுநாள் முதலில் அம்மாவைப் பார்த்துவிட்டு வரணும். நானும் பார்த்து ரொம்ப நாளாய்விட்டது. எனக்கும் பார்க்கவேண்டும் போலிருக்கு" என்றாள்.

ஒரே சமயத்தில் மூர்த்தியின் கால்கள், கைகள், கண்கள், மூளை முதலிய எல்லாம் தையல் வேலையில் உழைக்கின்றன. வாயில் போட்ட சாதத்தை வாய் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. மனத்திலோ கிராமத்திலிருக்கும் தன் ஆருயிர் அன்னையின்மீது மோதும் அன்பு அலைகள் அடிக்கின்றன. தான் நினைக்கும் நினைப்பையே தன் மனைவியும் கேட்டதால், மிக்க மகிழ்ச்சியுடன் "வேணீ! நானும் அதையேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதே நினைவாயிருக்கிறது. அதோடு சென்ற சில மாசமாய் 5 ரூபாய் அகப்படாததால் மூன்று ரூபாய் அனுப்பினேன். அது அவர்களுக்குப் போதல்லையாம். அதனால் ஒரு மாதிரியாய் கோவித்துக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். 'தள்ளாத கிழவியான அவளை ஏதாவது உபத்திரவம் செய்கிறார்களோ அல்லது ஆகாரம் குடுக்காமல் பட்டினி போடுகிறார்களோ! என்றெல்லாம் என் மனது அலைகிறது. ஆகையால் நாளை மறு நாள் போய் வருவோம்" என்று சாந்தமாகக் கூறும்போது, தாயின் பாசத்தினால் மூர்த்தியின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. ஆதி கால நினைவு முற்றும் மூளையில் சுற்றவாரம்பித்தது.

வேணி தானும் சாப்பிட்டு வேலை செய்ய உட்கார்ந்தாள். பூர்ணமிக்கு முதல் நாளாகையினால் நிலவு, உலகத்தையே பால் மயமாக்கி விட்டது. இரவின் இயற்கைத் தேவி வெகு குதூகல

மாக சிம்மாசனத்தில் வீற்று செங்கோல் செலுத்துகிறாள். இராக்கால பக்ஷி இனங்கள் தத்தம் உத்ஸாகப்படிக்குப் பாடிக்கொண்டிருக்கின்றன. சிறிது தூரத்திலிருக்கும் கடல் மதி மன்னனைக் கண்டு பொங்கிப் பூரித்துப் பேராரவாரம் செய்து இரைச்சலிடுகின்றது. அந்த இரைச்சலாகிய சங்கீதத்திற்கு ஜீவனுடன் கூடிய தம்பூரா சுருதி கூட்டுவது போன்று மூர்த்தியின் தையல் மெஷின் த்வனிக்கின்றது.

தெருக்கோடியிலுள்ள விநாயகர் கோயிலின் கடியாரமும், பெரிய மணியும் இராக்காலம் உருண்டு செல்லும் மார்க்கத்தை அவ்வப்போது அளந்து காட்டிக் கொண்டே செல்கின்றன. இரவு மணி ஒன்று ஆனதை அந்த மணி விளக்கியபோதுதான் வாஸந்திகா தூக்கத்தில் "ராஜு! பட்டாசு பொட்டளம் பாத்தியா! மத்தாப்பூ பாத்தியா! நாம்ப ரெண்டு பேரும் சுடலாண்டா: சண்டெ போடாதேடா: சாமி நல்லவர்டா! நமக்கு பட்டாசு குடுத்தார்" என்று வாய்ப் பிதற்றினாள்.

அந்த பிதற்றல் தம்பதிகளின் கை வேலையின் ஊக்கத்தை அதிகரிக்கச் செய்து, கையில் இன்னும் வேகத்தைக் கொடுக்கும் சக்தி வாய்ந்த சாட்டைபோலாயிற்று. வேணி தடுக்க முடியாத தூக்கம் வந்து உபத்திரவிப்பதை அவ்வப்போது தடுத்துக் கொண்டே தன் வேலையைச் செய்து கொண்டிருந்தாள்.

அச்சமயம் அவ்வறைக்கு வெளியில் பைசாசம் கத்துவது போன்ற ப்ரம்மாண்டமான ஓர் சப்தம் மெஷினின் ஓசையையும் தாக்கிக்கொண்டு வந்து இவர்கள் செவியில் கேட்டதும் இருவரும் நடுங்கியபடியே அதைக் கவனித்தார்கள். இவர்கள் காதில் விழுந்த சப்தமாவது வீட்டுக்காரக் கிழவியின் குரல் என்று தெரிந்தது. "சனியன் பிடித்த எழவு. ராவெல்லாம் தூங்கவிடாமெ கர்ரா புர்ராவென்னு மெஷின் தலைவேதனை பண்ணிண்டிருந்தா எப்படி தூங்குவது? மூணு நாளா ஒடம்பு சரி இல்லாமெ கடக்கும் என் பேரன் இந்த எழவெடுத்த ஓசையாலே தூக்கமே வராமெ தவிக்கிறான். தூக்கம் வராத்தாலே ஜுரம் அதிகமாறது. ஏ திருவேணீ! திருவேணீ! கதவெத் தராடீ!" என்று கூறி கதவைப் பலமாக இடித்தாள்.

இதைக் கேட்ட வேணி அலறியடித்துக்கொண்டு எழுந்து போய் கதவைத் திறந்து பயத்தோடு நின்று "என்ன பாட்டீ!" என்றாள். கிழவி பின்னும் தூபம் போட்ட பிசாசுபோல் எழும்பிக் குதித்து தன் பொக்கை வாயை ஆட்டி அறைந்துக் கையை நீட்டி மடக்கி, நிர்த்தனம் செய்தவாறு "எம் பாட்டியா! இந்த பாழும் ஓசை எம் பேரனெ கொண்ணுபுடும்போ லிருக்குதே. அப்போ பிடிச்சு நானும் பாக்கறேன், நிக்கற வழியே காணம். எனக்கும் பொறுக்கமுடியாமே வந்தேன். அடே மூர்த்தி! நிறுத்தப்போ றயா இல்லையாடா!" என்று அலக்ஷியமாய்க் கேட்டாள்.

வேணி:—(மிருந்த பயபக்தியுடன்) பாட்டீ! இத்தனை நாள் மெஷின் துருப்பிடித்துத்தானே கடந்தது. ஏதோ பகவான் க்ருபையால் வந்த வேலை இன்னிக்கி ஒருநாள் தானே பாட்டி! நான் தான் கதவெ சாத்தி இருக்கேனே அதுவா ஒங்களுங்கு மெத்தெ மேலே ஓசை கேக்கறது? பாட்டீ! தயவு பண்ணி மன்னிக் கணும்.

கிழவி:—என்னடீ பெரிசா அளக்கரே? தினம் இந்த மாதிரி சுத்தி சுத்தி தலைவேதனெ பண்ணலியேன்னு கொறையா இருக்கோ! வீட்டுலெ சிக்குக்காரா இருக்கறதுகூட தெரியாமெ என்ன அமக்களண்டீ! போது விடியறதுக்குள்ளே குபேரனு பூடப் போறயோ! நோயாளி கஷ்டப்பட்றான். இனுமே சுத்தா தேங்கோ.

இதற்குள் பக்கத்து வீட்டுக்காரன் அங்கு ஓடி வந்து "இதென்ன தலைவேதனை! ராத்திரி எல்லாம் ரோதனையா யிருந்தா எப்படி தூங்கறது. வீட்டிலே ப்ரஸவிச்சி இருக்கறவளுக்கு தலை வேதனை பொறுக்க முடியலேன்னு கத்ரா! தூக்கம் முழிச்சு தலை நோவு கண்டு ஜன்னி வந்துடுத்துன்ன என்ன பண்றது? வாசல் லேந்து ரெண்டுதரம் கூப்டேன். இந்த பாழாப்போன மெஷின் ஓசேலே எதுதான் காதுலே விழும்?" என்று அவர் சொல்லும் போது மூர்த்தியின் இதயத்தில் குத்துவதுபோலிருந்தது.

மூர்த்தி:—பெரியம்மா! ஐயா! நான் பரம ஏழென்றது ஒங்களுக்குத் தெரிந்த விஷயம். எனக்கு இந்த மாசம் அசலே வரும்படி இல்லாமே தவித்தேன். கடவுள் க்ருபை பண்ணி இந்த

வேலை குடுத்தார். இன்னிக்கு ஒருநாள் தான் பொறுத்துக்கணும். மன்னிக்கணும். கிருஷ்ணா கார்த்தி பண்டிகை. கையில் காசொண்ணு இல்லே. இதை செய்து குடுத்தா காசொண்ணு வரும்னு பொழைப்பெ உத்தேசிச்சு செய்யறேன்.

கிழவி:—போடா! போ! நோவாளியும், ப்ரஸவிச்சவளும் சாகரான்னு என்னென்னமோ அளக்கறியே. அவா செத்துத் தொலைச்சா அது நல்லதோ! இதோ பாரு....இந்த பஞ்ச பாட்டு பாடாதே. ஒண்ணு மெஷினை தூக்கிண்டு கொல்லெப்புறம் போட்டுண்டு வேலை செய். இங்கே அடம் செய்யாதே!—என்று அப்பீல் கோர்ட்டு முடிவுபோல் கூறினாள். பக்கத்து வீட்டுக்காரனும் இதையே ஆமோதித்து மண்டையை ஆட்டினான்.

இதற்குமேல் அந்த ஏழை தம்பதிகள் என்ன செய்வார்கள் பாவம்! தங்களைப் படைத்த பூமாதேவியைப் பார்த்துப் புலம்புவதை விட வேறு தெரியாதவர்களாய் தலை குனிந்தார்கள். இதை இரவோடிரவு தைத்துக்கொடுத்தால் காலணா காசு வரும் என்ற ஆவலுடன் இருந்த இவர்களுக்கு பெருத்த குழப்பமும் ஏமாற்றமும் ஆகிவிட்டது. இப்பாதிரி தடங்கல் வந்துவிட்டதால் காலை குறித்த நேரத்திற்குள் தைத்துக்கொடுக்க முடியுமா! முடியாமற் போய் நாணயம் தப்பி விடும்படியாகி விடுமோ!" என்ற பயமும், கலக்கமும் சூழ்ந்து கொண்டுவிட்டன.

7

தம்பதிகளிருவரும் கொல்லைப்புற மிருக்கும் இடத்தைப் போய்ப் பார்த்தார்கள். அங்கு ஒரே அழுக்கும், குப்பையும், ஒட்டடையும் நிறைந்து கிடந்தது. "இந்த இடத்தில் நல்ல துணிகளை எப்படி போட்டுத் தைப்பது? அழுக்காகி விட்டால் என்ன செய்வது?" என்ற கலக்கத்துடன் வேணி கைக் கெட்டிய வரையில் ஒட்டடை யடித்துப் பெருக்கி

விட்டுப் பாயை விரித்தாள். பின்னர் தம்பதிகளிருவருமாக ரெடியோவினைத் தூக்கிக் கொண்டு வந்து போட்டுக்கொண்டு கேட்க உட்கார்ந்தார்கள்.

காற்றில் விளக்கு நிற்காமல் குப் குப் என்று புகைந்து எரிந்து அணைந்துபோய் விடுகிறது. எத்தனை தரம் தீக் குச்சியைக் கிழித்து ஏத்தியும் பத்து நிமிடங்கூட சேர்ந்தாற்போல் கேட்க விடாமல் அவிந்துபோய் விடுவதால் இவர்கள் மனம் உடைந்து போய் விட்டது. உள்ளே தனியாக இருட்டில் படுத்திருக்கும் குழந்தைகள் எங்கே எழுந்து பயந்து அழப்போகிறார்களோ என்ற ஒரு பெரிய பயம் அடிக்கடி தோன்றி வதைக்கிறது. விளக்கு ஏத்தி ஏத்தி வத்திக் குச்சியும் ஆய் விட்டது. இன்னும் இரண்டு மூன்று குச்சிகள்தான் பாக்கி இருக்கின்றன. இதுவும் ஆய் விட்டால் என்ன செய்வது? இந்த அர்த்த ராத்திரியில் வத்திக் குச்சிக்கு எங்கே போவது? "ஈசா! இதென்ன சோதனை!" என்ற வேதனையுடன் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

மூர்த்தி:—வேணி! நமக்கு தொழில் க்ஷீணமாய் விட்ட போதிலும் ஆதியில் கிடைத்த நாணயக்காரன் என்ற பெரும் நல்ல அபிப்பிராயமும் க்ஷீணமாகல்லே. இப்போ அதுவும் போயுடுமோ என்று பயமா யிருக்கே. இப்படி விளக்கு அவிஞ்சா என்ன செய்றது?

வேணி:—நானும் அதுதான் யோசிக்கிறேன். கஷ்டம் மறைய தொழிலைக் காட்டின கடவுள் இப்படி எல்லாம் சோதனையும் பண்ணுவார்னு நான் நெனக்கல்லே. இப்படி அணைஞ்சா இருட்டுலே என்னமா கேக்க முடியும்? காலையிலெ அந்தம்மா வந்தா என்ன சொல்றது? பாதிகூட தெச்சாகல்லெயே.

மூர்த்தி:—வேணி! குழந்தை அழறாப்பலே சப்தம் கேக்கறது. போய் பாரு. இருட்டிலே பயந்துக்கப் போரது—என்றான். விளக்கு அணைந்து விட்டது. மூர்த்தி தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். வேணி எழுந்து சென்றாள்.

8

இருட்டில் தூங்கும் குழந்தைகளில் ராஜு விழித்துக் கொண்டு எழுந்து பார்த்தான். எங்கும் இருட்டும், ஜன்னலால் தெரியும் சிறிது நிலவுவெளிச்சம் மட்டுமே இருப்பது கண்டு பயந்துபோய் வீறென்று அழுது கொண்டே நிலை தெரியாமல் எழுந்து ஓடி வந்து முட்டிக் கொண்டும் சுவரில் இடித்துக் கொண்டும் கதவருகில் வந்தான்.

வீட்டுக்காரக் கிழவி பத்ரகாளித் தாயி ஆவேசத்துடன் படுத்தபடியே "என்னடா சனியன் புடிச்ச எழுவா இருக்கு? ஏண்டா அழுரே? ஒங்கம்மாவெ பூதம் முழுங்கிப்புடலெ. மெஷின் ஓசை போச்சுன்னுக்கா நீ பல்லவி பாட ஆரம்பிச்சுட்டயோ! ஐயயோ உபத்திரவமே! அடீ வேணீ! வேணீ! இதோ பாரு ஒஞ் செல்லம் ராக ஆலாபனெ செய்யறது. வந்து சமாதானப் படுத்து" என்றாள்.

அதே சமயம் வேணி அலறிக் கட்டிக்கொண்டு ஓடி வந்து குழந்தையை வாரியணைத்து எடுத்துத் தோள்மீது சாத்திக் கொண்டே "கண்ணு! ராஜு! அழாதேடா சாமீ! என்னப்பா வோன்னே! பாட்டி திட்டுவா. அடிப்பா! நீ அழாதேடா ராஜா!" என்று கொஞ்சியவாறு சமாதானம் செய்தாள்.

குழந்தை திக்கி அழுதவாறு "அம்மா! இருட்டுலே எங்களெ உட்டுட்டு எங்கே பூட்டே? அப்பா எங்கே?....பயம்மா இருக்கே." என்று அழுதான். அவனைத் தோள்மீது அணைத்துக் கொண்டே உள்ளே போய் படுக்க வைத்துத் தூங்கச் செய்தாள்.

9

மைதிலியின் பொழுது போக்கிற்கு உயர்ந்த வகையில் நீதிகளையும், உலகானுபவங்களையும், சமூக சீர்திருத்தங்களையும் தேச பக்தி, தெய்வ பக்தி, முதலியவைகளையும் போதிக்கும் பேராசிரியன் போன்ற உன்னத தமிழ் நாவல்களும், இதர புராண புத்தகங்களும்தான் உயிர்த் துணையாயிருக்கின்றன. மிஞ்சிய நேரத்தில் தன் மூத்தாரின் குழந்தைகளிடம் வெகு பக்ஷமாயும், பொறுமையற்ற தன்மையில் சமத்ருஷ்டியோடு அவர்களை வளர்க்கும் வேலையைத் தன் முழு மனத்துடன் ஓர் புனிதத் தொண்டாக எண்ணிச் செய்து வருவதில் பெரு மகிழ்ச்சி கொண்டாள்.

குழந்தைகளும் கிழத் தந்தையை விட மைதிலியையே அதிகமாக நேசித்து வந்தார்கள். கிழவருக்கு மைதிலி எந்த விஷயத்தில் எப்படி நடந்துகொண்டபோதிலும் தன் விஷயத்தில் அவள் சரியாக நடந்துகொள்ளாத குறையை அவர் பெரும் பகையாயும் கடின குற்றமாயும் மதித்து வந்தார். ஆகையால் அவர் எந்த வழியில் மைதிலியை மயக்கலாம் என்ற பெரும் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டார்.

அன்று அவர் வெளியில் போகும் ஜோரில் முகங் கழுவி, சரிகை வேஷ்டியுடுத்தி, தலைப்பாகைக் கட்டிக்கொண்டு ஜம்மென்று மாப்பிள்ளைபோல் அலங்கரித்துக் கண்ணாடியின் முன்பு நின்றார். வாயில் கட்டி இருக்கும் பல் நாற்றம் நாறியதால் அதைக் கழட்டி பக்கத்திலிருந்த பேஸின் ஜலத்தில் நன்றாகக் கழுவித் துடைத்துக் கொண்டிருக்கையில் தூரவிருந்த மைதிலி கண்ணாடியின் ப்ரதிபிம்பத்தில் இவர் பல்லைத் துடைப்பதை யறிந்து, ஓட்டமாக ஓடிவந்து கிழவரின் கையைத் தட்டிவிட்டாள்.

பல் வரிசைகளில் ஒன்று தபாரென்று கீழே விழுந்துவிட்டதும் மைதிலி அதைக் கையில் எடுத்துக்கொண்டு கிழவரின் முகத்தைப் பார்க்கிறாள்; பல்லைப் பார்க்கிறாள். வயிற்றில் நெருப்பு வைத்ததுபோல் பற்றி எரிகிறது. சோகத்தில் முதிர்ந்த ஒரு சிரிப்பு அவள் முகத்தில் ஜ்வலித்தது. கடகடவென்று சிரித்துக்

கொண்டே பல்லைத் தூக்கிக்கொண்டு இரண்டடி நகர்ந்து "தாதா! பேஷ்! பல்லு வெகு அழகா இருக்கே!" என்றாள்.

கிழவருக்குக் கோபம் நான்காவது அவதாரம்போல் பிறந்து கொண்டு வருகிறது. தான் பரம ரகஸ்யமாக வைத்திருந்த இந்த பல்லை இவள் எப்படியோ பார்த்து விட்டாளே என்ற வேதனையும் வெட்கமும் சூழ்ந்து கொண்டன. கிழவர் மற்றொரு செட்டு பல்லை வாயில் மாட்டிக் கொண்டு மைதிலியைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தார். அவள், கையிலகப்படாமல் சுற்றி ஓடியவாறு "தாதா! ஒரு வரிசைப் பல்லெ ரொம்ப அழகா இருக்கே" என்று மீண்டும் வயிற்றெரிச்சலுடன் நகைத்தாள்.

இதற்குள் கிழவரின் பெண் அங்கே ஓடி வந்து "என்னம்மா! அது என்னது எனக்குக் காட்டு. அப்பா என்ன வாங்கி குடுத்தா?" என்று கேட்டது. கிழவருக்கு இச்சிறுமி வந்ததும் பின்னும் பயமும், வெட்கமும் பிய்த்துக் கொண்டு வந்து விட்டன. ஒத்தைப் பல் வரிசையுடன் "அடே மைதிலீ! வாண்டாம்! வாண்டாம்; சொல்லாதே....இப்படி குடுத்துடு. ஊம்....தெ. சனியனே மீனாஷி! தூரப் போயிடு. இல்லாட்டா அடிப்பேன். அப்பா கையிலே ஒண்ணுமில்லே" என்று கூறியவாறு மகளை இழுத்துத் தள்ளினார்.

மைதிலி "தாதா! குழந்தையை ஏன் தள்ளறேள்! மீனாக்ஷி! இதோ பாரு ஒங்கப்பாவின் பல்லு வரிசை; வேறொண்ணுமில்லே." என்று காட்டி விட்டாள். மீனாக்ஷி கட கடவென்று சிரித்துக் கொண்டே தகப்பனாரையும் பல்லையும் பார்த்துவிட்டு "எப்பா! ஒனக்கு பொக்கை வாயா! நெஜம் பல்லு கடையாது? அதான் நீ முறுக்கு சீடை எல்லாம் சாப்படறாட்டெங்கறே....அடே முத்தூ! முத்தூ! இதோ பார்டா அப்பாவின் பல்லு." என்று தன் அண்ணனைக் கூவி அழைத்துக் கொண்டே ஓடினாள். கிழவர் ஆனை பலத்துடன் ஓடி வந்து மீனாட்சியை அடித்து, இழுத்துத் தள்ளிவிட்டு, பல்லை லொடக்கென்று வாயில் போட்டுக் கொண்டு "தடிக் கழுதை! இதெ வெளிலே சொன்னேயானா மண்டையெ உடைச்சுப்புடுவேன். ஜாக்ரதை" என்று கூறிவிட்டு, மைதிலியை முறைத்துப் பார்த்துக் கொண்டே மீண்டும் கண்ணாடி அருகில் வந்தார்.

அதே சமயம் தபால்காரன் ஒரு பார்ஸலைக் கொண்டுவந்து "சார்! பார்சல்" என்றான். இந்த குரலைக் கேட்டதும் கிழவர் அபாரமான சந்தோஷத்துடன் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தார். இதற்குள் மைதிலி ஒரே பாய்ச்சலாய் தபால்காரனிடமிருக்கும் பார்ஸலை வாங்கிப் பார்த்தாள். அதன்மேல் "மன்மத பாண சஞ்சீவி" என்ற பெயர் காணப்பட்டதும், வயிற்றில் பகீரென்ற சங்கடமும், தாங்கமாட்டாத வெறுப்புடன் கலந்த கோபமும் உண்டாகியது. கிழவரையும், மருந்தையும் உற்று உற்றுக் கவனித்தாள். கடகடவென்று வெறுப்பும், பரிகாஸமும் கலந்த ஒரு நகைப்பு நகைத்து விட்டு "தாதா! மறு ஜென்மம் எடுக்காமலேயே சின்னப் பிள்ளை, யௌவன வாலிபனாகப் போகிறாப்பலே இருக்கே!" என்றாள்.

இதற்குள் கிழவர் இவள் மருந்தை வாங்கிக்கொண்டு விட்டதைக் கண்டு கோபத்துடன் தபால்காரனை முறைத்துப் பார்த்தபடியே கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டுத் திரும்பினார். அப்போதுதான் மைதிலியின் நகைப்பும், அந்த குறும்பான பாணம் போன்ற வார்த்தைகளும் காதில் பட்டன. ஆத்திரத்துடன் "ஹி ஹி ஹி!" என்று நங்கு காட்டும் முறையில் சிரித்துக்கொண்டு "மோரக் கட்டையைப் பாரு. தே....வெளையாடாதே. மரியாதையா இப்படிக் கொடுத்து விடு. ஐயோ! பிரிக்காதே. மைதிலீ! மைதிலீ! சொல்வதைக் கேளு. பிரிக்காதே. அது என்னுதில்லை. சேஷப்பருடையது" என்று கூறிக்கொண்டே, மைதிலியின் கையிலிருந்து பிடுங்கத் தாவினார்.

இதற்குள் மைதிலி சிட்டுக் குருவி போல் பறந்து வேறு இடம் ஓடியவாறு, பார்சலைப் பிரித்து புட்டியைக் கையில் எடுத்துக் கொண்டாள். கிழவரும் விட்டபாடில்லை. ஓடி வந்தார். அந்த கூடத்தை மூன்று முறை ஓடி ஓடி மைதிலி சுற்றினாளேயன்றி மருந்தைக் கொடுக்கவில்லை.

கிழவரும் விடாமல் சுற்றி மைதிலியைப் பிடித்துக் கையிலிருந்த புட்டியை இழுக்கப் போனார். மைதிலி கண்களில் தீப்பொறி பறக்க "என் கையை விடுங்கள். மன்மத பாண சஞ்சீவியா

வேணும்! என் மன்மதனை நேரில் வந்து பாண ப்ரயோகம் செய்தால் இன்னும் இளமையும், யௌவன சுகுமாரமும் வந்திடுமே. இந்த கிழத்திற்கு மருந்து ஒரு கேடா?" என்று கூறியபடியே மருந்து புட்டியை விசி எறிந்தாள். இவள் மனத்தில் சிதறி அலையும் வேதனையைக் காட்டுவதுபோல் புட்டி சுக்கல் நூறாக உடைந்து மருந்து சிதறியோடியது. மைதிலி கையைத் திமிறிக் கொண்டு வேறு புறம் சென்று நின்றாள்.

கிழவரின் கோபத்தைக் கேட்கவேண்டுமா! "ஆத்தா! என்ன செய்தே?" என்று உறுமிக்கொண்டு, மைதிலியை அடிப்பதற்கு கையை ஓங்கிக்கொண்டு வந்த சமயம் கிழவரின் மூத்த மகன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிட்டவன், தற்செயலாகப் பார்த்து, புத்தகத்தைப் போட்டுவிட்டு ஓடி வந்து தகப்பனாரைத் தடுத்து "எம்பா! வெறும்மெ சித்தியை அடிச்சு கொல்றெ? ஐயோ பாவம்! அவளுக்கு யார் இருக்காப்பா! அவ அழறா பாரு." என்று தடுத்தான்.

கிழவரின் கோபம் இன்னும் பொங்கியது. "ஆமாண்டா! தறிதலைப் பயலே! நீ சிபார்சுக்கு வந்துட்டியோ! போடா வெளியே" என்று பையனின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிய தள்ளில் அவன் உருட்டி யடித்துக்கொண்டுபோய் விழுந்தான். கிழவரின் ஆத்திரம் சரியான உச்ச ஸ்தாயியை எட்டி விட்ட சமயம் சேஷப்பர் தொந்தியைத் தடவிக்கொண்டே "ஏண்டா வேதாசலம்! பார்சல் வந்துடுத்தோ! தபால்காரன் இங்கே ஏறினாப்பலே இருந்தது. ஒனக்கு மாத்திரம் வந்ததா! எனக்குக் கூடவா?" என்று கேட்டுக் கொண்டே கூடத்தை அடைவதற்குள், கிழவர் தலையிலடித்துக் கொண்டு, வாயை மூடும்படி சேஷப்பருக்கு கையால் சமிக்ஞை காட்டிக் கொண்டே ஓடினார். அதைப் பார்த்த மைதிலிக்கு அந்த நிலைமையிலும் கடகடவென்று நகைப்பு வந்து விட்டது. பெரிய சத்தமிட்டுச் சிரித்தாள்.

அச்சமயம், அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தேவ கானம்—கந்தர்வ கானம், மானிலத்தில் மானிட வாழ்க்கையை உய்விக்கும் மகிமை கானம், வானக்குயிலின் அம்ருத நாதம்

போன்று ஒலிக்கும் இனிய கானம்—வழக்கம்போல் கேட்டது. மைதிலியின் தேகமே மயிர் சிலிர்த்தது. அவளுடைய நகைப்பு முற்றும் அந்த வினாடியே மறைந்துபோய் அவள் உள்ளத்தி னின்று எழுந்த ஓர் புதிய சக்தி அவளை ஜன்னலண்டை இழுத்துச் சென்றது. முகம் ஒரே நிலையில் நின்றது. கண்கள் மெய்மறந்து ஆனந்தத்தினால் சற்று நேரம் மூடுவதும், பின்னும் திறப்பதுமான ஓர் தனிச் சுடருடன் ப்ரகாசித்தன. அவள் அநுபவிக்கும் கான மாவது—

("ஹைதுனியாமே !"—என்ற மெட்டு)

தூய்மையினாலே துன்பம் வென்றிடலாம்
துணிந் தெழுவாய் மட நெஞ்சமே !—
அச்சுதன் அருளை நம்பி (தூய்)

கடல் பெரிதேனினும் கப்பல் சிறிதேனினும்
இடர்பல வரினும் தடுத்துமுன் நீந்தியே—
கடல் கடப்பது கப்பலே (தூய்)

இந்த வெகு அருமையான பாடலை ஒரு சரணம் பாடியதும் தாழ்ந்த குரலில் "ஆமாம்; ஆமாம். கடல் மகா பெரிது. ஆழமும், கரையும் காணாதது. ஆனால் அதில் தைரியமாக ஒரு சிறு கப்பல் கிளம்பி அதைக் கடக்க முன்வருகிறது. அக் கப்பலை அப்படியே கவிழ்த்து ஆபத்துண்டாக்குவதற்கு பெரிய திமிங்கிலம் முதலிய நீர் வாழ் ஜந்துக்களும், கடல் மலை முதலி யனவும் தயாராயிருக்கின்றன. அது போதாததற்குச் சில சமயம் புசலும் காற்றும் பெரு மழையுங்கூட வாட்டி வதைக்கின்றன. ஆனால் மாலுமியின் சாமர்த்தியத்தினால் கப்பல் சேதமின்றி அக் கரை சேர்ந்துவிடுகிறது. இதுதான் உலக ரகஸ்யத்தின் தத்துவம். கப்பலுக்கு மாலுமி எப்படியோ, அப்படி மனிதனாகிய கப்பலுக்கு மனமாகிய மாலுமியே அதியாவச்யம்.

கப்பலின் மாலுமி சிறிது அஜாக்கிரதையாக இருப்பா னாயின், கப்பல் பெரும் ஆபத்துக்கு ஆளாவதோடு அக்கப்பலை ஆதாரமாக நம்பி, ஏறியுள்ள ஜனங்களுக்கும், பண்டங்களுக்கும்

பேராபத்து விளைந்துவிடும். அதேபோல் மனித வாழ்க்கைக் கப்பலை நடத்திச் செல்லும் மாலுமி போன்றுள்ள மனது சற்று அஜாக்ரதையாய், ஆசா பாச மோகங்களாகிய விபத்துக்களில் சிக்கிவிடுமாயின், பேராபத்துக்கும், விபரீத பாபக் குவியலுக்கும் பங்குதாரராகவும், துன்பமே உருவாகவும் ஆய்விடும். இம்மனிதக் கப்பலையே சாச்வதமாக நம்பியுள்ள பெண்டு பிள்ளைகள், மக்கள் மனிதர்கள் முதலிய எல்லோரையும் இவனுடைய அஜாக்ரதையே சிதறப் பதற அடித்துவிடும். ஆகையால் சம்சார சாகரத்தைக் கடக்க மனமாகிய மாலுமி, வெகு பக்குவமாய் தெய்வ பக்தியும், உறுதியும் வழுவாமல் இருந்தால், அச்சாகரத்தைக் கடந்து கடவுளின் பாதங்களாகிய அக் கரையை அடைந்து இன்புறலாம். ஏ மட நெஞ்சே! தெளிந்து அறிந்துகொள். மயங்காதே! தியங்காதே!

பாட்டு

மாலுமி மரக்கலம் காத்தற்போல் மனிதர்க்கு
வாழ்க்கைக் கடல் கடந்து வானுல கேகிட—
மாலுமியாம் மனமே (தூய்)

என்ற மற்றோர் அடியைப் பாடியவாறு கீதத்தின் ஒலி வெகு தூரம் போய் விட்டது. இந்த அதியற்புதமான கானத்தின் அழகும், அர்த்தமும், பேரானந்தமுமே மைதிலியின் புண்பட்ட வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஜீவ சக்தியாய், வாழ்க்கையின் நாதமாய் அமைந்தன.

9

வேணி :—மணி 8 அடிக்கப் போறது. எப்படி தேச்சாகப் போறதுன்னு பயப்பட்டதுக்கு கடவுள் எப்படியோ ஒரு அபரிமிதமான சக்தியைக் குடுத்து காரியத்தை முடிச்சுட்டார். இதெல்லாம்தான் தெய்வச் செயல் இன்றது.

மூர்த்தி :—வேணி! எப்போதும் நம்பினவாளெ அந்த பரம் பொருள் கைவிடவே மாட்டான். எல்லாம் அவனருள்.

வாஸந்தி :—அப்பா! வாத்தியாரம்மாவும், இன்னொரு அம்மாவும் வராப்பா.

மூர்த்தி :—அம்மணீ! வாருங்கோ; வாருங்கோ! (வேணி பாயைப் போட்டு உட்காரச் சொல்லுகிறள்; இருவரும் உட்காருகிறார்கள். மூர்த்தி தைத்த துணிகளை ஒழுங்காக மடித்து வைத்திருப்பதை எடுத்துக் காட்டி பழந் துணிகளையும் கணக்குப்படிக்கு கொடுத்துவிட்டு) அம்மணீ! சரிதானே!—என்றான்.

வந்தவள் :—(துணிகளைப் பிரித்துப் பார்த்துவிட்டு) ஆஹா! தர்ஜீ! நீர் ஏதோ வீட்டுக்குள்ளே சின்ன தையல்காரனாட்டும் உட்காந்து தைக்கறேரே யன்றி வேலை ஷாப்பு வேலையை விட அற்புதமா இருக்கே....வாத்தியாரம்மா பாத்தங்களா!....என்ன அழகா தெச்சிருக்கார்? தர்ஜீ! இதுக்கெல்லாம் என்ன கூலியாச்சு?

மூர்த்தி :—அம்மா! நான் எப்போதும் ஒரே கூலிதான் வாங்கரது. எல்லாத்துக்கும் சேத்து நாடா டேப்புகள், ரிப்பன்கள் உள்பட 5 ரூபாயாரது.

வந்தவள் :—என்ன! அஞ்சு ரூபாயா! அடாடாடா....போன தபா நான் நாலு கவுனும், ரெண்டு சொக்காயும் தெக்கச் சொல்லி ஒரு ஷாப்புலெ குடுத்தேன். அதுக்கு மட்டும் 4 ரூபா வாங்கிட்டானே. ஒரு ஜாக்கெட்டுக்கு நீர் ரெண்டணாவா போட்டீர்?

மூர்த்தி :—தாயே! ஆமாம். அதையாவது ச்வாமி தவருது குடுத்தா போதும். எனக்குப் போட்டி போட்டு பேராசைப்பட இஷ்டமில்லெ. அந்த மாதிரி எண்ணமே பகவான் இதுவரையில் குடுக்கல்லெ. இனிமேயும் குடுக்காதிருக்கும்படிதான் வேண்டிக்கிறேன்.

வந்தவள் :—இந்த மாதிரி உத்தம குணத்தை காண்பதே அரிது. நான் ரொம்ப அவசரமா வேலெ குடுத்து ச்ரமப்படுத்திவிட்டேன். இதோ பணம்—என்று 5 ரூபாய் நோட்டையும், கூட இரண்டு ரூபாயையும் சேர்த்துக் கொடுத்துவிட்டு-இதையும் வாங்கிக்கணம். அவசரமாக வேலை செய்ததுக்கு அதிகப்படி இது. இதே வேலெயே ஷாப்பிலே இருந்தா 15 ரூபா கட்டாயம் பில்லு போடு

வான். நான் வரட்டுமா! உங்களுக்கு ரொம்ப வந்தனம்—என்று கூறியவாறு துணி மூட்டையுடன் எழுந்தாள். வாத்தியாரம்மா வும், இவர்களுக்கு வந்தனம் செய்து "ரொம்ப சந்தோஷம், நாங்கள் போய் வருகிறோம்" என்று உத்திரவு பெற்றுச் சென்று விட்டாள்.

குழந்தை வாஸந்திக்கும், ராஜுவுக்கும் இந்த ரூபாயைப் பார்த்த உடனே உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. முகத்தில் சிரிப்பும் இன்பமும் தாண்டவமாடுகிறது. ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு குதித்தபடியே தமக்கு பட்டாசு நிச்சயமாய் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் மகிழ்ந் தார்கள். மூர்த்தியும், வேணியும் குழந்தைகளைப் பார்த்து பரம சந்தோஷமடைந்தார்கள்.

மூர்த்தி:—வேணீ! கடவுள் கிருபையில் கார்த்தி பண்டி- கைக்கு குறைவில்லாமெ கிடைத்தூட்டது. நீ வெந்நீர் போடு. நான் கடைக்கி போய் சீக்கிரம் எண்ணெ, சீக்கா பொடி, திரி நூல், அகல்கள், ச்வாமி நிவேதனத்துக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம்....என்று முடிப்பதற்குள் வாஸந்திகா ஓடி வந்து, பிதா வைக் கட்டிக் கொண்டு "எப்பா! பட்டாசு" என்றாள். மூர்த்தி சந்தோஷத்துடன் அவளைக் கட்டிக் கொடுத்துவிட்டு "கண்ணே வாஸந்திகா! பட்டாசு இல்லாமெயா? அதுகூடத் தாண்டாப்பா வாங்கப் போறேன். எல்லாம் வாங்கிண்டு வரேன்....குழந்தை களுக்கு எண்ணெ தேய்ச்சு நீயும் தேய்ச்சுக்கோ; நான் போய் வறேன்" என்றான்.

ராஜு "அப்பா! மத்தாப்பு, புருசுவத்தி, கம்பிவத்தி எல் லாம் வாங்கிண்டு வரயாப்பா?" என்றான். அவனைத் தூக்கி யணைத்து முத்தமிட்டுப் பின் "கண்ணே! எல்லாம் வாங்கிண்டு வரேன்" என்றான். இதற்குள் வேணி எண்ணெய் பாத்திரம் கொண்டு வந்து கொடுத்தாள். மூர்த்தி அதை எடுத்துக்கொண்டு சந்தோஷமாகச் சென்றான். குழந்தைகளும் பட்டாசு வரும் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டே வழி யனுப்பினார்கள்.

10

மூர்த்தியின் இதயம் சந்தோஷ மயமாக மாறி நிறைந்தது. முதலில் பட்டாசு கடைக்கே சென்று ஒரு ரூபாயிக்கு பட்டாசு, மத்தாப்பு முதலியவைகளை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டான். அகல்களும், சட்டி பானைகளும் விற்கும் கடைக்குச் சென்று அவற்றை வாங்கினன். எண்ணெய், திரிநூல், கற்பூரம், தேங்காய், பழம், வெல்லம், காய்கறிகள் முதலிய சகலத்தையும் வாங்கிக் கொண்டு, சாமான்களைப் பார்க்கும்போது அவன் சந்தோஷத்திற்கு இச் சாமான்கள் சிகரம் வைத்ததுபோல் தோன்றின. இந்த பட்டாசைக் கண்டதும் குழந்தைகள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்று நினைக்கும்போது அவனுடைய ஆனந்தம் கரை புரண்டது. பையில் சாமான்களையும், துணி மூட்டையில் காய் கறிகளையும் கட்டி தோள்மீது போட்டுக் கொண்டும், எண்ணெய்த் தூக்கை கையில் பிடித்துக் கொண்டும் சீக்கிரமாக வீட்டை நோக்கி நடக்க வாரம்பித்தான்.

கார்த்திகைப் பண்டிகையின் குதூகலம் குழந்தைகள் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டு, புதிய உடை உடுத்திக்கொண்டு பட்டாசு சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வீட்டு வாசற்படியிலும் மாவிலைத் தோரணங்களும், மாவு கோலங்களும் வெகு அற்புதமா யிருந்தன. சிலர் அவ்வருடம் கல்யாணம் செய்த பெண்களை மாமியார் வீட்டிற்கு சீர் வகைகளோடு கொண்டு விடும் காட்சிகளையும் பார்த்துக் கொண்டே, மூர்த்தி "நம் வாஸந்திகாவுக்கும் விவாகமாகிவிட்டால் இப்படித் தானே மாமியார் வீட்டிற்குப் போவாள் என்று எண்ணிய படியே ஆனந்தத்துடன் நடக்கிறான்.

அச் சமயம் இரண்டு பெரிய வடக்கத்திக் காளை மாடுகள் பூட்டிய வில் வண்டி கண கணவென்று மணி யொலிக்க, கடகடவென்று பறந்து கொண்டு வந்தது. எதிரில் வந்த மோட்டார் லாரியின் பேரிரைச்சலையும் வேகத்தையுங் கண்டு புதிதாக வாங்கப்பட்டு வந்துள்ள காளை மாடுகள் மிரண்டு போய் வண்டி

யைத் தாறுமாறுமாக இழுத்துக் கொண்டு ஓடியதில், எதிரில் வந்த மூர்த்தி எர் கால் பட்டுக் கீழே விழுந்து விட்டான்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! மூர்த்தியின் சாமான்கள் மூலைக்கொன்றாகச் சிதறியடித்துக்கொண்டு ஓடிவிட்டதையும், கீழே அடிபட்டுக் கிடக்கும் மூர்த்தியையும் காண கும்பல் கூடி ஒரே கூச்சலும், கலாட்டாவாகவும் ஆய் விட்டன. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்றதுபோல் மூர்த்தியின் சாமான்கள் மூலைக் கொன்றாகச் சிதறியதைக் கண்ட சில சோதாக்கள், ஆளுக்கொன் றாக எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தார்கள். எண்ணெய் பூமா தேவிக்கு ஸ்நானமாக அர்ப்பணமாகியது. வரும்பொழுது மூர்த் தியின் ஆனந்தம் இருந்த வேகமென்ன! இப்போது உடைந்து சிதறிப் போய்விட்ட விபரீதமென்ன! என்னே உலகம்! என்னே மனித வாழ்க்கை!



11

தந்தையின் வரவை நிமிடத்திற்கு நிமிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகளின் உள்ளத்தில் பொங்கி எழும் ஆவல் வெள்ளத்தை யாரால் அளவிட முடியும்? அரை நிமிடத்திற் கொரு முறை உள்ளே ஓடிப்போய் "ஏம்மா இன்னம் அப்பா வரல்லே? அப்பா எப்போ வருவார்?" என்று வாஸந்தியும், ராஜுவும் வேணியைக் கேட்டுத் தொந்தரவு செய்வதும், மீண்டும் வீதியில் வந்து நிற்பதும், சற்று தூரத்தில் சாமான்களுடன் வரும் ஒவ்வொருவரையும் "அதோ அப்பா! அதோ அப்பா!" என்று கூறி ஏமாறுவதுமாகத் துடி துடித்து வழியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் வீதியில் ஓர் இரட்டை மாட்டு வண்டி வந்து நின்றதும், குழந்தைகளின் ஆவல் பின்னும் அதிகரித்து, தம் பிதா தான் வண்டியில் வந்திருப்பதாக எண்ணி "அப்பா! வாங்கிண்டு வந்துட்டியா?" என்று கூவிக்கொண்டே படி இறங்கி ஓடி வந்து வண்டியை எட்டிப் பார்க்கும்போது அந்த வண்டியில் தலையிலடி பட்டு ரத்தம் பெருகும் காயத்துடன் மூர்த்தி படுத்திருப்பதை யறிந்து அப்படியே அலறிப்போய் "அப்பா! அப்பா!" என்று கத்தினார்கள்.

இதற்குள் வண்டிக்காரன் இறங்கி, வாஸந்தியை நோக்கி "அம்மா! கத்தாதே. ஒங்க உள்ளு எது காட்டு. அவரெ கொண்டு உட்ரேன்" என்றான். வாஸந்தி தாங்கமாட்டாத விசனமும், ஆத்திரமும் பொங்கியவளாய் வண்டிக்குள் சடக்கென்று ஏறிக் கொண்டு "அப்பா! அப்பா! ஏம்பா காயம் பட்டுது? எங்கேப்பா வியுந்தே?....கண்ணெ தறந்து பாருப்பா! அப்பா! ஐயோ! அப்பா பேசல்லியே. வண்டிக்காரா! எங்கப்பாக்கு என்ன வந்துது? எங்கே இந்த அடி பட்டுது? சொல்லேன்" என்று கண்ணீர் வழிய கதறிக் கேட்டாள்.

வீதியில் போவோர் வருவோர் இந்த கூக்குரலைக் கேட்டு கூட்டங் கூடி "என்ன! என்ன!" என்று வண்டியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

வண்டிக்காரன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு, வண்டிக்குள் தலையை நீட்டி வாஸந்தியை நோக்கி “அம்மா! நீ என் இப்படி கூச்சப் போட்றே; கும்பு கூடிப்போறது. இந்த மாடு மெரண்டு தாறுமாறா வண்டியை இழுத்திகினு ஓடச்சே இவரு எதிரே வந்து எக்கச்சக்கமா உயிந்துட்டாரு. எங்க எஜமான் அங்கெயே எறங்கிகினு இவுரெ ஊட்டுலே வுட்டுட்டு வரச் சொன்னாரு. நீ எறங்கு. இவரெ உள்ளே கொண்டு போவலாம்” என்று வாஸந்தியை இழுத்துக் கீழே இறக்கினான்.

பிறகு மூர்த்தியை ஆட்டுக் குட்டியைப் போல் தூக்கிக் கொண்டு படி ஏறினான். வாஸந்தி கண்ணீர் பெருகப் பொங்கும் துயரத்துடன் முன்னே வழி காட்டிச் சென்றாள். ராஜு இன்னும் குழந்தையாகையால், அதற்கு ஒன்றுமே தோன்றாது கிலி பிடித்துப் போய்விட்டது. சிறிது நேரம் பேசக்கூடத் தோன்றவில்லை. தன் தமக்கையை நோக்கி “என் அக்கா! அப்பா பட்டாசு வாயிண்டு வரச்சே அதை யாரானா திருடன் பிடுங்கிண்டு அப்பாவெ அடிச்சுட்டானா?” என்று அவன் சிறிய புத்திக்குத் தோன்றியதைக் கேட்டான்.

வாஸந்தி பதிலே சொல்லாமல் “பேசாமெ யிருடா! சனியனே!” என்று தான் பெரியவள் என்கிற அதிகாரத்தையும் விடாமல் காட்டிக்கொண்டே உள்ளே சென்றாள். வண்டிக்காரன் மூர்த்தியைத் தூக்கிக்கொண்டு வந்தான். ராஜுவும் பின்னாலேயே ஓடி வந்தான். விதி யாரை விட்டது? சற்று முன் நடந்ததும், இனி நடக்கப்போவதும் யாராலறிய முடியும்? எல்லாம் அவன் செய்யும் லீலா விநோதத்தின் மகிமையல்லவா! பட்டாசு வாங்கி வருவதாகச் சென்ற மனிதனை ஆவலோடு எதிர்பார்க்கும் குழந்தைகள் எப்படிக் கண்டார்கள்? விதியின் வலிமையை மாற்றல் அரிதன்றோ?

12

அன்று மகோன்னதமான கார்த்திகைப் பண்டிகையாகையால், வேணி அவள் இருக்கும் சிறு விடுதியை பெருக்கி மெழுகிப் பின்னர் ஸ்வாமியை பஜித்தபடியே அவரது சன்னிதானத்தின் முன்பு கோலமிட்டுக் கொண்டே "ஜகதீசா! உன்னுடைய க்ருபா கடாக்ஷம் என்றும் இவ்வேழை மீது நிலைத்திருந்தால் போதும். அதிக ஆசை அதிக நஷ்டம். அன்றாடம் கஞ்சிக்கு வேண்டிய மட்டும் தொழில் காட்டினையானால் போதும். உன்னடியார்கள் வருந்தி கஞ்சிக்குத் தவித்தால் அந்த வருத்தம், அவமானம் உனக்கில்லையா?" என்று வேண்டும் பொழுது, வாஸந்தி பெரிய குரலால் "அம்மா! அம்மா! அப்பாவே பாரேன். ஐயோ! தலையிலெ ரத்தம் வழியறதே. கண்ணை தறக்கவே இல்லியே. பேசவே மாட்டேங்கறாரே!" என்று கத்திக்கொண்டே ஓடி வந்து, கயித்துக் கட்டிலில் பாயை விரித்து அதில் விடும்படி வண்டிக்காரனுக்குக் கூறினாள்.

ஈச்வர த்யானத்தில் மெய் மறந்து திடுக்கையில் பேரிடி போன்ற இவ்வார்த்தைகளைக் கேட்டதும், வேணி கதிகலங்கிப் போய் கையிலிருந்த மாவு கொட்டாங்கச்சி கீழே நழுவுவது கூடத் தெரியாமல் அலறிக் கொண்டு ஓடி வந்தாள். அவளுக்கு ஒன்றுமே தோன்றாமல், ஆகாயமும் பூமியும் ஒன்றாய் சுழல்வது போன்ற வேதனையுண்டாகி விட்டது. "வாஸந்தி! என்னம்மா! அப்பாக்கு என்ன? வண்டிக்காரா! என்னப்பா சமாச்சாரம்! சீக்கிரம் சொல்லேன்" என்று கேட்டுக் கொண்டே, ஒரு செம்பில் வென்னீர் கொண்டு வந்து ஒரு துணியை நனைத்து மூர்த்தியின் தலையில் வழியும் ரத்தத்தை துடைத்தாள்.

இதற்குள் வாஸந்தி விசிறி கொண்டு வந்து விசிறுகிறாள். ராஜு பேந்த பேந்த விழித்தபடியே அம்மாவையும், அப்பாவையும் மாறி மாறிப் பார்க்கிறான்; ஒன்றுமே தோன்றாது இடிந்து போய் விட்டான். வண்டிக்காரன் உண்மையில் பரிதாபத்துடன் "அம்மா! எங்க எசமான் ரெண்டு வடக்கத்தி காளெங்களெ இப்

பத்தான் புடிச்சாந்தாரு. அது இன்னும் இந்த ஊரு மோட்டா காருங்க கிட்ட பயகலீங்க. அதெ கட்டிக்கினு எங்க எசமான் கடெத்தெரு பக்கம் போனாருங்க. எதிரே ஒரு மோட்டாரு பெரிய பூதம்பேல வந்திடுச்சு. அதெப் பாத்து காளெ மெரண்டு போய தாறுமாறு வண்டியெ இஸ்திக்கினு ஓடித்துங்க.

அப்போ இந்த ஐயா ஏதேதோ சாமானுங்க வாங்கிகினு வந்தாரு. அந்தப்பரம் மோட்டாரு. இந்தப்பறம் மாட்டு வண்டி நடுவுலே ஐயா மாடு முட்டி வுயுந்துட்டாரு. நானு சாமர்த்தியமா வண்டியெ இஸ்து புடிச்சித் திருப்பினேன். அதனாலேதானுங்க இந்த மட்டும் மீந்துச்சி. சாமானுங்கல்லாம் சோதா பசங்க ஆளுக்கு ஒன்னு தூக்கிகினு பூட்டாங்க.

இவரு கீயே உயிந்ததும் நான் மாட்டெ கட்டிப்புட்டு கிட்ட போயி விசாரிச்சேனுங்க. இந்த ஊடுன்னு சொன்னாரு. அப்பறந்தான் மயக்கம் வந்திடிச்சி. எங்க எசமான் வண்டிலெ உட்டு ஆட்டெ கொண்டுபோயி உட்டுடுன்னாரு. தூக்கியாந்தேன். அழுவாதீங்க. நல்ல மருந்து போட்டு கட்டுங்க. ஐயோ! மணி ஓசை கேக்குதுங்க. காளெ பிச்சிகிச்சோ என்னமோங்க?" என்று கூறிக்கொண்டே, ஓட்டமாக ஓடி விட்டான்.

வேணியின் இதயம் தத்தளிக்கிறது. தண்ணீரை முகத்தில் தெளித்து வாயிலும் வார்த்துப் பார்த்தாள். பேச்சு மூச்சே இல்லை. வாஸந்தி அடங்காத விசனத்துடன் "அப்பா! அப்பா! கண்ணெ தெறந்து பாரேன்; அப்பா! அப்பா!........ஐயோ! கண்ணெயே தறக்கல்லெயே! அம்மா! என்ன பண்றதும்மா!" என்று கலங்கினாள்.

வேணி தனக்குத் தெரிந்த கை மருந்துப் பொடி யொன்றை தலைக்கு வைத்துக் கட்ட வாரம்பித்தாள். வாஸந்திக்கு இருப்பு கொள்ளவில்லை. "அம்மா! நீ அப்பாவே ஜாக்ரதையா பாத்துக்கோ! நான் இதோ ஓடிப் போய் டாக்டரை அழைச்சுண்டு வரேன்" என்று கூறி எழுந்தாள்.

வேணி:—அசடே! எந்த வைத்தியனை நீ கூட்டிண்டு வர முடியும்? பணம் வைக்காமே யாருமே வரமாட்டாளம்மா!

அதோடே நீ சின்ன பொண்ணாச்சே ஒன்னே யார் லக்ஷ்யம் பண்ணுவா ?

வாஸந் :—நீ பேசாமெ இரும்மா! நான் ஒரு நிமிஷத்துலெ ஓடிப் போய் அழைச்சிண்டு வரேன். ஜாக்ரதையா பாத்துக்கோ! தடங்கல் பண்ணாதே.—என்று ஆவேசத்துடன் சொல்லிக் கொண்டே ஒரே ஓட்டமாக ஓடி மறைந்து விட்டாள். வேணி கடவுளை ப்ரார்த்தனை செய்தபடியே உட்கார்ந்திருக்கிறாள்.

13

ஆவேசத்துடன் கிளம்பிய வாஸந்தி இரண்டு மூன்று தெருக்களைத் தாண்டி, ஓட்ட ஓட்டமாக ஒரு பெரிய வைத்தியரின் வீட்டுப் படி ஏறி உள்ளே ஓட முயன்றாள். வீதியில் காவலிருந்த பாராக்காரன் இச் சிறுமியின் கையைப் பிடித்து இழுத்து நிற்க வைத்து "ஏய்! எங்கே இத்தனை தைரியமா பெரிய வீட்டுக்கு பெண் கொடுத்தாப்லே போரே! நான் இங்கே நிக்கரது தெரியல்லே. என்ன முழிகிப்போனாப்பலே ஓட்றே?" என்று அதட்டினான்.

வாஸந்திக்கு ஏற்கெனவே உள்ள துக்கத்துடன் இந்த மிரட்டல் பின்னும் மனத்தைக் கிளறியது. அவளுடைய தைரியத்தை அப்போதும் விடாமல் "இதோ பாரு. எங்கப்பாவெ ஒரு பெரிய மாடு முட்டி தள்ளி, மண்டெலெ அடிபட்டு கீழே விழுந்து மயக்கமாய் பூட்டா. ரத்தம் வழியறது. சீக்கிரம் டாக்டரெ அழெச்சிண்டு போக வந்தேன். என்னெ விடு" என்று மீண்டும் திமிரிக் கொண்டு உள்ளே ஓடப் பார்த்தாள்.

வேலைக்காரன் தடுத்து "ஏ பொண்ணே! இப்போ டாக்டரெ பாக்கவே முடியாது. அவர் ஒரு ஆபரேஷன் கேஸில் இருக்காரு. ஆயிரம் ரூபா கொடுத்தாலும் இப்ப வரவே மாட்டாரு.

நீ வேறெ யாரையாச்சும் அழைச்சிண்டு போய் சீக்கிரம் பாரு. ஐயோ பாவம்! போம்மா அழாமெ போ!" என்றான்.

துள்ளிக் குதித்த ஆவல் வாஸந்தியின் மனத்தில் உடைந்தது. அவளுக்குப் பெருங் குழப்பமும், திகிலும் உண்டாகி விட்டதால் தள்ளாடிக் கொண்டே படி இறங்கி விட்டாள். எதையோ தீர்க்கமாக யோசிப்பதுபோல் சிறிது நின்றாள். அவளுடைய மூளையில் ஏதோ ஓர் நூதன உணர்ச்சியுடன் கூடிய யோசனை உதயமாகியதை அவளுடைய முகம் சடக்கென்று மலர்ந்து கண்களில் ஜீவ சக்தி ப்ரகாசித்தது, நன்கு விளக்கி விட்டது. உடனே மானை விட வேகமாக ஓடவாரம்பித்தாள்.

அங்கு பிடித்த ஓட்டம் சில நிமிடத்திற்குள் அவளுடைய பள்ளிக்கூடத்துக்குள் சென்று தலைமை உபாத்தியாயினியின் அறையில் நின்றாள். ஓடி வந்த வேகத்தின் அதிர்ச்சியினால் மூச்சு துரத்துகிறது. வெயர்வை வெள்ளமாகக் கிளம்பி வழிகிறது. அங்குள்ள வேலைக்காரன் அவ்வறையிலுள்ள எஜமானியின் புத்தகங்கள் உள்ள பீரோக்களையும், கண்ணாடி, மேஜை, நாற்காலி முதலியவற்றையும் துடைத்துக் கொண்டிருந்தான்.

அச் சமயம் வாஸந்தி இத்தனை அலங்கோலமாக வந்து நின்றதைப் பார்த்து, வியப்புற்று "என்னம்மா! இன்னிக்கு லீவுன்றது மறந்துட்டாயா! இன்னிக்கு கார்த்தி பண்டிகெ இல்லே! பள்ளிக்கூடம் கடயாதம்மா! ஏன் இப்படி எரைக்க எரைக்க ஓடி வந்தே?" என்று பக்ஷமாகக் கேட்டான்.

வாஸந் :—(கண்ணில் நீர் ததும்ப அவ் வேலைக்காரனின் கைகளைப் பிடித்துக்கொண்டு) முத்தய்யா! பள்ளிக்கூடம் லீவுன்றது எனக்கு தெரியும். அதுக்காக வல்லே. எங்கப்பா திடீன்னு கீழே விழுந்து தலெலெ அடிபட்டு ஞாபகமில்லாமே கடக்கிறு. நீ ஒரு ஒபகாரம் பண்ணனும். அதுக்குதான் இங்கே வந்தேன். இந்த டெலிபோனில் டாக்டர் ராமநாதனைக் கூப்பிட்டுட்டு என் கையிலே ரேஸீவரே குடுத்துடு. நான் பேசிக்கிறேன். இதுதான் நீ செய்யணும்.

முத்தய்யா :—அடடா! அவர் பெரிய டாக்டராச்சே. அவர் வந்தா சரியானபடி பணங் கொடுக்க உங்களாலே முடியுமோ!

வீட்டுக்கு வந்தாலே பத்து ரூபா குடுக்கணுமே....தரும ஆஸ்பத்தி ரிக்கு போகக் கூடாதோ.

வாஸந்தி:—(சற்று யோசித்த பின்) தரும ஆஸ்பத்திரி இருக் கட்டும். முத்தய்யா! எங்கம்மாகிட்ட பணம் இருக்கு. அவர் வந்தாதான் நன்னு பாப்பார். சீக்கிரம் குணமாயிடும். நீ கூப்பிடு முத்தய்யா! எனக்கு நம்பர் தெரியாது—என்ருள்.

முத்தய்யன் இயற்கையிலே நல்ல உபகார குணமுடையவன். அதோடு, மூர்த்தி ஒரு சமயம் இந்த முத்தய்யனுக்கு இனுமாக ரெண்டு சொக்காய் தைத்துக் கொடுத்த நன்றி விசுவாசம் உள்ள வன். ஆகையால் உடனே இசைந்து டெலிபோனில் நம்பர் பார்த்து டாக்டரை அழைத்து விட்டு வாஸந்தியிடம் ரிஸீவரைக் கொடுத்தான்.

இச் சிறுமி பரபரப்புடன் ரிஸீவரை வைத்துக்கொண்டு "ஹல்லோ டாக்டர்! குட் மார்னிங்கு சார்! எங்கப்பாக்கு அடிபட்டு மயக்கமா விழுந்துட்டா இன்னும் தெளியலே. நீங்க அப்பாசாமி தெரு, 66-வது நெம்பர் வீட்டுக்கு உடனே வரணும்....இப்பவே வரணும். அவசரம்....ஆமாம் டாக்டர்! ரத்தம் நிக்கவே இல்லே.... சீக்கிரம் வாங்கோ....குட் மார்னிங்கு" என்று கூறி, ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு "முத்தய்யா! ஒனக்கு ரொம்ப வந்தனம். நான் போய் வறேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள்.

14

அவலே உருவாக "ஓடி வந்து "அம்மா! அம்மா! பெரிய டாக்டர் ராமநாதனேயே வரச் சொல்லி விட்டு வந்திருக்கேன். இப்பவே வந்துடுவா. இன்னமா அப்பா கண்ணை தறக்கல்லே? பேசி ஞரா! மயக்கம் தெளிந்ததா? அப்பா! அப்பா! கண்ணை தறந்து பாரேம்பா! ராஜு அழறான் பாருப்பா. அப்பா!" என்று

கூப்பிடும்போது மோட்டார் ஹாரன் வீதியில் கேட்டதை கவ னித்ததும் "அம்மாம்மா! அதோ டாக்டர் வந்துட்டார். நான் போய் கூட்டிண்டு வரேன்" என்று எழுந்து ஓடினாள்.

அதற்குள் அந்த அறையின் வாசற்படியருகில் டாக்டர் கையில் ஒரு சிறு தோல் பெட்டியுடன் வருவதைப் பார்த்த வாஸந்தி, ஆச்சரியத்துடன் "டாக்டர்! குட் மார்னிங். இதான் எங்க அறை. உள்ளே வாங்கோ! இன்னும் எங்கப்பா கண்ணே தொறக்கல்லெ டாக்டர்! நல்ல மருந்தா குடுத்து சீக்கிரம் குண மாக்கிடுங்கோ டாக்டர்!" என்று குழந்தைகளின் சுபாவத்தைப் போலவே களங்கமற்றுக் கூறினாள்.

தன்னை ப்ரமாதமாக டெலிபோனில் அழைத்ததைப் பார்த் தால் ஏதோ பெரிய மனிதர்களின் வீடு என்று எண்ணி மலைத்துக் கொண்டு வந்த டாக்டர் இச் சிறு வீட்டையும், இங்குள்ள ஏழைச் சின்னங்களையும் பார்த்து, தாம் வீடு தவறாக வந்துவிட்டோமோ என்று யோசித்துக்கொண்டு நிற்கையில்தான், வாஸந்தி ஓடிவந்து மேற் சொன்னவாறு தெரிவித்தாள். டாக்டரின் கையைப் பிடித்து இழுக்கவும் ஆரம்பித்தாள்.

டாக்டர் :—என்ன! நீயா டெலிபோன் பண்ணே ?

வாஸந்தி :—ஏன் டாக்டர்! நான்தான் பண்ணேன். எனக்கு டெலிபோனில் பேசத் தெரியுமே.

டாக்டர் :—அடாடா! என்ன தைரியம்! நான் யாரோ பெரிய மனுஷான்னு பார்த்தேன்.

வாஸந்தி :—(முகம் சுருங்கியவாறு பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே) டாக்டர்! ஆபத்துன்னு எல்லாருக்கும் ஒன்னுதானே டாக்டர்! இதிலே பணக்காரா, ஏழென்னு வித்யாசம் உண்டா டாக்டர்! எங்கப்பாக்கு ஆபத்து வந்தா எங்களுக்கு வேறு திக்கு யாரு டாக்டர்! ஏழைகள் கூட்டாக்கா பணமில்லாமெ டாக்டர்கள் வரமாட்டான்னு எங்கம்மா கூட சொன்னா! தர்ம ஆஸ்பத்தி ரிக்குப் போனக்க அங்கே கூட ஏழைகளெ சரியாவெ பாக்கற தில்லேன்னு எங்க வாத்தியாரம்மா முன்னே சொல்லி இருக்கா. அதனல்தான் டாக்டர், நான் நேரே வந்தா நீங்க வரமாட்

டேன்றது தெரிஞ்சுதான் இப்படி டெலிபோன் செய்தேன். டாக்டர்! சீக்கிரம் எங்கப்பாவெ வந்து பாருங்கொ டாக்டர்!" என்று கூறும்போது கண்ணில் மடமடவென்று ஜலம் வழிந்து விட்டது.

இச் சிறுமியின் வார்த்தைகள் டாக்டரின் இதயத்துள் புகுந்து துளைத்தன. வயதில் சிறியவளாயினும் சாமர்த்தியமாக வேலை செய்து, சாதுர்யமாகப் பேசுவதைக் கண்டு வியப்படைந்து விட்டார். தடதடவென்று உள்ளே வந்து மூர்த்திக்கு கட்டு கட்டி, ஒரு ஊசி குத்தி, மயக்கம் தெளிய மூக்கில் ஏதோ முகரச் செய்து, பின்னரே அச்சிறுமியின் பால் வடியும் முகத்தை நோக்கி ஒரு குருநகை புரிந்தார். அச்சிறுமியின் முகத்தில் ததும்பும் ஆவலும், பிதாவிடமுள்ள வாஞ்சையும் அவரை வியப்புறச் செய்தன.

டாக்டரின் மனமும் கலங்கியது. ஒரு விஸிட்டுக்கு 15 ரூபாய் கக்க வைக்கும் தன்னை இச் சிறுமி இத்தனை புத்தி சாலியாய், தந்திரமாய் வரவழைத்துப் பேசிய வியப்பை அவரால் அடக்கவே முடியவில்லை. அதை சற்று சமாளித்துக் கொண்டு "குழந்தெ! அப்பாவுக்கு ஒன்னும் பயமில்லெ. சாயங்காலத்துக் குள்ளே சரியாப் போயிடும். கவலைப்படாதே. எனக்கு பீஸ் குடு; நான் போகணும்" என்று ஒரு மாதிரி பார்த்தபடியே கேட்டார்.

வாஸந்தியின் முகம் சடக்கென்று மாறியது. அவளால் தடுக்க முடியாத ஒரு விதமான விசனம் மனத்தில் பொங்கி எழுந்தது. "டாக்டர்! டாக்டர்! நாங்க ரொம்ப ஏழை. எங்கப்பாக்கு தையல் வேலெதான். அதுவும் இப்போ வரதே கடையாது. எங்கப்பாக்கு சீக்கிரம் ஒடம்பு குணமாகணுமேன்னு நான் ஒங்களெ இப்படி கூட்டிட்டேன். அது ரொம்ப தப்புதான். அதுக்காக என்னே மன்னிக்கணும். பெரியவாகிட்டெ தப்பு பண்ணிட்டாக்க அது பரிகாரமாறத்துக்கு அவாளெ விழுந்து விழுந்து சேவித்து, தாடெலெ போட்டுண்டா பாவமில்லேன்னு எங்க வாத்யாரம்மா சொல்லி இருக்கா. டாக்டர்! என்னால் அதான் செய்ய முடியும்" என்று கண்ணீர் வழியக் கூறிக்

கொண்டே, டாக்டரே எதிர்பாரா வண்ணம் விழுந்து பலதரப் நமஸ்காரம் செய்து விட்டாள். இதைக் கேட்டும், பார்த்தும் நிற்கும் டாக்டரின் மனம் கலங்கிக் கண்ணீர் முட்டி விட்டது. இத்தனை சிறுமியின் மனத்திலும் என்ன பரிசுத்தமான தெய்வ பக்தியும், நம்பிக்கையும், சாமர்த்தியமும் அடங்கி இருக்கிறது. என்று ஆச்சரியக் கடலில் மூழ்கியவராய் சிறுமியைத் தூக்கி அணைத்துக் கொண்டு,

"குழந்தாய்! நீ மகா கெட்டிக்காரி! ஒன்னுடைய சமத் காரத்தினுல் நான் பரம சந்தோஷப்பட்டேறன். நான் விளையாட் டுக்குக் கேட்டேன். நீ வருந்தாதே. நாளைக்கு என் வீட்டுக்கு அப்பாவை அழைச்சிண்டு வா; கட்டு கட்டறேன். அழாதேம்மா! என்னையே ஏமாத்திவிட்ட நீ பலே பேர்வழி. நான் போய் வரேன்" என்று கூறிக் கொண்டே பெட்டியை எடுக்கப் போனுர்.

வாஸந்தி "ஊ உம்....நான்தான் கொண்டு வருவேன்." என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு டாக்டர் பின்னுலேயே சென்றுள். தன் மகளின் அதியற்புதமான சாகஸத்தைக் கண்டு வேணி வியந்தாள்.

15

மைதிலி எந்த சந்தோஷத்திலும் பங்கெடுத்துக் கொள்வ தில்லை எனினும், அவளுடைய இப்பிறவி பாழ் பட்டு விட்டதேபோல் அடுத்த பிறவியும் பாழாகா மல் இருக்கும்படி சதா பகவானைப் பிரார்த்தனை செய்வது வழக்கம். அன்று கார்த்திகையாகையால், குத்து விளக்குகளையும், வெங்கல அகல்களையும் அழகாகத் துடைத்து குங்குமம் இட்டுக் கொண்டிருந்தாள்.

அச்சமயம் அவர்களின் வண்டிக்கார கருப்பன் அங்கு ஒரு மாதிரியான முகத்துடன் வந்ததைப் பார்த்த மைதிலி "என்டா

கருப்பா! போன வேகமென்ன? வந்த ஜோரென்ன? ஏன் ஒரு மாதிரியா இருக்கே? என்ன சமாச்சாரம்? ரெண்டு கிழங்களும் எங்கே போச்சு?" என்று கேட்டாள்.

கருப்பன் :—ஆமாம்! போற எடந்தான் தெருஞ்சிருக்கிதுங்களே! தென்னல் ராமன், கருப்பு நாயெ வெள்ளெ நாயாக்கினனே அந்த மாதிரி இந்த ரெண்டு தாதாங்களும் பதினறு வயசு கொமரனுகிப்புடப் போராங்களாம். அதுக்கு இன்னமோ மருந்து சாப்புலே வந்துகிதுங்களாம். அதுக்காக போயி ஒரு எயெயின் வயித்திலே அடிச்சாப்புலெ தள்ளிப்புட்டாங்க.

மைதிலி :—என்ன! எந்த எழெயெ அடிச்சாங்க? சரியா சொல்லு.

கருப் :—அடிக்கலே தாயெ! மாடு மெரண்டு போய் எதிரே வந்த ஆளெ முட்டித் தள்ளி மண்டெயெ ஒடச்சிப்புட்டுது. ரத்தம் வெள்ளமா ஓடுது பாவம்! கால்லெ கூட நல்ல தப்ப பட்டிருக்கும்.

மைதி :—ஐயையோ! பாவமே! அவனெ என்ன பண்ணுங்கோ! ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டாங்களா?

கருப் :—ஐயோ பாவம்! அவன் கார்த்திக்காவ என்னமோ சாமானுங்கல்லாம் வாங்கியாந்தான். பட்டாசுக்காவ அவன் கொயந்தெங்க என்ன ஆசெயா வாசல்லெயே நின்னுகினு எதிர் பாத்துது தெரியுமா? நம்ப ஐயா அந்த ஆளெப் பத்தி கொஞ்சமும் கவனிக்கவே இல்லே. மடயன், கடியன் எதிரே வந்து முட்டிண்டான்னு திட்டிப்புட்டு, வண்டியிலேயே அவனெ போட்டுக்கினு போயி ஊட்டே உட்டுட்டுவான்னரு. எசமான் உத்தரவு போல கொண்டு விட்டேன். கொயந்தெங்களும் அந்தம்மாளும் என்ன அழுவராங்க தெரியுமா! ஐயோ பாவமுண்ணு இருக்குது.

மைதி :—அட க்ரகசாரமெ! இப்படியா பண்ணுரு? தன் மாட்டினலெ்தானெ அந்த மனுஷனுக்கு ஆபத்து வந்துது, வீட்டுலெ கொண்டு வுட்டு நேரே தேறுதல் சொல்லி மன்னிப்பு கேட்டுண்டு வரக் கூடாதா! அவா மனசு எப்படி கஷ்டப்படும்? ஐயோ பாவம்! கருப்பா! குழந்தைகள் ரொம்ப சின்னதுகளா!

கருப் :—பெரிய பொண்ணு அம் மாத்திரம் உயரம் இருக்கு துங்க. 10 வயசுக்குள்ளாற இருக்கும். சின்ன பையன் 5, 6 வயசு இருக்கும். அவரு பொஞ்சாதி மவாலச்சிமிபோலேக்கிராங்க. அவருகூடதான் ராசா மாதிரி கிராரு. அல்லாரும் அழுவுராங்க.

மைதி :—கிழவர் இப்போ எங்கே இருக்கார் ?

கருப் :—ரெண்டு பேரும் எங்கே போனுங்கன்னு தெரியாது. தெற்கு பக்கமா போனுங்க.

மைதி :—சரி. நீ நம்ப சின்ன வண்டியே கட்டு. நானுவது போய் பாத்து மன்னிப்பு கேட்டிண்டு வரேன்—என்ருள்.

கருப்பனும் உடனே சென்று வண்டியைக் கட்டி விட்டான். மைதிலி வண்டியில் ஏறிக் கொள்ள, வண்டி கிளம்பியது. 'ஐயோ பாவம்' என்ற ஓர் பச்சாத்தாபமும், காருண்யமும் மைதிலியை பலமான தைரியத்துடன் வெளிக் கிளப்பின.

மைதிலி வேணி வீட்டு வாசலில் இறங்கும்போதுதான், நாம் முன்பு தெரிவித்ததுபோல் டாக்டர் திரும்பியதும், டாக்டர் பெட்டியை எடுத்துக் கொண்டு அவர் பின்னேடு வாஸந்தி ஓடி வந்ததும், மைதிலி இறங்கி படி ஏறியதும். உள்ளிருந்து வரும் டாக்டரைப் பார்த்து ஆச்சரியத்துடன் "ஓ டாக்டர்! நீங்கதான் வந்தீர்களா! நோயாளி எப்படி இருக்கிருர்? பயம் ஒன்னும் இல்லேயே! ப்ரக்ஞை வந்ததா! உங்களே யார் அழைத்து வந்தா?" என்று கேட்டாள்.

டாக்டர் :—(நகைத்துக் கொண்டே) இதோ இந்தப் பெண் இருக்காளே! இவள் பலே கெட்டிக்காரி! ஐந்து நிமிஷத்தில் என்னை ஏமாத்தி விட்டாள். இவளுடைய புத்திசாலித்தனமும், சாமர்த்தியமும், பரிதாபமும் என்னை உருக்கின. பெரிய மனுஷன் வீட்டிலிருந்து கூப்பிடுவதுபோலெ டெலிபோன் செய்து விட்டா! நோயாளிக்கு அபாயம் ஒன்னுமில்லே. ஆனு நல்ல அடிதான். உங்களுக்கு பந்துவோ!

மைதி :—பந்துவுமில்லே; ஒன்னுமில்லே. இவாளெ எங்களுக்குத் தெரியக் கூட தெரியாது. எங்க வீட்டு மாட்டு வண்டியாலேதான் இவருக்கு இந்த விபத்து வந்தது. அவர் என்

பாவின்னுகூட கேக்கலெயாம். ஐயோ பாவம்! ஏழைகளாச் சேன்னு நானே நேர பாத்துட்டு, ஒங்களெ கூப்பிட எண்ணினேன். கடவுளே உங்களெ கூப்பிட்டார்.

டாக்:—ஒங்க மாடா முட்டியது? என், தாதா எங்கே? மருந்துக்குப் போய்ட்டாரா? நான் எத்தனெ சொன்னாலும் கேக்கறதில்லே........சரி....நேரமாறது, நான் வரேன்—என்று கூறிப் பின் வாஸந்தியைத் தட்டிக் கொடுத்துவிட்டு "கொழந்தெ! பயப்படாதே. நான் வரேன். மாமியெ உள்ளே அழைச்சிண்டு போ" என்றார். வாஸந்தியும் "ரொம்ப வந்தனம் டாக்டர்! நமஸ்காரம்" என்று கூறி கை குலுக்கினாள். காரும் பறந்தது.

வாஸந்தியின் சமத்தும், சுறுசுறுப்பும் மைதிலியைப் பிர மிக்கச் செய்தன. அவளையே பார்த்துக் கொண்டு நின்றாள். வாஸந்தி "மாமி! உள்ளே வாங்கோ" என்று அழைத்துச் சென் றாள். அச்சமயமே மூர்த்தி கண்ணைத் திறந்து பார்த்தான். வருத்தம் தாங்காது கண்ணீர் மள மள வென்று வந்துவிட்டது. அருகில் உட்கார்ந்திருக்கும் வேணியின் பரிதாபத்தையும், ராஜூ வின் பேந்த பேந்த விழிப்பின் கண்ராவியையும் கண்டு சகிக்காமல் ராஜூவை வாரியணைத்துக்கொண்டபடியே "அக்கா எங்கேடா கண்ணே?" என்றான்.

அதே சமயம் வாஸந்தி சந்தோஷத்துடன் "அம்மா! அப்பா கண்ணை முழிச்சாரா! அப்பாவெ முட்டிய மாடு இவாத்து மாடுதானம்மா! இந்த மாமி வந்திருக்கா பாரு" என்று கூறிக் கொண்டே வரும்போது, மூர்த்தி பேசிய குரலைக் கேட்டு ஆவலே வடிவாய் ஓடி அவனை யணைத்துக்கொண்டு "அப்பா! அப்பா! மயக்கந் தெளிஞ்சு போச்சா! எங்களுக்கெல்லாம் பயம்மாப் போயிடுத்துப்பா! தலெ வலிக்கிறதாப்பா?" என்று கொஞ்சிக் கொஞ்சி கேட்டவாறு தலையையும், முகத்தையும் தடவிக் கொடுத் தாள். மூர்த்திக்கு வாய் திறந்து பேச முடியவில்லை. மவுன மானான். வேணி, மைதிலியை நோக்கி "அம்மா! வாங்கோ; ஒக்காருங்கோ!" என்றாள்.

மைதிலி:—அம்மணீ! இந்த மாதிரி ஒரு விபத்து எங்கள் முரட்டு மாட்டினால் ஏற்பட்டதற்கு நான் ரொம்ப வருத்தப்

படறேன். அடி பட்டுவிட்டதுக்காக ஒரு மன்னிப்புகூடச் சொல்லாமல் அவர் வந்துட்டதாக எங்க வண்டிக்காரன் சொன்னான். அதனாலே நான் வந்தேன். நீங்க ரொம்ப மன்னிக்கணும், ஏதோ புதிய மாடானதால் இப்படி நேர்ந்தது.

வேணி:—அம்மா! மாடு என்ன செய்யும்? வண்டி என்ன செய்யும்? இப்போ இந்த மாதிரி அனுபவிக்க விதி வலிய வந்தது. அதை யாராலாவது தடுக்க முடியுமா! நீங்கள் இந்த ஏழைமேல் அன்பு வைத்து இந்த குடிசைக்கு வந்ததற்காக நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

மைதிலி:—இதென்னம்மா ஏதோ தடபுடலா பேசறங்கோ! எங்களாலே இந்த மாதிரி விபத்து வந்ததுக்கு நாங்க தானே மன்னிப்பு கேட்கணும். குழந்தைகளின் பரிதாபத்தெ எங்க வண்டிக்காரன் சொன்னதும் என் மனசுக்கு மிக்க வருத்தமாய் விட்டது. அவர் ஆசையா வாங்கிண்டு வந்த சாமான்கள், பட்டாசுகள் எல்லாம் ரோட்டிலே சிதறிப் போச்சாம். குழந்தைகளுக்கு பட்டாஸ் வாங்கிண்டு வருவார்னு எதிர் பார்த்த ஆவல் எல்லாம் அடியோடு ஒடஞ்சி போயிருக்கும் பாவம்! அம்மா! வாஸந்தீ! இந்தாம்மா! நீயும், தம்பியும் பட்டாஸ் வாங்கிண்டுங்கோ—என்று கூறிக்கொண்டே வாஸந்தியின் கையில் ரெண்டு ரூபாயைக் கொடுக்கப்போனாள்.

வாஸந்தியும், ராஜுவும் இதை வாங்கிக் கொள்வதா, வேண்டாமா வென்று தியங்கியபடியே, தாயாரின் முகத்தை மாறி மாறிப் பார்த்தார்கள். குழந்தைகளின் குறிப்பறிந்த வேணி, சாமர்த்தியமாக மைதிலியை நோக்கி "அம்மா! அதெல்லாம் ஒன்னும் வாண்டாம். பரவாயில்லே. ஒங்க அன்பு என்னிக்கும் இருந்தா அதுவே போதும்." என்றாள்.

மைதிலி:—அம்மா! இந்த ப்ரமாதத்துக்கு பெரிய பெரிய வார்த்தைகள் சொல்வது சரி இல்லெ. கொழந்தைகளின் ஆவல் எவ்வளவு தூரம் இருக்கும்னு எனக்குத் தெரியும். அதனாலெ இதை மட்டும் மறுக்காமெ கொழந்தைகளே வாங்கிக்கச் சொல்லுங்கோ! இந்தாடா கண்ணூ! வாங்கிக் கோப்பா!" என்று ராஜுவை

இழுத்து ஆசையோடு மடியில் உட்கார வைத்துக் கொண்டு ரூபா யைக் கையில் வைத்து மூடியபடியே, "இதோ பாரு. அக்காவும் நீயும் பட்டாசு மத்தாப்பு எல்லாம் வாங்கிக்கிங்கோ" என்று கூறினுள். வேணியின் முகத்தை ராஜு பார்க்கும்போது வேணி யும் ஒப்புக் கொள்ளும்படி தலை யசைத்ததால் ராஜு பணத்தை வாங்கிக் கொண்டான்.

அவன் முகத்தில் சந்தோஷக் களை ஜ்வலித்தது. ரூபாய் களை மாறி மாறிப் பார்த்தான். அவன் பார்வையும் ஆவலும் வாஸந்திகாவின்மீது தாவியது. அடுத்த நிமிடமே சரேலென்று எழுந்து வாஸந்தி இருக்குமிடம் சென்று விட்டான்.

படுத்திருக்கும் மூர்த்திக்கு இவைகளெல்லாம் காதில் கேளாமலில்லை. ஆனுல் அவன் பேச வேண்டும் என்று நினைத் தும் அவனுல் பேச முடியாது பாதை ஒரு புறம் தடுத்தது. அன்னிய மாதரோடு பேசும் துடுக்கான சுபாவ மற்ற உத்தமனு கையினுல் தியக்கமும் பாதித்தது. அதனுல் மவுனமாகவே படுத் திருந்தான்.

மைதிலி குழந்தைகளின் சந்தோஷத்தைப் பார்த்து உள்ளம் பூரித்தாள். பிறகு வேணியிடம் "இந்த வயித்தியர் எங்க குடும்ப வயித்தியர்தான். அவரே தினம் வந்து பார்க்கும்படிச் சொல்லி இருக்கேன். பயப்பட வாண்டாம். நான் போய் வரு கிறேன். மன்னிக்கணும்." என்று வணக்கத்துடன் கூறிவிட்டு எழுந்தாள். குழந்தைகள் தூர உட்கார்ந்து என்னென்ன வாங்கலாம்னு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து பரமானந்த மடைந்த மைதிலி அவர்களின் சந்தோஷத்தைத் தடுக்காமல் போய்விட எண்ணி, வேணியிடம் மட்டும் சொல்லிக் கொண்டு போய் விட்டாள்.

வேணியும், மூர்த்தியும் மைதிலியின் அன்பையும், உதார குணத்தின் அழகையும் பற்றிக் கொண்டாடிப் பேசிக் கொண் டார்கள். இதற்குள் வாஸந்தி ஓட்டமாக ஓடிப்போய் வீதிப் பக்கமுள்ள பட்டாஸு கடையிலிருந்து பட்டாசு பொட்டலம் மத்தாப்பு முதலிய எல்லாம் அரை ரூபாயிக்கு மட்டும் வாங்கிக்

கொண்டு வந்து மீதி ஒன்னரை ரூபாயைத் தாயார் கையில் கொடுத்துவிட்டு "அம்மா! நாங்க பட்டாசு சுடப்போறேம்மா! என்று கொஞ்சியவாறு சொன்னாள்.

வேணி அவர்களைத் தடவிக் கொடுத்து "வாஸந்தி! நீ அப்பா பக்கத்திலேயே இரு. நான் போய் வென்னீர் போட்டு விட்டு வரேன். அப்ரம் எண்ணெ தேச்சு ஸ்நானம் செய்துட்டு சாயங்காலமா பட்டாசு சுடலாம்மா! இப்போ அப்பாக்கு தலை வேதனையாயிருக்கும். ராஜு! அக்காவோடே கூடத்தான் நீயும் பட்டாசு சுடணும்; சமத்தாயிரு" என்று கூறிவிட்டு வேலையை கவனிக்கச் சென்றாள். குழந்தைகளிருவரும் தாயாரின் வார்த்தையைத் தட்ட முடியவில்லை. பட்டாசு சுட வேண்டுமென்ற ஆசையும் நிற்கவில்லை. பட்டாசைக் கையிலேயே வைத்துக் கொண்டு பிதாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவனைத் தடவிய படியே இருந்தார்கள்.

16

மங்களகரமான எந்த காரியத்தையும் செய்யாமல் விடக் கூடாது என்ற கொள்கையை எந்த காலத்திலும் வேணி கடைப்பிடித்தொழுகுபவளாகையினால் வீட்டிலிருந்த எண்ணெயை சாஸ்திரத்திற்காகக் குழந்தைகளுக்குத் தேய்த்து நீர்க்காட்டித் தானும் மங்கள ஸ்நானம் செய்து விட்டு வாஸந்திக்கு தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். "சாயந்தரம் பத்து தீபமாவது ஏற்ற வேண்டுமே அதற்கு எம்பெருமான் என்ன விதமாக வழி காட்டப் போகிறார்?" என்று வேணி நினைக்கும்போது, அதையே தெய்வத்தாலறிந்து கூறுவதுபோல் வாஸந்தி தன் தாயை நோக்கி "அம்மா! அரை ரூபாய் பட்டாசுக்குப் போறது, மீதி ரூபாய்க்கு எண்ணெ, அகல், திரி, வெத்திலை பழம் எல்லாம் வாங்கி சாயங் காலம் அழகா பண்டிகை பண்ணலாம்மா" என்றாள்.

இதைக் கேட்டதும் வேணியின் மனத்தில் ஆனந்த ஊற்றுப் பெருகியது. அச் சமயம் வண்டிக்கார கருப்பன் ஒரு கட்டும், இரண்டு பாத்திரங்களும் கையில் கொண்டு வந்து வேணியின் முன்னே வைத்து விட்டு, "அம்மா! எங்க எஜமானியம்மா இதை கொடுக்கச் சொன்னாங்க. இதை வாங்கிக்காங்காட்டிப் போனா எங்கம்மாவுக்கு ரொம்ப மனசுக்கு வருத்தமா பூடுமாம்; கோவம் வருமாம். சொல்லச் சொன்னாங்க. இன்னிக்கு எப்படியும் பண்டிகையை விடாமெ சந்தோஷமா செய்யச் சொன்னாங்க. ...யாவுக்கு ஒன்னும் பயமில்லென்னு டாக்டரய்யா சொல்லி இருக்காருங்களாம். பயப்பட வாணாம்னு அம்மா சொல்லச் சொன்னாங்க" என்று மூச்சுகூட விடாமல் சொல்லி விட்டான்.

தட்டின் மேல் மூடப்பட்டிருந்த துணியை நீக்கிய உடனே அதில் நிறைய வெற்றிலை பாக்கு, மஞ்சள், வாழைப்பழம், தேங்காய், ...பம், அகல், திரி, பட்டாசு பொட்டலம், முந்திரிப் பருப்பு, வெல்லம், கற்பூரம் முதலிய எல்லாம் இருந்தன. தூக்குச் செம்பு களில் நெய்யும், எண்ணெயும் இருந்தன. இவைகளைப் பார்த்து வேணி மலைத்து விட்டாள். குழந்தைகளும் ...தம்பித்து விட்டன. மூர்த்திக்கோ ஆச்சரியம் கூறத் திறமன்று.

வேணி:—நாம் இப்போ என்ன செய்யறது? அந்தம்மாளுக்குக் கோபம் வரும்னு சொல்லி இருக்காளாமே. நம்ம க்ரக சாரத்தாலெ இப்படி நேர்ந்துதன்னு அதுக்கு அந்தம்மா என்ன செய்வா பாவம்? இப்படி கல்யாண வரிசைபோலெ அனுப்பி இருக்கிறாளே! நீங்க சொல்றுங்கோ—என்று மூர்த்தியை நோக்கிக் கேட்டாள்.

மூர்த்தி:—வேணீ! இவ்வளவு ஆசையா கொடுத்தனுப்பினதைத் திருப்பி யனுப்பிறது மரியாதை இல்லெ. நன்னா இருக்காது. எல்லாம் ஈசன் செயல்னு எண்ணி வாங்கி வச்சுக்கோ.

வேணி:—(தட்டிலிருந்தவற்றை எடுத்து வேறு தட்டில் வைத்துக் கொண்டே வண்டிக்காரனை நோக்கி) அப்பா! ஒங்க எஜமானருக்கு என்ன வேலையோ?

வண்டி :—வேலையுமில்லே ; வல்லக்காடுமில்லே. எல்லாம் பயிர் பச்செசெங்கதான்.

வேணி :—அப்படியா ! குழந்தைகளிருக்கா ?

வண்டி :—எஜமானுக்கு ஒரு புள்ளே, ஒரு பொண்ணுங்க. நல்லா இம்பிட்டு ஒசரங்கீதுங்க. பள்ளிகூடத்துலெ படிக்குதுங்க.

வேணி :—ஆச்சரியமா இருக்கே ! உங்க எஜமானி சின்ன பொண்ணு இருக்காளே ! அவளுக்கு அத்தனே பெரிய பசங்கள் இருக்கா !

வண்டி :—அந்த வவுத்தெரிச்சலே ஏன் கேக்கரீங்க ? அந்தம் மாளுக்கு இப்பதான் 15 வயசாவுதுங்க. மூத்த சம்சாரத்தின் கொயந்தெங்க அதெல்லாம்.

மூர்த்தி :—(சற்று ஆச்சரியத்துடன்) ஏம்பா ! வண்டிலே இருந்த கிழவர் ஒங்க எஜமானு ! அட ராமா ! ரெண்டு பேருலே யாரு ஒங்க எஜமான் ?

வண்டி :—அந்த கண்றாவியெ கேக்காதிங்க சாமீ ! கொஞ்சம் பருமனு வழுக்கெ தலேயோடெ இருந்தாரே அவருதான் எங்க எஜமான் ; அது ஏதோ அக்ரம கண்ணாலங்க. (மைதிலி கல்யாண வயிற்றெரிச்சலேக் கூறுகிறான்.)

வேணி :—“அடாடா ! இப்படியா அநியாயம் செய்வா ! அந்தப் பாவி அத்தைக்குத்தான் எப்படி மனசு துணிஞ்சுது ? பொண்ணெ பாத்தா பச்செ கிளியாட்டம் இருக்காளே! ஊம். தலே விதி” என்று கூறிக்கொண்டே சாமான்களே எல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு தட்டையும் மற்ற பாத்திரங்களேயும் ஒழித்துக் கொடுத்தாள்.

வண்டிக்காரனின் முகத்தில் பரிதாபமும் விசனமும் ஜ்வலித்ததை இந்தத் தம்பதிகள் அறியாமலில்லே. பாத்திரங்களே எடுத்துக் கொண்டு, “சாமீ ! போய் வரேங்க. அம்மா ! போய் வரேங்க” என்றான். அப்போது ராஜுவும் வாஸந்தியும் தட்டில் வந்த பட்டாசு பொட்டலங்களே எடுத்துக் கொண்டார்கள். அளப்பரிய சந்தோஷத்துடன், “ராஜு ! சாமி ரொம்ப ரொம்ப

நல்லவர்டா! நமக்கு பட்டாசு மேலே பட்டாசு அகப்பட்றது" என்றாள் வாஸந்தி.

ராஜுவும் "ஆமாக்கா! சாமிக்கு நம்ப மேலெ நெரெய ஆசை இருக்கு; நாம்ப இன்னிக்கு சாயங்காலம் வெளக்கு ஏத்திப் பூட்டு அப்பாக்கு சீக்கிரம் ஒடம்பு தேவலேயாயிடணும்னு சாமியெ நெரெயெ வேண்டிக்கலாம்; வா! அக்கா! நாம் பட்டாசு கட்டு சுடுவோம்" என்றான்.

வாஸந்தி :—அவசரப்படாதே ராஜு! அம்மா எப்போ வெடிக்கச் சொல்ராளோ அப்பதான் வெடிக்கணும். எல்லாத்தையும் ஒன்னு அடுக்கி வைக்கலாம் வா!—என்று கூறிக்கொண்டே ஓடிச் சென்று ஒரு ஓலைப் பெட்டியைக் கொண்டு வந்து அதில் பட்டாசுகளை எல்லாம் அடுக்கி வைத்தாள்.

இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த கருப்பனின் சந்தோஷம் கூறத் திறமில்லை. மகிழ்ந்தவாறே போய் விட்டான். வேணியும் உத்ஸாகத்துடன் சமயல் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள். குழந்தைகள் பட்டாசின் கவர்ச்சியில் மயங்கி விட்டார்கள். மூர்த்தியின் நினைவோ, பல மைல்களுக் கப்பாலுள்ள தன்னுருயிர்த் தாயாரைத் தேடிக்கொண்டு சென்றது.


"அவளைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுடன் இருந்ததற்கு அது இம்முறையும் கை கூடாது போய் விட்டதே! தனக்கு இந்நிலைமை ஏற்பட்டதென்று தாயாருக்குத் தெரியுமாயின் அவளுடைய உயிரே போய்விடுமல்லவா! அவளுக்குத் தெரியாதிருப்பதற்கு இன்றே தன் கைப்பட ஒரு கடிதம் எழுதித் தாயைக் கடிதத்தின் மூலமாகவாவது வணங்குவோம்" என்று தீர்மானித்துக் கொண்டு வாஸந்தியைக் கூப்பிட்டு ஒரு காகிதமும், பேனாவும் எடுத்துக் கொடுக்கச் செய்து, உடனே எழுதி அதை வாஸந்தியிடமே கொடுத்து, தபால் பெட்டியில் போட்டுவிட்டு வரும்படிச் செய்தான். வாஸந்தியும் ஒரு குதி குதித்துக் கொண்டே கடிதத்துடன் ஓடினாள்.

17

நம் பாரத நாட்டில் மக்கள் அனுஷ்டிக்கும் முக்கிய மான பண்டிகைகள் பல இருக்கின்றன. அவற்றுள் மிகவும் சிலாக்யமான பண்டிகைகள் சில உண்டு. அச் சிலவற்றுள் கார்த்திகையும் ஒன்றாகும். பல பண்டிகைகள் எண்ணெய் ஸ்நானத்துடனும், விருந்து சாப்பாட்டுடனும் முடிந்துவிடும். மற்றபடி தனித்த செய்கையோ, கண்ணைக் கவரும் காக்ஷியோ ஒன்றும் இருக்காது.

கார்த்திகைப் பண்டிகையிலோ மனத்திற்கு ரம்மியமும், திருவிளக்கேற்றி எம்பெருமானைத் தொழும் நேத்திரானந்தமும், இன்னிசைக் கீதங்கள் அச் சமயத்தில் ஒலிக்கும் ச்ரவணானந்தமும், பட்டாசின் பேரொலியால் குழந்தைகளுக்குப் பேரானந்தமும், பெரியவர்களை எல்லாம் நமஸ்கரிப்பதும், அவர்கள் வாழ்த்துவதும், ஒருவர் வீட்டிற்கொருவர் சென்று சந்தோஷம் விசாரித்து வெற்றிலை, பாக்கு கொடுப்பதும் ப்ரம்மானந்த வைபவமாக விருக்கும்.

அத்தகைய கார்த்திகைப் பண்டிகை யன்று வேணி, குழந்தைகளுக்கு அலங்காரம் செய்து விட்டுத் தானும் தலைசீவி பொட்டிட்டுக் கொண்டு சாயங்காலம் சுவாமி படத்திற்கு முன்பு மணையிலும், கீழேயும் அழகிய கோலங்கள் போட்டு, மண் அகல், பித்தளை அகல்கள், குத்து விளக்குகள் முதலியனவற்றை எடுத்து வைத்து எண்ணெய் திரி போட்டு, பயபக்தியுடன் அம்பாளை வேண்டிக் கொண்டே திருவிளக் கேற்றினாள். வாழைப் பழம், வெற்றிலை பாக்கு, தேங்காய் முதலியனவற்றை கடவுளுக்கு நைவேத்யம் செய்து விட்டு, அந்த குத்து விளக்குகளைச் சுற்றிப் பிரதக்ஷணம் செய்து பின் எதிரில் மண்டியிட்டு உட்கார்ந்து ப்ரம்மானந்தத்துடனும், பக்தியுடனும் பாட வாரம்பித்தாள். வாஸந்தியும் ராஜுவும் கூட பாடத் தொடங்கினார்கள். கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த மூர்த்தி ஆனந்தத்துடன் மெல்ல எழுந்து கை குவித்துக் கடவுளை வணங்கி, அந்தக் கட்டிலில் உட்கார்ந்த படியே இந்தச் சங்கீதத்தில் ஐக்யமானான்.



ராகம்—ஸாவேரி : தாளம்—ஆதி.

(“திருத்தணிகை மலையில்”—என்ற மெட்டு)

பல்லவி

மலர் மங்கையே ! புவன ரக்ஷகியே !
மனக் குறையைத் தீராய் கண் பாராய் ! (மலர்)

அநுபல்லவி

அலகில் வினைகளை நான் பலவிதம் செய்துள்ளம்
கலங்குகின்றேன் கதி இலை யுன்னை யன்றியே (மலர்)

சரணம்

வகை யறியாமலே திகைத்திடும் ஏழைக்குன்
நகை முகங் காட்டி என்னகத் துயர் நீக்கிட
ஜகதோத் தாரகி ! பகைவர்போல் பார்த்திடல்
தகுமோ ! உனக்கிது தருமந்தானோ ! (மலர்)

என்ற பாடலை அதி உருக்கமாக மூவரும் பாடுவதைக் கேட்டு மூர்த்தி மெய்ம்மறந்து தன் நோய்கள் முற்றும் நீங்கப்பட்டவன் போல் ஒரு வித புதிய உணர்ச்சியும், சக்தியும், ஆனந்தமும் அடைந்து மெல்ல கட்டிலிலிருந்து இறங்கி வந்து திருவிளக்குக்கு முன்னால் விழுந்து நமஸ்கரித்தான். அவனை மீறிய உத்ஸாகத்துடன், “தாயே ! ஜகன் மாதா ! சர்வலோக ரக்ஷகி ! தயாபரி !” என்று வேண்டிக்கொண்டு, கன்னத்தில் அறைந்துகொண்டு, கை கட்டி நின்றான்.

வே*ணி கற்பூரத்தை ஆலத்தித் தட்டு மத்தியில் ஏற்றி வைத்து வாஸந்தியைப் பிடித்துக்கொள்ளச் செய்து,*

கானடா ராகம்—ஏக தாளம்.

(1) “இருளை யகற்றும்—திருவிளக்கே
இன்ப மளிக்கும்—திருவிளக்கே
(2) மங்கள கரமாம்—திருவிளக்கே !
எங்கும் ஒளிரும்—திருவிளக்கே !
(3) திருமகள் உருவாம்—திருவிளக்கே !
பெருமை பயக்கும்—திருவிளக்கே !

(4) தெள்ளிய ஜோதித்—திருவிளக்கே!
கள்ளனுக்கெமனும்—திருவிளக்கே!
(5) மாலையிலுலவும்—திருவிளக்கே!
ஆலய பூஷணத்—திருவிளக்கே!
(6) சகலரும் போற்றும்—திருவிளக்கே!
சதஸலங்காரத்—திருவிளக்கே!
(7) பாலர்க்கினிக்கும்—திருவிளக்கே!
ஞாலமுவக்கும்—திருவிளக்கே!
(8) பூஜை பெற்றிலகும்—திருவிளக்கே!
ராஜரும்பணியும்—திருவிளக்கே!
(9) தேஜோமயமாம்—திருவிளக்கே!
திருவருள்பெற்றத்—திருவிளக்கே!
(10) இந்துவைப்போன்ற—திருவிளக்கே!
வந்தனம் செய்தேன்—திருவிளக்கே!
(11) அந்தமுற்றேங்கும்—திருவிளக்கே!
எந்தனுக்கருள்வாய்—திருவிளக்கே"

என்ற பாடலைப் பக்தி பரவசமாகப் பாடினார்கள். பிறகு எல்லோரும் ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, விளக்குகளை எடுத்து ஆங்காங்கே வைக்கவேண்டிய இடத்தில் வாஸந்தியும், வேணியுமாக வைத்தார்கள். வீதியில் முற்றும் விளக்கு வைத்த பிறகு, வாஸந்தியும் ராஜுவும் தம் முன்னறி தெய்வங்களாகிய பெற்றோரை வணங்கினார்கள். பிறகு "அம்மா! இனிமே பட்டாசு சுடலாமா! நீயும் கூட இருக்கையா அம்மா!" என்று வாஸந்தி கொஞ்சுதலாகக் கேட்டாள்.

மூர்த்தி:—வேணீ! மெஷினை மூடியிருந்த துணியை எடுத்துவிட்டு அதற்குப் புஷ்பம் போட்டு கற்பூர ஹாரத்தி பண்ணு. இந்த மெஷின்தானே நம்முடைய பிதிரார்ஜித சொத்து. இந்த மெஷின்தானே நம்முடைய குடும்ப வாழ்க்கையின் ஜீவன நாதம். இதுக்கு எந்த நல்ல நாளிலும் மறக்காது பூஜை செய்—என்றான். அவளும் அப்படியே செய்தாள். மூர்த்தி சந்தோஷத்துடன், "சரி! நீ குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் பட்டாசு சுடச் சொல்லு!" என்றான்.

இதைக் கேட்ட வாஸந்தியும், ராஜனும் சந்தோஷத்துடன் பட்டாசு வைத்திருக்கும் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு, தாயின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீதிப்பக்கம் ஓடினார்கள். வேணியும் சந்தோஷத்துடன் சென்றாள்.

18

எல்லா வீட்டு வாசல்களிலும் கோலமும், மாவிலைத் தோரணமும், சில வீடுகளில் மின்சார விளக்குத் தோரணங்களுடன் எண்ணெய் விளக்குகளும் சேர்ந்து ஜொலிக்கும் காட்சி கண்கொள்ளாப் பேரானந்தமாகவும், தெய்வ பக்தியை மக்கள் மனத்தில் இன்னும் அதிகப் படுத்துவதாகவும் இருக்கிறது.

அச் சமயம் தன் உபாத்தியாயினி, வெள்ளைக்கார துரைசானி ஒருத்திக்கு வீதியில் இரு சாரி வீடுகளிலும் செய்திருக்கும் தீபாலங்காரத்தைக் காட்டி, அதன் மகிமையை விளக்கிக் கூறிக்கொண்டே வருவதை வாஸந்தி சற்றுத் தூரத்தில் பார்த்து விட்டதும் பட்டாசு வெடிக்காமல் எழுந்து நின்றாள்.

வெள்ளை மாது :—ஓ! இந்த மாதிரி அலங்காரம் பார்ப்பதற்கு மிகவும் அழகா இருக்கிறதே! இது உங்கள் மத சம்பிரதாயமான உத்ஸவமா! பேஷ்! வெகு நேர்த்தி! வெகு ஆனந்தம்.

உபாத்தியாயினி :—ஆமாம்! இம்மாதிரி வருஷத்துக்கு ஒரு நாள்தான் செய்யறது. இந்த நாள், ஒரு பெரிய பக்தன் பகவானுடைய கிருபைக்குப் பாத்திரமாகிய ஐதீகத்தைக் கொண்டாடும் சந்தோஷ நாள். இந்துக்களுக்கு இது மிகவும் முக்கியமான பண்டிகை. எப்படிப்பட்ட வறுமையாக இருந்தாலும் பத்து விளக்காவது ஏற்றி ஸ்வாமிக்குப் பூஜை செய்யாமல் இருக்கமாட்டா.

வெள்ளை :—இது எப்படி போட்றது? இது டிராயிங் மாதிரி இருக்கே.—என்று மாவு கோலத்தைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டாள்.

உபாத்தி :—இதுவும் எங்கள் இந்து தர்மத்தில் முதன்மை யானது. தினம் விடிந்தால் எழுந்த உடனே முதல் கடமை இந்த மாதிரி கோலம் இடுவதுதான் முக்கியம். அப்பத்தான் லக்ஷ்மி கடாக்ஷம் வரும் என்று எங்கள் சாஸ்திரம் கூறுகிறது. இது ட்ராயிங்கு மாதிரியான ஒரு சித்திரந்தான். எங்கள் இந்து பெண்மணிகள் ஒவ்வொருவருக்கும் இந்தச் சித்திரம் வராமலிருக்க முடியாது. இதுக்கு ட்ராயிங்கு போடுவதற்கு வேண்டியபடி ஸ்கேலும், மற்ற ஆயுதமும் வேண்டாம். அரிசி மாவில் இப்படி கையாலேயே போடுவது கோணுமல் அழகா வரும். அரிசியை ஊறவைத்து அரைச்சு மாக்கோலம் போட்டா இதோ இப்படி வரும்—என்று மாக்கோலத்தைக் காட்டினுள்.

வெள்ளைக்கார மாது இந்தக் கோலங்களைப் பார்த்து அபாரமான சந்தோஷத்துடனும், ஆச்சரியத்துடனும் நின்ருள். பிறகு "மேடம்! இந்த மாதிரி போடுவது ரொம்ப கஷ்டம். ஆச்சரியம்! வெகு அழகாக இருக்கிறது. எனக்குப் போட்டுக் காட்டி கற்றுக் கொடுக்கிருயா! எனக்கு மிகவும் ஆசையா யிருக்கிறது" என்ருள்.

உடனே உபாத்தியாயினி சந்தோஷத்துடன் "ஓ! அப்படியே ஆகட்டும். இதோ! இப்போதே போட்டுக் காட்டுகிறேன்....அதோ அந்த வீட்டில் நிற்கும் பெண் என் க்ளாஸில் படிக்கும் மாணவிதான். அத்தனை சின்ன பெண் கூட இந்த மாதிரி சித்திரம் போடுவாள். எங்கள் நாட்டினற்கு இது சர்வ சகஜம்" என்று கூறிக்கொண்டே வாஸந்தியின் வீட்டுப் படி ஏறினுள்.

இவர்களையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த வாஸந்தி சந்தோஷத்துடன் வாத்தியாரம்மாளை வரவேற்று, 'வாங்க டீச்சர்! இவா யார் டீச்சர்?' என்ருள்.

உபாத்தி :—'வாஸந்திகா! உள்ளே போய் சீக்கிரமா கோல மாவு கொண்டு வா'—என்ருள். வாஸந்தி ஓட்டமாக ஓடிச்சென்று அரிசி மாவும், அரிசி அரைத்துக் கரைத்த மாவும் இரண்டும் கையில் கொண்டு வந்தாள். உடனே வாத்தியாரம்மாள், 'வாஸந்தீ! நீ ஒரு அழகிய தாமரைப் பூக் கோலம் போடு. இந்தம்மாள் பார்க்கணுமாம். எங்கே! சீக்கிரம் போடு பார்க்கலாம்' என்ருள்.

உடனே வாஸந்தி திண்ணையின் கீழே உள்ள இடத்தில் நன்றாகத் துடைத்துவிட்டு ஒரு பக்கம் பொடிக் கோலமும், ஒரு பக்கம் மாவு கோலமும் கிடுகிடுவென்று நிமிடத்தில் போட்டு விட்டாள். இதைக் கண்ட வெள்ளைக்கார மாதின் ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. மாவைத் தான் வாங்கி அதே மாதிரி கோலம் போட்டுப் பழகிக் கொள்ள முயன்றாள்.

மேனாட்டவர்களுக்கும், நம் நாட்டவர்களுக்கும் உள்ள வித்யாசம் இதுதான். மேல் நாட்டினர் எந்த ஒரு அதிசயமானதைப் பார்த்தாலும் அதையோர் பிரமாதமாக மதித்து அதைச் செய்து பார்க்கும் முன்னறிவும், விசால புத்தியும் கொண்டு செய்து வெற்றியை அடைகிறார்கள். நம்மவர்களோ, சர்வ சாதாரணமாய்ச் செய்யக் கூடிய முக்ய காரியங்களையும் செய்யாமல் விட்டுவிட்டு தோல்வி அடையும் நிலைமைக்கு வந்து விடுகிறார்கள். இதே கோலமிடும் கடமை மிகச் சிறந்ததாக உள்ள பாரத நாட்டின் நாரீமணிகளில் எத்தனை பேர்களுக்கு ஒரு இழை பிடித்து இழுக்கவும் தெரியாமல் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை நினைக்க வருந்தாமலிருக்க முடியவில்லை.

இதே கோலம் போடுவதில் எத்தனை அருமையான உருவங்களை எல்லாம் அபூர்வமாக சிருஷ்டித்து வர்ணங்கள் முதல் கொடுத்து சித்திரம் வரையும் நாரீமணிகளும் நம் நாட்டில் இப்போதும் விளங்குகிறார்கள். அவர்களின் சித்திரங்களைக் கண்டு மனம் பூரிக்கின்றது. இத்தகைய அருமையான சித்திரத்தைக் கண்ணாரக் கண்டு களிப்பதுடன் நாம் நின்று விடுகிறோம். ஆனால், அதை மேனாட்டார் கண்டால் கற்றுக் கொள்ளவே முதலில் முயற்சிப்பார்கள்.

இந்தக் கோலத்தைக் கண்டு அபாரமான சந்தோஷமடைந்த வெள்ளை மாது வாஸந்திகாவின் கைகளைக் குலுக்கி, அதற்காகத் தன் அன்பு நிறைந்த முத்தமிட்டுப் பின்னர் தன் ஜேபியிலிருந்த ஒரு பவுண்டன் பேனாவை அவளுக்குப் பரிசாகக் கொடுத்தாள். வாஸந்தி உபாத்தியாயினியின் முகத்தைப் பார்த்தாள். உபாத்தியாயினி வாங்கிக் கொள்ளும்படி கண் ஜாடை காட்டியதால்,

வாஸந்தி அதை வாங்கிக் கொண்டு, துரைசானிக்குப் பிரதி வந்தனம் கூறினாள்.

பேனா கிடைத்த சந்தோஷம் வாஸந்தியின் ஆனந்தத்தை அதிகப்படுத்தியது. உபாத்தியாயினி, "சரி; நாம் போகலாமா?" என்றாள். பிறகு "வாஸந்தீ! இந்தப் பேனாவை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளு. உன் சித்திரத்திற்காக பரிசு வந்த பேனாவானதால் ரொம்ப பத்திரமாக வெச்சுக்கணும்" என்று கூறிய பின் இன்னும் மற்ற வீட்டு விளக்குகளையும் அலங்காரங்களையும் பார்த்துக் கொண்டே போய் விட்டார்கள். வாஸந்தி அந்தப் பேனாவைத் தன் பிதாவுக்குக் காட்டுவதற்காகத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினாள். வேணி சந்தோஷ பிம்பமாய் விளங்கினாள்.

19

மைதிலி, வேணி வீட்டிலிருக்கும்போதே அவர்களுக்குத் தங்களால் நஷ்டமாகிவிட்ட சாமான்களுக்கு ஈடு செய்து அவர்களைப் பண்டிகையை நடத்தும் படிக்குச் சொல்லி யனுப்பிவிட வேண்டும். இப்போது கையில் கொடுத்தால் வாங்கமாட்டாள்; மறுத்து விடுவாள்—என்று தீர்மானம் செய்துவிட்டா ளாகையினால், அந்த எண்ணத்தை வெளியில் சொல்லாமல் வண்டியிலமர்ந்து வீட்டிற்கு வந்திறங்கினாள்.

அப்போது வீதித் திண்ணையின்மீது கிழவர் உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். வாயில் நிறைய புகையிலையுடன் கூடிய தாம்பூல ரசம் நிறைந்து போய் வாய் மேல் தூக்கி ராம்தூதன் சாயலாக உப்பி விட்டது. அருகில் நின்ற மீனாட்சியை நோக்கி புகையிலை அடக்கத்துடன் பேசும் பரிபாஷையில் வழ வழ கொழ கொழ அகராதியுடன் "ஏழ்டீ! அவ எங்கே போனாழ்?" என்று கேட்டார்.

மீனாட்சி :—வண்டிக்கார கரப்பங்கிட்ட என்னமோ பேசிண்டிருந்தாப்பா! யாரோ பாவம் விழுந்து அடிபட்டுதாபே, அவாளெ பாக்க ஒருவேளை போனாளோ என்னமோப்பா! யாருக்குப்பா அடிபட்டது?

கிழவர் :—ஆழ்ழ்ஹா! அப்பழியா சேழி....என்று கோபம் தலைக்கேறிவிட்டது. கையிலிருந்த பத்திரிகையை விசிறி எறிந்துவிட்டு முகத்தையும் கைகளையும் ஆட்டி ஆட்டி விழித்தார். வாயைத் திறந்து பேசவோ, வாய் நிறைய புகையிலைச் சாறு திணிக்கப்பட்டுவிட்டது. தர்மசங்கடமான நிலைமையிலிருக்கும்போது மாட்டு வண்டி வந்து நின்றதும், மைதிலி சடக்கென்று இறங்கி ஓர் பறவையைப்போல் பறந்து உள்ளே போய்விட்டாள்.

அவசர அவசரமாகக் கிழவர் திண்ணையை விட்டு, முறைத்துப் பார்த்துக்கொண்டே இறங்கின வேகத்தில் வேஷ்டியின் கச்சம் அவிழ்ந்துவிட்டது. அதைச் சரியாகச் சொருகிக்கொண்டு நிமிரும்போது வண்டிக்கார கருப்பன் வண்டியில் போட்டிருந்த ஜமுக்காளத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போகப் படி ஏறினான்.

கிழவர் ஆத்திரத்துடன் "எழ்ண்டா! முழ்ழாள் பயழே!.... அவ எழ்கேழா போய் வழ்தா?" என்று கருப்பனைப் பார்த்து முறைப்பாகக் கேட்கும்போது ஆத்திரத்தின் வேகத்தினால் மகா அடக்க ஒடுக்கத்துடன் வாய்க்குள் இருந்த புகையிலையின் ரசம் குபீரென்று அவரையும் அறியாமல் வெளிக் கிளம்பி கருப்பனுக்கு அபிஷேகம் செய்வித்ததுபோல் அவன் முகத்தில் பீறிக்கொண்டு வந்துவிட்டது.

கருப்பன் திடுக்கிட்டுப் போய் "ஐயோ!" என்று வாய் விட்டும் சொல்லிப்பார்த்தான். அவன் இவர்கள் வீட்டில் வெகு நாட்களாக இருந்த பழைய ஆளாகையினால் எல்லோருக்கும் அவனிடத்தில் அதிக நம்பிக்கையும் மதிப்பும் உண்டு. அவன் இவ் வீட்டிற்கு வேலைக்காரன் என்ற பெயரே யன்றி, சகல விதத்திலும் வீட்டுக்கு அக்கரையுடன் உழைக்கும் பெருந்தன்மையான குணம் வாய்ந்த சொந்தக்காரன் போலவே இருப்பவன்.

அவன் முகத்தில் எச்சில் விழுந்த உடனே மீனாட்சி, "ஐயையோ! என்னப்பா கருப்பன்மேலே துப்பிட்டேளே!

ஐயோ பாவம்! கருப்பா! போய் மூஞ்சியை அலம்பிண்டு வாடா!" என்று தன் அனுதாபத்தைக் காட்டினாள். கருப்பன் துணியால் மூஞ்சியைத் துடைத்துக்கொண்டபடியே, "எஜமான்! இது என்ன வேலெங்க. எம்மூஞ்சியே சாக்கடென்னு நெனச்சுக்கிட்டீங்களா! நல்ல வேளெ அம்மா முஞ்சிலே துப்பாமெ இந்த நாயி மூஞ்சிலே துப்பினீங்களே அதுவே போதுங்க" என்று கூறிக்கொண்டே வாசப்படி தாண்டப் போனான்.

இதற்குள் கிழவர் கருப்பனைப் போக விடாமல் கையைப் பிடித்து நிறுத்தித் தடுத்துவிட்டு, வாயிலிருப்பதை பூராவும் கீழே துப்பிவிட்டு, "ஏண்டா ஒனக்கு ஒடம்பு திமிர் ரொம்ப அதிகமாய் போயிடுத்தோ! அந்தச் சிறுக்கியை எங்கே அழைச்சிண்டு போயிட்டு வந்தே. நெஜத்தைச் சொல்லிப்புடு" என்று கடுமையான தொனியில் கேட்டார்.

கருப்பன்:—இதென்ன எஜமான் இப்பிடி கேக்கரீங்க. அம்மா எங்கே போயிட்டாங்கன்னு நெனச்சுகிட்டீங்க. வண்டிமாடு முட்டி அந்த ஆளு உயிந்துட்டாக்கா நீங்க பேசாமெ வந்துட்டீங்க. அம்மா மனசு கேக்கலெ பாவம். அவுங்க வூட்டுக்குத்தான் போயி அவங்களுக்குத் தேருதலு சொல்லிப்புட்டு மன்னிப்பு கேட்டுகிட்டு வந்தாங்க. இதுலே என்னுங்க தப்பு—என்று ச்வாதீனமாகவே கூறினான்.

கிழவர் :—'ஆ! அப்படியா சமாசாரம். அம்மாளுக்கு அப்படியே கருணை மழை பொழிஞ்சூட்டுதா! அடேய் கருப்பா! ஒனக்கு வாயும் துணிச்சலும் அதிகமாய்ப் பூடுத்துடா! நீ என்ன செய்வே? அந்த நீலி குடுக்கர எடம்டா! எடம்' என்று கூறிக்கொண்டே ஆவேசத்துடன் உள்ளே சென்றார்.

மைதிலி இங்கு நடப்பவைகளைக் கேட்டுக்கொண்டே ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள். கிழவர் ஆத்திரத்துடன் "ஏண்டி! பத்ரகாளீ!' எனக்கில்லாத கருணை உனக்கு ஊத்து எடுத்துப் போச்சோ! நித்தியம் எத்தனையோ பிச்சைக்கார நாய்கள் ரோட்டில் போகும் வண்டியில் அகப்பட்டு சாறதுகள். அதுக்கெல்லாம் நீ தயா ரக்ஷகியா காப்பாத்தக் கிளம்பிட்டயோ? ஆ! அத்தனே

தைரியமாடீ உனக்கு? இத்தனெ பெரிய மனுஷன் பேசாம இருக்கச்சே ஒன்னெ யாருடீ பெருதனம் பண்ணி அந்தப் பிச்சக்கார நாய் வூட்டுக்குப் போகச் சொன்னது?'' என்று தாறுமாறுபாகக் கூச்சலிட்டுக்கொண்டே சற்றும் தாக்ஷண்யமின்றி மைதிலியைத் தடார் தடார் என்று அடித்துவிட்டார்.

பொறுமைக்கு இருப்பிடமாகிய மைதிலி சற்றும் அசையவுமில்லை; வாயைக் கூடத் திறக்காமல் கல்லுபோல் உட்கார்ந்திருந்தாள். அவள் அவ்வாறு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து கிழவருக்கு இன்னும் ஆத்திரம் அதிகரித்துவிட்டது. "ஆஹா! என்னே ஒரு மனுஷன்னு பாத்தியா! பூச்சி, புழுன்னு நெனச்சியா? அசையக்கூட இல்லாத கல்லு மாதிரி ஒக்காண்டிருக்கியே. முன்னே பின்னே தெரியாத வீட்லே ஒனக்கென்னடீ வேலெ? மலையாட்டும் நான் இருக்கச்சே ஒட்டசாண் சிறிக்கி ஒனக்கென்னடீ தைரியம் வந்துடுத்து?'' என்று ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கும் மைதிலியின் தலை மயிரைப் பிடித்திழுத்து முதுகில் தாறுமாருக அடித்தார்.

மைதிலி அப்போதும் கிழவனை நேரில் பார்க்காமல் எங்கேயோ பார்த்தபடியே, "ஆமாம். மலைபோல் மனிதராக இருக்கிறதுலேதான் மலைபோல் தப்பு பண்ணிப்புட்டு, மலை வாய்திறக்காதது போல நீங்களும் வாய் திறக்காமெ வந்துட்டங்கோ! அந்தப் பாபத்துக்கு நான் போய் மன்னிப்பு கேட்கறது தப்புதான். தேகம் மலைபோல இருந்தால் பிரயோஜனமென்ன? நல்ல புத்தியும், குணமும் மலைபோல இருந்தா உபயோகமுண்டு'' என்று கூறிக்கொண்டே சடக்கென்று உள்ளே போய்விட்டாள்.

அது வரையில் ரேழி மறைவில் நின்று பாாத்துக்கொண்டிருந்த எதிர்வீட்டுக் கிழவர் மெல்ல கூடத்திற்கு வந்து, "ஏண்டா வேதாசலம்! ஒனக்குக் கொஞ்சம் கூட புத்தியே இல்லெ. இப்படி அடிக்காதே; அடிக்காதே: அடிச்சா ஆபத்தா முடியும். எம்முணும் எளெயாளெப்போல ஓடிப்பூடுவான்னு ஒனக்குப் பதனாயிரந் தரம் சொன்னேனே. அது ஒறெக்கலெயா! அடிச்சு அதிகாரம் பண்ணுதேடா! பேசாமெ இருந்து தொலெ. இன்னிக்குக் கார்த்தி

கையும் நல்ல நாளுமா ஏன் இப்படி பண்றே" என்ருர். கிழவர் தலையைத் தடவிக்கொண்டும் தொந்தியைத் தடவிக்கொண்டும் கோபத்துடன் நின்ருர்.

நாம் முன் தெரிவித்ததுபோல் மைதிலி சாமான்களைக் கருப்பனிடம் கொடுத்தனுப்பிவிட்டுப் பின்னர் தன் மூத்தாளின் மகளுக்குத் தலை சீவி சிங்காரித்தாள். அவள் மட்டும் பழைய உடையுடன் அலங்காரமற்றத் தன்மையில் இருப்பதைக் கண்ட மீனுட்சிக்கு மைதிலியை அலங்காரம் செய்துகொள்ளும்படிக் கூற வேண்டுமென்ற ஆசை அடித்துக் கொள்கிறது. ஆனுல், என்ன சொல்வாளோவென்று பயமாகவும் இருக்கிறது. ஆதலால், மெல்லத் தயங்கியவாறு 'சித்தீ! சித்தீ!' என்று கூப்பிட்டாள். அதற்கு மேல் சொல்லமாட்டாது நின்ருள்.

மீண்டும் அவள் கையைத் தடதடவென்று பிடித்து இழுத்துக்கொண்டுபோய் "சித்தீ! எங்கம்மா படத்தெப் பாரேன். எத்தனை அலங்காரம் பண்ணிண்டு இருக்கா? நீயும் இந்த மாதிரி ஏன் சித்தி அலங்காரம் பண்ணிண்டு படமெடுத்துக்கக் கூடாது?" என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

மைதிலியின் கண்ணில் ஜலம் தடதடவென்று வந்து விட்டது. அந்தப் படத்தைப் பார்க்கும்போது மைதிலிக்குத் தாங்கமுடியாத ஆத்திரமே உண்டாயிற்று. 'இந்தப் படுபாவி செத்ததனுலன்ரே என் தலையெழுத்து இம்மாதிரியாயிற்று. இந்தப் பாவி ஏன் சாகணும்' என்ற வெறுப்பும், விரக்தியும் அபாரமாகப் பொங்கி எழுந்ததால், அவள் சடக்கென்று முகத்தைச் சுளித்துக் கொண்டு, "ஆமாம். என்னை இந்தக் கதி ஆக்ரத்துக்குத்தான் இந்தப் பாவி இப்படி அலங்கார சுந்தரியா இருக்கா! எனக்கு அலங்காரம் எப்போ பண்ணுவா தெரியுமா? என் சரீரத்தை விட்டு ஆத்மா போய்விட்டப்பறம் தடபுடல் அலங்காரம் ஓங்கப்பா செய்வா. அப்போ நீயும் பாக்கலாம்........வா....வா........ நாழியாச்சு. திருவிளக்கு ஏத்தலாம் வா!" என்ருள்.

அதற்குமேல் மீனு ஒன்றுமே பேசமாட்டாது தும்பித்து விட்டாள். சிறுமியாகையால் விவரித்துப் பேசவும், விஷயத்தை

யற்ற சக்தியும் இல்லாது போய் விட்டது. ஆகையால், பேசாமல் மைதிலியுடன் சென்றாள். மைதிலி கண்ணீர் பெருகிய வாறு பகவானைத் தோத்திரம் செய்தபடியே அம்பாளையும் தோத்திரம் செய்து நெஞ்சை யடைக்கும் துக்கத்துடன் பாடிய படியே திருவிளக்கேற்றிக் கற்பூர ஹாரத்தி செய்து வணங்கி, பின்னர் மீனுவுடன் விளக்குகளை ஆங்காங்கே வைக்கவேண்டிய இடங்களில் நிறையவும் அலங்காரமாயும் வைத்தாள். அவள் மனத்தில் வேண்டிக் கொள்வதெல்லாம் தனது முடிவைச் சீக்கிரத்தில் கடவுள் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

கார்த்திகைப் பண்டிகையின் தீபாலங்காரத்தை இரண் டிடங்களில் பார்த்தோம். ஒன்று பரம ஏழைகளாயினும் மனப் பூர்வமான ஒற்றுமையுடன் கூடிய குடும்பத்தினராதலால் பாலும் தேனும்போல எல்லோரும் ஒருமனப்பட்டு தீபாலங்காரமும் பூஜையும் செய்தார்கள்.

மைதிலியின் குடும்பத்திற்கு ஏராளமான செல்வமிருந்தும் எதற்கு உபயோகமாயிற்று? கிருஹலக்ஷ்மி என்ற ஸ்தானத்தில் இருந்தும் எந்த விதத்திலாவது சந்தோஷம் உண்டா? மன நிம்மதி உண்டா? ஒன்றுமில்லை. உதவாக் கட்டையைப்போலவே அவள் தன்னை எண்ணி விட்டதால் அவளையே அவள் வெறுப்பது தான் அவள் பிறவியின் சந்தோஷமாயிற்று. அந் நிலைமையில் ஓர் தூணில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

தீபாவளியன்று விடியற்காலம் ஸ்நானம் ஆனதும் ஒவ் வொருவரும் சிநேகிதர்களையும், உறவினர்களையும் கண்டு, "கங்கா ஸ்நானம் ஆயிற்று!" என்று கேட்டு க்ஷேமம் விசாரிப்பதுபோல், கார்த்திகைப் பண்டிகைக்கு முக்யமாக பெண்களும், பெண் குழந்தைகளும் தங்கள் தங்கள் சொந்தக்காரர்கள், சிநேகிதர்கள் முதலியவர்கள் வீட்டிற்குச் சென்று, பெரியவர்களாயின் சேவிப்ப தும், தீபாலங்காரம் ஆயிற்று வென்று கேட்பதும், பெரியவர்கள் "ஜோதிச்சுடராய் உங்கள் குடும்பம் ப்ரகாசிக்க வேண்டும்" என்று வாழ்த்துவதும் சம்பிரதாய மாகையினால் இன்றும், நாளையும் கர்னாடக வழக்கத்தைக் கையாளுபவர்களின் வீடுகளில் இம் மாதிரி நடந்து வருகின்றது.

அதேபோல் சில பெண் பிள்ளைகள் மைதிலியின் வீட்டிற்கு வெற்றிலைப் பாக்கிற்கு வந்தார்கள். மீனுவும் மைதிலியுமாக அவர்களுக்கு வெற்றிலைப் பாக்கும், பொரி உருண்டை, முந்திரிப் பருப்பு உருண்டை முதலியனவும் கொடுத்து அனுப்பினார்கள்.

20

வேணி எல்லா அம்சங்களிலும் கர்னாடக சம்பிரதாயத்தை அனுஷ்டிப்பவளாதலால், ராஜுவை மூர்த்தியிடம் உட்கார வைத்து விட்டு, வாஸந்தியுடன் மைதிலியின் வீட்டிற்கு மஞ்சள் குங்குமத்திற்கு வந்தாள். வரும்போதே வீதியில் உட்கார்ந்திருந்த கிழவரைப் பார்த்ததும் வேணிக்குத் திக்கென்று தூக்கி வாரிப்போட்டது. "ஐயோ! இந்தக் கிழவர்தான் வீட்டு எஜமானர்போலிருக்கே!" என்று தனக்குள் நினைத்துக் கொண்டு மைதிலிக்காக பரிதாபப் பட்டபடியே உள்ளே வந்தாள்.

மைதிலி தன் கையைக் கன்னத்தில் ஊன்றிக் கொண்டே விசனம் நிறைந்த பாவைபோல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். வாஸந்தி அன்று ஒரு வேளை பார்த்ததிலிருந்தே வெகு நாட்கள் பழகியவளைப்போன்ற தாராளமான சுபாவத்துடன் "மாமீ!" என்று அழைத்துக் கொண்டே மைதிலியின் முன்பு சென்று அவளை நமஸ்காரம் செய்து, "மாமி! விளக்கேத்தியாச்சா?" என்றாள்.

இவளுடைய சமத்தும் பரபரப்பும் மைதிலியின் மனத்தைக் கவர்ந்தன. இவர்கள் வருவார்களென்று அவள் சற்றும் நினைக்கவில்லையாதலால், தன் விசனத்தில் இவர்களைக் கண்டது பெரும் சந்தோஷமாக மாறியது. உடனே வாஸந்தியை இறுகத் தழுவி கட்டிக் கொண்டு, "விளக்கு ஏத்தியாச்சுடீ கண்ணா! தீபத்தின் ஒளியைப்போன்ற உயர்ந்த ஆமடியான் உனக்கு வரணும்; உன்

குடும்பம் தீப ஜோதிபோல் ப்ரகாசிக்கனும்” என்று மனமார வாழ்த்திய பின்னர் “ஒக்காருங்கோம்மா! அவருக்கு இப்போ தேவலையா? சாதாரணமா யிருக்காரா! நீங்க வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. மீனு! நான் காலையிலே சொன்னேனே அந்தப் பொண்ணு இவதான்” என்று மீனுவை அழைத்து வாஸந்தியை அறிமுகம் செய்து வைத்தாள்.

மீனு வாஸந்தியை உற்று நோக்கி, குழந்தைகளின் சுபாவப் படிக்கு, “நீ எத்தனை பொட்டளம் பட்டாசு சுட்டே! என்னென்ன வாணம் வாங்கி இருக்கே! எந்தப் பள்ளிக்கூடத்திலே படிக்கிறே. எத்தனுவது க்ளாஸ் படிக்கிறே” என்று விசாரித்தாள். வாஸந்தி “நான் நாலாவது க்ளாஸ் படிக்கிறேன். என் தம்பி ஒண்ணுங் கிளாஸ் படிக்கிறுன். நாலு பட்டாஸ், ஒரு பொட்டி மத்தாப்பு எல்லாம் சுட்டேன். நீ எத்தனுவது படிக்கறே?” என்றுள்.

மீனு :—நான் ஆருவது படிக்கிறேன். ஒங்கப்பாக்கா காத்தாலெ அடிபட்டுது! இப்ப ஒண்ணுமில்லெயெ.

வாஸந் :—வலிக்கிறதுங்கிரா! ஆனு ஒக்காண்டு செத்த நேரம் பேசினு.

மைதிலி :—அம்மா, வாஸந்தி! ஒனக்குப் பாட்டுத் தெரியுமா! தெரிஞ்சா ஒண்ணு பாடேன்.

வாஸந் :—இதோ பாட்ரேன் மாமீ!

பேகடா ராகம்—சாபு தாளம்.

பல்லவி

முன்னர் நான் செய்த வினை பின்னர் மூண்டதோ! தாயே!
என்ன செய்வேன் அம்பிகே! (முன்)

அநுபல்லவி

உன்னை யல்லால் வினை ஒழிக்க வல்லாருண்டோ?
இன்னும் தாமதம் செய்தால் என்னுயிர் நீங்கிடும். (முன்)

சரணம்

இன்னில மக்களின் இன்னல்கள் போக்காமல்
கன்னெஞ்சம் போன்று நீ கவலை யற்றிருந்திடில்
அன்னை என்ற மகிமை உன்னைவிட் டகன்றிடும்
துன்னிய வருள் செய்தென் துன்பத்தைத் தீர்த்திடாய். (முன்)

என்று அழகாகப் பாடி முடித்ததும், "மாமீ! இது எங்க பள்ளிக்கூடத்திலெ ட்ராமா போட்டபோது எனக்குச் சொல்லிக் குடுத்தா. நான் இதைப் பாடி நடிச்சேன். எல்லாரும் கை தட்டி சந்தோஷப்பட்டா மாமீ! இவ பள்ளிக்கூடத்திலெ நாடகம் நடிச்சிருக்காளா!" என்று மீனுவைக் காட்டிக் கேட்டாள்.

இந்தப் பாட்டின் குரலைக் கேட்டு உள்ளே வந்த கிழவர், மைதிலி வாஸந்தியைத் தடவியவாறு உட்கார்ந்திருப்பதையும் வேணியுடன் அன்பாய்ப் பேசுவதையும் பார்த்து, அசாத்யமான கோபம் அடைந்து விட்டார். தான்தான் வீட்டுக்காரர் என்றும், தன் மனைவியை அதிகாரம் செய்யும் கம்பீரத்தை நான்கு பேர் முன்னிலையில் தான் காட்ட வேண்டுமென்றும் சில அற்பர்கள் நினைத்துக்கொண்டு, அம்மாதிரியே செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ஏதோ பெரிய மதிப்பும் பெருமையும் வந்து விட்டதாக அந்த ஜம்பக்காரர்கள் நினைத்துச் செய்வதானது அவர்களையே பிறர் வெறுக்கும்படியும், தூஷிக்கும்படியும் செய்து விடுகிறதென்பதை அந்த அற்பர்கள் அறிவதில்லை.

அந்தக் கோஷ்டியில் முதல் தாம்பூலம் பெற்ற கிழவர், தொண்டையைப் பெரிதாகக் கனைத்துக் கொண்டு, "அடீ! மைதிலீ! என்னடீ ஒக்காண்டு அரெட்டெ அடிக்கிரெ! கூத்துப் பாட்டும், தன்னானே பாட்டும் பாட இது என்ன வீடுன்னு நெனெச்சிண்டயா! தெருக்கூத்து கொட்டாயின்னு நெனச்சிண்டயா! இது யாருடீ!" என்று கேட்டு முடிப்பதற்குள், மீனு எழுந்து ஓடி வந்து, "அப்பா! கோச்சிக்காதெப்பா! இன்னிக்குக் காத்தாலெ நீ வண்டிலெ போகச்செ மாடு யாரையொ முட்டிடுத்துன்னு சொன்னெயே. இந்தப் பொண்ணோடெ அப்பாதானும்பா அது; இந்தப் பொண்ணு ரொம்ப நல்ல மாதிரியா இருக்காப்பா! இவா அம்மாவாம் அந்த மாமி. நன்னா பாட்ரா பாருப்பா!" என்று கூறியது.

இதைக் கேட்டதும் கிழவரின் ஆத்திரம் தலை தூக்கித் தாண்டவமாடக் கிளம்பி விட்டது. வேணி இருக்கும் திசையை நோக்கினார். கிழவரைக் கண்டதும் அவள் மரியாதையாய்

எழுந்து ஒதுங்கி நின்றாள். மைதிலியையும் கிழவரையும் பார்க்கப் பார்க்க அவள் மனம் கலங்கி, "ஐயோ! பாவமே!" என்ற பரிதாபத்துடன் சங்கடப்பட வாரம்பித்தது. "இந்தக் கிழட்டுக் கட்டெலே போரவனை இவ்விளங் குமரி எவ்விதம் தான் பதியாக மனத்திலாவது நினைக்க முடியும்?" என்று வேணி நினைக்கும் போது அளவிலாத வெறுப்பு அவள் முகத்தில் ப்ரகாசித்தது.

மைதிலியோ, தலையையும் நிமிரவில்லை. இந்தக் கிழம் ஆத்திரத்தில் என்ன திட்டி விடுமோ! என்ன செய்து விடுமோ என்கிற பயத்தினால் அவள் சடக்கென்று, "அம்மா! உள்ளே வாருங்கள்" என்று கூறியவாறு வேணியையும், வாஸந்தியையும் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பக்கத் தறையில் புகுந்து விட்டாள்.

குழந்தை வாஸந்தி ஒன்றுமே தெரியாமல் விழிக்கின்றது. கிழவர் கோபிப்பதை மட்டும் அறிந்தாளே யன்றி, ஏன் கோபிக்கிறார் என்ற விவரம் தெரியாமல் விழிக்கையில் தன்னை மைதிலி அழைத்துச் சென்றதால் உள்ளே போய் விட்டாள். எனினும் அவள் உள்ளேயே நிற்காமல் தலையை வெளியே நீட்டி நீட்டி எட்டிப் பார்த்தாள்.

அப்போது கிழவர் தலையில் அடித்துக் கொண்டு முகத்தைச் சிணுக்கி கையை நெளிப்பதையும், வாய் முணு முணுப்பதையும் கண்டு மிரண்டுபோய் மைதிலியை நோக்கி, "மாமீ! அந்த தாதா வுக்கு ஏன் இப்படி கோபம் வரது. அதோ பாருங்கோ! தலையி லடிச்சிண்டு என்னமோ பண்ராரே! நாங்க வந்தது அவருக்குப் பிடிக்கலையா? அவரே பாத்தா என்னெ அடிச்சிடுவாபோல இருக்கே. அம்மா அம்மா! நாம்ப ஆத்துக்குப் போயிடலாம் வாம்மா!" என்று தாயாரைக் கூப்பிட்டுப் பின்னும் எட்டிப் பார்த்தாள்.

பிசினாரிக் கிழவன் "கார்த்திகைக்காக ஏதறி இருந்த விளக்குகள் எத்தனை நாழி எரியும். எண்ணெய் பாழாப்போறது" என்று கூறிக்கொண்டே சில விளக்குகளைக் கையால் அணைப் பதையும், சிலவற்றை வாயால் ஊதி அணைப்பதையும் பார்த்தாள்.

சிறுமியாயிருப்பினும் வாஸந்திக்கு இச் செய்கை மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கியது. குழந்தை சுபாவத்துடன் பயத்தை மறந்து திடீரென்று கிழவரிடம் ஓடி வந்து, "தாதா! எத்தின வெளக்கெ இப்படி அணேச்சாக்கா பாவம்னு எங்க வாத்தியாரம்மா சொல்லி இருக்காளே! கார்த்திகை பண்டிகைக்கு எத்தின விளக்கை அணேக்கிறீரே இது பாவமில்லெ?" என்று கேட்டு விட்டாள்.

கிழவர் சீறி விழும் கடுவாம் பூனேபோல் முகத்தை வைத்துக் கொண்டு, "ஓகோ! நீ பெரிய நூத்துப் பாட்டி. பாவத்தையும் புண்ணியத்தையுங் கண்டுட்டே! போடி போ! ஒட்டசாண் சிறுக்கி என்ன கேள்வி கேக்கரெ....அதிகம் பேசிணுயாணு ஒதைப்பேன். போயிடு" என்று மிரட்டி அவளேத் தள்ளியபடியே தன் வேலேயைத் தொடர்ந்து செய்தார்.

இதற்குள் வேணி இனிமேல் இங்கு நிற்கக் கூடாது என்று எண்ணியவளாய் வெற்றிலே பாக்கு வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள். அப்போதுதான் கிழவர் அவளேத் தள்ளி விட்டதும்; வாஸந்தி சுவரோடு சுவராய் சாய்ந்து கொண்டு நின்ருள். வேணியின் மனம் புழுங்கியது. வாஸந்தியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு தட தடவென்று நடந்தாள்.

கிழவர், வேணி வருவதையும் அவள் வாஸந்தியை அழைத்துச் சென்றதையும் பார்த்து அப்படியே சற்றுத் திகைத்து நின்று விட்டார். வேணியின் முக வசீகரமும் சாந்தமும் குங்குமப் பொட்டின் பிரகாசமும் அவளுடைய அழகை பதிணுயிரம் மடங்கு அதிகரிக்கச் செய்து காட்டிய தோற்றம் கிழவரின் மனத்தில் ஓர் தீய எண்ணத்தின் சிறு தீப்பொறியைக் கிளப்பியதால் கண்மூடிக் கபோதியைப்போல் அவர் பல்லே இளித்துக் கொண்டும், விளக்கை அவித்த எண்ணெய்க் கையைத் தலேயில் தடவியபடியே அசட்டுப் பார்வைப் பார்த்துக் கொண்டும் நின்ருர்.

வேணி இவர் செயலே யறியாது தான் வீடு செல்லும் நோக்கத்துடனேயே சென்ருள். "அந்த அம்மாளும் குழந்தையும் மனங் கலங்கும்படி நடந்து விட்டதே!" என்ற எண்ணத்தால்

மைதிலி வருத்தமுற்று, அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

இதற்குள் மீனாட்சி சிறுமியின் இயற்கையான சுபாவத்துடன் "வாஸந்திகா! நாளைக்கு எங்காத்துக்கு வரயா!" என்றாள். வாஸந்தி ஒருமாதிரியான பார்வையுடன், "போருமே! இன்னிக்கு தாதா இழுத்துத் தள்ளியதோடு விட்டார். நாளைக்கு வந்தாக்கா அடி அடின்னு அடிச்சி பிச்சிப்புடுவா. நான் வரலேடியம்மா!" என்று கூறி விசையாக இரண்டடி வைத்தாள்.

இதைக் கேட்ட கிழவர், "ஹி....ஹி........இதோ பாரு. கொழந்தெ! போகாதே! இங்கே வா....நான் அடிக்கமாட்டேன். அடீ மைலீ! அந்தம்மாளெ கூப்பிடுடீ! கூப்பிட்டு பக்ஷணங்கள்ளாம் கொடுத்தனுப்புடீ! அவா எஜமானருக்குக் காத்தாலே நேர்ந்துட்ட விபத்துக்கு நான் ரொம்ப விசனப்பட்றதாகச் சொல்லுடீ! போராளே!....சீக்கிரம் கூப்பிடு" என்று கூறிக் கொண்டே அவரும் வீதிப்பக்கம் போனார்.

மைதிலி இந்த வார்த்தையைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. வேணியும் திரும்பிக்கூட பார்க்கவில்லை. வாஸந்தி மட்டும் திரும்பிப் பார்த்து நின்று, "தாதா! கார்த்தி விளக்குகள் எரிஞ்சா எண்ணெய் ஆய்பூடுதேன்னு அணைக்கிறேளே! பக்ஷணங் கொடுக்க ஒங்களுக்கா மனசு வரும்? வாண்டாம்; வாண்டாம். ஒங்க பக்ஷணமும் வாண்டாம். அடியும் வாண்டாம்" என்று கூறிக்கொண்டே ஓடிவிட்டாள். கிழவர் பல்லைப் பிளந்துகொண்டே வீதியில் நின்று பார்த்து பெருமூச்சு விட்டார்.

21

வேணிக்கு நேற்று கார்த்திகைப் பண்டிகை யன்று மைதிலியின் வீட்டில் தனக்கும் தன் மகளுக்கும் அவமானம் நேரிட்டதே என்ற மன வருத்தம் சற்று வேதனை செய்தது. எனினும் மைதிலியின் பால்வடிந்த முகத் தோற்றமும், அன்பின் வரவணைப்பும், அவள் கிழவனால் படும் துன்பமும் ஒன்றுகூடி வேணியின் வருத்தத்தைச் சற்று மாற்றுவதாயிற்று.

அதைப் பற்றியே மூர்த்தியுடன் பேசிக்கொண்டு துணிகளை உயர உள்ள கொடிகளில் காயவைத்துக் கொண்டிருந்தாள். வாஸந்தியும் ராஜுவும் தங்கள் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தார்கள். மூர்த்தி மெல்ல எழுந்து சுவருடன் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தான்.

அச்சமயம் அவர்களின் உள் கதவு மெல்லத் திறக்கப் பட்டு கிழவர் தலையை மெதுவாக நீட்டினார். இதை முதலில் யாரும் கவனிக்கவில்லை. வேணி துணி உலர்த்திக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் சந்தோஷ உணர்ச்சி பொங்கிவிட்டதால் நாக்கை வெளியில் நீட்டி பல்லால் கடித்துக்கொண்டே வேணியைப் பார்த்துப் பிரம்மானந்தமடைந்து மீண்டும் தலையை வெளியே எடுத்துக்கொண்டார். மீண்டும் அதே மாதிரி செய்தார். அப்பொழுதும் இவரை யாரும் கவனிக்கவே இல்லை.

தானேதான் உள்ளே போகவேண்டும், தன்னை யாரும் பார்க்கவில்லை என்றதை யறிந்ததும் கிழவர் கதவை நன்றாகத் திறந்தார். அக் கதவு க்ரீச்சென்று ஓசை செய்ததும் வாஸந்தி ராஜு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். கிழவர் வெகு ஜோராயும் முடுக்காயும் உள்ளே வரும் வேகத்தில் வாசற்படி சாதாரண உயரமுள்ளதாதலால் படாரென்று தலையில் அபசகுனம் போல் இடித்ததும் முகத்தைச் சுளுக்கிக்கொண்டு, “இதென்ன சனியன்! வரும்போதே தலையிலிடிக்கிறது” என்று ஆத்திரத்துடன் வாசற்படியை முறைத்துப் பார்த்தார்.

அதே சமயம் ராஜுவும் வாஸந்தியும் கடகடவென்று சிரித்து விட்டதால் இச் சத்தத்தைக் கேட்டதும் வேணி திரும்பிப் பார்த்தாள். கிழவரைக் கண்டதும் வியப்பும், ஒரு மாதிரியான வெறுப்பும், ஆனால் பெரியவர் என்கிற மரியாதையும் ஒன்றுகூடியதால் கையிலுள்ள கம்பை மூலையில் வைத்துவிட்டு, தன் கணவனை ஜாடையாகப் பார்த்து கதவுப்பக்கம் கண்ணைக் காட்டிய பின் குழந்தைகளை நோக்கி பேசாமலிருக்கும்படி கண்ணாலேயே ஜாடை காட்டி மிரட்டியதோடு சற்று நகர்ந்து ஓரமாக நின்றாள்.

குழந்தைகளின் கணீரென்று ஒலிக்கும் வெங்கல மணி போன்ற குரலின் நகைப்பைக் கேட்டதும் கிழவரின் முகத்தில் அசடு தட்டுகிறது. அவமானக் களை தாண்டவமாடுகிறது. கையால் தலையைத் தடவியபடியே மெல்ல இரண்டடி எடுத்து வைத்தவாறு மூர்த்தியை நோக்கி, "ஹி....ஹி....நேத்து எங்க மாடாலெ ஒங்களுக்கு தலையிலே அடி. இன்னிக்கு அதுக்கு தண்டனை ஒங்க வாசப்படியாலெ என் தலையிலே கொஞ்சமாவது அடிபட்டது சந்தோஷந்தான். ஒங்களுக்கு ஒடம்பு எப்படி இருக்கு?" என்று கேட்டார்.

இதற்குள் மூர்த்தி தன் படுக்கையை இழுத்துக் கொண்டு கயிற்றுக் கட்டிலிலேயே ஒரு பக்கமாக உட்காரும்படிக் கூறினான். கிழவரும் தலையைத் தடவியபடியே உட்கார்ந்தார். கண்கள் மட்டும் வேணி இருக்கும் திக்கைத் தாவித் தாவி சுழலமிட்டு அலைகின்றன. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றபடி கிழவரின் முக விகாரத்தின் ப்ரகாசம் தனியே ஜ்வலிக்கின்றது. "உம். ஒங்களண்டை நேத்திக்கே மன்னிப்பு கேக்க வர முடியலே. என் ஆமடையாளை அனுப்பினேன். இன்னிக்கித்தான் ஒழிஞ்சுது; மாடு புது மாடு. மன்னிக்கணும்" என்று வேணியைப் பார்த்துப் பல்லை இளித்தபடியே கூறினார்.

வேணிக்கு இப்பார்வையும் பல்லிளிப்பும் சற்றும் பிடிக்காமல், குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, தட தட வென்று கொல்லைப்புறம் போய் விட்டாள். இச் செய்கை கிழவரின் மனத்தில் முள்போல் தைத்தது. ஆனால் அதை எப்படி காட்டிக் கொள்வது? மெல்ல அடக்கிக் கொண்டு, "ஹி! ஹி!

உமக்கு உடம்பு எப்படி இருக்குன்னு விசாரிக்கவே வந்தேன். உடம்பை ஜாக்கிரதையா பாத்துக்குங்கோ! நான் போயிட்டு வறேன். இந்தாம்மா கொழந்தே!" என்று வாஸந்தியைக் கூப்பிட்டார்.

வாஸந்தி இவரிடம் வருவதற்குப் பயந்து சற்றுத் தயங்கி நின்ருள். பிறகு இரண்டடி எடுத்து வைத்தபடியே, "ஏன் தாதா! இப்போ என்னைப் புடிச்சி தள்ளமாட்டேளே!" என்று குறும்பாகக் கேட்டாள். இச் சிறுசு தன்னைத் தாதாவென்று கூப்பிடும்போதெல்லாம் அவரை ஒரு தள்ளு தள்ளி ஆட்டுவது போலிருக்கிறது. முகத்தில் பதிணுயிரம் கோணல் ஏற்பட்டுத் தன் உடம்பைத்தானே பார்த்துக் கொள்கிருர். அந்த உணர்ச்சியையும் அடக்கிக் கொண்டு, அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறு, "இந்தாம்மா! பயப்படாதே. ஒன்னெ நான் ஏன் தள்ளுவேன்? இந்தா ரூபா வாங்கிக்கோ!" என்று கூறிக் கொண்டே கிழவர் வாஸந்தியின் கையைப் பிடித்திழுக்க எழுந்தார்.

கயிற்றுக் கட்டிலின் காலில் கிழவருடைய வேஷ்டியின் கச்சம் மாட்டிக் கொண்டு அவரை ஓடாமல் தடுத்து இழுத்து காலில் மாட்டிக் கொண்டதால் சிறிய நர்த்தனம் செய்து சமாளித்துக் கொண்டு, மீண்டும் கட்டிலிலேயே உட்கார்ந்தார். வாஸந்தியும், ராஜுவும் கட கடவென்று சிரித்து விட்டார்கள். மூர்த்திக்கோ கிழவரின் ஒவ்வொரு உணர்ச்சியும் தெரியாமலில்லை. அவர் தன்னைச் சிறுபிள்ளையாக நினைத்திருப்பதைக் காண எப்படி நகைக்காமலும் பரிதாபப்படாமலும் இருக்க முடியும்?

மூர்த்தி எதுவுமே பேசவில்லை. "என் விதி, இம்மாதிரி அடி பட்டது" என்ற ஒரே வார்த்தையுடன் நின்று விட்டான். கிழவர் வாஸந்தியை அழைத்து, 5 ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டி, "இந்தா! இதை அம்மாவிடம் கொடுத்து, உனக்கு நல்ல பாவாடைகள் வாங்கித் தரச் சொல்லு." என்ருர்.

வாஸந்தி அந்த நோட்டைப் பார்த்ததும் தேளைப்பார்ப்பது போல் வெறுத்தாளே யன்றிச் சற்றும் ஆசையே கொள்ளவில்லை. குழந்தை சுபாவத்துடன் சற்றும் பயமின்றி, "ஏன் தாதா! நேத்து சாமிக்காக ஏத்தின வளக்கெல்லாத்தையும் எண்ணெய் செலவாயிடும்னு பிசிணரித்தனமா அணைச்செளே! இப்பொ ரூபாயே எப்படி தாதா குடுக்க உமக்கு மனசு வரும்? எங்களுக்கு வாண்

டாய். எனக்கு நெறய பாடம் இருக்கு." என்று கூறிவிட்டு, முகத்திலடித்ததுபோல் புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தாள்.

வேணி, கிழவர் போயிருப்பார் என்று எண்ணி குடத்துடன் உள்ளே வந்தாள். அப்போதும் அவர் அங்கே உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், திரும்பிப் பாராமல் அடுப்பங்கரைக்கு நேரே சென்றாள். கிழவர் இனிமேல் அங்கு இருப்பது மரியாதையல்லவென்று எண்ணியவராய் முன்போல் வேஷ்டி மாட்டிக்கொள்ளாமலிருக்கும் பொருட்டு வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டு எழுந்தார்.

"சார்! நான் போய் வருகிறேன். நீங்க கவலைப்பட வேண்டாம். நாளைக்கே குணமாயிடும். இதை வெச்சுக்கணும்" என்று மூர்த்தியிடம் அந்த நோட்டை நீட்டினார். மூர்த்தியும் மெல்ல நகைத்துக் கொண்டே, "ஐயா! ஒங்க தயவு இருந்தா போதும். இது இப்போ வாண்டாம். நேத்திக்கி ஒங்க மனைவி அனுப்பின மரியாதையே போதும். நீங்க செய்தா என்ன! அந்தம்மா செய்தா என்ன?" என்றான்.

அதற்கு மேலும் கிழவருக்கு ஒன்றும் சொல்லமுடியவில்லையாதலால், "சரி நான் போய் வரேன்....அம்மா! நான் வரேன்" என்று வேணியைப் பார்த்துக் கூறினார். வேணியும் மரியாதையுடன் தலையை அசைத்தாள். இஞ்சி தின்ற குரங்குபோல் கிழவர் தலையில் இடிக்கப் போகின்றதே என்ற பயத்துடன் பாதி முதுகு வளையும்படிக் குனிந்து சென்றார். இதைப் பார்த்த குழந்தைகளுக்கு, ஏன் பெரியவர்களுக்குங் கூட, அடக்கமாட்டாத சிரிப்பு வந்துவிட்டது. கிழவர் திரும்பிப் பார்த்துக்கொண்டே மறைந்து விட்டார்.

மூர்த்தி :—வேணி! கிழவரின் அலங்காரத்தைப் பார்த்தாயா!....

வேணி :—'இந்தக் கிழத்தைப் பாத்தாலே எனக்குப் பத்தி எரியறது. இப்படி மூளை கெட்ட கிழமும் உலகத்திலே இருக்கேன்னு சங்கடமா இருக்கு. அந்தப் பெண்ணின் பாவந்தான் இப்படி கிழத்தின் ரூபமாயிருக்கு'—என்று மைதிலியை எண்ணிக் கலங்கினாள்.

22

தொத்து வியாதி ஓரிடத்தில் பரவ வாரம்பித்தால் அது எப்படி எல்லோரையும் பிடிக்குமோ, நெருப்பு ஓர் இடத்தில் பிடித்துக்கொண்டால் அது எவ்விதம் நெடுக பஸ்மமாக்கிவிடுமோ, வெள்ளம் ஆரம்பித்தால் எப்படி பெரும் வேகத்துடன் தங்காது ஓடுமோ அம்மாதிரியே கிழவரின் புத்தியில் தோய்ந்து ஊறிவிட்ட மோக எண்ணம் காட்டுத் தீயைப் போல் வளர வாரம்பித்தது. நல்ல எண்ணங்களும், நல்ல சகவாஸமும் விருத்தியாவதற்கு வேண்டுமானால் மிகவும் கஷ்டம். தீய எண்ணங்கள் தீய காரியங்கள், 'தீய' என்ற பதம்போலவே தீயினும் வேகமாக விருத்தியாகிவிடக் கேட்கவேண்டுமா?

இந்த அக்கிரம எண்ணத்தை உத்தம தம்பதிகள் எங்ஙனம் அறியக்கூடும்? அல்லது பரிசுத்தவதியான மைதிலிதான் எவ்வாறு அறிவாள்? வேணியிடமும், வாஸந்தியிடமும் கொண்ட ஓர் வாஞ்சையினால் மைதிலி தன் துயரம் சற்று மறையப்பொருட்டு, வேணியின் வீட்டிற்குச் செல்வதும், அவளுடன் சத் விஷயமாகவே பேசுவதும், மனத்திற்கு ஆறுதல் அடைவதுமாக விருந்தாள்.

கிழவரோ உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய வாறு மூர்த்தியை க்ஷேமம் விசாரிக்கும் முறையிலும் குழந்தைகளுடன் பேசிக் குலாவும் முறையிலும் தினம் ஒரு வேளையாவது அங்கு வருவதும், குழந்தைகளுக்குத் தின்பண்டங்களை வாங்கிக் கொடுப்பதும், தனக்குத் தாகம் 'தீர்த்தம் வேண்டும்; மோர் வேண்டும்; வெற்றிலைப் பாக்கு வேண்டும்' என்றெல்லாம் கேட்பதுமாக வாரம்பித்தார்.

இச்செய்கையின் உள் மர்மத்தையறியாத மூர்த்தி, 'இக் கிழவர் மிகவும் வெகுளி' என்று எண்ணி, அவருடன் பேசுவதும் அவர் கேட்பதைக் கொடுப்பதுமாக வாரம்பித்தான். மைதிலி வருவது கிழவருக்குத் தெரியாது. கிழவர் செல்வது மைதிலிக்குத் தெரியாது. வேணிக்கு மட்டும் கிழவரைப் பார்க்கவே பிடிக்காது ஒருவித வெறுப்பும், எரிச்சலும் ஆதிமுதலே பாதித்துக்கொண்டு

டாந்தது. அதன் காரணம், மைதிலியின் வாழ்க்கையைக் கிழவன் முகமூடித்தனமாகப் பாழ்ப்படுத்திவிட்டானே என்ற பரிதாபமே உடன்தன்மையா யிருந்தது.

ஒரு தினம் மைதிலி வழக்கம்போல் வேணியின் வீட்டிற்கு வந்தாள். குழந்தைகள் பள்ளிக்கூடம் போய்விட்டன. மூர்த்தி எங்கோ வெளியில் சென்றிருந்தான். அச்சமயம் வேணி மட்டும் பழைய நோட்டுப் புத்தகம் ஒன்றைப் பார்த்து,

“ வாத்ஸல்யாத் அபயப்ரதாந கரணாத் ஆர்த்தார்த்தி நிர்வாபணாத்
ஔதார்யாத் அகமர்ஷணாத் அகணித ச்ரேயப் பதப்ராபணாத் ”

என்ற ச்லோகத்தை ராகத்துடன் படித்துக்கொண்டிருந்தாள். மைதிலி குறுநகை புரிந்தவாறு, “ஆமாம்! பகவானின் லீலா விநோதங்களைப் படித்து இன்புறப் புகுந்தால், உலகமே மறந்து போகிறது. அதை நினைக்காமல், என் விதியை மட்டும் நினைத்தால், ‘பகவானே மோசம்; ஹம்பக்கு; கருணையில்லாத வெறும் பொம்மை. எந்தப் பக்தரைக் காத்தாலென்ன? எனக்கு என்ன வாச்சு?’ என்ற அகங்காரந்தான் உண்டாகிறது” என்று கூறிக் கொண்டே உள்ளே சென்று உட்கார்ந்தாள்.

யாரையும் முதல் முதல் பார்க்கும்போது வெகு மரியாதை. பேசவும் தெரியாத—முடியாத—சங்கோசம். கேட்டதற்குப் பதில், மாமி! அக்கா! அத்தை வாங்கோ, போங்கோ முதலிய அழைப்பு பரிபாஷை ப்ரயோகம். சில நாள் பழகின பிறகு தானே கூப்பிட்டுப் பேசும் பழக்கம். சிநேகத்திற்குத் தக்க பாத்திரமாக இருந்து முதல் சந்திப்பிலேயே ஓர் பற்றுதல் உண்டாகி மனம் ஒன்றுகிவிட்ட பிறகோ, மரியாதை முற்றும் பாலில் கலந்த சர்க் கரையைப்போல் அன்பிற் கலந்த சிநேகத்துடன் உருவம் மாறி, வாம்மா! வாடியம்மா! என்னருமைச் சிநேகிதையே....கண்ணு! முதலிய ஸ்வாதந்தர்ய மொழிகளையே சம்பாஷிக்கும் நிலைமை உண்டாகி விடுகிறது.

மனத்திற்குப் பிடிக்காத மனிதர்களாயின், அவர்களை அடிக் கடி பார்த்தாலும் மாமி முறையும், வாங்கோ போங்கோ பேச்சும், கேட்டதற்குப் பதிலும், சில சமயம் சிலரிடம் அதுவும் இல்லாது மெல்ல மெல்ல தேய்பிறைத் திங்கள்போல் தேய்ந்தும் போய் விடுகின்றது. சிநேகம் முதிர்வதற்கும் ஏக வசனமாக மனங்

கலந்து பேசுவதற்கும் நம்மை யறியாத ஓர் தனித்த அன்பும் ஆர்வமும் மனத்தில் பொங்கி எழுந்தாலன்றி அச் சிநேகம் நிலைக்காது. அப்படி மனமொத்து லயித்துப் போன சிநேகம் கால வித்யாசத்தினுல் பிரிந்து போகும்படி நேரிட்டு விடினும் உள்ளுக்குள் ஆழமாகப் பதிந்து போய்விட்ட உணர்ச்சி, மனத்துள் தேங்கிக் கிடக்கும் அன்பு ஒருபோதும் அகல முடியாது. நினைக்கும் போதெல்லாம் ஒரு ஷாக் அடித்தே மறையும். சில சமயம் ஒரு பொட்டுக் கண்ணீரும் பெருகும். இத்தகைய மாற்றிலாத உண்மையான அன்பிற்கே பூர்வஜன்மத்து பந்தம் என்கிறுர்கள்.

வேணியும் மைதிலியும் மேற் குறிக்கப்பட்ட ஐக்ய பாவத்துடன் சிநேகிதைகளாகி விட்டதால், 'வாம்மா' என்ற ஏக வசன ப்ரயோகம் வெகு விரைவிலேயே உண்டாகி விட்டது. முக மலர்ச்சியுடன் வேணி மைதிலியை முதுகில் தடவிக் கொடுத்தபடியே நகைத்துக் கொண்டு, "நாம் செய்த விபரீதமான கர்மத்திற்குக் கடவுள் என்ன செய்வார்? அவர் மேலே பழி போட்டுத் திட்டி இன்னும் பாவத்தை மூட்டைதான் கட்டிக்கணும். இந்த சுலோகத்தில் பகவானின் ஆறு விதமான குணங்களையும் ஆறு பக்தர்களின் மூலம் விரிவாகச் சொல்லி இருக்கு. அந்தப் பக்தாளைப்போல நாமும் இடை விடாமே பகவானை பஜித்தா நமக்குக் கருணை செய்யாமலா இருப்பார்? அந்தக் குறை நம்மிடமே இருக்கச்செ பகவானை சொல்லி உபயோகமென்ன?" என்ருள்.

மைதிலி:—ஆமாம்: வேணி! எல்லா வேதாந்தமும் எனக்குத் தெரியும். நானுந்தான் நாள் முழுக்கக்கூட சொல்லுவேன். சொந்தத்திற்கு என்னவாச்சு! இன்னிக்குப் பாரு ஒரு வேடிக்கெ. கிழவரின் மூத்த மனைவியோடெ தம்பி ஊரிலிருந்து வந்திருக்கான். அவனை நான் இதுவரையிலெ பார்த்ததெ இல்லெ. எங்கேயோ கல்கத்தாவிலே இருக்காணும். அவன் இன்று மருமாக்களை பார்க்க வந்தான். ஒரு மனுஷன் நம் வீட்டுக்கு வந்தா, அவன் நம்மை விசாரிச்சா, நாமும் பதில் சொல்லணுமா இல்லையா? அப்படி அவன் ஏதோ விசாரிச்சான். என்னை பாத்தாதான் எல்லோருக்கும் பாழாப்போன . அழுகை வந்துட்றது. என்னைக் கண்டதும் 'ஐயோ! ச்ச்ச்சு!' என்று சொல்லி விட்டான்.

கிழவருக்குப் பெரிய சந்தேகப் பிசாசு உள்ளே பூந்துண்டு ஆட ஆரம்பிச்சுடுத்து. உள்ளே வந்து என்னைக் கன்னுபின்னுன்னு

திட்டி, "உனக்கென்ன அவனோடே பேச்சு? இனிமே அவன் எதிரே வா பாக்கலாம்னு, வசவோடே ஒதையும் குடுத்தார். தன் மகனைக் கூப்பிட்டு, ஒங்க மாமாவெ சீக்கிரம் ஊருக்குப் போகச் சொல்லு. இங்கென்ன காரியம்னு உபதேசம் பண்ணார்.

ஊரிலிருந்து வந்தவாளெ அப்படி சொல்றது அழகில்லெ. நாளைக்கி எனையாதான் இப்படி சொல்லச் சொன்னேன்னு என் தலையெ உருட்டுவா. நீ ஒன்னும் சொல்லாதேயப்பான்னு நான் சொல்லிப்புட்டேன். அவ்வளவுதான். இன்னும் கோபம் வந்து விபரீதமாக் கூச்சல் போட்டார். அவன் வரட்டும் நானே வெறட்டிப் புட்ரேன். அவன் எதிரே தலெ காட்டு சொல்றேன்; ஒன்னெ கொன்னுபுட்ரேன்னு என்னை பிடிச்சு இழுத்து உள்ளே தள்ளி, கதவெத் தாளிட்டுண்டுப் போயிட்டார்.

விதியை எண்ண எண்ண என்னை நானே தற்கொலை ஏன் செய்துக்கக் கூடாதுன்னு ஒரு வெறியும் பிடிச்சுக் கலங்கினேன். தற்கொலையின் பாவத்தை எண்ணி சற்று அடங்கினேன். வண்டிக் காரக் கரப்பனும்,மீனுவும் கிழவரோடெ சண்டே போட்டுக் கதவெ திறந்தா. நான் அப்பவும் வெளியே வரவே இல்லே. எத்தனை நாழிதான் அழுதுண்டே படுத்திருக்கறது. பசங்க பள்ளிக்கூடம் போயிட்டா. கிழவர் மருந்து கேட்லாக்குகளெ பார்க்க எதிர்த்த வீட்டு கிழவரோடெ போயிட்டார். எனக்குப் பயித்தியம் புடிச் சுடும்போலெ இருந்தது. எழுந்து வந்துட்டேன். காத்தாலெ பல் தேச்சதோடெ சரி. இன்னிக்கு முழு பட்டினி போட்டு ஏகாதசியாவது கொண்டாடலாம்னு இருக்கேன். எத்தனை இம்சையும் சகிக்கலாம். மனுஷனுக்குச் சந்தேகப் பிசாசு பிடிச்சுட்டா அந்த அவஸ்தெயெ எப்படிதான் பொறுக்கறது வேணி!"—என்று கூறும்போது கண்ணீர் ஆறாய்ப் பெருகிவிட்டது.

வேணிக்கும் தாங்க முடியாத விசனம் பொங்கிவிட்டது. "ஐயோ! நெருப்பெ ஈ, எறும்பு மொய்க்கிறதுங்கராப்லே இருக்கே ஒன்னெ சந்தேகப்பட்ரது. மைதிலீ! பட்டினியாகவா இருக்கே? அம்மா! எம் மனசு சகிக்கலேடீ! நான் உனக்குக் கூடப் பிறந்த வளாட்டும் எண்ணிண்டு ஒரு உருண்டெ சாதம் சாப்பிடும்மா! ஏகாதசி நேத்திக்குப் போச்சு" என்று கூறிக்கொண்டே எழுந்து சென்று இலையைப் போட்டுப் பரிமாறிவிட்டு, அன்பு ததும்ப மைதிலியின் கையைப் பிடித்து இழுத்துவந்து, இலைமுன் உட்கார வைத்தாள்.

வேணியின் கரை காணாத அன்பின் அமுதைத் தட்டச் சக்தியற்ற மைதிலி மெல்ல எழுந்துபோய், இலையில் உட்கார்ந்து சாப்பிட வாரம்பித்தாள்.

வேணி :—மைதிலி! ஏதோ ஏழையின் வீட்டுச் சாப்பாடு. ருசிக்குமோ ருசிக்காதோ! அன்புதான் பிரதானம். விருந்து செய்ரது ஒன்னும் பிரதானமில்லெ.

இந்த வார்த்தைக்கு மைதிலியால் பதில் சொல்லவே முடியவில்லை. ஏழைக் குடும்பத்தின் ஒற்றுமையும், ருசியாயும் ஆரோக்யமாயும் இருக்கும் சாப்பாடும் அவளைப் பரவசமுறச் செய்தன. "வேணீ! கடலில் வற்றாத நீர் அலை மோதிச் சென்றாலும் அதை ஒரு கையாவது அள்ளிக் குடிக்க முடியுமா? சிறிய ஓடையாயினும் அதன் நீரல்லவோ கரும்பின் சாறுபோல் மக்களுக்கு உதவுகிறது. அதுபோலத்தான் என் செல்வமும் வாழ்க்கையும்" என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தபடியே, உண்மையில் பசியின் கொடுமையால் பூர்ண திருப்தியுடனும் ப்ரீதியுடனும் சாப்பிட்டாள்.

அச்சமயம் அவ்வறையின் வெளியில் யாரோ வரும் சப்தம் கேட்டு, வேணி உற்றுக் கவனித்தாள். "அம்மா! உள்ளே வரலாமா!" என்ற ஒரு குரல் மிகவும் வணக்கமாகக் கேட்டதும், வேணி கதவைத் திறந்தாள். அழகே உருக்கொண்ட வீர வாலிபன் ஒருவன் வெகு மரியாதையுடன் உள்ளே வந்தான்; மைதிலி சாப்பிடுவதைக்கண்டதும் அவனைமீறி அவன் கண்களில் ஜலம் ததும்பி விட்டது.

"அம்மணீ! சாப்பிடும்போது நமஸ்காரம் செய்யப்படாது. என்னால் ஒங்களுக்கு நேர்ந்த தண்டனையை முத்துசாமி மூலம் தெரிஞ்சு என் மனசு நெருப்பில் விழுந்த புழுபோலத் துடிக்கிறது. நான் ரொம்ப சகஜமாய் அங்கே வந்ததுக்குப் பலன் ஒங்க தலேலே வெடியும்னு தெரிஞ்சா நான் முதல்லெயே ஓட்டலில் எறங்கி இருப்பேன். என் முட்டாள்தனத்தாலே நான் வந்ததும், ஒங்களுக்கு இந்தமாதிரி தண்டனே கிடைச்சதும் என் மனசை அறுக்கிறது. அம்மா! என்னை மன்னிக்கணும். நான் இப்பவே போறேன். என் மேல் கோபப்படக்கூடாது. நீங்க இங்கே போயிருக்கிறதாக கருப்பன் சொன்னான். அவனிடம் விலாசங் கேட்டுண்டு இங்கு வந்து ஒங்களிடம் மன்னிப்பு வாங்கிண்டு ஊருக்குப் போகவே வந்தேன்" என்று விசனத்துடன் கூறினான். அவன் முகத்தில் பரிதாபக் களை தாண்டவமாடியது.

மைதிலி இம்மாதிரி இவன் வருவான் என்று கனவிலும் நினைக்கவில்லையாதலால், அவனைப் பார்த்ததும் மைதிலிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவளால் தாங்க முடியாத விசனத்தைக் கிளறி விட்டதுபோலாகி விட்டது. பதில் பேச வாயை எத்தனை தரம் எடுத்தும் முடியாது துக்கம் தொண்டையைப் பிடித்து இறுக்குகிறது. கையில் எடுத்த

சாப்பாடும் அப்படியே நின்று விட்டது. தன்னுடைய கர்மம் எத்தனை பேரை ஆட்டுகிறது. ஈசா! என்ற ஓரே எண்ணம் அவளை வாட்டுகிறது. கையை அப்படியே உதறிவிட்டு, கண்ணீர் கண்ணத்து வழியே பெருகி வழிந்தவாறு, "ஐயோ! இந்த மகா பாவியினாலே நல்ல மனுஷாளான ஒங்க மனசு நோகும்படி நேர்ந்து விட்டது என்னுயிரையே வதைக்கிறது. எல்லாம் என் விதி; ஒத்தர் மேலெயும் குத்தமே இல்லே. நீங்க இத்தனை தூர தேசம் வந்தும் இந்த மாதிரி அவமானமும், அபவாதமும் என்னால் ஏற்பட்டதற்கு என்னை மன்னிக்கணும்" என்று மேலே கூற மாட்டாமல், தலையைக் குனிந்து கொண்டு பூமியை நோக்கினாள். கண்ணீர் மணிகள் உருண்டு விழுந்து சிதறின.

அதே சமயம் அட்டகாஸமாயும் ஆநந்த நகைப்புடனும் ஏதோ ராகத்தைப் பாட்டாக இழுத்துப் பாடிக் கொண்டே கிழவர், 'மூர்த்திவாள்!' என்று கூப்பிட்டபடியே உள்ளே பிரசன்னமானார். இவரைக் கண்டதும் எமனையே நேரில் பார்ப்பது போல் மைதிலிக்கும், அந்த மனிதனுக்கும் தூக்கி வாரிப் போட்டது. வேணிக்கோ ஆகாயமும், பூமியும் சுழலுகின்றன. கிழவர், இங்கு நிற்கும் வேணுசாமியையும் மைதிலியையும் பார்த்து விட்டதுதான் தாமதம்! கண்கள் நெருப்புப் பொறியாகி சிவந்து ஜ்வாலை வீசுகின்றன. தேகம் முற்றும் பதட்டத்துடன் ரோமம் துடிக்க வாரம்பித்தது........அந்தோ! இந்த விபரீதத்தினால் என்ன விபத்து நேருமோ? என்ன ப்ரளயம் வந்து விடுமோ? என்ற பெருந் திகில் மைதிலியின் அடி வயிற்றில் இடி இடித்த தால், அப்படியே சுவருடன் சாய்ந்தாள்.

அதே சமயம் வழக்கமாக என்றாவது ஒரு தினம் கேட்கும் கந்தர்வ கானத்தின் இன்னொலி மாதுர்யமாய் வானக்குயில் பாடுவதுபோல் கேட்டது.

(முன்பு பாடிய பாடலின் மெட்டு ; தொடர்ச்சி : சரணம்.)

பாலை வனத்தினில் பதறித் துடிக்கினும்
காலக் கூத்தனின் கொடுமையால் கதறினும்
மாலின் பதம் மறவேல். (தூய்மையினாலே)

இந்த இன்னிசை கீதாம்ருதத்தில் மைதிலி அப்படியே ஐக்யமாகி விட்டாள். வேணியும் இந்த அபூர்வ கானத்தின் இன்ப வாரிதியில் ஆழ்ந்தாள்.

23

எந்தக் காலத்திலும் மக்கள், தங்களுக்கோர் நெருக்கடியான சமயமோ, ஆபத்தோ நேர்ந்துவிட்டபோதுதான் கடவுளைப் பஜிக்கவும், துதிக்கவும் வேண்டவும் அதிகமாக முனைகிருர்கள். கடவுளைக் கனவிலும் திட்டும் நாஸ்திகர்கள்கூட அம்மாதிரியான சமயங்களில் தம்மை மீறி, மனித சுபாவத்திற்குள்ள இயற்கையான பக்தி வெளிப்பட்டுப் பிரார்த்தனைகள் செய்துகொள்கிருர்கள் என்ருல், ஆஸ்திகர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

வேணியின் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்கிறது. "நம் வீட்டில் இந்தப் பெண் வந்திருக்கையில் என்ன விபரீதம் நேரிட்டுவிடுமோ வென்ற பயமும், திகிலும் தலைதூக்கிவிட்டன. கிழவனின் சந்தேக எண்ணத்தின் விபரீதம் எம்மட்டும் கொண்டு போகுமோ? இச்சமயம் நம் கணவரும் வந்துவிட்டால், அவருக்கு என்ன தோன்றுமோ? பகவானே! ஒருவிதமான விகாரமும், விபரீதமுமின்றிக் காக்கவேண்டும் என்னப்பனே!" என்று வேண்டியவாறு மைதிலியைத் தன்மீது சாற்றிக்கொண்டாள்.

அங்கு நிற்கும் வேணுசாமிக்கு மனத்தில் செய்யும் வேதனைக்கு ஓர் எல்லையே இல்லை. "மைதிலியைப் பார்க்கிருன். வயிறு பற்றி எரிகிறது. கிழவரை நோக்க ஆத்திரம் மீறிக்கொண்டு வருகிறது. கிழவரின் மண்டையை உடைத்துவிடலாமாவென்ற கோபம் கட்டுமீறி எழும்புகிறது. உடனே தன்னையே தான் சமாளித்துக்கொண்டு கிழவரின் முகத்திலடித்ததுபோல், தடாரென்று அவரைப் பிரதக்ஷணம் வந்து, கீழே விழுந்து சேவித்துக் கைகட்டியவாறு, "தர்ம ப்ரபுவே! ஒங்களைப்போல மகா உத்தம ஆத்மாக்கள் உலகத்திலே இருக்கிறதனுலேதான் ராமராஜ்ய காலம் போல் தேசத்தில் சுபீக்ஷம் பொங்குகிறது. எங்கே பார்த்தாலும் தர்ம தேவதை தாண்டவம் செய்கிறது. நீங்க செய்த-செய்யவந்த-செய்யப்போற காரியத்தினுல் உலகமே கூடிய சீக்கிரம் பிரளயத்திலே முழுகாமலிருக்கணுமே! ஐயோ!....சென்றது போக

இன்னும் நூறு வருஷம் நன்னா இரும்" என்று அடக்கமாட்டாத ஆவேசத்துடன் கூறிவிட்டு, "அம்மா! உன்விதி என்றால் இன்னும் பலப்படவேண்டாம். நான் போய் வரேன்" என்று கூறிக்கொண்டே கிழவர் வியக்கும்படி சடக்கென்று வெளியே போய்விட்டான்.

கிழவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கோபம் மட்டும் தலைக்கேறிவிட்டது. "ஆமாண்டா! அல்பாயுசே! நான் நூறு வருஷமில்லை. எர நூறு வருஷம் இருக்கப்போரேண்டா! நீ இப்பவே செத்துப்போ! போடா! போ! போ....சின்ன பொண்கள் மேலெல்லாம் கண் வேட்டை யாடும் கட்டதடியா....வாயெப்பாரு வாயே!" என்று அவன் சென்ற திக்கைப்பார்த்துக் குதிக்கிறார். கையைச் சுடுக்கிச் சுடுக்கி திட்டுகிறார். பிறகு கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்தார்.

கிழவரின் தாண்டவம் வேணியை நடுங்கச் செய்துவிட்டதால், வேணி, மைதிலியை மெல்ல அழைத்துக்கொண்டு கிழவர் எதிர்பார்க்காதபடியே அவள் வீட்டிற்குப் போய்விட்டாள். கிழவர் முதுகை வாசற்படி பக்கமாகத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்ததால், இவர்கள் சென்றதைக் கவனிக்காது தன் போக்காக முணுமுணுவென்று ஏதோ மந்திரம் போல ஜபித்துக் கொண்டிருந்தார்.

அப்போது வாஸந்தியும் ராஜூவும் பலகை புத்தகத்துடன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தார்கள். வாசற்படியருகில் வரும்போதே கிழவர் அங்கு உட்கார்ந்திருப்பதை யறிந்ததும் வாஸந்திக்கு இங்கு நடந்த ஒரு செய்தியும் தெரியாதாகையினால், தன் இயற்கையான விளையாட்டுப் புத்தியுடன் மெல்ல சந்தடி செய்யாமல் ஒரு கயிற்றை எடுத்து கிழவரின் பின்புறம் தொங்கும் கால் வேஷ்டியில் முடிபோட்டு, அதைக் கதவு வளையத்தில் கட்டிவிட்டு, ஒரு துரும்பை எடுத்துக் கிழவரின் பின்புறமாகவே காதில் குடுகுடுவென்று குடைந்தாள்.

கிழவர், 'ஏதோ என்னதோ' என்று தலையை மாடுபோல் உதறிக்கொண்டே, "ஏய்! அடீ! மைதிலீ! வீட்டுக்குப் போ!

இன்னும் இங்கே என்ன பண்றே? திருட்டுத்தனமா அவனே இங்கே வரச் சொல்லிப்புட்டு நீயும் இங்கு தனுக்கா வந்தது யாருக்குத் தெரியாதுன்னு பார்த்தே. உம். போ. வீட்டுக்குப் போ" என்று திரும்பிப் பார்க்காமலேயே கூறினார்.

வாஸந்தி கடகடவென்று சிரித்துக்கொண்டே கிழவரின் எதிரே வந்து வீதிப்பக்கமுள்ள ஜன்னலைக் காட்டி, "தாதா! நீங்க பாக்காமலெயே பேசறங்களே! அதோ பாருங்கோ யாரு போரான்னு...." என்று கிழவரைக் கூப்பிட்டாள். கிழவர் எழுந்து வந்தால் வேஷ்டி இழுத்து விழுந்து விடுவார்; வேடிக்கைப் பார்க்கலாம்; என்ற குறும்புத்தனத்தினலேயே அப்படிக் கூப்பிட்டாள்.

கிழவர் வெகு சுறுசுறுப்பாக எழுந்து வரும்போது வேஷ்டியில் கட்டியுள்ள கயிறு பின்னல் இழுத்ததால் தடுக்கி தடாரென்று விழுந்துவிட்டார். ராஜு தாங்கமாட்டாது கடகடவென்று கையையும் கொட்டிக்கொண்டு சிரித்தபடியே, "தாதா! தாதா!" என்று எதிரில் நின்று குதிக்கவாரம்பித்தான். வாஸந்தி ஒன்றும் அறியாதவளைப் போல் "ஐயோ! தாதா! கிழேயா விழுந்துட்டேள். அடி கிடி பட்டதா? தாதா!" என்று கூறிக்கொண்டே வந்து வேஷ்டியிலிருந்த முடியை அவிழ்த்துவிட்டு, அவரைக் கையைப் பிடித்து இழுத்தாள்.

கிழவருக்கு ஏற்கெனவே பொங்கும் ஆத்திரத்துடன் இதுவும் சேர்ந்ததால், முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த கோபம் வந்துவிட்டது. மைதிலியின் எதிரில் தாம் விழுந்துவிட்டதாக எண்ணியே அவருக்கு அவமானமும் ஆவேசமும் உண்டாகி விட்டன. வாஸந்தியும் ராஜுவும் சிரிப்பதும் அவர் வேதனையைப் பின்னும் தூண்டுவதுபோலாயிற்று. ஆனல், குழந்தைகளை வையவும் அஞ்சியவராய்ச் சுருட்டி கட்டிக்கொண்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறு எழுந்து நாற்புறமும் பார்த்தார். அங்கு வேணி, மைதிலி இருவரையும் காணுததால், தலையைத் தடவிக்கொண்டே, "ஏம்மா வாஸந்தி! அம்மா எங்கே?" என்றார்.

வாஸந்தி கிழவரின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய், "தாதா! அதோ பாருங்கோ! யார் போரு பாத்தங்

களா?" என்று ஜன்னலால் காட்டினாள். வீதியில் வேணியும் மைதிலியும் தெருக் கோடியில் போவதையும், அவர்களுக்குச் சற்றுப் பின்னால் வேணுசாமி செல்வதையும் கிழவர் பார்த்து விட்டார். அவருடைய இதயம் படபடவென்று அதிவேகமாக அடித்துக்கொள்ள வாரம்பித்தது.

"வாஸந்தி! இரு. இரு. இதோ நான் போய் ஒரு நிமிஷத்தில் வந்துட்ரேன்" என்று கூறிக்கொண்டே அங்கிருந்து வேகமாக வீதியை நோக்கி நடக்கவாரம்பித்தார். வாசற்படியின் நினைவு அவருக்கு அப்போதும் மறக்கவில்லை யாதலால், வேகமாகப் போகும்போதும் பாதி முதுகு வளையும்படியே குனிந்து ஓடினார். அவர் தொந்தி குலுங்கக் குலுங்க ஓடும் வேடிக்கை குழந்தைகளைச் சிரிக்கச் செய்துவிட்டதால், "தாதா....தாதா!" என்று பெரிதாகச் சத்தமிட்டுச் சிரித்துக்கொண்டே கிழவரைப் பார்த்தார்கள்.

24

ஆத்திரம் பொங்கினாலும், சந்தோஷம் பொங்கினாலும் மனிதர்களின் நிலை கலங்கச் செய்து சிறிது தடுமாற்றத்தையே அளித்துவிடும். இவ்விரண்டுடன் சந்தேகப் பிசாசும் ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டால், ஆட்டத்திற்குக் கேட்க வேண்டுமா! மந்திரம் தந்திரம், உடுக்கை, வேப்பிலை, பிரம்படி, தூபம் முதலிய சகலமும் போடாமலேயே பேயாட்டமாடித் திருப்பாட்டு பாட வாரம்பித்து விடும்.

அந்த முறையில் சற்றும் பின்வாங்காத, சளைக்காத முதல் நம்பர் தாம்பூலம் பெற்ற கிழவரின் நிலைமையைக் கூறவேண்டுமா! வீதியில் ஓடுகிறோமா, நடக்கிறோமா என்பதையும் மறந்து வேகமாயும், தாறுமாறாயும் கண்ணை மூடிக்கொண்டு அம்மூவரையும் துரத்தியவாறு சென்றார்.

முன்னே சென்ற மூவரும் திரும்பிக்கூட பார்க்கவில்லை. மைதிலியையும், வேணுசாமியையும் கூப்பிடவேண்டுமென்ற ஆத்திரம் அவரை வாயெடுக்கச் செய்கிறது. எனினும் நடு வீதியாயிற்றே என்று சிறிது யோசனையுடன் நடந்தார்.

அச்சமயம் எதிர்வீட்டுக் கிழவர் ஒரு செம்பில் நெய் வாங்கிக்கொண்டு எதிரில் வேகமாக வந்தார். இவர் போகும் ஜோரில் அவர்மீது முட்டியடித்துக் கையிலிருந்த நெய் மேலே கொட்டி வேதாசலத்திற்கு அபிஷேகமாய்விட்டது. இமை கொட்டும் நேரத்தில் நடந்த இச்செய்கையில் ஒருவரை யொருவர் பிறகே அறிய நேர்ந்தது. "ஏண்டா வேதாசலம்! நீ நாசமாப் போக! எதிரே வரது கண் தெரியலையா? ஒரு வீசெ நெய்யும் பாழாப்போச்சேடா! என் பொண்ணுத்துக்கு வாங்கிண்டு போற நெய்யாச்சே! என்னடா ஓட்டமிது? எங்கே குபேர பட்டணம் கொள்ளை போயிடுத்து?" என்று கேட்டார்.

கிழவர் நெய் அபிஷேகத்தையும் லக்ஷ்யம் செய்யாமல், "அப்பாடா! நீதானு! பொழச்சேன். குபேர பட்டணம் மட்டுமா கொள்ளை போறதுன்னு பாத்தே. குடும்பப் பட்டணமே கொள்ளை போகப்போறதய்யா! அப்ரம் சொல்றேன். கழுகு கமலத்தெ அடிச்சிண்டு போகப் பார்க்கிறது. இரு! இரு!!" என்று கூறிக் கொண்டே மீண்டும் அதே நெய் அபிஷேகத்துடன் ஓடத் தொடங்கினர்.

எதிர்வீட்டுக் கிழவருக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நின்று திரும்பிப் பார்த்தார்; பிறகு போய்விட்டார். வேதாசலம் தொடர்ந்து போவதற்குள், மைதிலியும் வேணியும் வீட்டுக்குள் போய்விட்டார்கள். வேணுசாமி பின்னுல் போய்க்கொண்டிருந்தான். கிழவர் ஆத்திரமாக தடதடவென்று படி ஏறி வாசக் கதவைத் தாளிட்டுக்கொண்டு, "வரட்டும்! வரட்டும்; அந்தப் பயலே வாசல்லெயே நிக்க வெச்சு மானத்தை வாங்கறேன்" என்று உருமிக்கொண்டே கதவுக்குப் பின்னுல் நின்றார். கதவை வேணுசாமி இடிப்பான் என்பதே அவர் நோக்கம்.

நிமிஷம் ஒன்று, இரண்டு ஐந்தாகிவிட்டது. கதவை யாரும் இடிக்கவில்லை. கோபத்துடன் வீதிக் கதவைத் தானே திறந்து

தலையை நீட்டி எட்டிப் பார்த்தார். வேணுசாமியை வீதியிலேயே காணவில்லை. பின்னும் குறட்டுப் பக்கம் வந்து நிற்கும்போது மெத்தை பால்கனி வராந்தாவில் பேசுங் குரல் கேட்டுத் திடுக்கிட்டவராய் அதை நிமிர்ந்து பார்த்துக் கவனித்தார்.

வேணுசாமியும் முத்துசாமியும் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டதும், "நாம் எப்படி ஏமாந்தோம்? எப்படி யவன் உள்ளே வந்திருப்பான்?" என்ற சந்தேகமும் அவமானமும் உண்டாகி விட்டன. எனினும் அவர்கள் சம்பாஷணை இவருடைய கவனத்தை இழுத்தது.

முத்து :—ஆமாம் மாமா! எனக்குக்கூட ரொம்ப கஷ்டமாயிருக்கு. எங்க பாட்டியும், அப்பாவும் சேந்து சித்தியைக் கொண்ணுப்புட்டான்னே சொல்லலாம். சித்தி எத்தனை நாள் ராத்திரி பட்டினி தெரியுமா? நான் பாதி ராத்திரியிலே எப்பொ எந்து பாத்தாலும் சித்தி அழுதுண்டே படுத்திருக்கா! இல்லாட்டா ஏதாவது படிக்கிறு! அதுவும் தப்பினு வெளி மெத்தெலே போயி தனியா பிசாசுபோலெ ஒலாத்தரா! ஆகாசத்தைப் பாக்கரா! வெளியிலேயே படுத்துப் புலம்பரா! நான் சின்னவனுனுக்கூட அவ அழறது எனக்குத் தாங்கலே. என்ன செய்றது.

வேணு :—ஒங்கப்பாவெ போல புத்திகெட்ட கெழங்களெ எல்லாம் புடிச்சு தண்டிக்க ஒரு சட்டங் கொண்டு வந்து தண்டிச்சுப் புட்டா வயித்தெரிச்சல் தீரும். ஐயோ பாவம்! மைதிலியைப் பாத்தா துக்கம் தாங்கல்லெ........அவ மகா புத்திசாலி. மகா உத்தமி. வெகு பொறுமைசாலி.

இந்த வார்த்தைகள் கிழவரின் காதில் விழுந்ததும் தீயே அவர் காதின் வழியாய் உள்ளே சென்றதுபோலாகிவிட்டது. "ஆஹ்ஹா! படவாப் பயல். என்னெ கண்டிக்க இந்த கழுதெ சட்டம் கொண்டுவரப் போறதா! இருக்கட்டும். இப்போ யாருக்கு மொதல் தண்டனெ கெடைக்கிறது பார்க்கிறேன்" என்று கூறிக் கொண்டே, தட தட வென்று உள்ளே சென்று மாடிப் படியில் ஏறினர்.

மேலே ஆத்திரத்துடன் சென்று பால்கனியில் பார்க்கையில், அங்கு யாருமில்லாது ஏமாற்றத்துடன் வீதியை நோக்கினர்.

மாடியிலிருந்து வீதியிலேயே இறங்கும் மாடிப்படிக் கதவைத் திறந்துகொண்டு, முத்துசாமியும் வேணுசாமியும் கையில் ஒருவன் படுக்கையையும், ஒருவன் பெட்டியையும் எடுத்துக்கொண்டு வீதியில் செல்வதையும், அடுத்த நிமிஷமே ஒரு ரிக்ஷா வண்டியில் வேணுசாமி படுக்கை, பெட்டி இரண்டையும் வைத்துக்கொண்டு தானும் ஏறிக்கொண்டு போவதையும், முத்துசாமி மாமனை வழியனுப்பிவிட்டு, மனக்கலக்கத்துடன் திரும்பி வருவதையும் பார்த்தார்.

கிழவர் வந்த வேகத்தில், பால்கனியிலிருந்து வேணுசாமியை அப்படியே தூக்கி வீதியில் உருட்டி அவனைக் கொன்றுவிடவேண்டும் என்று வந்ததற்கு ஏமாற்றமடைந்தும் அவன்போய் விட்டதானது சிறிது ஆறுதலையுங் கொடுத்தது. தன் தலையைத் தடவிக்கொண்டு, "வரட்டும் கழுதை. இனிமே இந்த படி ஏற முடியுமா பார்க்கிறேன். பிச்சி பிச்சி எறியமாட்டேனு! சோதாப் பயல்!" என்று முணுமுணுத்துக் கொண்டே இருக்கையில் வேணி உள்ளே இருக்கும் க்யாபகம் வந்தது. அவளைப் பார்க்கும் விகார எண்ணம் தலை தூக்கி விட்டதால், அங்கிருந்து வருவதற்கு நினைப்பதற்குள், வேணி தன் வீட்டை நோக்கிச் செல்வதைப் பால்கனியிலிருந்து பார்த்து, "இதுவும் ஏமாற்றமா! ஐயோ ராகவா!" என்று கூறி முணுமுணுத்துக் கொண்டே மறைந்தார்.

25

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தை அறியாதோர் கிடையாது. அவர் மகா உத்தமரும் தயாள குணமும் பரோபகார சிந்தையும் பொது மக்களுக்கு என்றும் தான் நன்மை செய்யக் கடமைப்பட்டிருப்பதாகவே தன்னை நினைத்து உழைக்கும் விசால குணமும் பொருந்திய மகா வீரர். அவர் செய்துள்ள உண்மையான

தியாகங்கள் அனேகம் இருக்கின்றன. தான் வகித்துள்ள உத்தியோகம் மிகவும் அபாயகரமான போலீஸ் இலாகாவாயிற்றே! எந்தநேரம் எந்தத் திருடனால், கொலைக்காரனால், பகையாளிகளால் தனக்கு விபத்து நேருமோ என்ற எண்ணம் அவர் மனத்தில் ஒரு சிறிது இருப்பினும், அதைவிடச் சிறந்ததும், தலை தூக்கி நிற்பதுமான தயாள குணத்திற்கும் பொது மக்கள் சேவைக்குமே அவர் அதிகம் ஈடுபடத் தயாராயிருந்தார்.

[இவருடைய மகிமையை ஒரு சிறிது விளக்கியுள்ள * "ராஜமோஹன்" என்ற புத்தகத்தைப் படித்தால் தெரியும். இவருடைய வீரமும், தியாகமும் தனியே எடுத்துக் காட்டும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது அதை வெளி யிடுவோம்.]

அத்தகைய ஏகாம்பரம் ஆபீஸ் ரூமில் உட்கார்ந்திருக்கையில், எதிரே சப் இன்ஸ்பெக்டரும், ஜவான்களும் நின்றிருந்தார்கள்.

ஏகாம்பரம் :—இன்னும் ஒன்றும் விளங்கவில்லையே; அந்த மாதிரி நூதன முறையில் கொள்ளை நடப்பது வேடிக்கையாகவே இருக்கு. இந்த ஒரு வாரத்துக்குள்ளே எத்தனே எடத்துலெ நடந்திருக்கிறதாகச் செய்தி வந்திருக்கு?

சப் இன்:—சுமார் பத்து வீட்டிலெ நடந்திருக்கிறதாகத் தகவல் வந்திருக்கு. எப்படி எப்படி பார்த்தாலும் ஒன்னும் புலன் கிடைக்கல்லெ. அச் சமயம் டெலிபோன் மணி யடித்தது. ஏகாம்பரம் ரிஸீவரை எடுத்து, "ஹலோ! யார் பேசறது. என்ன வேதாசலம் வீடா? கொள்ளையா?! அவர்கள் இருக்கிறார்களா? போய்விட்டார்களா; 5 ஆயிரம் ரூபாய் மதிக்கிற சொத்தா! சரி: இதோ வந்துட்டேன்" என்று கூறிவிட்டு, உடனே தன் ரிவால்வருடன் ஜவான்களை அழைத்துக் கொண்டு கிளம்பி காரில் ஏறி, நேரே வேதாசலத்தின் வீட்டிற்கு வந்து இறங்கினார்.

உள்ளே சென்றபோது கருப்பன்தான் முன்னால் நின்று, "வாங்க எசமான்! அநியாயக் கொள்ளை எசமான்! யாரோ ரெண்டு

* "ராஜமோஹன்" என்ற அற்புதமான டாக்கீ நாவலை வாங்கிப் படித்து மகிழுங்கள். இரண்டாம் பதிப்பு வெளி வந்து விட்டது. விலை ரூபாய் 1—4 தான்.

பொம்பளைங்க ரொம்ப அழகா இந்தக் காலத்துக்கு ஏத்தாப்பலே சிங்காரிச்சிகினு கையிலெ அத்தரு, பன்னீரு, சென்டுங்க, தைலங்க, குங்குமம் அல்லாம் எடுத்திகினு வந்தாங்க. எங் கம்மா அந்தத் தைலத்தே வாணும் போங்கோன்னுங்க. அந்தப் பாவிங்க கேக்கலெ. வாசேனெ பாரேன். ரொம்ப ஒஸ்தி தைலம் இண்ணுங்க. அம்மா தம் கொயந்தெக்கு வாங்கலாமுண்ணு அதை மோந்து பாத்தாங்க. அப்பவே என்னெயும் பாக்கச் சொன்னுங்க. ரெண்டு பேரும் பாத்தோங்க. அப்படியே மழக் கமா உயுந்துட்டேங்க. அம்மாளும் படுத்துட்டாங்க.

கண்ணெ தொறந்து பாக்கச்செ வெள்ளி சாமாங்க பணங்க அல்லாம் பூட்டுதுங்க. ஒடனே டெலிபோனு செய்யச் சொன்னேங்க. எங்கம்மாளுக்கு இன்னும் தெளியலெங்க. இதோ படுத்துகெடக்கிறுங்க. எசமான்! டாக்டருக்கும் டெலி போன் செஞ்சாச்சுங்க" என்று கண்ணீர் பெருகக் கூறினன்.

கருப்பனின் சம்சாரம் மைதிலிக்கு ஜலத்தைத் தெளித்து விசிறிக் கொண்டிருந்தாள். அழகு தேவதையே சயனித்திருப் பதுபோல் கிடக்கும் மைதிலிக்கு மயக்கம் தெளியவே இல்லை. இன்ஸ்பெக்டர் அந்த வாசனை எப்படி இருந்தது என்று அடை யாளம் பார்க்கத் தேடியும் ஒரு சின்னமும் அகப்படவில்லை. மைதிலியின் தேகத்திலிருந்த நகைகள் கழட்டப்பட்டிருந்தன. இன்ஸ்பெக்டர் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு எழுதிக் கொண்டார்.

இதற்குள் டாக்டர் ராமநாதன் வந்தார். மைதிலிக்குத் தக்கபடி சிகிச்சை செய்தவாறே, "இதென்ன இன்ஸ்பெக்டர்வாள்! இந்த மாதிரி மாயக் கொள்ளை அதிகமாயிப் போச்சே! அடிக்கடி இந்த மாதிரி மயக்கம் போட்ட பேஷண்டை நான் பாத்து வறேன். இந்த மயக்க மருந்து ஏதோ கொடிய விஷங் கலந்ததாகவே நான் எண்ணுகிறேன். என்ன, இதை அதிகமாக மோந்து விட்டா பிராணனும் போயிடும். அப்படியும் ஒரு கேஸ் முன்னே நடந்தது. இதுக்கு நீங்க தீர யோசனை பண்ணி முயற்சி எடுக்க லையா?" என்றார்.

ஏகாம்:—இதுக்காக ஏகப்பட்ட ஏற்பாடுகள் செய்திருக்கோம் சார்! இன்னும் ஒன்னும் கண்டு பிடிக்க முடியல்லெ. போன வாரங்கூட வாஸனை விற்கும் ஒருவனை மடக்கி மிரட்டி அவனிடம் உள்ள பொருளை பரீக்ஷித்துப் பார்த்ததில் அதில் கொஞ்சமும் தோஷமே இல்லை. விட்டுட்டோம். ரகஸ்ய போலீஸார் ஆங்காங்கே கவனிச்சுண்டுதான் இருக்கா.

அச்சமயம் மைதிலி மெல்ல கண்ணைத் திறந்தாள். போலீஸாரும், டாக்டரும் தன்னைச் சுற்றியிருப்பதறிந்து மிக்க கலவரத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள். எதற்காக இப்படி நிற்கிறார்கள் என்பதை யறியும்பொருட்டு அவள் ஆவல் கொள்கிறாள் என்பதை வைத்தியர் உணர்ந்து, "எம்மா! வாசனை எப்படி. ரொம்ப ரொம்ப பரிமளமோ?....ஒங்க ஒடம்பு நகைகள் எங்கே பாருங்கோ? தாதா எங்கே போயிருக்கார்?" என்று அடுக்கடுக்காய்க் கேட்டார்.

மைதிலி:—(தன் உடம்பைப் பார்த்தாள். ஒரு நகையும் காணவில்லை; தூக்கி வாரிப் போட்டது.) வாஸனைக்காரிகள் எங்கே? கருப்பா; என்னடா சமாச்சாரம்? ஒன் எஜமானர் இன்னும் வல்லையா?

கருப்ப:—யம்மா! அந்த வாசனை சுத்த மோசம்மா! அவுங்க கொள்ளைக்காரங்கம்மா. கொள்ளையடிச்சிக்கிணு பூட்டாங்க. நானு டெலிபோன் பண்ணைச் சொல்லி இவங்களை வரவயிச்சேனுங்க. இந்த மாதிரி திருடு ஊரெல்லாம் நடக்குதுங்க.

அப்போதுதான் கிழவர் வந்து இங்கிருக்கும் அமர்க்களத்தைப் பார்த்து, நிலை மிறித்தவர்போல் துள்ளிக் குதித்து, "ஐயையோ! இதென்ன போலீஸ் கூட்டம்? என்ன சமாச்சாரம்?" என்று கூறியபடியே, பயத்தால் கையிலிருந்த மன்மதபாண சஞ்சீவி நழுவி விட்டதும் தெரியாது ஓடிவந்தார். டாக்டர் குறும்பாக நகைத்துக்கொண்டே, அந்த மருந்தைக் கையில் எடுத்துக்கொண்டு அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

இதைக் கவனித்த கிழவருக்கு அவமானம் தாங்காமல், கையையும் முகத்தையும் கோணைக் கோண வளித்துக் கொண்டே,

"டாக்டர்! இப்படி குடுங்கோ" என்று டாக்டர் கையிலிருந்து அதைப் பிடுங்கிக் கொண்ட பிறகே அங்கு நடக்கும் சங்கதிகளைத் தெரிந்து கொண்டார். இடி இடித்தாற்போல் அலறியபடியே, "ஐயையோ! குடி முழுகிப்போச்சே! நகைகள், சாமான்கள் எல்லாம் 5 ஆயிரம் ரூபாயாச்சே! ஸ்வாமீ! என்று அடித்துக் கொண்டார்.

ஏகாம் :—சார்! கத்தினால் உபயோகம் என்ன? பேசாமெ இரும். எங்களால் ஆனதைச் செய்து இதைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்கிறோம். மைதிலியை நோக்கி, "அம்மா! வந்த பெண்கள் எப்படி இருந்தார்கள்? ஏதாவது அடையாளம் சொல்ல முடியுமா?

மைதிலி :—'சாதாரண உயரமும், வசீகரமான முகத்தோற்றமும், நாஸூக்கான அலங்காரத்தோடும் இருந்தார்கள். வேறே ஒண்ணும் தெரியல்லெ'....இன்ஸ்பெக்டர் இவைகளைக் குறித்துக் கொண்டு கருப்பனின் வாக்குமூலத்தையும் எழுதிக்கொண்டு போய்விட்டார்.

கிழவரின் முகத்தில் மட்டும் நம்பிக்கை இழந்த ஓர் கள்ள புத்தியின் ஜோதியே ஜ்வலித்ததை மைதிலி அறியாமலில்லை. அதற்கேற்றாற்போல் அதே சமயம் கிழவர் ஒருமாதிரியான விரைப்புப் பார்வை பார்த்தபடியே, "ஏண்டீ! இந்த கதை எல்லாம் நிச்சயமா நடந்ததுன்னு எனக்குத் தோணவே இல்லெ. கரப்பன்தான் ஒங் கையாளாச்சே. இன்னிக்கி காத்தாலேகூட அந்த அயோக்யப் பயல் வேணுசாமி இந்தத் தெருவுலே போனான்; நான் பாத்தேன். அந்த நாய்க்கு இங்கே என்ன வேலேன்றேன். நீ ஏதோ சொல்லி சங்கேதம் பண்ணிதான் அவன் வந்திருப்பான். அவனுக்கு இதெல்லாம் கழட்டி குடுத்துட்டு இப்படி ஒருவிதமாக கதை கட்டி புட்டியோன்னுதான் சந்தேகம்" என்று அழுத்தமான குரலில் சொன்னார்.

மைதிலியின் காதில் இச்சொற்கள் கேட்கும்போது அவளை அப்படியே முள் புதரில் போட்டுப் புரட்டுவதுபோல் சகிக்கமாட்டாத வேதனை செய்தது. "ஹா....ராம....ராமா!" என்று காதைப் பொத்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

கருப்பனுக்கும் தாங்கமுடியாத ஆத்திரம் உண்டாகிவிட்டது. அவன் தேகம் படபடக்க "எஜமான்! இந்த கயிதை மேலெ இப்படில்லாம் சொல்லாதீங்க. தர்ம தேவதென்னு அம்மாளுக்குத்தான் தகும். அவங்களெ பாத்து அக்குறும்பா அநீதமா சொன்னீங்கன்னு கண்ணவிஞ்சிப்பூடுங்க. இந்த நாயெ வேலெக்கு வாணும்னுட்டாக்கா ஒடிப்போவுது. இதுக்காவ இப்பிடியா சாமி சொல்றது" என்று தன்னை மீறிக் கூறிவிட்டான்.

கிழவர் தத்திக் குதித்து தாண்டவமாடிக் கொண்டே, "என்டா! என் கண்ணுடா அவிஞ்சிபூடும்! இத்தனை தைரியமாடா ஒனக்கு வந்துட்டது?" என்று ஆவேசத்துடன் அவனை அடிக்கக் கையை ஓங்கிக்கொண்டு வந்தார். அச்சமயம் வீதி நடையில் "முத்தூ! முத்தூ!" என்ற குரல் கேட்டது. அது வேணுசாமியின் குரல்போல் கேட்டதால், கிழவரின் ஆவேசம் கருப்பனை விட்டு நடையில் தாவியது. "ஆ ஹா! வந்தயாடா! சோதாப்பயலே! முத்துவா, முத்து! முத்து, பவழம் எல்லாம் இருக்கு வாடா; வா" என்று தன் கைப்பிரம்பை எடுத்துக் கொண்டு விசையாக நடந்து, நடையில் வந்து பார்த்தார். அப்படியே திடுக்கிட்டு நின்றார்.

அவர் அவ்வூரில் நன்ருகப் படித்து சாஸ்திரோக்தமாய் விஷயமறிந்த பண்டிதர். அவர் முத்துவின் பள்ளிக்கூடத்துத் தமிழ்ப் பண்டிதர் என்றதை யறிந்ததும் கிழவரின் முகம் படும் பாட்டைக் கேட்கவேண்டுமா? தடியைக் கீழே போட்டுவிட்டு தன் சவுக்கத்தை இழுத்து கட்டிக்கொண்டு, தொந்தி பூமியில் பதிய சாஷ்டாங்கமாய்க் கீழே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, "மன்னிக்கணும்....எங்க ஒறவுக்காரப் பையன் ஒத்தன் ரொம்ப சோதாவாயும், திருடனும் இருக்கான். அவன் வந்துட்டான்னு பார்த்தேன்" என்று மழ மழ, கொழ கொழ வென்று இழுத்தார்.

வந்த வாத்தியார் சற்று உரத்த குரலில், "என்னய்யா! தினம் தினம் உம்முடைய வீட்டிற்கு நடந்து நடந்து காலும் தேஞ்சு போய்விட்டது. நீர் பாக்கி பணத்தைக் குடுக்கப்போறீரா என்ன சொல்றீர்?" என்று கேட்டார்.

கிழவர் :—ஐயோ! உமக்குன்னு வெச்சிருந்த பணந்தான் இன்னிக்கி கொள்ளை பூட்டுதே. 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலே சொத்து போயிடுத்து ஐயா! நான் அடுத்த மாதம் கட்டாயம் குடுத்துட்ரேன். மன்னிக்கணும்—என்று சமாதானம் செய்து அனுப்பிவிட்டு, "அப்பாடா! இம்முறையும் தப்பித்துக்கொண்டேன். சனியன் தொலைஞ்சுது" என்று தலையைத் தடவினர்.

பார்வைக்குப் பெரிய மனிதர்களா யிருக்கும் எத்தனையோ பேர்களிடம் உள்ளுக்குள் எலும்புருக்கி நோயின் கிருமிகளைப் போல் கடன் பொத்தல்கள் துளைத்துக்கொண்டே இருக்கின்றன. அவர்களுடைய கடன் வெளிக்குத் தெரிவதில்லை. ஏன்? பெரிய மனிதன் என்கிற ஹோதாவும், மோட்டார், பங்களா, வயிரசெட்டு நகைகள் முதலியவைகள் பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்கின்றன. அதனால் கடன் தொல்லைகள் அதிகமிருப்பவர்களையும் இல்லாதவர்கள் போலவே பிறர் நினைக்க இடமேற்படுகிறது. யாராவது இருப்பதாகச் சொன்னாலும் அதை நம்பமுடியாது வாதிக்கவும் ஜனங்கள் தயங்குவதில்லை. "இத்தனை பணக்காரர்களுக்குக் கடன் இருப்பதாவது, இதெல்லாம் வயிற்றெரிச்சலால் சொல்லும் வார்த்தையாகும். ஒரு வைர அட்டிகையின் விலை காணாது மற்றவர்களின் செல்வம்" என்று பொது மக்கள் கூறுவார்கள்.

அந்த வைர அட்டிகைக்கும், நெக்லேஸுக்கும், மோட்டாருக்குந்தான் சிலர் கடன் வாங்கிச் செய்திருக்கிறார்கள் என்பது அந்த பொது மக்களுக்கு எப்படித் தெரியும்? இம்மாதிரி தடபுடல் செய்து வாழும் பெரிய மனிதர்களின் வாழ்க்கை சோடா புட்டியின் (காஸ்) காற்றுப்போல் ஒரு நிமிடம் பொங்கி அடங்கி விடுகிறது. பிறகு பெரிய மனுஷத்தராவெல்லாம் வெறும் பேச்சாக முடிகிறது.

பின்னும் சிலரோ, தம்மிடம் நிறைய பணமிருப்பினும் அதை வெளிக்கும் காட்டிக் கொள்ளாமல் அமுக்கமாக விருப்பதும், தனக்கு மிகவும் ஆப்தமானவர்களுக்குக்கூட தன்னிடம் இல்லாத சமயத்திலும் பிறரிடமாவது கடனை வாங்கிக் கொடுத்து

உதவி செய்த பெருமையை அடையும் பொருட்டு வாங்கிக் கொடுப்பதும், பிறகு தான் தவிப்பதுமாக நடப்பதும் உண்டு. இதில் இவர்கள் பார்க்கும் பெருமையைவிட நஷ்டம்தான் அதிக மென்பது பின்பல்லவோ தெரியும்.

இந்த இரண்டாவது கோஷ்டியில் சேர்ந்தவர் நமது தாதா. அவர் தன்னுடைய ஆப்த சினேகிதரான எதிர் வீட்டு தாதாவுக்கு மூன்றாங் கல்யாணத்தின் செலவுக்காக 500 ரூபாய் அந்த வாத்தியா ரிடம் தானே முன்னின்று வாங்கிக் கொடுத்தார். அம்மாதிரி கொடுத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, தான் சிறு பெண்ணை மணந்ததுபோல் அவரும் மணந்து கொண்டு விட்டால், ஊரார் தன்னை மட்டும் ஏசாமல் கூட அவரையும் சேர்த்துக் கொள்வார்கள். அதில் ஒரு சந்தோஷம். மற்றொன்று, கடன் வாங்கியாவது தான் உபகாரம் செய்த பெரு மையை யடைவது, தனது தாராளத்தைக் காட்டுவதற்கு இதொரு வழி. இவ்விரண்டும் சேர்ந்து கொடுத்து விட்டார்.

சொத்திற்காக ஆசைப்பட்டே மைதிலியை இவர் காலில் அத்தை மகா பாவி கட்டி விட்டாள். எதிர் வீட்டுக் கிழவருக்கோ அடியோடு ஒரு வேளைச் சோற்றுக்கும் விதியற்ற ஓர் ஏழை குடும்பம் பூராவும் பிழைக்கும் நோக்கத்தில் தங்கள் இளஞ் சிறுமி யைக் கிழவருக்குக் கட்டிக் கொடுத்துவிட்டு, சுமார் ஒரு டஜன் பேர்வழிகள் வீட்டோடு ‘காம்ப்’ போட்டு விட்டார்கள்.

இளம் மனைவிக்கு ஆசைப்பட்ட கிழவருக்கு சிறிசு, பெரிசு, கிழம்கட்டு, குழந்தை, குஞ்சான், எல்லாமாக வீடு சம்பூர்ணமாகி விட்டதால், எத்தனை விளைவில் வந்தாலும், சம்பாதித்தாலும் ஓட்டைப் பாத்திரத்தில் வைத்த ஜலம்போல் போய் விடுவதால், பணத்தைக் கொடுக்க அடியோடு வழியில்லாது போய்விட்டது.

வட்டியோடு அசல் அதிகமாகி விட்டதால், வாங்கிக் கொடுத்த கிழவருக்கும் தன் கை விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. அந்தக் கிழவரைப் பகைத்துக் கொள்ளவும் இஷ்டமில்லை. ஆகையால், அவருடன் கூடவிருந்தே பணத்தை வாங்கும்

முறையில் சிநேகம் செய்து, மருந்துகள் வாங்கும் வழியில் வட்டியைக் கழித்துக் கொண்டும் வந்தார். இந்தக் கடன் இருக்கும் தந்திரம் வெளியாருக்குச் சற்றும் தெரியாது. கடனை எண்ணி எதிர் வீட்டை நோக்கிச் சென்றார்.

26

திருடு போன நகைகளைப்பற்றி ஒன்றுமே தகவல் தெரியவில்லை. தினம் புதிய புதிய மாதிரியாக 'அங்கே களவு போயிற்று; இங்கே களவு போயிற்று' என்ற புகார் மட்டும் போலீஸுக்குத் தகவல் கிடைத்துக் கொண்டே இருந்தது. வீதியில் போகும் எந்த சாமான்களையும் வாங்குவதற்குப் பொது மக்கள் பயந்து நடுங்கி விட்டார்கள். இந்த மாயக் கொள்ளையானது ஊரில் ஒரு பெரிய குழப்பத்தையும் கலக்கத்தையும் உண்டாக்கி விட்டதால், சாதாரணமாக வாங்கும் காய் கறிகள், தயிர், பால் முதலியனவற்றைக்கூட கூப்பிட்டு வாங்க பயந்து, கடைகளில் போய் வாங்குவதும் கஷ்டப்படுவதுமாக ஆகிவிட்டார்கள். இதனால் தெருவில் அன்றாடும் சிறிய வியாபாரம் செய்து பிழைக்கும் ஏழைகளின் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிட்டதோடு, சிலருக்கு அது பெரும் விபத்தாகவும் முடிந்தது.

சில தடபுடல் போலீஸ்காரர்கள் இம்மாதிரி விற்கும் சிலரைப் பிடித்து, அனாவசியமாக மிரட்டி உருட்டி, "வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் வியாபாரத்தின் தந்திரமும் ஒளவும் தெரியும் சொல்லிவிடு" என்று இம்சை செய்வதுமாக வாரம்பித்ததைச் சகிக்காமல் கலங்கினார்கள். பொதுமக்களிடையும், வியாபாரிகளிடையும் இம்மாதிரி ஓர் கலவரமும் பயமும் உண்டாகி விட்டதால், ஊரிலேயே பரபரப்பும் குழப்பமும் குடிகொண்டன.

இம் மாயக் கொள்ளையைக் கண்டுபிடித்து விட்டதாக வதந்தி மட்டும் ஒரு இடத்திலும் உண்டாகவில்லை. உண்மையாக,

உழைக்கும் ஏகாம்பரம், தான் எப்படியாவது கஷ்டப்பட்டு இந்த மாயக் கொள்ளையைக் கண்டுபிடித்துப் பொது மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று எண்ணினரே யன்றி, இதனல் தனக்கு அபாரமான புகழும், பட்டங்களும், அரசாங்கத்தாரால் நன் மதிப்பும் உண்டாகிவிடுமென்ற நப்பாசையையோ அல்லது ஐம் பத்தையோ அவர் ஒரு சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை.

இரண்டாவது கோஷ்டியில் சார்ந்துள்ள சப் இன்ஸ் பெக்டரும் ஹெட்கான்ஸ்டேபிளும் இதை எப்படியாவது கண்டு பிடித்துத் தாங்கள் இன்னும் உயர்ந்த பதவிக்கு உடனே மாற வேண்டும் என்ற நோக்கத்தை மனப்பூர்வமாகக் கொண்டுவிட்ட தனல்தான், அவர்களில் சிலர் முன் தெரிவித்ததுபோல் பல தொழி லாளிகளை இம்சை செய்தார்கள். ஒன்றிற்கும் பலனே இல்லை.

இந்த வைபவத்தில் கிழவர் நகைகளும், பொருளும் திருடு போய் விட்ட பெரும் துக்கத்தையும் லக்ஷியம் செய்யாமல், அந்த மகா உத்தமியான வேணியின்மீது கொண்ட துர் எண்ணத் தின்மீதே கண்ணுக இருந்தார். அவர்களை எப்படியாவது தம் வீட்டோடு கொண்டு வைத்துக்கொண்டு மூர்த்திக்கு உத்தியோகம் கொடுப்பதாகச் சொல்லி, அவர்களை ஏமாற்றித் தன் எண்ணத்தை முடித்துக்கொள்ள எண்ணினர்.

ஒருதினம் ஏதோ வார்த்தையின் பேரில் மூர்த்தி, தனக்கு அடியோடு வருவாயே இல்லாததால், தன் தாயாரைப் பார்க்கப் போக முடியாதிருக்கிறதென்று சொல்லிவிட்டதை ஓர் சாக்காகக் கொண்ட கிழவர், "மூர்த்தி! இதென்ன பிரமாதம்? சமயத்துக்கு மனுஷாளுக்கு மனுஷாள் உதவக்கூடாதா என்ன? இதோ பத்து ரூபாய் வாங்கிக்கோம். ஒங்க தாயாரைப் பாத்துட்டு வாரும். இதை நீர் நிதானமா திருப்பித் தரலாம்" என்றார்.

மூர்த்தி ஒருபோதும் ஒருவரிடமும் கடனே வாங்கத்துணி யாதவன், தாயாரின் மீதுள்ள அளவு கடந்த அன்பால் பார்க்க வேண்டுமென்ற வேட்கையினுல் வேணிக்கும் தெரியாமல் அதற்கு இசைந்து கையை நீட்டி ரூபாயை வாங்கிவிட்டான். கிழவர் சந் தோஷத்துடன் போய்விட்டார். பிறகு மூர்த்தி, வேணியிடம்

வந்து, "வேணி! எனக்கு இரவு பகலாக என் அம்மாவின் ஞாபகமாகவே இருக்கிறது. நான் இன்னிக்கு ராத்திரியே புறப்பட்டுப் போய் நாளை மறுநாள் வந்துட்றேன். நீ குழந்தைகளோடே ஜாக்கிரதையா யிரு" என்றான்.

வேணி :—நானும் அம்மாவே பாத்து எத்தனையோ நாளாச்சே! நானும் வறேனே!

மூர்த்தி :—இல்லே வேணீ! குழந்தைகளை யாரிடம் விட்டு விட்டுப் போறது? ராஜூ அழுவான். அடுத்த தரம் குழந்தைகளையும் அழைச்சிண்டுபோய் அம்மாவுக்குக் காட்டிட்டு வரலாம். அம்மாவும் குழந்தைகளைப் பார்க்கணும்னு சொன்னா. சரி, நான் போய் பழங்கள் வாங்கிக்கொண்டு வறேன். நீ சாப்பாடு தயார் பண்ணு" என்று கூறிவிட்டுக் கடைக்குச் சென்றான்.

27

காமக் கள்வர்களுக்குக் கபட புத்தி அதிகமேயன்றித் துல்லிய எண்ணங்களைத் தரும் தூய புத்தி உதயமே ஆகாதல்லவா? அவர்கள் பார்ப்பதெல்லாம் விகாரப் பார்வை. செய்வதெல்லாம் விபரீதச் செய்கை. எண்ணுவதெல்லாம் விஷம் நிறைந்த கொடிய எண்ணங்கள். அவர்கள் ஸ்வாசிக்கும் ஒவ்வொரு மூச்சும் உயிரைக் கொள்ளை கொள்ளும் சர்ப்பத்தின் 'உஸ்' என்ற சீற்றத்திற்கு ஒப்பான, மங்கையரின் உயிரினுமினிய கற்பை உரிஞ்ச வரும் சீற்றக் காற்றாகவே இருக்கும்.

இத்தகைய விசேஷாம்சங்கள் நிறைந்த மகிமை கிழவரை மட்டும் விட்டு அகலுமா? மூர்த்தி கையை நீட்டிப் பணத்தை வாங்கிக்கொண்டதுமே தனது காரியத்திற்கு அபாரமான வெற்றி நிச்சயமாகக் கிடைத்துவிட்டது என்றே தீர்மானித்துப் பின்னும் பன்மடங்கு அதிகரித்த சந்தோஷத்தையடைந்து விட்டார்.

மூர்த்தி ஊருக்குப் போகும் நேரத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவன் போய்விட்டதை யறிந்த உடனே மெல்ல பல்லை இளித்துக்கொண்டு, மூக்கை நோண்டியபடியே உள்ளே வந்து பரம சாதுவைப்போல, "எம்மா! மூர்த்தி ஊருக்குப் போயிட்டாரா! ஐயோ! ஒரு பெலாப் பழத்தைக் குடுத்தனுப்பலாம்னு பாத்தேன். அதுக்குள்ளே போயிட்டாரே" என்று கூறிக் கொண்டே கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தார்.

கிழவரின் துர் எண்ணம் பூராவும் வேணிக்குத் தெரிந்து விட்டதாகையால், அங்கு அவர் வந்து உட்கார்ந்ததும் அவள் தேகமே கிடு கிடு என்று நடுங்கியது. தனக்கு ஒருவித கெட்ட பெயரும் இல்லாது, ஆபத்தில்லாது கடவுள் காப்பாற்றவேண்டுமே என்ற பயம் அவளை வதைக்கிறது. ஆயினும் இந்த முட்டாள் கிழவன் ஒரு இளங் குழந்தையைக் கொலை செய்துவிட்டதற் கொப்பாக வீட்டில் துடிக்க வைத்த பரிபவம் போதாமல், அயல் பெண்களின் பேரிலும் கண் வைத்து மானங் கெட்டு வந்திருக்கும் ஈன புத்திக்கு ஓர் பாடம் கற்பிக்கவேண்டும்; அதை எந்த முறையில் செய்யலாம் என்றே அவள் யோசனை செய்துகொண்டிருந்தாள். அவள் மனத்தில் ஒரு யோசனை தோன்றியது. அதை நிறைவேற்றவே அவள் சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆதலால், கிழவரைப் பார்த்ததும் மிகுந்த தைரியசாலிபோல் முகத்தில் சிரிப்பையும், துணிகரத்தையும் வருவித்துக்கொண்டு, "தாதா! வாங்கோ! வாங்கோ!" என்று ஒருநாளும் இல்லாமல் திருநாளைப்போல வரவேற்றாள்.

கிழவர் :—(முகத்தைச் சுளித்துக்கொண்டபடியே) என்ன வேணீ! நீ கூட தாதான்னு கூப்பிட்றயே. நான் தாதாவா? என்னெ பாக்கர கிழங்களெல்லாம் என்னடா நீ ரொம்ப சின்ன பிள்ளையாட்டமா இருக்கயேன்னு வயித்தெரிச்சப்பட்ரா. நீ என்னமோ இப்பிடி கூப்பட்ரே. இனுமே அப்படி கூப்படாதே. ஏதோ கூப்பட்ர மாதிரி இல்லையா? அப்படி கூப்டேன்....ஹி! ஹி! ஹி! நீ மகா புத்திசாலி. என் மனசெ நன்ன தெரிஞ்சிண்டிருப் பேன்னு நினைக்கிறேன். என்ன வேணீ! அது சரிதானா?

வேணி :—ஹி! ஹி! ரொம்ப சரின்னு! அவருக்கு எப்படி பணம் கெடைக்கும் எப்போ ஊருக்குப் போவார்னுதான் எதிர் பாத்தேன்.

கிழவர் :—ஹாஹ்ஹ்ஹா!....அப்படியா! அந்த ரகஸியத்தை தெரிஞ்சுண்டுதான் நானே பணங் கொடுத்து அவரே ஊருக்கு அனுப்பிட்டேன். இது ஒனக்குத் தெரியாதா!

வேணி :—(அடங்காத ஆச்சரியத்துடன்) அப்படியா! எனக்குத் தெரியாதே. ரொம்ப சந்தோஷம். அப்படீன்னு அவர் வர வரைக்கும் நீங்க இங்கேயே இருக்கலாம். வீட்டுக்கே போக வாண்டாம்.

கிழவர் :—(அபாரமான சந்தோஷத்துடன்) அடாடாடா! கரும்பு தின்னக் கூலியா கேப்பா? நானும் அப்படிதான் நெனச்சிண்டிருக்கேன். ரொம்ப சந்தோஷம்.—என்று கயிற்றுக் கட்டிலில் சாய்ந்துகொண்டார்.

வேணி :—அது சரிதான் தாதா! என்ன இருந்தாலும் அசல் புருஷா ஆத்தோடே இருந்தா பாக்கரவாளுக்கு சந்தேகமாயிடும். அதோடு குழந்தைகளும் புத்தி தெரிஞ்ச கொழந்தைகள். அதுக்கு என்ன தெரியும்? அந்த தாதா தினம் ஆத்திலேயே இருந்தார்னு அவா அப்பா வந்ததும் சொல்லிட்டாக்கா என்னெவிட ஒங்களுக்குதான் அவமானம் அதிகம்.

கிழவர் :—ஆமாம். வேணீ! அதுக்கு என்ன உபாயம் செய்யலாம்?

வேணி :—ஒங்க மனஸு திருப்தியாகணும்னுக்க ஒரு சின்ன காரியத்தைச் செய்துதான் ஆகணும். அதாவது,--நீங்க ஆத்துக்குப் போனதும் ஏதோ அவசர ஜோலியா கிராமத்துக்குப் போகணும்னு மூட்டெ கட்டிண்டு வண்டியிலேறி பகிரங்கமா ஸ்டேஷனுக்குப் போயிடுங்கோ. மூட்டெலே ஒரு நல்ல புடவை, நகைகள் எல்லாம் கட்டிக்கங்கோ. எங்காவது மறைவான எடத்துலே போயி ஒரு பெரிய 'சுமங்கலிபோல் முகத்துலே நெறெய மஞ்சளே பூசிண்டு பெரிய குங்குமப் பொட்டு வெச்சுக்கங்கோ! பொடவெயே சாதாரணமா முன் கொசான் வெச்சு கட்டிக்கங்கோ! காதுதான்

பெரிசாவே வளர்ந்திருக்கு. கம்மல் போட்டுக்கங்கோ! ஸ்ப்ரிங்கு மூக்குத்தி வாங்கி ரெண்டு மூக்குக்கும் போட்டுண்டு மூக்குக் கம்பி—பழைய நாளைய நகை—அதையும் எட மூக்குலே மாட்டிக்கங்கோ. காதுலே கத்திரிபாலிலி போட்டுடுங்க. கையிலே காப்பு, வளையல், கால்லே காப்பு, கொலுசு, மெட்டி, கழுத்துலே சங்கிலி முதலிய நகைகள். தெரியாதா! இதெல்லாம் போட்டுண்டு கண்ணுக்கும் மை இட்டுண்டாக்கா ஆளே அடயாளம் தெரியாது.

தாதா! என்ன யோசனே? அப்படி செய்துண்டு நீங்க ஊரிலேந்து வராப்பலே ஒரு ஒத்தெ மாட்டு வண்டிலே இங்கே வந்து ஜம்முனு எறங்குங்கோ! எங்க அத்தெ வடக்கே இருக்கா. அவ வரப்போரான்னு நான் பசங்களுக்குச் சொல்லிப்புட்ரேன். எங்க வீட்டுக்கு யாராவது வந்துண்டே இருப்பா! அதுனலே அவாளுக்கும் எங்க அத்தேன்னு சொல்லிப்புட்ரேன். தெரிஞ்சுதா! நீங்க அசல் பெரிய சுமங்கலியா ஸ்ரீமகா லக்ஷ்மிபோல சேர்வை தரணும். அப்பறம் சேந்தாப்பலெ பத்து நாளெக்கி என்னெ விட்டு போகவே வாண்டாம்.

இதைக் கேட்கக் கேட்க கிழவருக்கு மூளையே கலங்கி விட்டது. தன்னுசை நிறைவேறும் பொருட்டு வேஷம் போட்டுக் கொள்ள ஆசை தூண்டுகிறது. ஆனல் எப்படி பெண் வேஷம் போடுவது என்று சற்று தயங்குகிறது. இவ்விரண்டு போராட்டத்தில் முதல் யோசனேயே ஜெயித்தது. முகத்தில் தெம்பும் சிரிப்பும் பொங்கியது. "சரி. வேணீ! தலேக்கி என்ன செய்யறது?" என்ருர்.

வேணி :—ஆ! அது சொல்ல மறந்துவிட்டேனே. தலேயே நன்ருகவே மொட்டை யடித்துவிடுங்கள். நீங்கள் ரெயிலிலிருந்து தனியாக வரவேண்டாம். திருப்பதி ப்ரார்த்தனேக்குப் போய் மொட்டையடித்துக்கொண்டு எத்தனே கோவிந்தா கோஷ்டி வருகிருர்கள் பாருங்கள்.....ஆ....நெனவு வரது. எங்காத்து வேலேக்காரி திருப்பதிக்குப் போயிருக்கா. நாளெ காத்தாலே அவா ஊர் சுற்றி கோவிந்தா போட்டுவிட்டு, சமாராதனே செய்யப்போரு! நீங்க சமயம் பாத்திருந்து அந்த மொட்டெகளோடே கலந்துகொண்டு

இந்த தெருவில் மட்டும் கூடவந்து எங்க வீட்டுலே நொழஞ்சுடுங்க. இதுதான் சரியான யோசனை. ஒருவருக்கும் சந்தேகமிராது. என்ன தாதா?

கிழவர் :—தாதா தாதான்னு கூப்படாதே. சரியான யோசனை தான். அப்படியே செய்துபுட்ரேன். நான் போயி இப்பவே வேண்டிய ஏற்பாடு செய்றேன். நீ என்னானும் கெட்டிக் காரியில்லையா! சரி நான் வரேன்—என்று கூறிக்கொண்டே கையை நீட்டி வேணியைத் தொடப்போனார். வேணி நகர்ந்து கொண்டு, "என்ன தாதா! கணத்து ஜலத்தை வெள்ளமா கொண்டு போறது. போய் வாருங்க" என்றாள். கிழவரும் மான அவமானங்கூடத் தெரியாமல் எழுந்து போய்விட்டார். வேணி கையைக் கொட்டிக் கலகலவென்று நகைத்தாள். அதுவரையில் மூலையில் பாயுடன் சுருட்டிக்கொண்டு ஒட்டுக் கேட்டிருந்த வாஸந்தியும் கிடுகிடுவென்று எழுந்து வந்து, "அம்மா! பேஷ்!" என்று கையைத் தட்டியும் சுற்றிச் சுற்றிக் குதித்தும் பெரிதாக நகைத்தாள்.

28

மைதிலி, * "அனாதைப் பெண்" என்ற கதையைப் படித்துக் கொண்டிருந்தாள். அதில் லீலாவதியம்மாள் இந்திராணியை (அனாதைப் பெண்ணை) ஓர் கிழவனை மணக்கும்படிக் கூறும் கட்டத்தை வாசிக்கும்போது, மைதிலியின் மனத்தில் தான் படிப்பது கதை என்பதே மறந்து போயிற்று. தாங்க முடியாத உணர்ச்சி மேலீட்டால், "ஐயையோ! இந்திராணீ! வேண்டாம்; கிழவனை மணக்காதே. அதை விட கணத்துலே விழுந்து செத்துப் போ.

---

* "அனாதைப் பெண்" என்ற அதி அற்புதமான டாக்கீ நாவலை வாங்கிப் படியுங்கள். விலை ரூபாய் 1—4 தான்.

மகா பாவியான எனக்கு அந்த வருத்தம் தெரியும்" என்று வாய் விட்டுக் கத்திவிட்டாள்.

எதிரிலிருந்த கருப்பனுக்கு மளமளவென்று கண்ணீர் வந்து விட்டது. அதைத் துடைத்துக்கொண்டு, "அம்மா! கதைப் புத்தகம் படிக்கச்செ என்னம்மா நெசம்போல பேசரீங்க?" என்றான். அந்த வார்த்தை காதில் கேட்ட பிறகே தான் படிப்பது கதை; உண்மையல்லவென்பது நினைவிற்கு வந்தது. தன் கையி லுள்ள புத்தகத்தையும் கருப்பனையும் மாறி மாறிப் பார்த்தாள். வாய் திறந்து பேசவில்லை; மௌனமாகச் சாய்ந்தாள்.

கருப்பன் :—அம்மா! ஐயா எங்கேயோ ஊருக்குப் போராங் களாமே. எந்த ஊருக்கும்மா?

மைதிலி :—கருப்பா! எங்கே போனா எனக்கென்ன? எந்த ஊருக்காவது போகட்டும். என்னோடெ அதெல்லாம் சொல்லாதே. ஒன் வேலெயெப் பாரு.

கிழவர் :—(கையில் ஒரு மூட்டையுடன் அங்குப் பிரசன்ன மாகி ஒய்யார நடை நடந்தவாறு) டேய்! வண்டி கட்டினயாடா!

கருப்பன் :—கட்டிபுட்டேஞ் சாமி, வாசல்லெ தயாராக் கீதுங்க.

கிழவர் :—அடீ மைதிலீ! நான் ஊருக்குப் போய் வறேன். எப்ப வருவேன்னு எனக்கே தெரியாது. ஜாக்கிரதையா வீட்டெ பாத்துக்கோ. அந்தப் போக்கிரிப் பயல் இந்தப் பக்கம் வந்தான்னு தெரிஞ்சுதோ ஒங்க ரெண்டு பேரையும் சேத்துக் கொண்ணுபுடு வேன். தெரியுமா?—என்று முறைத்துப் பார்த்தார்.

'தான் திருடன்; பிறத்தியானை நம்பமாட்டான்' என்பது பழமொழி. அது இந்தக் கிழவனிடம் சரியாகிவிட்டது. மைதிலி பதிலும் பேசவில்லை. தலையை நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை. கிழவரும் முடுக்காகப் போய்விட்டார். வண்டியில் ஏறியதும் வண்டி மானாகப் பறந்தது.

29

சோமக்கலம், திருச்சின்னம், சங்கு, தாதன் பாடிக் கொண்டே தட்டும் ஓசை முதலிய சப்தத் துடன், "கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!" என்று பெரிய கோஷம் வீதியில் கேட்டது. தம்பதிகள் மஞ்சள் உடையுடன் கழுத்தில் தாவடமும் மொட்டைத் தலையுமாக திருப்பதி பிரார்த்தனை செலுத்திவிட்டு ஊர்வலம் வரும் காக்ஷி பிரம்மானந்தமா யிருந்தது.

ஊர்வலத்தில் அனேக ஆண்களும் பெண்களும் மொட்டை யடித்தவர்கள், அடிக்காதவர்கள் எல்லாம் கலந்திருந்தார்கள். அத்தனை கும்பலின் மத்தியில், சாக்ஷாத் சர்வலோக சரண்யன் மோகனவதாரம் செய்ததுபோல் வேதாசலம் மகாலக்ஷ்மி ரூபங் கொண்டு வேதவல்லியம்மாளாகப் பிரகாசிக்கும்காக்ஷி, வேணிக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. வேணி சொல்லிய அலங்காரங் களில் ஒரு சிறிதும் குறைவின்றித் தாராளமாகச் செய்திருப்ப தோடு புல்லாக்கும் அணிந்திருந்ததால், உண்மையில் அவர் அடை யாளம் அடியோடு மாறிப் போய்விட்டது.

இடையிடையே அவரும், "கோவிந்தா! கோவிந்தா!" என்று பகவன்நாமாவைச் சொல்லி கபட சன்யாசிபோல் வேஷம் போட்டுக்கொண்டே வருகிறார். காதிலும் மூக்கிலும் உள்ள நகைகளின் வேதனையொருபுறம் சகிக்க முடியவில்லை. காலில் இறுத்தும் காப்பு கொலுசு நடக்கத் தெரியாத வேதனை செய் கிறது. இந்த அழகுடன் குனிந்த தலை நிமிராமல் மாமியார் வீட்டுப் புது மாட்டுப் பெண்ணைப்போல் நடந்து வருகிறார்.

காசு போடுகிறவர்களும், கோவிந்தனே பிரத்தியக்ஷமாகியது போல் எண்ணிய சில பக்தர்கள் நமஸ்கரிப்பதும் "கோவிந்தா! கோவிந்தா"வென்று கூறிச் செல்வதுமாக விருக்கிறார்கள்.

வேணியும் வாஸந்தியும் இதை வீதியிலிருந்து பார்த்ததும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். பிறர் இதைப் பார்த்துவிடப் போகிறார்களே என்ற பயம் ஒருபுறம். அதையடக்கிக்கொண்டு பார்க்கையில், ஊர்வலம் வீட்டு வாசலில் வந்துவிட்டது.

வேதவல்லியம்மாள் மெல்ல இந்தத் திண்ணையின் பக்கம் வந்தாள். உடனே வேணி நிதியைக் கண்டவள்போல் நடித்து, "அத்தே! இதென்ன ஆச்சரியமா இருக்கே. எப்போ வந்தே! திருப்பதி போய்வறயா" என்றாள். வாஸந்தி ஒரு துள்ளு துள்ளிக் குதித்து வேதம்மாளின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "அத்தே பாட்டீ! அத்தே பாட்டீ! வா! வா! எங்களுக்கு என்ன கொண்டு வந்தே? எங்கம்மா நேத்துபுடிச்சு நீ வரப்போரேன்னு சொல்லி குதிக்கரா; உள்ளே வா அத்தே பாட்டீ!" என்று பெரியதோர் நகைப்புடன் கிழவரின் கையைப் பிடித்திழுத்தும் அவரைக் கட்டிக் கொண்டும் குதிக்கிறாள்.

கிழவர்:—வேணீ! சவுக்யமாடியம்மா! எத்தனையோ வருஷ மாச்சு ஒங்களெல்லாம் பாத்து. கண்ணே பூத்துப் போச்சு. இது ஒம் பொண்ணுடியம்மா! உள்ளே வாடா கண்ணே நெறய பலகாரம் கொண்டு வந்திருக்கேன்—என்று கூறிக்கொண்டே அசட்டுப் பார்வையுடன் வாஸந்தியை அழைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டார்.

உள்ளே சென்ற பிறகே கிழவருக்குச் சற்று உயிர் வந்தது எனலாம். அவர் மாறு வேஷத்தில் வரும்போதும் இந்த வாசற் படியின் பயம் விட்டுப்போகுமா! முதுகு வரையில் வளைந்து குனிந்து செல்வதைக் கண்ட வாஸந்தி கொல்லென்று சிரித்துவிட்டு, "என் அத்தே பாட்டீ! இந்த வாசப்படி குட்டேன்னு ஒனக்கு எப்படி தெரியும்? இங்கே ஒரு தாதா வருவா. அவருக்கு இந்த வாசப் படியே பாத்தாலே பயம். இப்படிதான் குனிஞ்சுண்டு வருவா! அதுமாதிரி நீயும் பண்றேயே! என் அத்தே பாட்டீ! சாமிக்கு வேண்டிண்டு மொட்டெ அடிச்சுட்டயா?" என்றாள்.

கிழவருக்கு இதைக் கேட்டதும் உயிரே போவதுபோலிருக் கிறது. அசட்டுச் சிரிப்பு சிரித்துகொண்டே, "ஆமான்டி கண்ணு! சாமிக்கு வேண்டிண்டு முடி குடுத்துட்டேன்" என்று கூறிக் கொண்டே தான் கொண்டு வந்திருந்த மூட்டையை அவிழ்த்து அதனுள்ளிருந்து வெற்றிலை பாக்கு, மஞ்சள், புஷ்பம், ரவிக்கைத் துண்டு, பாவாடை முதலிய எல்லாவற்றையும் ஒரு தட்டில்

வைத்துவிட்டு, அதோடு 10 ரூபாய் நோட்டு இரண்டையும் வைத்தார்.

வேணியின் வீட்டிற்குப் பெரிய சுமங்கலியா ஒரு அம்மா அதிசயமா வந்திருப்பதால், வீட்டிலிருப்பவர் இரண்டொருவர் உள்ளே எட்டிப் பார்த்து, "என்ன வேணீ! ஒங்க அத்தேயா? பார்த்தாலும் பாவம் போகும். மகாலக்ஷ்மியாட்டும் தொங்கத் தொங்க இருக்கா....எம் பாட்டீ! திருப்பதியிலே இப்ப ரொம்ப தளிரோ? மரப்பாச்சி, மரச் சொம்பு, ஒழக்கு ஒன்னும் வாங்கிண்டு வரல்லேயா?" என்றார்கள்.

கிழவருக்குப் பிராணன் போகிறது. தான் என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. இவரது சங்கடமான நிலைமையை அறிந்த வேணி, "அதை என் கேக்கரங்கோ! ரேணுகொண்டாவில் வண்டி மாறும்போது அந்தச் சாமானிருந்த மூட்டை திருடு போயிடுத்தாம். கோவிந்தார்ப்பணம்னு வந்துட்டாளாம்" என்றாள். இதைக் கேட்ட கிழவரின் உள்ளம் பூரித்தது. சந்தோஷத்துடன் வேணியைப் பார்த்தார். வேணியினிடத்தில் அவருக்கு அதிக நம்பிக்கை யுண்டாகியது.

வேணியின் வீட்டில் வருபவர்களில் சில பெண்டுகள், "எம் பாட்டீ! வடக்கே ஒங்க தேசத்திலே என்னென்ன அதிசயம் சொல்லுங்கோ! ஒரு வேளெ எங்களே மாத்தினுக்கா நாங்களும் போகணுமோல்லியோ! திருப்பதியிலே என்ன அதிசயம்?" என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்துவிட்டார்கள். கடன் வாங்கியும் பட்டினி. ராமேச்வரம் போயும் சனீச்வரன் விடவில்லை என்பது போல் கிழவர் பாடு திண்டாட்டமாகி விட்டது. வேணிக்கும் வாஸந்திக்கும் சிரிப்பு தாங்கமுடியவில்லை.

அச்சமயம் மைதிலி அங்கு வந்தாள். அவளை வேணி அன்போடு வரவேற்றாள். மைதிலியைப் பார்த்த உடனே கிழவருக்குத் தான் உட்கார்ந்திருந்த இடமே வெடித்து, பூகம்பத்தில் ஆடுவது போலாய்விட்டது. திருகத் திருக விழிக்கிறார். அசட்டுக் களை சொல்லமுடியாமல் சொட்டுகிறது. தர்ம சங்கடப்படுகிறார்.

மைதிலியோ கிழவர் உட்கார்ந்திருக்கும் பக்கமே ச பத்தில் உட்கார்ந்து வியப்புடன் கிழவரையே பார்த்து, "இ யாரு வேணி?" என்று நமட்டுச் சிரிப்புடன் கேட்டாள்.

வேணி:—நான்தான் நேத்திக்கே எங்க அத்தெ வரப்போ ருன்னு சொல்லல்லே. அவதான் இவள். திருப்பதிக்குப் போ பிரார்த்தனை செலுத்திட்டு வந்திருக்கா!

மைதிலி:—அடாடா! சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மி போல் இரு கிருர். பாத்தாலும் பாவம் போகும். இந்தக் காலத்திலேகூ இந்தமாதிரி பழ நாள் நகைகள் போட்டுக்கராளோ! இந்தமாதி செட்டு எல்லாம் ஒன்னு எங்காத்துலேகூட தாதா பெட்டியி வச்சிருக்கார். எங்க மூத்தாளுதாம்.

இச்சமயம் கிழவரின் மார்பில் கூரிய வாள் பாய்வதுபோ வேதனை செய்கிறது. 'இந்தச் சனியன் இப்போ எங்கே வந்தது என்று திட்டுகிருர். தன் குட்டு வெளியாகிப் போய்விடுமோ என் நடுக்கம் அதிகரித்து வாட்டுகிறது. கிழவரின் வேதனை உச் ஸ்தாயியை எட்டிக்கொண்டிருப்பதை வேணி நன்ருக அறிந் கொண்டாள். வேணி இச்செய்கையை ஏற்கெனவே மைதிலிக்கு தெரிவித்துவிட்டாளாகையால், அவளும் நன்கறிந்துகொண்டா வாஸந்தியோ, தாதாவின் மடியை விட்டு இறங்கவே இல்லை ராஜு மட்டும் தாதாவின் பின்புறம் கழுத்தைக் கட்டிக்கொண் முதுகில் சாய்ந்து ஆடிக்கொண்டிருக்கிருன்.

மைதிலி:—எம் பாட்டீ! ஒங்க வடக்கு தேசத்துலே கூ சின்ன பெண்களை கிழக்கட்டைகளாகிய பூதங்கள் கல்யா மென்று பேரை வெச்சு கொலை பண்ர வழக்கமுண்டா?

கிழவரின் மார்பு 'டக் டக்' என்று அடிக்கும் வேகமு பெருமூச்சின் வேகமும் போட்டியிட்டு சண்டை செய்கிற சித்திரவதை இதைவிட வேறு ஒன்றுமே இல்லை. வெயர்வை வெள்ளம் 'குபீர் குபீர்' என்று பொங்கி வெந்நீர்போல் பொ வருகிறது. இந்த நிலைமையில் அவர் என்ன பதில் சொல்வதென் திணறுகிருர். அசட்டுப் பார்வையும், களையும் அவரைக் கப் கொண்டன. தடுமாடியபடியே பேசத் தொடங்கி, "எந்த தேச

லேயும் இந்தமாதிரி நடக்கிறது. எத்தனை பேர்கள் கிழவனைக் கல்யாணம் பண்ணிண்டும் பேரனும் பேத்தியுமா வாழரா !....

மைதிலி (இடை மறுத்து) "பாட்டீ! எத்தனையோ பேர்கள் மூலையில் அடைபட்டுச் சாகிறார்கள் என்றதை ஒளிக்காதெங்கோ. கிழவனைக் கல்யாணம் பண்ணிண்டவாளெ கணக்கெடுத்தாக்கா, அம்மா திரளுவதற்குள்ளே அய்யா உருளுவதுதான் அதிகம் இருக்கும்" இல்லையா? சொல்லுங்கோ. அப்படிப்பட்ட கிழங்களெ எல்லாம் ஒன்னு சேத்து ஜெயில்லெ அடைச்சி களியுங் கூழுங்கூட அரெ வயித்துக்குப் போட்டு செக்கிழுக்கவும், கல்லு உடைக்கவும் சொல்லி, வதைச்சாக்கா அப்போ தெரியும் தான் பட்ர கஷ்டமும், சின்ன பெண்கள் கிழவாளெ கட்டிண்டு பட்ர அவஸ்தையும், ஒன்னுதான்னு ஒடம்புலெ ஒரைக்கும். புத்தி வரும்.

பாட்டீ! அந்தமாதிரி கிழங்கள் கல்யாணத்தோடெயா விட்ரதுகள். அதுகள் நாசமாப் போக. நல்ல குடும்பப் பெண்கள் கணவனோடு பாலும் தேனும்போலே இருக்கும் அருமையான பெண்களின்மீதும் துராக்ருதமான எண்ணத்தோடு கெடுக்கத் துணியரதுகள். என்ன அநியாயம் பாருங்கோ! (இந்த வார்த்தை கிழவருடைய இதயத்தில் செம்மட்டியால் அடித்து நெருப்பையும் அள்ளிப் போடுவதுபோல் இருக்கிறது.) மைதிலி, அதோடும் விடாமல் மேலும் "அதுமட்டுமா பாட்டீ! அந்தத் திருட்டுக் கிழங்கள் கபட சன்யாசிபோன்ற கிழங்கள், தாம் மணந்த இளம் மனைவி மகா உத்தமியா யிருப்பவளையும் சந்தேகிச்சு மிரட்டி, உருட்டி, அடிச்சு, ஈவிரக்கமில்லாமெ வதைக்கிறதுகள். அப்படிப்பட்ட கிழங்களுக்குத் தனியான நரகந்தானே பாட்டி கடவுள் சிருஷ்டிப் பார்?" என்றாள்.

இதைக் கூறும்போது கிழவருக்கு மயக்கம் போட்டுவிடும் போல் ஒருபுறம் ஆகிவிட்டதெனினும் மைதிலியைக் கொலை செய்து விடலாமாவென்றும் ஒருபுறம் ஆத்திரம் பொங்குகிறது. அதே சமயம் மைதிலி வெகு துணிகரமாயும், சாதுர்யமாயும், "ஐயையோ! வேணீ! நல்ல பர்ம்பூடீ! பாட்டீ! எங்கிருங்கோ! ஒங்க பொடவைப் பக்கம்தான் போச்சு பாட்டீ!" என்று ஒரு பெருங் குரல் பாய்ச்சிக் கூறிக்கொண்டே சடக்கென எழுந்தாள்.

பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா? கிழவர் மட்டு அந்த விதிக்கு விலக்கானவரா! வாஸந்தி துள்ளிக் குதித் எழுந்தாள். கிழவர் தன்னை மறந்து பத்து ஆனை பலத்துட தத்தளித்து எழுந்து, "ஐயையோ! வேணீ! மைதிலீ! எங்கே பாம்பு!" என்று கூறிக்கொண்டே புடவையை உதறியும், தலைப்ல அவிழ்த்தும் நர்த்தனம் செய்கிறார். மைதிலியும் சந்தர்ப்பத்தை கைவிடாமல், த்ரௌபதியைத் துச்சாசனன் ஆத்திரத்துட துயில் உரிந்ததுபோல், காளிகா தேவிபோன்ற ஆத்திரத்துட பாட்டியின் குசவான்கட்டை திரு திரு என்று இழுத்தவா "ஐயோ! அதோ பாம்பு. இதோ பாம்பு!" என்று கூறியபடிே உருகி விட்டாள்.

இந்தக் குதிப்பிலும் ஆட்டத்திலும் மூக்கிலிருந்த நகைகளு காதிலிருந்த கத்ரிபாவிலியும் கீழே விழுந்து விட்டன. கிழவ அரை நிஜார், பனியனுடன் சாரண வீரன்போல் நின்றா மைதிலி அப்போதுதான் கிழவரைப் பார்த்தவள்போல் அ நயித்து, "ஐயையோ வேணீ! குடி முழுகி விட்டதுடீ! பாட்டியு இல்லே; பத்தி எரிஞ்சதுமில்லெ! எங்க வீட்டு தாதாதான்ட ஐயோ! வெக்கக்கேடே! வயித்தெரிச்சலெ!" என்று கூறி கொண்டே தலையிலடித்துக் கொண்டாள்.

"பாட்டீ! தாத்தாவாயிட்டங்களே! பாட்டீ தாதா பாட்டீ தாதா!" என்று வாஸந்தியும் ராஜுவும் கையைக் கொட டிக் குதிக்கிறார்கள். வேணி ஆத்திரம் தாங்காமல் பொங்கி வருப ஆவேசத்துடன், "ஆஹா! கண் அவிந்த குருடனுக்கும் கொடிய குருடனாகிய காமக் கள்வா? கபட சன்யாசி! என்னை மான பங்கம் செய்ய எண்ணியா என் புருஷனெ ஊருக்கு அனுப்பினெ உன்னையெ மான பங்கம் பண்ணி, உனக்குப் புத்தி போதிக்கவே நான் இப்படிச் செய்தேன். இனிமே இந்தமாதிரி மானங்கெட்ட கொடிய எண்ணம் எண்ணமாட்டியே! அசல் பெண்களை விழுங்கி ஏப்பம் விடும் காமக் கள்ளனாக மாட்டயே! புத்தி வந்ததா புத்தி வந்ததா!" என்று பல்லைக் கடித்துக்கொண்டே குடத் தோடு தண்ணீரை எடுத்துக் கிழவனின் தலையிலே தடதட வென்று கொட்டி விட்டாள்,



மூளையே கலங்கி விட்டதுபோல் அதுவரையில் தத்தளித்த கிழவரின் ஆத்திரம் உச்சஸ்தாயியைப் பூரணமாக எட்டிவிட்டது. கண்கள் நெருப்புப் பொறி பறந்தவாறு, அங்கிருந்த தடிக்கம்பை எடுத்து ராஜூ உள்பட எல்லோரையும் அடித்து நகர்த்திவிட்டு, கொடியிலிருந்த மூர்த்தியின் வேஷ்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு, குங்குமத்தை அழித்துவிட்டு ஒரே பாய்ச்சலாக அந்த இடத்தைவிட்டு, வாசற்படியில் தலை இடிப்பதுகூடத் தெரியாமல் ஓடி மறைந்தார்.

30

புத்திர வாத்ஸல்யம் சாமானியமானதா? அன்னையிடத்துள்ள பக்தியும் அன்பும்தான் கூறத் திறமுள்ளதா? மூர்த்தி தாயாரின் மீதுள்ள அலை மோதும் கரை காணாத அன்பின் வேகத்தால் இழுக்கப்பட்டு அதே நினைவுடன் ஊரை யடைந்தான். தள்ளாத கிழவி ஒரு மூலையில் ஓலைப் பாயில் படுத்துக்கிடந்தாள். அவள் பக்கத்தில் ஒரு தடிக்கம்பும் ஒரு தீர்த்த டம்ப்ளரும் இருந்தன. கிழவி படுத்திருக்கும் மாதிரியைப் பார்த்தால், அவளுக்குக் களைப்பு அதிகமாகி இருப்பதாயும் சரியாகக் கவனிக்காமல் அலக்ஷியம் செய்து தள்ளி இருப்பதுபோலும் தெரிந்தது. மூர்த்தி அணை கடந்த அன்பு வெள்ளத்துடன் ஓடிப்போய், 'அம்மா! அம்மா!' வென்று அழைத்தவாறு படுத்திருப்பவளைச் சேர்த்துக் கட்டிக் கொண்டான்.

மூர்த்தியின் தாயார் தாங்கமாட்டாத அபாரமான சந்தோஷத்தினால் உள்ளம் பூரிக்க ஆநந்த பாஷ்பம் பெருகியவாறு, "அப்பா மூர்த்தி! வாடா! என் சாமி! ஒன் ஒடம்பு என்னடா இப்படி எளச்சுபோச்சே! வேணீ வரல்லயா! பசங்க வரல்லயா! என் கண்மணி ராஜூ நன்னா இருக்கானா!" என்று சந்தோஷப்

பெருக்கினால் கேட்டபடியே எழுந்து உட்கார்ந்து மகனை முதுகில் தடவியும், அணைத்துக்கொண்டும் புத்ரவாத்ஸல்யம் ததும்ப நோக்கினாள்.

மூர்த்தி :—அம்மா! எல்லாரும் சவுக்யமாயிருக்கா. அடுத்த தடவை வரச்சே அழைச்சிண்டுவரேன். நீ எப்படி இருக்கே! ஒடம்பு ஏன் இத்தனெ கேவலமா யிருக்கு? ஒன்னெ முன்னெ போலவே சரியா கவனிக்கிறாளா! ஒன்னெ பாத்தா பரிதாபமா இருக்கே! எலும்பும் தோலுமா இருக்கயே அம்மா!

கிழவி :—அப்பா! அதெத்தாண்டா சொல்லணும்னு ஒன் வரவே எதிர்பாத்துண்டே இருந்தேன். இப்ப ஐந்து, ஆறு மாசமா சரியா பணம் நீ அனுப்பரதில்லையோன்னோ! அதனாலே இந்த கட்டெயெ கவனிக்கிறவாளே கடயாதுடாப்பா! பணத்துக்காக ஏதோ கொஞ்சம் ஆசெ காட்டினாளே யொழிய பணம் நின்னுது, அன்பும் வத்திப் போச்சு. ஒரு நாளைக்கெல்லாம் நான் பட்டினி கடந்தாலும் கேக்கரதில்லே. பகல் 12 மணிக்கோ 1 மணிக்கோ இஷ்டமானபோது அரை வயிறு சாப்பாடுதான் வெக்கரா! ராத்திரிலே சில நாளைக்குத் தண்ணிகூட குடுக்கரதில்லே. கேட்டா "ஒம் பிள்ளே அனுப்பறது தட்டுகெட்டு போச்சோ! எட்டுவேளெ கூட சாதம் போடலாம். ஒன்னெ கொண்டு எங்க கால்லே கட்டி எழுவெடுக்கரா. எத்தனெ நாளைக்குத்தான் செய்ய முடியும்? அழைச்சிண்டு போரத்துக்கென்ன?" என்று எப்ப பாத்தாலும் சொல்றுடா! (கிழவிக்குத் துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருகுகிறது. மூர்த்திக்கும் விசனம் தாங்கமாட்டாது கண்ணீர் வழிகிறது.)

மூர்த்தி :—"அம்மா! போரும்; நிறுத்து. தெரிஞ்சுண்டேம்மா! இனுமே நான் ஒன்னெ இங்கே வெக்கமாட்டேன். எந்த பாடானாலும் பட்டு ஒன்னெ அழச்சிண்டு போயிட்ரேம்மா! நீ வருத்தப்படாதே. பெத்த அம்மாவெ காப்பாத்தரத்தெ விட பெரிய காரியம் எனக்கு வேறு என்ன இருக்கு? அம்மா! நானு ஊருக்குப் போயி தகுந்தாப்பலே எடத்தெ பாத்து வெச்சுட்டு ஒட்டனே வந்து ஒன்னெ அழெச்சிண்டு போரேன். இவா கண்ணுலே

காட்டமாட்டேன். மாத்ரு பரிபாலனத்துக்கும் கைங்கர்யத்துக்கும் நான் குடுத்து வெக்கனுமேம்மா! கண்ணீர் விடாதே! இந்தா! பழத்தெ சாப்புடு ”—என்று கூறிக்கொண்டே கண்ணைத் துடைத்துக்கொண்டு பழத்தை உரித்து அவள் வாயிலே போட்டான். கிழவி பசியோடு சாப்பிட்டாள்.

அச்சமயம் அவ்வீட்டுக்காரர் அங்கு வந்தார். “என்னடா! மூர்த்தி எப்ப வந்தே? என்னவோ! பணத்தெக் குடுக்காதெ இந்தப் பஞ்சகாலத்துலே இப்படி பண்ணுக்கா என்ன பண்றது? ரொம்ப கஷ்டமா இருக்கு” என்று முடிப்பதற்குள் மூர்த்தி இடைமறுத்து, “மாமா! இன்னும் 5, 6 நாள் பொறுத்துக்கங்கோ! எங்கம்மாவெ அழைச்சிண்டு போயிட்ரேன். இனுமே இங்கே விடமாட்டேன். இதுவரைக்கும் காப்பாத்தினதற்கு ரொம்ப வந்தனம்; இந்தாரும் 5 ரூபாய்” என்று கூறிவிட்டு, அவரிடம் ஒரு நோட்டைக் கொடுத்தான்.


அவ்வளவுதானே வேண்டும். பணத்தைப் பார்த்ததும் பல்லிளித்துவிட்டது. “ஏம்மா! காத்தாலே என்ன சாப்பிட்டெ. அடீ அம்மாளு! பாட்டிக்கி காப்பி குடுத்தயா?” என்று உபசரிக்க வாரம்பித்தார். மூர்த்திக்கு இந்த நாடகத்தின் வேஷம் நன்றாகத் தெரியுமாதலால், லக்ஷ்யமே செய்யாமல், தாயாருக்குத் தேறுதல் கூறிவிட்டுத் தான் அப்போதே புறப்படுவதாகச் சொன்னான். ஆனால், கிழவி இன்னும் ஒரு நாளாவது கூட இருக்க வேணுமென்று ஆசைப்பட்டதால், அப்படியே செய்ய இசைந்தான்.

தாயின் பரிதாபமும், அன்பும் மூர்த்தியின் மனத்தில் நன்றாகப் பதிந்துவிட்டதால், உடனே அவளை அழைத்துச் செல்வதிலேயே நோக்கம் சென்றது. அவள் இஷ்டப்படியே மூர்த்தி ஒருநாள் கூட இருந்துவிட்டுப் பின்னர் ஊருக்குக் கிளம்பினான்.

பெருமை! கௌரவம்! புகழ்மாலை!

சலனப் பட உலகில் சிறந்த தெலுங்கு நடிகையென
இந்த வருஷம் முதல் ஸ்தானத்திற்குத் தேர்ந்து
எடுக்கப்பட்ட கௌரவமடைந்த

ஸ்ரீமதி கண்ணாம்பாவை



முன்பெல்லாம் விட இன்னும் சிறப்பாக
ரோஹிணி பிக்சர்ஸாரின்

கிருஹலக்ஷ்மி

என்னும் படத்தில் கண்டு களியுங்கள்.

ஆந்திர தேசத்தில் எல்லா முக்கிய ஊர்களிலும்,
சென்னை பிராட்வே டாக்கீஸிலும்
1938 ஆம் மார்ச் மீ 12 உ ஆரம்பமாகும்.

ரோஹிணி பிக்சர்ஸ் லிமிடெட்,
43, ஆசாரப்பன் தெரு, சென்னை.

பிப்ரவரி மீ 20 தேதிக்குள்

சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.
1	15	ஏ. 254. ஸ்ரீ. கே. டி. அஸான் காதர், சோலான்.
2	10	ஆர். 273. ப. ராமமூர்த்தி, நம்டு.
3	10	எஸ். 365. ஸ்ரீமதி. வி. ஆர். ஸரஸ்வதிபாய் கோயம்புத்தூர்
4	5	கே. 420. ஸ்ரீ. எஸ். ஆர். கிருஷ்ணசாமி, ஸ்ரீரங்கம்.
5	5	என். 150. ,, எஸ். நாராயணசாமி, கோபாலபுரம்.
6	5	எஸ். 379. ,, ஆர். ஸுப்ரமண்ய அய்யர், மதுரை.

சென்னை பிலிம் தேர்தல் முடிவுகள்

சென்ற மாதம் நடைபெற்ற மேற்படி தேர்தல் முடிவுகளைக் கீழே வெளியிடுகிறோம். கீழ்க்கண்ட படங்கள், நடிகர்கள் ஆகிய பெயர்கள் வரிசைக் கிரமமாக மிகுதியான ஓட்டுகள் பெற்றுள்ளன.

சென்னை, வெளியூர்கள், பர்மா, சிலோன், எப். எம். எஸ். ஆகிய பல இடங்களிலிருந்து மொத்தம் 6,000 பேர்கள் ஓட்டளித்துள்ளனர்.

வெளிநாடு

படம் :—"ரோமியோவும் ஜூலியட்டும்," "ஸெலஸ்டாக் கைதி," "நற்பூமி."

நடிகர் :—பால் மூனி, ரொனல்ட் கால்மென், ராபர்ட் டேலர்.

நடிகை :—கிரேட்டா கார்போ, ஷர்லி டெம்பிள், நார்மா ஷியரர்.

வட இந்தியா

படம் :—"எதிர்பாராதது," "பிரஸிடென்ட்." "துகாராம்."

நடிகர் :—சைகால், அசோக குமார், மோதிலால்.

நடிகை :—சாந்தா ஆப்தே, தேவிகாராணி, சபிதாதேவி.

தெலுங்கு

படம் :—"கனகதாரா," "பாலயோகினி," "மோஹினி ருக்மாங்கதா."

நடிகர் :—வேமூரி கக்கய்யா, தொம்மட்டி சூர்யநாராயணு, ஸி. எஸ். ஆர். ஆஞ்சனேயலு.

நடிகை :—பஸுபலேடி கண்ணம்பா, ராமதிலகம், பேபி சரோஜா.

தமிழ்

படம் :—"சிந்தாமணி," "அம்பிகாபதி," "பாலயோகினி."

நடிகர் :—எம். கே. தியாகராஜ பாகவதர். கே. பி. கேசவன், ஒய். வி. ராவ்.

நடிகை :—கே. அஸ்வத்தம்மா, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி (பேபி சரோஜாவுக்கு, 4-வது ஸ்தானம்)

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்

	ரூ.	அ.
1925		
1. வைதேகி	2	8
1926		
2. பத்மசுந்தரன்	2	8
1927		
3. சண்பக விஜயம்	1	12
4. ராதாமணி	2	8
1928		
5. கௌரீமுகுந்தன்	1	12
6. நவநீத கிருஷ்ணன்	2	0
1929		
7. கோபால ரத்னம்	0	14
8. மாதவமணி	0	3
9. சாருலோசனா	2	8
1930		
10. சுகந்த புஷ்பம்	1	0
11. வீரவஸந்தா	0	8
12. சாமளநாதன்	2	0
13. ருக்மணிகாந்தன்	2	0
1931		
14. ஸாரமதி	1	12
15. நளின சேகரன்	0	8
1932		
16. பரிமள கேசவன்	1	4
17. மூன்று வைரங்கள்	0	8
18. உத்தமசீலன்	1	4
19. கதம்பமாலை	1	0

	ரூ.	அ.
1933		
20. காதலின் கனி	2	8
21. சோதனையின் கொடுமை	1	8
22. படாடோபத்தின் பரிபவம்	0	8
1934		
23. தியாகக் கொடி	2	0
24. ஜெய ஸஞ்சீவி	0	4
25. பக்ஷமாலிகா	0	6
26. புத்தியே புதையல்	0	14
1935		
27. மங்களபாரதி	2	0
28. பட்டமோ பட்டம்	0	10
29. சுகுண பூஷணம்	0	4
30. பிச்சைக்காரக் குடும்பம்	0	8
31. ஆனந்தஸாகர்	0	8
32. அம்ருததாரா	0	4
1936		
33. இன்பஜோதி	1	4
34. ராஜமோஹன்	1	4
35. அனாதைப் பெண்	1	4
36. ப்ரேம ப்ரபா	0	8
1937		
37. அன்பின் சிகரம்	0	4
38. சாந்தகுமாரி	1	0
39. மாயப்ரபஞ்சம்	1	0
40. சந்திர மண்டலம்	1	0
1938		
41. வாழ்க்கையின் நாதம்	1	4
42. உளுத்த இதயம்	0	4

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

31

வேணி, வாஸந்தி, ராஜு மூவரும் அன்று மூர்த்தியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டே சந்தோஷமாக இருந்தார்கள். வேணி, மூர்த்தியின் தையல் மெஷினைத் துடைத்துக்கொண்டிருந்தாள். வாஸந்தி தன் புத்தகங்களை அடுக்கிக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஒரு ஆள் வந்து, "அம்மா! அம்மா!" என்று கூப்பிட்டான். வேணி எழுந்து வந்து, "யாரப்பா!" என்றாள்.

அம்மனிதன் :—தர்ஜி திருமூர்த்தி உங்க புருஷனும்மா! ஒங்க பேரு திருவேணியம்மாளாம்மா?

வேணி :—ஆமாம்! என்ன சமாச்சாரம்?

வந்தவன் :—அம்மா! திருமூர்த்தி ஊரிலிருந்து வரும்போது வழியிலெ யாரோ திருடர்கள் நன்னு அடிச்சு படுகாயப்படுத்திட்டாளாம். அவருக்கு நெனவே இல்லாமெ நடு வழியிலே விழுந்து கிடந்ததெ யாரோ பாத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து விட்டிருக்கா. ஆஸ்பத்திரிலே விசாரிச்சத்துலே, இவர் தர்ஜி திருமூர்த்தின்னு யாரோ சொல்லி தெரிஞ்சுது. ஒங்களுக்குத் தகவல் சொல்லச் சொன்னு.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நின்ற இடத்திலேயே வேணி 'ஹா'வென்று சாய்ந்து விட்டாள். "அப்பாவையாம்மா அடிச்சுப்புட்டா? ஐயையோ! அப்பா! அப்பா!" என்று குழந்தைகள் பெரிதாகக் கத்த வாரம்பித்து விட்டார்கள். வேணிக்கு ஆகாயமும், பூமியும் ஒன்றாகி விட்டது. பேசவே முடியாமல் கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

வாஸந்தி வந்த மனிதனை நோக்கி, "ஐயோ! நாங்க வந்து எங்கப்பாவெ பாக்கலாமா? எங்கப்பா எப்படி இருக்கா? எங்களெ அழெச்சிண்டு போரயா?" என்றாள். வந்த மனிதன் குழந்தையின் பரிதாபம் தாங்காமல் மனம் உருகினான். "அம்மா! இப்போ யாரும் வரக் கூடாது. சாயங்காலம் 5 மணிக்கு யார்

வேண்ணாலும் வரலாம். நீங்க அப்போ வந்து நாலாவது வார்டு எங்கென்னு கேளுங்க. அங்கே கொண்டு விடுவா. பதினாலாவது படுக்கையிலெ ஒங்கப்பா படுத்திருக்கார். நான் போய் வரேன்” என்று போய் விட்டான். வாஸந்தி “அம்மா! அம்மா! என்னம்மா! பேசமாட்டெங்கரெ. ஐயோ! அம்மா” என்று கதறியவாறு, வேணியின் முகத்தில் ஜலத்தைத் தெளித்தாள். வேணி அப்போதும் கண் விழிக்கவில்லை. “ராஜு! அம்மாவெ பார்த்துக்கோடா! இதோ நொடிப்போதிலே மாமியை அழெச்சிண்டு வரேன்” என்று கூறிவிட்டு ஓட்டமாக ஓடினாள்.

அடுத்த நிமிடமே மைதிலியுடன் ஓடிவந்தாள். மைதிலி வாஸந்தி மூலம் விஷய மறிந்து கொண்டு, கண்ணீர் வடித்தபடியே வேணியைத் தூக்கித் தன் மடியில் போட்டுக்கொண்டு, மூர்ச்சை தெளியச் செய்து, பின்னர் “அம்மா! கடவுளைப் பிரார்த்தியுங்கோ! அழுதா என்ன பண்றது? கருப்பன் வண்டி கொண்டு வருவான். ஆஸ்பத்திரிக்குப் போய் பாத்துட்டு வாங்கோ!” என்று தேறுதல் கூறினாள்.

யார் தேற்றினால்தான் வேணியின் மனம் தேறுதலடையும். பேசவும் முடியாது பதுமைபோலானாள். 4 மணிக்கெல்லாம் கருப்பன் வண்டியுடன் தயாராய் வந்தான். வேணியும் குழந்தைகளும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். “கருப்பா! கூடவே போய் பாத்துட்டு ஜாக்கிரதையா அழைச்சிண்டு வந்து வீட்டிலே விட்டு விட்டு வா!” என்று மைதிலி உத்திரவு போட்டுவிட்டு, தன் வீட்டிற்குச் சென்றாள். வண்டியும் நகர்ந்தது.

32

மைதிலிக்கு உண்டான துக்கத்திற்கு அளவே இல்லை. "இம்மாதிரி படுகாயப்படுத்தி ஒரு குடும்பத்தையே பாழ்படுத்திய சண்டாளர்கள் யாராக இருக்கும்? அன்று அவமானப்படுத்தியதால், அதையே ஒரு க்ஷாத்திரமாக வைத்துக்கொண்டு, கிழவனே ஒரு கால் இம்மாதிரி பழிக்குப் பழி வாங்கி இருப்பானோ!" என்று அவள் நினைக்கும்போது அவள் தேகமே நெருப்புப் பிடித்து எரிவதுபோல் வேதனையுண்டாகியது. கூறத்திறமற்ற சங்கடம் அவளை வதைக்கின்றது. வேணியின் பரிதாபகரமான முகமும் குழந்தைகளின் முகமும் அவள் கண் முன்பு தோன்றிப் பின்னும் நெஞ்சு பிளந்து விடும்போல் சங்கடஞ் செய்கிறது.

அச்சமயம் கிழவர் மாடி வராந்தாவில் தனக்குத் தானே, "ஆமாம்; ஆமாம். இதுதான் சரியான பழிக்குப் பழி. பழிக்குப் பழி வாங்கிவிட்டேன். இனிமேல் பிண்டத்திற்குத் திண்டாடட்டும். என்னைப் பொம்மனாட்டி வேஷம் போட்டு மானபங்கம் பண்ணின கொழுப்புப் புடிச்ச வேணி கம்மனாட்டியாகி மூலேலே ஒக்காண்டு அழட்டும். இதுதான் சரியான வழி" என்று கூறிய வார்த்தைகள் மைதிலியின் காதில் கூரிய ஈட்டியைப் பழுக்கக் காய்ச்சி சொருகுவதுபோல் இருந்தது.

"ஹா! ஐயோ! நான் நெனச்சதுபோலவே ஆயிடுத்தே. கடவுளே!" என்று தன்னை மீறிப் பொங்கிவரும் ஆத்திரத்துடன் தடதடவென்று மாடிக்குச் சென்று கிழவனின் தோள்களைப்பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கியபடியே, 'ஐயோ! படுமோசம் போய்விட்டதே. உங்களுடைய அக்கிரமச் செய்கைக்கு நற்புத்தி வரப் பண்ணினதை அடியோடு மறந்துபோய் இப்படியா ஒரு உத்தமியின் வயிறெரியப் பண்றது? ஒரு குடும்பத்தைச் சிதற அடிக்கிறது? ஐயையோ! சகிக்கலேயே! நியாயம் அநியாயம் கிடையாதா? மான அவமானமில்லையா? இப்படியா கொலை செய்யறது? என்னைக் கொலை செய்தது போதாதென்று இன்னொரு கொலையும் செய்துவிட்டீர்களே!

ஆமாம்! நான் இதைக் கண்டிப்பாய்ப் போலீஸாருக்குச் சொல்லிவிட்டேறன். என் வயிறு எரியறது. நெஞ்சு பிளக்கிறது' என்று கண்ணீர் விட்டுக் கதறினாள். கிழவர் முட்டாள்தனமாக வாய் விட்டுக் கூறியதை எண்ணி வருந்தி மைதிலி கூறியதைக் கேட்டு பயந்தார். ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், மைதிலியை விரைக்கப் பார்த்தபடியே, 'ஓகோ! சொல்லேண்டீ! சொல்லித்தான் பாரேன்! நீ பட்ற பாடு தெரியறது' என்றார்.

மைதிலியின் ஆத்திரம் பொங்கியது. 'ஆமாம், இப்போ பட்ற அவஸ்தையை விட—இம்சையை விட—இனுமே என்ன இருக்கு. இதோ! சொல்லியே தீருகிறேன். வந்ததை அனுபவிக்கத் தயார்' என்று ஆவேசத்துடன் அழுத்தமான குரலில் கூறியபடியே, சடக்கென்று தன்னறைக்கு வந்து ஒரு காகிதத்தை எடுத்தாள். அப்போதிருந்த ஆத்திரத்தில் காட்டிக் கொடுத்து விடவே துணிந்து "போலீஸ் இன்ஸ்பெக்டர் சார்!" என்ற தலையங்கத்தை எழுதினாள். அதே சமயம் வழக்கமாகக் கேட்கும் வானக்குயிலின் நாதம் கம்பீரத் தொனியுடன்,

(முன் தொடர்ச்சி—சரணம்)

அகந்தையே அழிக்கும் ஆத்திரம் பழிக்கும்
இகழ்ந்திடும் செய்கையை எரித்து நல்சாந்தியை
அகத்தில் கொள்வாய் மனமே! (தூய்மை)

என்று ஒலித்தது. வழக்கம்போல் அவள் மனத்தை உருக்கியது. நீர் வழிந்த கண்களுடன், அச்சங்கீத ஒலி கேட்கும்வரையில் பதுமையானாள். உடனே அவள் மனத்தில் சொல்லமுடியாத ஓர் வேதனையும் துக்கமும் நெஞ்சைப் பிளந்தது. அவ்வறையில் மாட்டப்பட்டிருந்த நளாயினி, தமயந்தி, சந்திரமதி, ஸாவித்ரி, லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலிய படங்கள் அவள் கண்ணில் பட்டன. மனம் இடிந்துபோய், பேனா நழுவி நிலை புரண்டது. "பாரத நாரீமணிகள், இந்து தர்மத்தின் தத்துவத்தை நிலை நாட்டிய வீரமாமணிகள், பதிவிருதா சிரோமணிகள்! உங்கள் இனத்தில் பிறந்தும் உங்கள் வழியைப் பின்பற்ருது ஆத்திரப்பட்டுச் செய்ய எண்ணிய காரியத்தில், உயர்ந்த இந்து தர்மத்திற்கே களங்கத்தைத்

தேடும் மகா பாவியாவேன். கட்டிய கணவன் பெரிய வியாதிக் காரனானாலும் நளாயினி சகிக்கவில்லையா? தன்னை அடிமையாக விற்றாலும் சந்திரமதி பொறுக்கவில்லையா? தன் கணவனுக்காக எமனுடன் வாதாடி பதிவிருதா தர்மத்தை ஸாவித்திரி நிலை நாட்ட வில்லையா? 'கட்டிய கணவனைக் காட்டிக் கொடுத்த மகா பாவி' என்று என்னை உலகம் தூற்றுமாயின் பாரத நாரீமணிகளுக்கும் இந்து தருமத்திற்கும் களங்கம் வருமல்லவா? 'ஹா! என்ன ஜென்ம மெடுத்தேன்?' என்று தனக்குள் பேசிக்கொண்டு காகிதத் தைக் கிழித்தெறிந்துவிட்டுச் சோபாவில் சாய்ந்தாள்.

கருப்பன் வந்தான். அவனைக் கண்ட மைதிலி, "கருப்பா! எப்படி இருக்காரு நீ பாத்தியா? அம்மா, குழந்தைங்க எல்லாரும் என்ன பண்றா? நெனவு தெரியறதா! டாக்டர் என்ன சொன்னாராம்?" என்று கேட்டாள்.

கருப்பனின் கண்ணில் கண்ணீர் வழிகிறது. வாய் பேச முடியவில்லை. திணறியவாறு "அம்மா! என்னத்தை சொல்லு வேங்க. வவுறு பத்தி எறியுதுங்க. சோத்துக் கையிலெ எல்லா வெரலையும் எந்தப் பாவியோ நல்லா கல்லாலே நசுக்கி பஞ் சாக்கிப் பூட்டாங்களாம். அதுக்காவ மணிக்கட்டு வரைக்கும் வெட்டிப்புட்டாங்களாம். மழக்கம்னு சொல்லமுடியாது. அம்மா உசிரே பூடும்பேலேக்கிது. கொயந்தங்க கதறுதுங்க. அவருக்குத் தையல் தொழிலுக்கு அந்த கைதானே முக்யம். அது பூட்டு துங்களாம்மே" என்று கருப்பன் கூறும்போது மைதிலிக்குச் சகிக்க முடியாத துக்கமும் கிழவர்மீது ஆத்திரமும் பொங்கி விட்டன. பதில் பேசமாட்டாது குப்புறப் படுத்து தேகங்குலுங்கப் புலம்புகிறாள்.

அவள் பரிதாபத்தைக் கருப்பனால் கண்டு சகிக்க முடிய வில்லை. "அம்மா! அவங்களுக்கு இன்னிக்கு சோறுகூட பிடிக்கா தும்மா! நீங்கதான் போயி ரவெ பலவந்தமா சாப்பிடச் சொல்ல ணும்மா! அந்தம்மா ரொம்ப இடிஞ்சு பூட்டாங்கம்மா! வண்டி தயாராக்கீது. ரவெ வாங்கம்மா!" என்று நயமாகக் கூப்பிட்டான்,

மைதிலி கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்து உள்ளே போய் டிப்பன் செட்டுகளில் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். இதைக் கிழவர் மெத்தையிலிருந்து கண்கள் தீப் பொறி பறக்கப் பார்த்தபடியே, 'கரப்பா! கரப்பா!' என்று கூவினார். ஆனால் அது அவர்கள் காதில் கேட்கவில்லை.

33

மத்தியில் சில மாதங்கள் உருண்டோடி விட்டன. மைதிலி அடிக்கடி வேணியின் வீட்டிற்குச் சென்று அவளுக்கு ஒத்தாசை செய்யும் செய்கை கிழவருக்குப் பிடிக்காததாலும் மைதிலி எங்கே ஒரு வேளை இல்லாவிட்டால் ஒரு வேளை தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவாளோவென்ற பயத்தினாலும் ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு மைதிலியையும், மீனாட்சியையும் அழைத்துக் கொண்டு கிராமத்திற்குப் போய் விட்டார். தான் மட்டும் ஊருக்கு அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்தார்.

மைதிலிக்கு மனம் முறிந்துபோய் ஒருவிதமான சலிப்பும் வேதனையும் உண்டாகி விட்டதால், 'நான் உயிருடன் இருந்தால் என்ன ; இறந்தால் என்ன? எங்கு இருந்தால்தான் என்ன? எமன் கோயிலில் கொண்டு வைத்தாலும் இருப்பதற்குப் பயம் என்ன ? இங்கிருப்பதில் கிழவரின் சந்தேகம் அதிகரித்து இன்னும் ஆத்திரமும் அவமானமும் தானே வருகிறது. கண் மறைய எங்காவது சாவதே நலம்' என்று எண்ணி கிராமத்திலிருந்தாள்.

ஆனால், அவ்வப்போது வேணியையும் வாஸந்தியையும் அவளால் மறக்கவே முடியாமல் தவிப்பாள். 'தொழிலும் போய் விட்டதே. இனி எப்படி பிழைக்கிறார்களோ! என்ன கதியை அடைந்திருக்கிறார்களோ!' என்று விசனிப்பாள். 'நாம் மெய்ம் மறந்து அனுபவிக்கும் சங்கீதம்—வானக்குயிலின் இனிய கானம்—

கேட்காமலிருக்கிறேமே' என்று மட்டும் வருந்துவாள். இவ்விதம் சில மாதங்களாகி விட்டன.

கிழவரின் புத்தியில் இந்த சிறைவாஸம் போதும் என்று தோன்றியதோ என்னவோ, மீண்டும் ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார். வந்த உடனே வேணியின் வீட்டிற்குச் சென்று விசாரிக்கையில், வேணி அவ் வீட்டிலில்லை. வேறு எங்கேயோ மாற்றிப் போய் விட்டதாக தகவல் கிடைத்தது கேட்டு மைதிலி மிகவும் வருத்தத்துடன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டாள்.

இதைக் கிழவர் பார்த்துக் கொண்டிருந்து "ஆரம்பிச்சுட்டயா? ஒன் கொழுப்பை அடக்கறத்துக்குத் தானே ஒன்னே நாட்டுப்புறத்திலே கொண்டு போட்டேன். இன்னும் திமிர் விடல்லெயே. அந்த வேணிக்கு பொழப்பே இல்லாததாலே தாசியாப் பூட்டாளாம். ஊரே சிரிக்கிறதாம். தெரியுமா? இனுமே இப்படி போனெயொ கொலை பண்ணிப்புடுவேன்" என்று கண்டித்தார். நொந்துபோய்விட்ட மைதிலி வாயைத் திறக்கவே இல்லை. வேணியைத் துச்சமாகச் சொல்லிய வார்த்தை தாங்காமல் உள்ளே போய்விட்டாள்.

34

மூர்த்தியின் தற்போதைய நிலைமையைப் பார்த்த எவர் மனம்தான் உருகாது? கண்ணீர் பெருகாது. அவன் யார் செய்த புண்ணியவசத்தினலோ உயிருக்கு ஆபத்தின்றிப் பிழைத்து வீடு வந்து சேர்ந்தானே யன்றி, அவனுடைய பிழைப்புக்கு ஆதாரமான தையல் வேலை செய்வதற்கு முடியாமல் கை போய்விட்ட விசனத்தை அவனல் சகிக்கவே முடியவில்லை. "இத்தகைய ஊனத்தை யடைந்த பிறகு நான் பிழைத்ததை விட என் உயிர் நீங்கி இருக்குமாயின் எத்தனை சந்தோஷப்பட்டிருப்

பேன்? இப்போது நான் பிழைத்தும் பலனில்லாதுபோய் விட்டதே! ஆ! ஈசா! என்ன செய்வேன்?" என்று தனக்குள் சதா எண்ணி எண்ணி உருகுவான்.

தன் கையையும், தையல் மெஷினையும் மாறி மாறிப் பார்த்து பெருமூச்சு விடுவான். கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி ஓடும். சதா புலம்பிப் புலம்பி பின்னும் மெலிந்துவிட்டான். இவனுடைய சங்கடத்தைக் கண்டு சகிக்கமாட்டாத வேணியும் தவித்து உருகுவாள். குழந்தை வாஸந்தியோ தன் பிதாவின் வருத்தத்தை முற்றுமறிந்து, 'இனிமேல் என்ன செய்வது? பிதாவின் தொழில் போய்விட்டதே! எப்படி பிழைக்க வழி செய்வார்?' என்று விசனப்படுவாள்.

தன் வாழ்க்கையின் நாதமாகிய தையல் மெஷினைத் துடைத்துக்கொண்டே கண்ணீர் பெருகியவாறு மூர்த்தி, "ஹா! கடவுளே! இப்படியா என் கதியை முடித்தாய்? இந்த மெஷினின் இனிய ரீங்காரம்போன்ற சப்தமே என் வாழ்க்கையின் நாதமாக எண்ணி உள்ளம் பூரித்திருந்தேனே! அப்படிப்பட்ட மெஷினுக்கு இனுமே நான் லாயக்கில்லாதபடி செய்தூட்டாயே! இது ஒனக்கு தருமமா! இந்த மெஷினே எனக்குப் பெரும் புதையல்னு நெனச்சிண்டிருந் தேனே. என் எண்ணம் ஈடேறாது செய்துட்டயே! இந்த ஆநந்த மான சப்தத்தை நான் இனுமே எப்போ கேட்பேன்?" என்று மனம் வருந்திக் கொண்டிருக்கையில், வாஸந்தி வந்து பக்கத்தில் நின்றாள்.

தந்தையின் கஷ்டம் சகிக்க முடியவில்லை. சிறுமியாயினும் அவள் கண்ணிலும் ஜலம் மளமளவென்று வந்துவிட்டது. 'அப்பா! அப்பா! எம்பா அழறே! சாமி ஒன் கையெ வெட்டிட்டாரேன்னு அழறே! சாமிக்குக் கொஞ்சங்கூட புத்தியே இல்லேப்பா! சாமிக்கு நம்ப மேலே ஆசெயெ இல்லேப்பா! ஆசெ இருந்தா இப்படி செய் வாரா! இல்லாட்டா ஒன்னே அடிச்ச திருடனையாவது புடிச்சி தரமாட்டாரா! நாம்ப இனுமே எப்படிப்பா பொழைக்கறது!" என்று அழுதாள்.

வேணி:—ஒங்களே போலீஸார் கேட்டபோது விரோதிகளே இல்லேன்னு சொல்லிப்புட்டீங்களே! ஏன் அப்படி சொன்னீங்கோ!

ஒங்களுக்குப் போட்டியா தையல் கடைகளை வெச்சு ஒங்க தொழிலெ கெடுத்தவாளே ஏன் சொல்லக்கூடாது? அதோடு அந்த கட்டெடலெ போற கிழவன் அன்னிக்கி நடந்த ஆத்திரத்துலே, அவன்தான் செய்திருப்பான்னு ஏன் சொல்லக்கூடாது?

மூர்த்தி :—வேணி! நீ புத்திசாலியாயிருந்தும் புத்தி இல்லாமெ பேசறே! நம்மாலேதான் காரியமெல்லாம் ஆறதுன்னு நெனைக்கிறயா! அநியாயமா அவா இருக்கும், இவா இருக்கும்னு சந்தேகத்தாலே ஒத்தர்மேலே பழி போட்றது நியாயமா! அதனாலே நமக்கு இன்னும் பாவமே யொழிய லாபமில்லை. எல்லாருக்கும் சரியான கூலியைக் கடவுள் குடுப்பான். நீ வீணு அவசரப்பட்டுப் பேசாதே! நான் செய்த பாபம் இப்படி அனுபவிக்கணும்னு இருந்தது. அனுபவிக்கிறேன்.

வாஸந்தி :—ஆமாம்பா! பாவம், பாவம்னு சொல்லிண்டிருந்தா ஒன்னே அடிச்சப் படுபாவி ஆப்டுடுவானேப்பா! போலீஸாரிடம் நீ சொன்னுதானேப்பா தேடிப் புடிப்பா! ஏம்பா! ஒனக்கு இனுமே ஊசி கோர்க்க முடியாது. தைக்கவும் முடியாது. பின்னே எப்படிப்பா சாப்பட்றது?

மூர்த்தி :—கன்னு! வாஸந்தீ! இத்தனை கோலங்காட்டின ஈசன் அதுக்கும் வழி செய்யாதெயா இருப்பான்? அவன் என்ன வழியிலே பொழப்பு கொடுக்கிறுனே அப்படி சாப்பட்றது.

வேணி :—ஏற்கெனவே மூணு நாலு மாசமா வீட்டு வாடகெ நின்னுபோச்சுன்னு வீட்டுக்காரா தொண தொணன்னு கேக்கரா! ஆ ஊன்னு, தையல் மெஷினைக் குடுத்துடு. எடுத்து வித்துப் புட்ரேன்னு பேசரா!

மூர்த்தி :—" ஹா! ஐயோ! முடியாது! முடியாது! அரிச்சந்திரனைப்போலே நான் என்னேயே அடிமையாக்கியும் விற்றும் பணம் கொடுப்பேனே யொழிய, என் உயிருக்கும் உயர்வான மெஷினை நான் குடுக்கமாட்டேன். மெஷினைக் குடுத்துட்டா என்னுயிர் போயிடும். வேணீ! வேணீ! கிழவி கால்லே விழுந்து பொறுத்துக்கும்படி வேண்டிக்கோ! நான் பிச்செ எடுத்தாவது பணத்தெ குடுத்துட்ரேன்" என்று கூறும்போது, 'அவ்வறை

முற்றிலும், மூர்த்தி பிச்சைக்காரன்! பிச்சைக்காரன்' என்று சப்தம் ஒலிப்பது போன்றும், அவனுடைய உருவம் பிச்சை எடுப்பது போல் அவ்வறை முற்றிலும் தெரிவதுபோலும் தோன்றிய தோற்றத்தைக் கண்டதும், 'ஹா!' வென்று மூர்த்தி அலறிவிட்டான். அவனுடைய நிலைமை கலங்கிவிட்டது. மெஷின்மீது அப்படியே குப்புறச் சாய்ந்தான்.

வாஸந்தி:—அப்பா! அப்பா! அழாதெப்பா! நீ அழுதாக்கா எனக்கும் அழுகெ வரதுப்பா. நீ அழாதே. இதோ பாரு! என்னெ பாத்து சிரிப்பா. இதோ பாரேன். எனக்கு ஒரு யோசனே வந்துடுத்துப்பா—என்று அழுதுகொண்டே சிரித்தவாறு தந்தையின் தலையைத் தூக்கினாள்.

மூர்த்தியும், குழந்தையின் அன்பையும் விசனத்தையும் எண்ணி கலங்கியபடியே கண்ணீர் வழிய சோகமும், துக்கமும், வெறுப்பும், அன்பும், வாஞ்சையும் கலந்த ஒரு சிரிப்பு 'கலகல' வென்று சிரித்தவாறு வாஸந்தியை இழுத்துக் கட்டிக் கொண்டான். வாஸந்தியும் குலுங்கக் குலுங்க அழுதபடியே சிரித்துக் கொண்டு, "அப்பா! அப்பா! நேத்திக்கி எதிர்த்த வீட்டுலே ஏதோ விசேஷம்னு அம்மாக்கும் எனக்கும் புது முறத்திலெ வெற்றிலெ பாக்கு, ஒரு படி கடலெ, ஒரு ரவிக்கை எல்லாம் குடுத்தாப்பா! அந்த கடலெயே அப்படியே சுண்டல் பண்ணித் தரச் சொல்லி நம்ப ரெண்டு பேரும் சாயங்காலம் பீச்சுலெ கொண்டு போய் வித்துடலாம். அதுலே காசு வரும். நாம் கஞ்சியாவது குடிக்கலாம். என்னப்பா! என்ன சொல்றே" என்று கொஞ்சிக் கொஞ்சி கேட்டாள்.

இது கேட்ட மூர்த்தியின் இருண்டு கிடந்த இதயத்தில் பளிச்சென்ற ஓர் ஜோதி உதயமாயதுபோல் தோன்றியது. வாஸந்தியை ஆநந்தமும் ஆச்சரியமும் அன்பும் பொங்கிய உணர்ச்சியோடு சேர்த்துக் கட்டியணைத்து முத்தமிட்டான். அபாரமாகப் பொங்கும் ஆநந்தத்தில் வாய் திறந்து பேசமாட்டாது சிலை போலானான். அவன் அந்த யோசனைக்கு இசைந்துவிட்டதை அவனது உணர்ச்சி நிறைந்த முகமே எடுத்துக் காட்டியதால், வேணி சந்தோஷத்துடன் அடுப்பில் காயும் ஜலத்தில் கடலையைப் போட்டாள்.

35

கடற்கரையில் மாலை நேரத்தின் ஆநந்தத்தை யனுபவித்துக்கொண்டே ஆயிரக் கணக்கான கூட்டங்கள் தம்தம் இஷ்ட சகாக்களுடனும், காதலிகளுடனும், குழந்தைகளுடனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அச் சமயம் வாஸந்தி வழக்கம்போல் சுண்டல் பாட்டுப் பாடிக் கொண்டே வருகிறாள். மூர்த்தி கூடையை எடுத்துக் கொண்டு கூட வருகிறான். ஜனங்கள் வாஸந்தியின் பாட்டைக் கேட்பதற்காகவே அவளைப் பாடச் செய்து பின்னர் சுண்டல் வாங்குவது வழக்கம். அன்றும் அப்படியே பலர் சுண்டல் வாங்கிக் கொண்டார்கள்.

வாஸந்தி தன் கையில் சேர்ந்த சில்லரையை எண்ணிப் பார்த்தாள். நான்கு அணாதான் இருந்தது. தந்தையின் கையிலிருக்கும் சுண்டலை அவன் கையை இழுத்துப் பார்த்தாள். இன்னும் பாதி சுண்டல் அப்படியே இருந்தது கண்டு, "எம்பா! இன்னிக்கி சீக்கிரம் வெலையாகலெயே! பாதிக்கு மேலே அப்படியே இருக்கே. வீட்டுக்கார கெழவிக்கு இன்னிக்கு எப்படியானாலும் ரெண்டு ரூபாய் குடுக்கரேன்னு அம்மா சொல்லி இருக்காளே; கையிலே ஒன்னரை ரூபாதான் இருக்கு. இன்னும் அரை ரூபா வந்தாதானேப்பா ரெண்டு ரூபா கெழவிக்கு குடுக்கலாம். கால் ரூபாய்க்கு நாம்ப அரிசி வாங்கிச் சாப்படலாம்" என்றாள்.

மூர்த்தி:—அம்மா! அதோ கூட்டமா சின்ன பசங்கள் இருக்கே அங்கே போனாக்கா நெரய வாங்குவா! வா போகலாம்— என்றான். வாஸந்தியும் அங்கே ஓடினாள். அப்போது வழியில் அடையாளமே தெரியாமல் மெலிந்துபோய், துரும்பினும் துரும்பாய்ப் போய்விட்ட மைதிலி, மீனாவின் உபத்திரவத்திற்காக அன்று மெல்ல கடற்கரைக்கு வந்து மணலில் உட்கார்ந்திருந்தாள்.

வாஸந்தி ஓடுவதைப் பார்த்துத் திடுக்கிட்டவளாய் எழுந்து ஆவேசத்துடன் ஓடிப்போய், "ஹா! வாஸந்தீ! என் கண்ணே! இதென்ன இது. நீயா சுண்டல் விற்கறே? ஐயோ! வயிறெரி

கிறதே. வாஸந்தீ! அம்மா, ராஜு எல்லாரும் சௌக்கியமா! கண்ணே! ஒன்னெ பாத்து எத்தனையோ நாளாச்சே!" என்று கூறியபடியே மூர்த்தியின் கையின் மூளியைக் கவனித்தாள்.

அவள் வயிற்றிலும் மார்பிலும் செய்யும் சங்கடம் கூறத் திறமில்லை. தன் கணவன் செய்த சதியல்லவா இது என்று நினைக்கும்போது, அவளுடைய வேதனை சகிக்க முடியாத பயங்கரமாகத் தோன்றியது. வாஸந்திக்கும், மைதிலியைக் கண்டதும் சுண்டல் விற்கும் எண்ணமும் மறந்துபோய் ஆவலே வடிவாய், 'மாமீ! மாமீ!' என்று சேர்த்துக் கட்டிக்கொண்டாள். "எம்மாமீ! இப்படி எளச்சுபோய்ட்டங்கோ? அம்மா கூட ஒங்களேபோலத் தான் ஆயிட்டா! சதா ஒங்க வார்த்தேதான். அங்கே வந்தா தாதா அடிக்கப்போருரேன்னு பயந்துண்டு வரதெயில்லே மாமீ!

எங்கப்பாக்கு கை போயிடுத்தொன்னே! அதுனலே இப்படி தினம் சுண்டல் வித்து நாங்க பொழக்கிருேம். சரி, நான் போறேன் மாமீ! பாதி சுண்டலுக்கு மேலே அப்படியே இருக்கு மாமீ" என்ருள். மைதிலி மிகுந்த பொறுமையுடன், "வாஸந்தீ! எதோ சுண்டலெ காட்டு பார்ப்போம்" என்ருள். வாஸந்தி மூர்த்தியின் கையிலிருந்து சுண்டல் கூடையை வாங்கிக் காட்டினள்.

மைதிலி கூடையுடன் அப்படியே வாங்கி நிர்தாக்ஷிண்யமாகவும் யாரும் எதிர்பார்க்கா வண்ணமும் அங்கு போகும் மீன் பிடிக்கும் செம்படவனைக் கூப்பிட்டு அவன் கையில் கூடையுடன் சுண்டலைக் கொடுத்துவிட்டுத் தன் கையிலிருந்த மணிபர்ஸை அப்படியே வாஸந்தியின் கையில் கொடுத்து, "கண்ணா! இதைத் தடுத்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும். அப்பறம் ஒன்னெடே பேசவேமாட்டேன். இதை அப்படியே அம்மாவிடம் கொண்டுபோய் கொடு. முழிக்காதே. ஊம். பேசாதே போய் விடு!" என்ருள்.

அதே சமயம் மோட்டாருக்கு ரெட்லைட்டு வைத்ததுபோல் கண்கள் சிவக்க, கிழவன் இதைப் பார்த்துக்கொண்டே எதிரில் வருவதைக் கவனித்துவிட்ட வாஸந்தி, "ஐயோ! மாமீ! தாதா

வந்துட்டார். அப்பா! அப்பா! நீ வந்துடு; போயிடலாம்" என்று தகப்பனாரின் கையைப் பிடித்துக்கொண்டு பர்ஸுடன் ஓட்டமாக ஓடிப்போய் விட்டாள்.

36

இடையில் ஒரு மாதம் ஓடி மறைந்தது. ஒவ்வொரு நாளும் மாயக் கொள்ளையின் பேச்சே அந்த ஊர் முற்றும் பரவிவிட்டது. வாசனை திரவியம் விற்பது மட்டுமல்ல. எண்ணெய், நெய், புஷ்பம் முதலிய முகர்ந்து பார்க்கக்கூடிய ஒவ்வொரு வஸ்துவிலும் மயக்கம் கலந்து கொள்ளையடிக்கிறார்கள் என்ற கம்ப்ளேண்டுகள் போலீஸுக்கு வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன.

தினம் வீதியில் செல்லும் ஒவ்வொரு வியாபாரியையும் போலீஸார் சோதிக்க வாரம்பித்தார்கள். ஒன்றிலும் தகவல் கண்டுபிடிக்க முடியாத பெருங் குழப்பமும் கலவரமும் உண்டாகி விட்டது. சில இடங்களில் இரெண்டொருவர் இறந்துவிட்டதாகவும் அவ்வப்போது செய்தி கிடைப்பதால், போலீஸ் டிபார்டுமெண்டிலேயே அதிகமான பரபரப்பையும் ஊக்கத்தையும் அளித்ததால் ரிஸர்வ் போலீஸை நிறைய வரவழைத்து ஆங்காங்கே ரகசியப் போலீஸும் உடுப்புப் போலீஸும் பாராப் போட்டுவிட்டார்கள்.

இன்று ஏகாம்பரத்தின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. அவருடைய உள்ளத்தில் தாங்க முடியாத விசனம் பொங்கி வழிகிறது. பெருமூச்சுடன் தன் ஆசனத்தில் உட்கார்ந்தபடியே, "ஹா! என்ன கஷ்டம். என்ன பரிதாபம்! குழந்தை வாஸந்தியின் துடிப்பைச் சகிக்கமுடியலேயே. மூர்த்தியின் கதறல் என்னுள்ளத்தைப் பிளக்கிறது. கோரக் காட்சி! கண்றாவிக் காட்சி. உம். சவத்தை சின்னாபின்னமாக்காமல் கொடுக்க உதவி செய்யாதெ போனா நான் பொதுஜன ஊழியன்றதுக்கு என்ன பலன்?" என்று வாய் விட்டுச் சொன்னார்.

எதிரில் நிற்கும் சப்-இன்ஸ்பெக்டர், "ஆமாம் சார்! ரொம்ப பரிதாபமாயிருக்கு சார்! அந்தம்மாள் நாளைக்கி வெள்ளிக் கிழமையாச்சே! காத்தாலே பூஜைக்குப் புஷ்பம் ஒணும்னு புஷ்பம் வாங்கினளாம். அதோடெ சண்பகப் பூவும் இருந்ததாம். வாஸந்திக்காக தேர்ந்து பார்த்து வாங்கினளாம். அப்படியே பிராணன் போயிருக்கு. அவள் மடியிலிருந்த மணிபர்ஸு, கழுத்திலிருந்த தாலி உருவு, கையிலிருந்த பித்தளை வளையல் எல்லாம் போயிட்டது. ஐயோ பாவம்! குழந்தைகளின் பரிதாபந்தான் சகிக்கல்லே. சவத்தைக்கொண்டு போகும்போது மூர்த்திக்கு மயக்கமே போட்டுவிட்டது" என்றார்.

என்ன அநியாயம்! இம் மாயக் கொள்ளையின் விஷம் வேணியை அரைக் கணத்தில் விழுங்கி விட்டதென்றால் ஊரே ஏன் கதறிக் கண்ணீர் விடாது? சவத்தைப் போலீஸார் முறைப் படிக்குக் கொண்டுபோய்ப் பரீக்ஷித்தார்கள். சவமாவது வந்து தம் கையினால் அடக்கம் செய்ய வேண்டி மூர்த்தியும், வாஸந்தியும் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தினிடம் கெஞ்சிக் கதறினார்கள்.

இயற்கையிலேயே நல்ல உத்தம குணமும் தயாளத் துவமும் பொருந்திய ஏகாம்பரம் மனமுருகியதால் மேலதிகாரிகளின் உத்திரவு பெற்றுச் சவத்தை சீக்கிரமாக அவர்களிடம் கொடுத்துவிட்டார். ஒரு உத்தமி கற்பிற்கரசி, மங்கையர் மாணிக்கம் ஒரு விநாடிப் பொழுதில் உலகைவிட்டு மறைந்து விட்டாள், என்னே மனித வாழ்வு!

37

பிணமேளத்தின் பெரும் முழக்கத்தையும் பிறிக்கொண்டு, "அம்மா! அம்மா! எங்களைத் தனியேவிட்டு எப்படியம்மா போனே! இனுமே எங்களுக்கு யாரம்மா திக்கு!" என்ற இரு குரல்களின் கதறலும், "வேணீ! வேணீ! இது உனக்குத் தகுமா! இருண்ட உலகத்திலெ என்னைத் தவிக்க விட்டுப் போகலாமா?" என்ற ஒரு குரலின் ஓலமும், "ஐயோ

பாவம்! மாயக் கொள்ளையாலே நிமிஷத்துலெ செத்துட்டாளாமே. ஐயோ! கொழந்தைகளின் பரிதாபம் சகிக்கல்லயே! அந்த மனுஷன் உசிரும் பூடும்போல இருக்கே. வீட்டுலே ஒரு கிழவி கோட்டானுட்டமா இருக்காளே! அவ சாகக் கூடாதா! என்ன அநியாயச் சாவு. மகாலட்சிமிபோல போறாளே" என்ற பொது ஜனங்களின் அபிமான வார்த்தைகளின் பேரொலியும் ஒன்று கூடி-தெருவெங்கும் ஒரே சப்தமாக ஒலித்தது.

வேணிக்கு மஞ்சள், புஷ்பம், குங்குமம் முதலிய அலங் காரங்கள் செய்து அவளை அடக்கம் செய்யத் தூக்கிச் செல்லும் பரிதாபக் காட்சி வீதியிலுள்ள அத்தனை ஜனங்களின் மனத் தையும் உருக்கிக் கண்ணீர் பெருக்கச் செய்துவிட்டது. ஆனால், வேணியின் அந்தரங்க சினேகிதையும், பரிசுத்தாத்மாவுமான மைதிலியை, அன்று வாஸந்திக்குப் பீச்சில் மணிபர்ஸை கொடுத்த நாள் முதல் கிழவர் தனிச் சிறையில் போட்டுவிட்டதுபோல் தனியறையில் போட்டுப் பூட்டிவிட்டதால், இந்தக் கோரச் சம்ப வத்தை, மனத்தை அள்ளிப் பிடுங்கும் துக்க சம்பவத்தை அந்த உத்தமி எப்படி அறியக்கூடும்? அறிந்தால் அவளது சரீரமும் ஆன்மாவும் சிறையிலடைபட்டு இருக்குமா?

கூடத்து உள்ளே அடைபட்டுக் கிடக்கும் மைதிலியின் காதில் ஏதோ சவத்தின் கொட்டு முழக்கு முதலில் கேட்டது. "எந்தப் புண்ணியாத்மாக்களோ இந்த பாப உலகத்தை விட்டுச் செல்கிறார்கள்! ஆணோ! பெண்ணோ! கிழமோ! கட்டோ யார் கண்டது. உம். அவர்கள் கஷ்டம் நீங்கி நிம்மதி உலகம் செல்லு கிறார்கள். அம்மாதிரி இப்பாவி செல்லும் காலம் வருமா! எது வரப் போவதே இல்லை" என்றெல்லாம் தனக்குள் எண்ணிப் படுத்திருக் கையில் "அம்மா! அம்மா!" என்று கதறும் குரல் கேட்டது.

அந்த சமயம் வீதிப் பக்கத்து ஜன்னல் பக்கமாக, "ஒணம்! ஒணம்! நன்னா ஒணம் என்னெ மானபங்கம் பண்ணின பாவம் வீணாகப் போகுமா! அதனால்தான் உன் பசெங்களெயும் புருஷனையும் விட்டுட்டு உலகத்தையே விட்டுப்போறே! வேணீ! போ! போ! நாலு பேர் தோள்மேலே சவாரி போ! கண்ணே.

மூடிண்டுபோ?" என்று ஆத்திரத்துடன் கிழவர் சொல்லும் குரல் மைதிலியின் காதில் நெருப்புபோல் விழுந்தது. அதே சமயம், "ஹா! வேணீ! வேணீ!" என்ற குரலும், "அம்மா! அம்மா!" வென்ற கதறலும் மீண்டும் கேட்டது.

"ஐயோ! வேணியா செத்துப்போய்விட்டாள். ஐயையோ! இதென்ன அக்கிரமம்! இதென்ன அநியாயம்! கருப்பா! கருப்பா. அடே கருப்பா!" என்று ஒரே கர்ஜனை செய்தாள். கருப்பன் கண்ணீர் பெருக ஓடி வந்து, "அம்மா! அந்த வேணி யம்மா செத்துபுட்டாங்களாம்மா! பொணம் எடுத்திகினு போராங் கம்மா. கொயந்தெங்க கண்ராவியும் அந்த ஐயாவோடே வவுத் தெரிச்சலும் பாக்கச் சகிக்கலேம்மா!" என்று புலம்பியபடியே சொன்னான்.

மைதிலிக்கு ஏற்கெனவே அடைபட்டுக் கிடப்பதால் பயித் தியம் பிடித்ததுபோல் இருந்த நிலைமை பின்னும் அதிகரித்து, விசனமும் ஷாக்கும் சேர்ந்ததால், வெறி பிடித்தவள்போல், "ஐயோ! வேணியாடாபோயிட்டா கருப்பா! கதவு பூட்டெ ஒடெ! ஒடெ! முன்னே ஒடச்சு எறி. உம். யோசனை என்ன? பூட்டெ ஒடக்கரெயா! நானும் வேணி பின்னாலேயே போரத் துக்கு இதோ பொடவெயாலே கழுத்துலே சுருக்கு மாட்டிண்டு சாகட்டுமா! கிழவரே எதிர்பார்க்காதே" என்று பெருத்த கூச்சல் போட்டுக் கத்துகிறாள். கண்ணீர் ஆறாய் ஓடுகிறது. தேகம் முற்றும் எரிவதுபோல் தத்தளிக்கிறது. புழுவைப்போல் துடித்த வாறு கதவை தடதடவென்று தட்டிப் பிளந்துவிட்டாள்.

கருப்பன் கிழவருக்காக முதலில் சற்று நேரம் பயந்தான். எனினும் மைதிலி தற்கொலை செய்து கொள்வதாகக் கூறிய உடனே ஒரு இரும்பு சுத்தியால் பூட்டின்மீது ஒரு அடி வைத்தான், அதே சமயம் கிழவரின் கைத்தடியால் கருப்பனின் மண்டையில் ஓங்கி பலமான அடி யொன்று விழுந்ததும், "ஹா! அம்மா!" என்று கூவிக்கொண்டே தடாரென்று கருப்பன் கீழே விழுந்தான்.

38

மீனாட்சி பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது வீதியில் பிணம் செல்வதையும் வாஸந்தியும் மூர்த்தியும் கதறுவதையும் பார்த்ததும், சிறுமியானாலும் அவள் மனசு தாங்காமல் கண்ணீர் முட்டுகிறது. தன் தாயார் இறந்துவிட்ட கதைகள் முற்றும் நினைவிற்கு வந்து விட்டன. தன்னைப்போல் வாஸந்தியும் தாயற்ற பரதேசியாகிவிட்டாளே என்ற விசனமும் அனுதாபமும் மீனாவைக் கப்பிக்கொண்டன. இச் செய்தியை உடனே தன் சித்திக்குச் சொல்லும் பொருட்டு, ஓட்ட ஓட்டமாக ஓடி வரும்போதே, "சித்தி! சித்தி! வேணி மாமி செத்துப்பூட்டா! சித்தீ! பொணம் தூக்கிண்டு போரா! வாஸந்தி ரொம்ப அழுரா சித்தி! ஐயோ, பாவம்னு இருக்கு சித்தி!" என்று கூவிக்கொண்டே மைதிலியைப் பூட்டி இருக்கும் அறைப் பக்கம் ஓடி வந்தாள்.

அப்போதுதான் கிழவர் கருப்பன் மண்டையில் அடித்ததும், அவன் கீழே விழுந்ததும், உள்ளிருந்து மைதிலி கத்துவதும் மீனு நேரில் பார்த்து, நடு நடுங்கி சில வினாடி நேரம் அப்படியே ஸ்தம்பித்துவிட்டாள். அங்கு நடக்கும் சம்பவத்தின் காரணத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவள் யூகித்தறிந்துகொண்டாள். மைதிலி, 'ஐயோ! கதவைத் திற; திற' என்று கத்திக் கொண்டே இருப்பதையும் மீனு உணர்ந்தாள். பிறகு தன்னைச் சற்று ஒருவாறு சமாளித்துக் கொண்டு, தனக்குள் ஒரு யோசனை செய்து கொண்டாள்.

மெல்ல தகப்பனாரிருக்கும் இடத்திற்கு வந்து கண்ணீர் பெருகியவாறு, "அப்பா! வேணி மாமி செத்துப்பூட்டாப்பா! வாஸந்தியும் என்னைப்போலெ தாயில்லாத பரதேசிப் பொண்ணாயிட்டாப்பா! நீ ரொம்ப பணக்காரனா இருக்கரதாலே எனக்காவது ஒரு குறைவும் இல்லெ. வாஸந்தி ஏழெயாச்சேப்பா! அவா அம்மாவும் செத்துப்போயிட்டாளே! அவளுக்கு யார் சாதம் போடுவாப்பா!" என்று பெரிய குரல் பாய்ச்சி அழுதபடியே கிழவரைக் கட்டிக் கொண்டு, அவர் இடுப்பில் சொருகி இருந்த சாவிக்

கொத்தை மெல்ல கழற்றித் தன் ஜோபியில் போட்டுக்கொண்டு கோவென்று கதறினள்.

கிழவருக்கிருந்த ஆத்திரத்தில் அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லே. "படுநீலி முண்டே! கருப்பனைக் கூட்டு கதவெ ஒடைக்கச் சொல்ல ஒனக்கு அத்தனெ தைரியமாடீ வந்துடுத்து?" என்று மைதிலியை வைவதிலிருந்ததால் மீனுவின் செய்கையை அவர் கவனிக்கவில்லே. மீனுவை இழுத்துத் தூர தள்ளிவிட்டு, "சீச்சீ! மூதேவி! யார் செத்தா யாருக்கென்னடீ! தரித்திரமே! பெலாக்கணம் பாடி சித்தியோடெ நீயும் அழுடீ! பீடையே! எல்லாம் அஸமஞ்சமா வந்திருக்கு" என்று சீறி சிள்ளென்று விழுந்தார்.

மீனு கண்ணைத் துடைத்தபடியே சுற்றுமுற்றும் பார்த்துப் பின்னர், மெத்தையைப் பார்த்தாள். "அப்பா! அப்பா! அதோ மெத்தைலே வேணு மாமா வந்திருக்காப்பா! எதையாவது எடுத்துண்டு போயிடப் போராளெப்பா!" என்று தந்திரமாய்க் கூறியதுதான் தாமதம். "என்ன! என்ன! வேணு வந்திருக்கானு? கட்டெலெ போரவனெ! இந்த வீட்டுக்கு வரத்துக்கு அத்தனெ தைரியமாடா! வா! வா! வாடா! வா! இன்னிக்கு ஒங்காதலி ஒங்கண்ணுக்கு ஆப்படமாட்டா! ஒன்னெ இன்னியோடே தொலெச்சு தலெ முழுகிப்புட்ரென் வா!" என்று கைத்தடியுடன் தடதடவென்று மெத்தையை நோக்கி ஓடினர்.

மீனு வெகு சுறுசுறுப்பாக அந்தக் கதவின் பூட்டைத்திறந்து விட்டதும், மைதிலி தலேவிரி கோலமாக, "ஹா! வேணீ! வேணீ!" என்று கதறியபடியே வீதிப் பக்கம் ஓடி வந்தாள். அவள் வருவதற்கும் சவம் இவர்கள் வீட்டுப்பக்கம் வருவதற்கும் சரியாக இருந்தது. தூக்கிச் செல்லும் பிணத்தருகில் காளிகா தேவியின் ஆவேசமும், உடன்பிறந்த சகோதரியின் ஒப்பற்ற வாஞ்சையும் ஒன்றுகூடி ஓடிவரும் மைதிலியைக் கண்டு எல்லோரும் வியப்புற்று அசைவற்றனர்கள்.

ஓடி வந்த மைதிலி, "ஐயோ! நில்லுங்களேன்! நில்லுங்களேன்! அந்தப் புண்ணியவதியின் அழகு முகத்தை—ஆசை முகத்தைக்—காட்டுங்களேன்! வேணீ! வேணீ!" என்று பதறித் துடிக்கும் துக்கத்துடன் பாடையைப் பிடித்திழுத்துக்கொண்டு கூடவே ஓடினள்.

பிணம் தூக்கிகளுக்கும் மனது கரைந்து விட்டதால், சவத்தைத் தாழ்த்திக் கையில் பிடித்தபடியே காட்டினார்கள். மைதிலி வேணியின் முகத்தோடு முகம் பதித்து, "வேணீ! உத்தமீ! புண்ணியவதி! ஐயோ! உனக்கா சாவு வரணும்? மகா பாவி உலகத்திலேயே உதவாக் கட்டையான எனக்கு வரக்கூடாதா! ஐயோ! வேணீ!" என்று கதறும் சமயம் வாஸந்தி தள்ளாடித் தடுமாறிக் கதறியபடியே ஓடி வந்து, "மாமீ! எங்கம்மா செத்துப் போய்ட்டாளே மாமீ! இனுமே நாங்க என்ன செய்வோம் மாமீ! ஐயோ! மாமீ! எங்களெ உட்டுட்டுப் போய்ட்டாளே மாமீ!" என்று கூவியவாறு மைதிலியைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள். இக்காட்சி அங்குள்ள அத்தனை பெயர்களின் மனத்தையும் உருக்கியது. யாவரும் கண்ணீர் பெருக நின்றார்கள்.

மைதிலி, "கண்ணு! வாஸந்தீ! என் செல்வமே!" என்று சேர்த்துக் கட்டிக் கொண்டு, தேகம் குலுங்கக் குலுங்கப் புலம்புகிறாள். மெத்தைக்கு ஆத்திரத்துடன் சென்ற கிழவர் அங்கு வேணுசாமியை எங்கு தேடியும் இல்லாததால், ஏமாற்றத்துடன் திகைக்கையில், மைதிலி வீதியில் கதறும் குரல் கேட்டுக் குடுகுடு வென்று பால்கனிக்கு ஓடி வந்தார். வீதியிலுள்ள காட்சியைக் கண்டதும் தூக்கி வாரிப்போட்டது. பூட்டி யடைத்து வைத்திருந்த பறவை எப்படி கூட்டை விட்டுப் பறந்து விட்டது? "இதென்ன மோசம்? இதென்ன அநியாயம்?" என்று பின்னும் ஆயிரம் மடங்கு அதிகரித்த ஆத்திரத்துடன் செய்வதறியாது நின்றார்.

அதே சமயம் இத்தனை அமர்க்களத்திலும் வழக்கம் போன்று வாழ்க்கையின் நாதமான வானக்குயிலின் இனிய கீதம் கணீர் என்று சப்தித்தது.

(அதே மெட்டு—சரணம்)

இன்றிருப்பது மெய்! நாளை இருப்பது பொய்
என்றறிந்துன் கடமை ஆற்றி இறைவனிடம்
சென்றிடுவாய் மனமே. (தூய்மை)

...இந்தத் தேவகானத்தின் அதியற்புதமான அபார வசீகர சக்தியால் கவரப்பட்ட மைதிலி, தலை கட்டிய நாகம்போல் துவண்டு பிணத்தின்மீது விழுந்துவிட்டாள்.

39

சவச் சடங்குகளும் இமச் சடங்குகளும் முடிந்தன. மூர்த்தி ஏற்கென்வே அரைப் பயித்தியமாக விருந்தவன் முக்கால் பைத்தியம்போல் ஆய்விட்டான். ஊண் உறக்கம் துறந்து தேகம் மெலிந்து, "வேணீ! வேணீ!" என்று புலம்பித் தவிக்கிறான். மைதிலி, அன்று சவ அடக்கம் ஆன உடனே வாஸந்தியையும் ராஜுவையும், தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டாள். வாஸந்திக்கும் ராஜுவுக்கும் பலவிதத்திலும் தேறுதல் சொல்லி, அவர்களைப் பராக்குக் காட்டி, சமாதானம் செய்வதையே மைதிலி முக்கியமாகக் கொண்டாள்.

கிழவருக்கு இந்தச் செய்கை எரியும் உடம்பில் எண்ணெயும் வார்த்ததுபோல் தோன்றியது. ஆத்திரம் பின்னும் மூண்டது. சதா மைதிலியைத் திட்டியும் சில சமயம் அடித்தும் இழிவாகப் பேசியும் இம்சை செய்து வருவதை வாஸந்தி உணராமலில்லை. தங்கள் பொருட்டு மைதிலிக்கு ஏற்படும் துன்பங்களை அவள் சின்ன பெண்ணாயினும் நன்றாக அறிந்து இதற்கென்ன வழி செய்வதென்று யோசிக்க வாரம்பித்துவிட்டாள்.

மைதிலி, குழந்தைகளுக்காக காப்பி ஆற்றிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் வாஸந்தி, ராஜு, மீனா மூவரும் உட்கார்ந்திருந்தார்கள். பொங்கும் ஆத்திரத்துடன் அங்கு வந்த கிழவர் பதட்டத்துடன், சற்றும் யோசிக்காமல், "ஏண்டீ! இந்த மாதிரி சோம்பேறிக் கூட்டத்தைக் கூட்டி வைத்துக்கொண்டு, என் குடியைத் தண்டகுடியாக்கவாடி இம்மாதிரி செய்றே! பவிஷு

கெட்ட கழுதைகளுக்குக் காப்பியும் டிப்பனும் வேறேயா?" என்று கூறிக்கொண்டே ஆத்திக் கொண்டிருந்த காப்பியை வெடுக்கெனப் பிடுங்கிச் சற்றும் அஞ்சாமல் மைதிலியின் தலைமீது கொட்டி விட்டார். இந்த விபரீத செய்கையைக் கண்டு குழந்தைகள் மிரண்டுபோய், "ஹா! மாமீ! மாமீ!" என்று வாய்விட்டுக் கூறிய படியே எழுந்தார்கள். கிழவர் தங்களையும் என்ன செய்து விடுவாரோ வென்ற பயத்தால் நடுநடுங்கினார்கள்.

அதுவரையில் தனது பொறுமையை இழக்காதிருந்த மைதிலிக்கு ஆவேசம் காளிகா தேவியைப்போல் வந்து விட்டது. காப்பி வழியும் தலையுடனும், ஆவேச முகத்துடனும் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு, "ஆஹ்ஹா! இவ்வளவு தூரமா மிதமிஞ்சிவிட்டது. நான் எனக்காகவும் உங்களுக்காகவும் பயப் படவில்லை. என்னைப் படைத்த, பெற்ற தாய்நாட்டின் பெருமைக் காக, நான் இதுவரையிலே பொறுத்திருந்து நீங்கள் செய்த அநியா யத்துக்கெல்லாம் ஆளாகி இருந்தேன்.

பாரத நாட்டு நாரீமணிகளின் வழியைப் பின்பற்றி நடக் கணும்; அவர்கள் காட்டிய வழிக்குப் பங்கம் செய்யக்கூடாது. ஹிந்து தர்மத்தின் மகிமையைக் கெடுக்கக் கூடாது. பொறு மையை இழக்கக் கூடாது என்றெல்லாம் நான் எண்ணி, என்னைப் படுத்தும் சித்திரவதைகளை எல்லாம் சகித்தேன். அப்படி நான் இனுமே பொறுக்கமாட்டேன்.

அக்கிரமம் மிஞ்சிப்போனா அதையும் தடுக்க வேண்டியது என் கடமை. என் வாழ்வைப் பாழ்படுத்தி கொலை செய்தது மில்லாமல், இன்னமும் விபரீதம் விளைக்கவா எண்ணி இருக் கிறீர்கள்? மகா உத்தமியான வேணியின் குடும்பம் யாராலே சிதறி அழிந்தது? அந்த உத்தமியின் உயிருக்கு உயிரான புருஷ னுக்கு யாரால் அங்கபங்கம் உண்டாச்சு? இந்த ரகசியத்தை மூடி வைக்கணுமா, ஓடச்சி வெளியே இழுக்கட்டுமா?

பொறுக்கப் பொறுக்க போராட்டமே அதிகமாறது. இந்த வீட்டின் சகல சொத்தும் எங்க அப்பன் வீட்டுது என்றது ஞாபக மிருக்கட்டும். நான் இன்னமும் மைனர் நீங்காதவள். என்

சொத்தை அபகரிக்க உங்களுக்கு என்னிக்கும் சுதந்திரம் கிடையாது. நான் முன்னொரு காலத்தில் எழுதிக் கொடுத்த கடிதாசி மைனரானதால், சட்டப்படி செல்லாதுன்றது ஞாபகமிருக்கட்டும்.

அதிகமா வாலாட்டினுல் இனிமே நான் பயப்படப் போறதில்லே. மன்மத பாண சஞ்சீவிக்கும் மற்ற மருந்துக்குமே கடன்பட்டிருக்கும் ரகஸியமும்....ஹா!....இன்னொரு கொடிய ரகஸியமும் கூட எனக்குத் தெரியும். அதிமாகப் பேசினு எல்லாம் அம்பலமாயிடும். ஜாக்கிரதை" என்று துர்க்கா தேவிபோல் கூறியவாறு குழந்தைகளைச் சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

இம்மாதிரி தைரியத்துடன் மைதிலி பேசுவாள் என்று கிழவர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை யாதலால், சிடு சிடுத்துவிட்டது. முகத்தில் பிணைக் களை சொட்டுகிறது. ஆத்திரம் ஒருபுறம், அவமானம் ஒருபுறம், மைதிலியை ஒரே வெட்டு இரண்டே துண்டு செய்து விடலாமாவென்ற எண்ணமும் உண்டாகி விட்டது. பேந்தப் பேந்த விழித்தவாறு நின்றார்.

40

மைதிலியின் வீட்டில் ஒரு தனி இடத்தில் வாஸந்தி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள். ராஜு அவளைக் கட்டிக் கொண்டு, "ஏங்கா அழறே! ஐயோ! இதென்ன தழும்பு. தாதா அடிச்சுட்டாளா?" என்று கண்ணில் நீர் முட்டக் கேட்டான். வாஸந்தி அழுகையும் சிரிப்பும் கலந்த முகத்துடன், "இல்லே ராஜு! இல்லே" என்று கூறுகிறாள்; மேலே கூற முடியாது புலம்புகிறாள்.

ராஜு:—நீ பொய் சொல்றே! இதோ பாரேன் தழும்பு. ஐயோ! அக்கா! நாம்ப ஆத்துக்கு அப்பாகிட்டெ பூடலாம் வாடீ! இங்கே இந்தத் தாதாகிட்டே அடிபட வேண்டாண்டீ! என்னையும்

ாதா அடிச்சிபுடுவார். வாக்கா! ஓடிப் பூடலாம்.—என்று வாஸந்
யின் கையைப் பிடித்து இழுத்தான்.

வாஸந்திக்கும் அது சரியாகத் தோன்றியதாகையால், மெல்ல வந்து மைதிலியின் அறையில் எட்டிப் பார்த்தாள். மைதிலி டுத்துக் கண்ணை மூடிக் கொண்டிருந்தாள். அவள் தூங்குகிற மயந்தான் சரி என்று எண்ணியவளாய் மைதிலியைச் சற்று ன்று பார்த்துவிட்டுக் கண்ணீர் வழிந்தபடியே ராஜுவை இழுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடிவிட்டாள்.

வீதியில் இவர்கள் ஓடுவதை மெத்தையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கிழவர் தலையையும் தொந்தியையும் தடவியவாறு, "சனிகள் தொலைந்தன. இனி திரும்பி வரட்டும் சொல்றேன்" ன்று கூறியபடியே, "போங்கோ! திரும்பி வந்தா ஒதெ. பத்ரம்" ன்றார். வாஸந்தி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல் கையில், கிழவரைப் பார்த்ததும் ஆத்திரத்துடன் முகத்தையும் கையையும் வலித்து அழகு காட்டி எளனம் செய்துகொண்டே போய்விட்டாள்.

41

மூர்த்தி துரும்பென மெலிந்து பித்தன்போல் வேணியின் படத்தினருகில் உட்கார்ந்துகொண்டு, கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டே, "வேணி! என்னை இப் படித் தனியே விட்டுப் போவேன்னு நான் கெனவில்கூட நினைக் கல்லையே! என் கண்ணே! உத்தமப் பெண்ணே! எனக்கு வழி தெரியல்லையே! நான் இப்படிக் கஷ்டப்பட நீ செய்யலாமா! நீ இதைப் பார்த்துச் சகிக்கமுடியுமா! ஐயோ! நானொரு இடம்; நீயொரு இடம்; குழந்தைகள் ஒரு இடம்; நம் குடும்பம் இப்படியா சிதறிப்போகும்! என்னால் பொறுக்க முடியல்லையே! ஒன்னுக்கும்

உதவாத நொண்டி. நான் இனிமே என்ன உபயோகம்? நீ போன இடத்துக்கு என்னையும் அழைச்சிண்டு போகக் கூடாதா?

வேணி! அழைக்கமாட்டே, என் கனுவில்கூட வரமாட்டே, உன் பொறுமை நிறைந்த முகத்தைக் காட்டமாட்டே? ஒரு வார்த்தை உன் வாய் திறந்து சொல்லமாட்டே!" என்று புலம்பி வாய்த் துடிக்கும் சமயம் அவ்விடம் குழந்தைகள் இரண்டும் ஓடி வந்து, "அப்பா!" என்று கட்டிக் கொண்டு கோவென்னக் கதறி யழுதார்கள். துக்கத்தோடு துக்கம் ஒரே கையால் குழந்தைகளை வாரியணைத்துக் கொண்டு, "ஏண்டாப்பா! என்ன சமாச்சாரம்? என் கண்ணு! வாஸந்தி! ஏம்மா அழுறே?" என்று கேட்டான்.

வாஸந்தி :—(அழுதபடியே) அப்பா! அப்பா! நம்ப அம்மா ஏன் செத்துப்போனு! அவ செத்துப்போகவே தானே நமக்கிந்த கஷ்டம். அந்த மாமி எங்கமேலெ ஆசையா இருக்கான்னு அவளை தாதா எப்பப் பாத்தாலும் அடிக்கறு; திட்று. என்னையும் இதோ பாருப்பா தழும்பு விழும்படி அடிச்சுப்புட்டா! எங்களாலெ மாமிக்குக் கஷ்டம். அதாலெ சொல்லாமெ வந்துட்டேன்பா—என்று தேம்பித் தேம்பி அழுதாள்.

இதற்கு மூர்த்தி என்ன பதில் சொல்வான்! கலங்கிய அவனுடைய உள்ளத்தில் இன்னும் சகிக்க முடியாத துக்கம் பொங்கி விட்டது. வாய் திறந்து பதில் பேசவே முடியவில்லை. கண்ணீர் ஆருய்ப் பெருகுகிறது. வேணியின் படத்தில் வைத்த விழியை வாங்காமல், அப்படியே குழந்தைகளை அணைத்தவாறு தம்பித்து விட்டான்.

அச் சமயம் மைதிலி அங்கு வந்து கதவினருகிலேயே நின்று, இந்தக் கோரக் காக்ஷியைக் கண்டு சகிக்காமல், கண்ணீர் விட்டபடியே உள்ளே சென்ருள். அவளாலும் பேச முடியவில்லை. ராஜு ஓட்டமாக ஓடி வந்து மைதிலியின் காலைக் கட்டிக் கொண்டு, "மாமீ! இனுமே நாங்க ஒங்காத்துக்கு வரமாட்டோம். எங்க ஒடம்பெல்லாம் வீங்கிடும்படி தாதா பெரப்பாலெ அடிச்சு

புட்டா! இனுமே நாங்க வரவேமாட்டோம். எவ்வளவு கூட்டாலும் உங்காத்துக்கு வரவேமாட்டோம் மாமீ!” என்றான்.

வாஸந்தி :—(ஓடி வந்து மைதிலியைக் கட்டிக் கொண்டு) மாமீ! எங்களே மன்னிக்கணும். நீங்க தூங்கினங்கோ! சொல்லாமெ வந்துட்டோம். தாதாக்கு ரொம்ப கோவம் வரது மாமீ! நாங்க இங்கெயே இருக்கோம். எங்களாலே ஒங்களுக்கு வசவு வேண்டாம் மாமீ!—என்றாள். மைதிலிக்கு பதில் சொல்ல முடியாது கண்ணீர் பெருகி, துக்கம் தொண்டையை அடைக்கிறது. சோகப் பதுமைபோல் நின்றாள்.

மூர்த்தி :—(கண்ணைத் துடைத்துக் கொண்டு) அம்மா! ஒங்க உபசாரத்துக்கும் அன்புக்கும் பதில் ஒங்களுக்கு உபத்திரவ முண்டாகாமலிருந்தா போரும். அம்மணீ! ஒங்க தயவு குழந்தைங்க மேலே இருக்கிறதே போரும். வீணுக கஷ்டப்பட வேண்டாம். மன்னிக்கணும்—என்று வணக்கமாகக் கூறினான்.

மைதிலி :—(கண்ணீர் பெருகியபடியே) ஐயா! நான் பண்ண கருமத்தை நான் அனுபவிக்கிறேன். அதுக்கு குழந்தைகளென்ன பண்ணும்? கண்ணா! வாஸந்தி! வரமாட்டே? ராஜு! வரமாட்டே?

ராஜு :—ஊஹூம் வரவேமாட்டேன்.

வாஸந்தி .—மாமீ! மன்னிக்கணும் மாமி! எங்கப்பா தனியா இருந்தா ரொம்ப கஷ்டப்படுவா மாமீ! அவருக்கு நான் இருந்தால் ஒத்தாசையா இருக்கும் மாமீ! பாட்டியும் துடிக்கிறாருங்கோ! அவளுக்கும் நான் ஏதாவது செய்யலாமோன்னே, அதுக்காக வல்லே மாமி?—என்றாள். அதற்குமேல் மைதிலி ஒன்றும் சொல்ல முடியாமல், 10 ரூபாயைக் கொடுத்துவிட்டு வீட்டிற்குப் போய் விட்டாள்.

மூர்த்தி வேணியின் படத்தை நோக்கி, “வேணீ! நீ நிம்மதியாய் போயிட்டே. நான் நொண்டியாய் அலேயறேன். இருந்தாலும் ஒன்னெ முழுங்கி ஏப்பம் விட்ட அந்த மாயக் கொள்ளெக்காராளே புடிக்க நான் சத்ய சங்கல்பம் பண்ணதே இருக்க

மாட்டேன். அந்தச் சதிகாரக் கூட்டத்தைக் கண்டு பிடிக்க இப்பவே ஒம்மேலெ ஆணையா நான் கங்கணங் கட்டிக்கறேன். எந்தப் பாடு பட்டாவது நான் பிடிச்சே தீருவேன்" என்று அப் படத்தின் முன்பு சபதம் செய்துகொண்டு எழுந்தான்.

42

வீட்டில் பச்சிளங் குழந்தையான வாஸந்தியே, சமயல் செய்வது; கிழவி, ராஜு இருவருக்கும் போடுவது; தந்தைக்கும் தானே சில சமயம் கலந்து வாயில் ஊட்டுவது; ஓர் பெரிய குடும்பத்தைத் தாங்கும் தலைவிபோலாய் விட்டாள். ஆனால், சாப்பாட்டுக்குத்தான் வழி இல்லை. கையே இல்லாத மூர்த்தி எப்படி தையல் வேலை செய்ய முடியும். மைதிலியின் உதவியால் ஜீவனம் செய்வதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழியே இல்லை.

அன்று சபதம் செய்தது முதல், மூர்த்தி பைத்தியக் காரனைப்போல் தெருத் தெருவாய் அலைவதும், இந்தக் கொள்ளைக் கூட்டத்தாரை எப்படி பிடிக்கலாம் என்ற எண்ணத்தில் மூழ்குவதுமாக இருந்தான். யார் யார்மீது தனக்குச் சந்தேகமோ அவர்களை எல்லாம் பின் தொடர்ந்து கவனிப்பதும், சதா இரவும் பகலும் வீதியிலேயே அலைவதும், வேணியின் சமாதி யருகில் சென்று புலம்புவதுமாக இருப்பதைக் கண்ட சிலருக்கு இவன் அலைவதன் உள் மர்மம் தெரியாததாகையினால், பித்தம் பிடித்து விட்டது என்று எண்ணினார்கள்.

பின்னும் சிலர், "இவன் சம்சாரம் இறந்த பிறகு இரவு முற்றும் ஊர் சுற்றுவதால் புத்தியே கெட்டு விட்டது. நிய காரியத்தில் பிரவேசித்து ஊர் சுற்றுகிறான். குடிக்கவும் ஆரம்பித்து விட்டான்" என்று தாராளமாகச் பேச வாரம்பித்தார்கள். அநியாயமாகப் பேசும் அந்த வசைகள் மூர்த்தியின் காதில்

விழாமலில்லை. தன்னுடைய கஷ்ட காலத்தின் கொடிய ஆட்சியில் எதையும் கேட்கும் விதி என்று பொறுமையுடன் நினைத்தானே யன்றிச் சற்றும் அவற்றைச் சட்டை செய்யவே இல்லை.

மூர்த்தியின் கவலை நிமிடத்திற்கு நிமிடம் அதிகரிக்கும் வேகத்தில் அடிக்கடி அவனுக்குப் புத்திமாருட்டமும் தலைசுற்றலும் மயக்கமும், நடக்கும்போதே ஒருவிதமான சோர்வும் தடார் தடார் என்று தடை கட்டிய நாகம்போல் நின்று விழிப்பதுமான ஓர் நிலைமையும் உண்டாகி விட்டன. தனக்குச் சரியான புத்தி இருக்கிறதா, அன்றிக் கலங்கி விட்டதாவென்ற சந்தேகம் அடிக்கடி அவன் மனதிலேயே தோன்றிக் குழம்பிப் போவான். இத்தகைய தடுமாற்றங்கள் உண்டாகும்போது அவனை யறியாத ஓர்வித பீதியும் திகிலும், சகிக்க முடியாத துக்கமும் பொங்கி வரும். தன் பாழாப்போன விதியினால் ஒருகால் மூளையும் சிதறி விட்டால் என்ன செய்வது? பிறகு குழந்தைகளின் கதியும் கிழவியின் விதியும் எப்படி முடியும் என்று நினைக்கும்போது அவன் நிற்கவும் சாத்திய மற்றுத் துவண்டு கீழே விழுந்து விடுவான்.

இம்மாதிரி நிலைமையுடன் ஒருதினம் பகல், பித்தன்போல் வெகு தூரம் நடந்து செல்கையில், மேற் குறித்த எண்ணங்கள் அவனை முற்றிலும் கப்பிக்கொண்டுவிட்டன. தன் மொண்டிக் கையைப் பார்க்கிறான். சகிக்க முடியாத வேதனையுடன் கண்களை மூடிக்கொண்டு, 'ஹா!'வென்று ஒரு பெருமூச்சுடன் தடுமாற்ற மடைந்து, அவன் நடக்கும் வழியிலேயே விழுந்துவிட்டான்.

அங்கு சிறிது தூரத்தில் இரண்டு மூன்று பேர்கள் பேசிக் கொண்டே ஏதோ பச்சிலைகளைப் பறித்துக்கொண்டே இருந்தார்கள். மூர்த்தி கீழே விழுந்தவன் சிறிது நேரங்கழித்துச் சற்றுத் தெளிவு பெற்றுத் தலையைத் தூக்கிப் பார்க்கும்போது, "இந்தப் பச்சிலை தாண்ணே! இதுதான் மூந்து பாத்தலுடனே ஆளெ மயக்கிப்புடும். கத்தெ கத்தெயா இதெத்தாண்ணே கொண்டு வந்து மருந்து செய்யணும்" என்று ஒரு குரல் கேட்டது.

மூர்த்தி இதைக் கேட்டதும் ஏதோ புதையல் கண்ட தரித்திரன்போலச் சந்தோஷத்தை யடைந்து எழுந்து உட்கார்ந்து,

நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். சிறிது தூரத்தில் இரண்டு முரட்டு ஆள்கள் ஏதோ பூண்டுகள், பச்சிலைகள் இவைகளைப் பறித்துக் கொண்டு செல்வதைக் கண்டான். மெல்ல எழுந்து அவர்கள் செல்லும் திசையாகவே சென்று பார்த்தான். அதற்குள் அவர்கள் வெகு தூரம் போய்விட்டார்கள். அவர்கள் பறித்தது எந்தப் பச்சிலையாக விருக்கும் என்று அவன் கீழேயுள்ளவற்றையெல்லாம் பார்த்தான். அங்ஙனம் பார்த்தும் ஒன்றும் தெரியவில்லை. ஏதாவதொரு இலையை முகர்ந்து பார்க்கவும் பயப்பட்டவாறு சில இலைகளை மட்டும் பறித்துக்கொண்டு, "வேணீ! உன்னைக்கொன்ற விஷம் இதுவாயிருந்தால், நீ எங்கேயோ தெய்வமாயிருந்து இதைக் காட்டிக்குடுத்து பழிக்குப்பழி வாங்கி என் ஆத்திரத்தைத் தீர்த்துச் சாந்தியை உண்டாக்கு" என்று வெறிபிடித்தவன்போல் கூறிக் கொண்டே "ஆம்! இந்தப் பச்சிலைகளை நாம் முதலில் இன்ஸ்பெக்டருக்குக் காட்டலாம்" என்று எண்ணியவாறு நடந்தான்.

43

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் வீட்டில் அவர் இந்த மாயக்கொள்ளையின் மர்மத்தைப்பற்றியே தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் வேதாசலம் வெகு அவசரமாக இன்ஸ்பெக்டரின் வீட்டிற்கு ஓட்டமாக ஓடிவந்தார். இவர் வரும் அலங்கோலத்தைக் கண்ட இன்ஸ்பெக்டர் சற்று வியப்புடன் "என்ன சார் விசேஷம்?" என்றார்.

வேதா :—விசேஷமா! ரொம்ப ரொம்ப விசேஷம்! மாயக் கொள்ளைக்காரர்களில் சிலபேர் பிடிப்பட்டுவிட்டார்கள். நான் என்னன்னு சொல்லுவேன் போங்கோ! என் கண்ணெயே, என் மனசெயே நான் நம்பலே. அக்கிரமம்! அநியாயம் சார்!

"என்ன! என்ன சமாசாரம்? சீக்கிரம் சொல்லுங்கோ! எங்கே பிடிபட்டிருக்கா! யார் புடிச்சா! எழுந்திரும் ஓடனே

போலாம்" என்று கூறிக்கொண்டே ஏகாம்பரம் எழுந்திருக்க முயன்றார். வேதாசலம் அவரைத் தடுத்து உட்காரவைத்து, "சார்! அவசரப்படாதேங்கோ! இருங்கோ! நான் தக்க போலீஸாரிடம் புடிச்சி குடுத்துட்டுதான் வந்திருக்கேன். அந்த மாயக் கொள்ளையிலே அந்த நொண்டி மூர்த்தியும் சம்பந்தப்பட்டிருக் கான்னுக்கா அதைவிட ஆச்சரியம் வேறே வேணுமா சார்!" என்றார்.

இதைக் கேட்டதும் ஏகாம்பரத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. "என்ன! என்ன! மூர்த்தி சம்பந்தப்பட்டிருக்கானு! இதென்ன வேடிக்கையா யிருக்கு. அவன் மனைவியெ கொலை பண்ணிப்புட்ட கொள்ளைக் கூட்டத்துலேயா அவன் சேருவான்? பழிக்குப்பழி வாங்கப்போறேன் என்றுதானே அவன் சொல் லிண்டிருந்தான்.

கிழவர்:—சார்! இதை யாரும் நம்பவே முடியாத காரியம்தான் சார்! மொதல்லே ஆசாமி பழிக்குப்பழி வாங்கத்தான் நெனேச்சிண் டிருந்தான். அதனுலே அவாளே கண்டுபிடிக்கத்தான் அலேஞ்சான். அதுலே ஒத்தனெ புடிச்சு போலீஸ்காரன் கிட்டே காட்டிப்புட்ர தாகப் பயமுறுத்தினும். அப்பறம் விஷயம் என்னுச்சு தெரியு மொன்னே? செத்தவள் எப்படியும் செத்துப்பூட்டா! அவ இனுமே திரும்பி வரப் போரதில்லே. தானே மொண்டி. சம் பாதிக்க வழியில்லே. சோத்துக்கோ வேறெ மார்க்கமே கிடை யாது. வீட்டிலேயோ நாலுபேர் சாப்பிட்டுப் பொழைக்கணும்.

இதெல்லாம் உத்தேசித்து அவளெ கொன்னத்துக்காகக் காட்டி குடுத்துட்டாக்கா இவனுக்கு லாபமென்ன இருக்கு? பிழைக்க ஏதாவது வழி வாண்டாமோ! "நீ இதை வெளிலே சொல்லாதே. ஒனக்கு வேண்டிய பணம் தரேன். நீயும் எங்களோடே சேந்துடு"ன்னு அவன் சொல்லி மூர்த்திக்குக் கடு தாசியும் எழுதினும். பணம்னு யார் சார் சும்மா இருப்பா! ஏன்? கஷ்டப்படாமெ சாப்படலாமே; செத்தவ செத்தா! இனுமே ஏன் அலேயணும்னு இந்த வழிலெ சேந்துட்டான்னு எனக்கு நேத் திக்கிதான் சமாசாரம் தெரிஞ்சுது.

ஒடனே இங்கே வந்து சொல்லிப்புடலாம்னு நெனச்சேன். இன்னும் கொஞ்சம் உண்மை எல்லாம் தெரிஞ்சிண்டு வரலாம்னு வந்தேன். தெற்குப் பேட்டையிலே இருக்கற ஒரு பாகவதர் வீட்டுலே மாயக் கொள்ளைக்காரா ரெண்டுபேர் வந்தாளாம். அந்த வீட்டு பெரியவர் மயங்கிப் போனபோது வேலைக்காரன் ஓடிவந்து வீதிலே அடிச்சுண்டானும். நான் தற்செயலா அங்கே போனேன். அப்போ மூர்த்தியும் வேறொரு ஆளும் நிக்கறத்தே கண்ணாலே பாத்துட்டு ஒடனே டெலிபோன் செய்து போலீஸாரே வரவழைச்சு அவாளெ புடிச்சுக் குடுத்துட்டேன்.

மூர்த்தி என்ன சொல்ரான் தெரியுமா? நானும் இவாளெ புடிக்கதான் துப்பறிபவன் போலே கூட வந்தேன்னு ஒரேயடியா அளக்கரான். கூட இருக்கர மனுஷன், இவனும் தன் மனுஷன் தான்னு சொல்லிப்புட்டான். இது எப்படி இருக்கு பாருங்கோ?" என்றார். ஏகாம்பரத்திற்கு இதை நம்பவே முடியவில்லை. "என்ன சார்! இது உண்மையானதா? நிச்சயமாவா சார்!" என்று பலதரம் கேட்டார்.

கிழவர்:—சார்! ஏன் இத்தனெ சந்தேகம்? நீங்க ஒடனே வந்து பாருங்களேன். மூர்த்தியின் வீட்டெயுந்தான் சோதனை போட்டு பாத்துட்டா தெரிஞ்சுபோறது—என்றார். உடனே ஏகாம்பரம் தன் உடுப்புகளை எடுத்து மாட்டிக்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிழவருடன் மோட்டாரில் கிளம்பினார்.

44

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் கூட்டம் சொல்லத்திறமில்லாது கூடி இருக்கின்றது. மாயக்கொள்ளைக்காரன் புடிபட்டுவிட்டானும். அவன் நாசமாப் போக. அவன் எழவெடுக்க. எத்தனெபேரெ அவன் அக்கிரமமாகக் கொள்ளையடிச்சான்! எத்தனெ பேரைக் கொன்னான். அவனும் புடிபடுவானுவென்று எல்லோரும் எதிர் பாத்ததுக்குப் புடிபட்டுவிட்டான்; 'இனிமே என்ன பயம்?' என்று

பொது ஜனங்கள் தங்கள் தங்கள் மனம்போனவாறு பேசிக்கொள்கிருர்கள்.

அவர்களில் சிலர், "ஐயையோ! இந்த தர்ஜி மூர்த்தியும் கொள்ளைக் கூட்டத்துலே சேந்துட்டானமே. அவனெயும் புடிச்சுட்டாளாமே. அவனுக்குக் கையும் ஒடெஞ்சுது. பொண்டாட்டியும் செத்தா. இனுமே பொழைக்க வழியில்லென்னு திருடவும் ஆரம்பிச்சுட்டானமே. இதென்ன அக்கிரமம்! கை வரண்டால், கையே கன்னக்கோலாகும். வறுமை வந்தால் சிறுமை புத்திதானே உண்டாகும் என்பது மெய்யாகிவிட்டதே. அடபாவமே! வீட்டுலெ ரெண்டு பசங்க, ஒரு கிழவி எல்லாரையும் விட்டு இந்த மனுஷன் ஆப்ட்டுண்டானே" என்று கூறுகிருர்கள். சிலர், "சிச்சி! அவன் மகா யோக்யமாச்சே இப்படி செய்வாளு? அவன் மனைவி செத்த பிறகே அவனுக்குப் பயித்தியம் பிடித்து விட்டது. பயித்தியத்தில் என்ன செய்தானே?" என்கிருர்கள்.

வீதியில் தன்னைப்பற்றி இவ்விதமெல்லாம் கூறும் வார்த்தைகளை இடிந்துபோன மனத்துடன் உள்ளே வயிறெரிய இதயத் துடிப்புடன் உட்கார்ந்திருக்கும் மூர்த்தி எங்ஙனம் அறிவான் பாவம்!

அதிகமான சந்தோஷம் வந்தாலும் அதிகமான துக்கம் வந்தாலும் மனிதர்களுக்கு நிலை புரண்டு வெறி பிடிப்பது சகஜம். அந்த நிலைமையில் மூர்த்தியின் தாங்கமாட்டாத துயரத்தில் மூளையே சுழன்று சித்தம் கலங்கிவிட்டதுபோலாகிவிட்டது.

நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பது என்பது மூர்த்தியின் விஷயத்தில் சரியாகி விட்டது. அவன் பழிக்குப் பழி வாங்கிவிட எண்ணியதற்குப் பதில், அவன் தலைமீதே பழியும் அபாண்டமும் விழுந்து விட்டதும், அவன் ஆத்திரத்தினுல் ரண வீரபத்திரனைப்போல் கண்கள் சிவக்க, "ஐயோ! அநியாயம். அநியாயம். நான் நிரபராதி. நான் நிரபராதி. நான் நிரபராதி. கடவுளே நான் நிரபராதி!" என்று கத்துவதைத் தவிர, மற்றபடி ஒன்றும் தெரியவில்லை.

இவனைக் கைது செய்து கொண்டு வந்த சப்-இன்ஸ்பெக்டர் "ச்சச் கத்தாதே! நீ நிரபராதின்றது ஒன் செய்கையே காட்டி

விட்டதே! ஏன் கூச்சல் போட்றே? பேசாமலிரு" என்
ஒரு அதட்டு அதட்டினன். அப்போது அங்கு வந்த ஹெ
கான்ஸ்டேபிள் ஒருவிதமாக பல்லேக் கடித்துக் கொண்டே
மூர்த்தியை நோக்கி, "உஹூம்! அய்யா ஆப்டுக்கிறாரா?" என்றான்
சப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "சார்! இவன் மேலே எனக்கு சி
நாளாகவே ஒரு சந்தேகம் இருந்தது. அதனுல் இவனைப் பிடிக்
சமயம் பாத்துண்டே இருந்தேன். இன்னிக்கு அது ஒங்
கையாலெ முடிஞ்சுது. இவனே லேசில் விடாதெங்கோ! இவ
பயித்தியம்போல் நடிக்க கொஞ்ச நாளாகவே பழகிவரான். இந்த
கூச்சலுக்கெல்லாம் இந்தப் போலீஸ் புலிகளா பயப்படும்? பேசா
லிருங்கோ" என்று முறைப்பாகக் கூறினன்.

மூர்த்தியின் மார்பு வெடித்துவிடும் போலிருக்கிறது
"ஐயையோ! என் மேலெ பழி சொல்றது அநியாயம்! அக்கி
மம். நான் நிரபராதி! நான் நிரபராதி! கடவுளே! ஆண்டவனே
நான் நிரபராதி!" என்று மீண்டும் கண்ணீர் வழிய பெரிய குர
பாய்ச்சிக் கதறினன். அதே சமயம் வேதாசலமும் ஏகாம்பரமு
அங்கு வந்தார்கள். உண்மையில் மூர்த்தியைப் பார்த்தவுடனே
ஏகாம்பரத்திற்கு ஆச்சரியமும் பரிதாபமும் பொங்கின. ஏகா
பரத்தைப் பார்த்தவுடனே மூர்த்தியின் துக்கமும் வயிற்றெரிச்
சலும் பீறிக்கொண்டு வந்துவிட்டன.

ஆவேசத்துடன் தன் ஒரு கையால், மொண்டி கையைச்
சேர்த்துக் கும்பிடுவதுபோல் தலைமீது தூக்கி வைத்துக்கொண்டு
உடனே ஏகாம்பரத்தின் காலில் விழுந்து, "ஐயா! ஒங்க அதி
காரத் தடபுடலில் நியாய அநியாயமில்லையா? என் உயிரினும்
இனிய வேணியைப் பலி வாங்கிய அந்தக் கூட்டத்தில் நான்
சேர்வேனு! இது ஒரு குழந்தைக்குக் கூடத் தெரியுமே! நான்
நிரபராதி! நான் நிரபராதி! என்னெக் காப்பாத்தணும்" என்று
கண்ணீர் பெருகக் கதறினன்.

கிழவர் முகத்தில் ஆத்திரக் களை ஜ்வலிக்க மேல் வேஷ்
டியை உருகி இழுத்துப் போர்த்திக் கொண்டு, "இன்ஸ்பெக்டர்
சார்! நானும் முதல்லே இவனெ ரொம்ப நிரபராதின்னுதான்

நெனச்சேன். பின்னுலே விசாரிச்சாதானே வள்ளல் வெளிப் பட்றது. இவன் இந்த வேஷமெல்லாம் போட்டா இனுமே பிரயோஜனம் என்ன?” என்று தானே முந்திக்கொண்டு, முந்திரிக் கொட்டைபோல் கூறினர்.

ஏகாம்பரம், மூர்த்தியை எழுந்திருக்கும்படிக் கூறி, தானே தூக்கியும் விட்டுப் பின்னர், “ஐயா! கத்தாதேயும். இது போலீஸ் ஸ்டேஷன்; வீடல்ல? நீர் நிரபராதியானல் தானே விடுதலையாகி விடுகிறீர். இதற்கு ஏன் வருந்தவேணும்? உண்மையிலே உம் மைப் பார்த்தால், பரிதாபமாகத்தான் இருக்கு. ஆனல் விஷயம் விபரீதமாயிருக்கே! நான் என்ன செய்வேன்? இதில் நீர் சம் பந்தப்பட்டிருப்பது கையும் மெய்யுமாக ஏற்படுகிறது.

இதற்குள் சப்-இன்ஸ்பெக்டர், “சார்! ஜேபியில் பாருங்கோ இன்னும் பச்சிலே கொத்து இருக்கு. இதுதான் அந்த மாயக் கொள்ளைக்காரா மயக்கும் மருந்து. இதை இவன் அவர்களுக்குக் கொஞ்ச நாளாகச் சப்ளை செய்யரானும். இதோ கூட இருக் கிறவன் சொல்ரான். இந்தப் பச்சிலேயே பரிசோதிக்க வேண்டி ஒரு கான்ஸ்டேபிளே முகரச் சொன்னேன். மயக்கமாகிவிட்டான்; ஆனல், பத்து நிமிஷத்தில் தெளிஞ்சுபோயிடுத்து. இதைவிட வேறென்ன சாக்ஷி வேணும்? இவன் வீட்டே சோதனை போடும் படி மேல் அதிகாரி உத்திரவு பிறப்பித்துவிட்டார்” என்ருர்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடன், மூர்த்தியின் சர் வாங்கமும் தீப்பிடித்து எரிவதுபோலாய்விட்டது. அவன் ஒரு கையினல் தலையிலடித்துக்கொண்டு, “ஐயையோ! இந்தப் படு மோசத்தைக் கடவுள் எப்படி சகிப்பார்?....கடவுளே! நீ என்ன கல்லா! மண்ணு! வெறும் செம்பா! ஐயோ! என்னல் பொறுக்க முடியல்லேயே! இந்தப் பச்சிலேயால்தான் அவா கொள்ளையடிக் கிருன்றதெ கண்டுபிடிச்சு போலீஸில் நானே தகவல் கொடுத்து இவாளெ பிடிக்கிறதற்காக வேலே செய்து வந்தேனெ யொழிய நானு இதை இவாளுக்குச் சப்ளை செய்தேன்? இது அக் கிரமம். இது வெறும் முழுமோசம். ஐயா! இன்ஸ்பெக்டர்

சார்! இது சுத்த பொய். இதை நம்பாதேங்கோ!" என்று கதறினன்.

ஏகாம்பரம் ஒன்றுமே பதில் சொல்ல முடியவில்லை. இதற்குள் மூர்த்தியுடன்கூட கைதியாகி இருக்கும் ஒரு முரட்டு மனிதன், மூர்த்தியைப் பார்த்து, "ஓகோ! நீ பலே பேர்வழியா இருக்கயே! நீ இந்த பச்செலே எங்களுக்கு சப்ளை பண்றதில்லே! நீயா எங்களே பிடிக்கப்போறே. சும்மா கதெ அளக்காதே. போய்யா! இதுக்காவ பணத்தெ வாங்கி ஊட்டெ பொதச்சு வச்சிகினு அளக்கரயே" என்ருன்.

இந்த வார்த்தையை மூர்த்தியால் சகிக்கவே முடியாது உச்சஸ்தாயியை எட்டிவிட்டதால், "ஹா! உலகமே முழுமோசம். அநியாயக் குப்பை. பழிகாரப் பாண்டம். கடவுளாம் கடவுள். கடவுளுமில்லை, மண்ணுமில்லை. கடவுள், கடவுள் என்பதெல்லாம் சுத்தப் பொய்! சுத்த ஹம்பக்கு. கடவுள் இருந்தால் நான் நிரபராதி என்றது அவன் கண்ணுக்குத் தெரியாமலா போய்விடும்? இத்தகைய கல்நெஞ்சக் கடவுள் உலகில் இருந்தால் என்ன? ஓடிப்போய் விட்டால் என்ன?" என்ற விரக்தியும் ஆத்திரமும் மேலிட்டதால் ஆவேசத்துடன் கூறிக்கொண்டே அந்த அதிர்ச்சி தாங்காமல் கீழே விழுந்துவிட்டான்.

திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பார்கள். அத் தெய்வம் துணை செய்யுமோ! அன்றி வினைதான் வெல்லுமோ? யார் கண்டது? மூர்த்தியின் கண்ருவியைக் கண்ட யாருடைய மனந்தான் சகிக்கும்? அவன் விடும் ஒவ்வொரு சுவாசமும், 'நான் நிரபராதி. நான் நிரபராதி. அம்மா! வாஸந்தீ! ராஜூ! அம்மா!' என்ற புலம்பலேயே சப்திக்கின்றன. இரு கான்ஸ்டேபிள்கள் அவனைத் தாங்கிக்கொண்டார்கள். ஏகாம்பரம் முதலியோர் மூர்த்தியின் வீட்டைச் சோதனை செய்யும் பொருட்டுப் புறப்பட்டுச் சென்ருர்கள்.

45

மைதிலி தன் விதியை நினைத்துக்கொண்டு வேணியின் படத்தைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டுக் கண்ணீர் உதிர்ந்தபடியே, "வேணீ! நீ உபகாரப் பிராணியா யிருந்ததாலேதான் சீக்கிரம் போய்ட்டே. என்னைப் போல் உதவாக்கட்டையா யிருந்தால், நீ செத்துப்போயே இருக்க மாட்டே. ரத்தினங்கள்போல் குழந்தைகள், மனத்திற்குகந்த பனுளன், வருவாய்க்குத் தக்க திருப்தியுடன் குடும்பம் நடத்தும் பெருமை, எல்லாம் ஒன்ருயடைந்ததால்தான், நீ அபாக்கியவதி யாய்ப் போயிட்டே. என் பாபாத்மா போகும் வழியாவது இருக்கா பாத்தியா! ஊம். இன்னும் என்னென்ன கஷ்டங்கள் அனுபவிக்கணுமோ! எப்படி ஆடல் படணுமோ! அதெல்லாம் விட்டுச் சாவு வருமான்னு?" என்று சொல்லிக்கொண்டே இருக் கையில், விம்மி விம்மி யழுங் குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து பார்த்தாள்.

வாஸந்தி தலைவிரிகோலமாய்க் கதறியபடியே, "மாமீ! மாயக்கொள்ளேலே எங்கப்பா சம்மந்தப்பட்டிருக்கான்னு அவரெ புடிச்சு ஜெயில்லே வெச்சுட்டா மாமீ! ஐயையோ! இனுமே என்ன பண்ணுவோம் மாமீ! எங்க வீட்டே போலீஸார் சோதனைபோட்டு பெருச்சாளி அருத்திருக்கர பாழியிலெந்து ஏதோ பணம், நகை, எல்லாம் எடுத்திண்டு போனு மாமீ! அதெல்லாம் எங்கப்பா திருடினுராம் மாமீ! எங்கப்பா ஒருநாளும் செய்திருக்கவே மாட்டா மாமீ! கோவில்லேகூட சாமி செத்தாபோயிடுத்து மாமீ! நாங்க என்ன பண்ணுவோம் மாமீ!" என்று கல்லும் கரையும் படிக் கதறினுள்.

மைதிலிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. "என்ன! வாஸந்தீ! மாயக்கொள்ளேலே ஒங்கப்பா சம்மந்தப்பட்டான்னு புடிச்சுண்டு போயிட்டாளா! இதென்ன அக்கிரமம்! இதென்ன அநியாயம்! ஒங்கப்பா ஜெயில்லேயா இருக்கா?" என்று வாஸந்தியைக் கட்டி

யணைத்தவாறு கண்ணீர் பெருகக் கேட்டாள். அவள் வயிறும் மனமும் பத்தி எரிந்து சித்திரவதை செய்கிறது. வேணியின் குடும்பம் சிதறிப்போனதற்குத் தன் புருஷனல்லவா காரணம் என்று நினைக்கும்போது பூமியே வெடித்து அவளை விழுங்கிவிட்டது போல் தோன்றியது.

வாஸந்தி திக்கித் திக்கிப் புலம்பிக் கொண்டே, "மாமீ மாமீ! எங்கப்பாவே நானு பாக்கணும் மாமீ! எங்களெ யார் அழைச்சிண்டு போவா மாமீ! எங்க பாட்டி புழுவாட்டம் துடிக் கிறு மாமீ! அவளும் செத்துப் போயிடுவா பொழக்கமாட் டான்னு பாக்கரவா சொல்ரு மாமீ! இங்கே வந்தா தாதா அடிக் கப் போரராளேன்னு பயந்துண்டே வந்தேன் மாமீ! எங்களுக்கு ஒங்களே தவிர, வேறே திக்கில்லே மாமீ! எங்கப்பாவுண்டே அழச்சிண்டு போரகளா மாமீ!" என்று கதறும் வயிற்றெரிச்சல் மைதிலியின் வயிற்றிலிருந்து துக்கம் பீறிக் கொண்டு வந்து விட்டது.

அவளுடைய கண்கள் சிவக்க, தேகம் பதைக்க மைதிலி எழுந்தாள். "வாஸந்தி! என் கண்ணே அழாதே! இதோ நான் உன்னை ஸ்டேஷனுக்கு அழைச்சிண்டு போறேன். இதனாலெ இனுமே என்னெ கெழவர் கொலே பண்ணாலும் சம்மதந்தான். நான் பயப்படப் போறதில்லே. ஒரு நிரபராதியின் குடும் பத்தைச் சிதறப் பதற வடித்த ஒரு மனுஷனுக்கு நான் இனியும் உடந்தையா யிருக்கணுமா? இதுதானு ஹிந்து பெண்மணிகளின் உயர்ந்த தருமம்? இல்லே; இல்லே. இனுமே என்னாலெ இந்த அநியாயத்தைச் சகிக்க முடியாது. ஆனது ஆகட்டும். ஒரு அனாதைக்கு ஆபத்துக் காலத்தில்கூட உதவி பண்ணாத ஜென்மம் இருந்தாலென்ன? இறந்தாலென்ன? வாஸந்தீ! வாம்மா! போகலாம். கருப்பா! கருப்பா! வண்டியெ கட்டுடா" என்று கூறிக் கொண்டே ரணவீர சண்டிபோல் வாஸந்தியுடன் வெளியில் வந்தாள்.

கதவின் வெளியில் ஆட்டுக் கிடாவைப்போல் தலையை யாட்டிக் கொண்டே நின்றிருந்த கிழவன், பொங்கி வரும் ஆத்திரத்

துடன் "ஆஹா! அத்தனெ தைரியமா வந்துடுத்து? எதோ பார்க்கலாம். எங்கே? எங்கெ? திமிர் பிடிச்ச கழுதெ! அந்த மூர்த்தி வலேலே நீ விழுந்துட்டயா? அந்த மாயக் கொள்ளெக்காரன் ஒன்னெ மயக்கிட்டானா? ஓகோ! தெரிஞ்சுதுடீ தெரிஞ்சுது. சீச்சீ அடுமெ நாயே! உள்ளே போ!" என்று கூறிக்கொண்டே, மைதிலியின் தலை மயிரைப் பிடித்துக் கடகடவென்று இழுத்து உள்ளே தாறுமாறாய்த் தடாரென்று தள்ளிக் கதவைப் பூட்டி விட்டு, வாஸந்தியை நோக்கினார்.

ஏற்கெனவே சிம்மத்தைக் கண்ட மான்போல் நடுங்கும் வாஸந்தி, கிழவரின் இந்த ஆத்திரப் பேச்சையும், செய்கையையும் பார்த்த உடனே, தன்னையும் அவர் கொலை செய்து விடுவார் என்ற திகில் பிடித்துக் கொண்டதால், பயந்து நடுங்கியபடியே, "மாமீ! நீங்க வர வேண்டாம். நாங்கல்லாம் சமுத்திரத்திலெ விழுந்து செத்துப் போயிட்ரோம். இனிமே நாங்க பூமியிலெ இருக்கவே வாண்டாம்" என்று கத்திக் கொண்டே ஓடி விட்டாள்.

உள்ளே தாறுமாறாகத் தள்ளப்பட்ட மைதிலியின் காதில் இந்தப் பச்சக் குழந்தையின் சொல் விழுந்த உடனே, மூளையே கலங்கி விட்டது. உடனே சமுத்திரமும் அதில் வாஸந்தி, ராஜு, கிழவி மூவரும் விழுந்து விட்டதுபோன்ற ஓர் பயங்கரத் தோற்றமும் கண்முன்பு தோன்றியதால், "ஹா!" வென்ற ஒரே அலத்தல், பெருஞ் சத்தம் நெஞ்சை பிளந்து கொண்டு வந்தது. அடுத்த நிமிடம் மூர்ச்சையாகி விட்டாள். வெளிப் பூட்டு போட்ட கிழவர், வாஸந்தி கூறியதைக் கேட்டதும் ஆத்திரத்துடன் அவளைப் பின் தொடர்ந்து, "சமுத்திரத்திலேயா விழுந்து சாகப் போரே! போ! போ! இப்பவே செத்துப்போ! கொள்ளைக்காரன் பொண்ணு யிருப்பதைக் காட்டிலும், சமத்தா செத்துப்போ" என்றார். மீனாக்ஷியின் கண்ணிலும் கண்ணீர் துளிர்த்தது.

46

போலீஸாருக்கு இம்மாயக் கொள்ளைக் கூட்டத்தில் ஒருவரையாவது பிடித்துவிட்ட பெருமை கூறத் திறமில்லை. ஏதோ பெரிய மலையையே புரட்டி விட்டதுபோல ஆநந்தமடைந்து விட்டார்கள். இன்னும் இதன் முழு கூட்டத்தையும் பிடித்து விட்டால், கட்டாயம் இந்த ஊர் போலீஸ் உத்யோகஸ்தர்களுக்கு உண்டாகப் போகும் மதிப்புக்கு எல்லையே இல்லை. குறைந்தது இதில் சம்பந்தப்பட்ட சிலருக்காவது பட்டங்களும் பதக்கங்களும் உத்தியோக உயர்வும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் சந்தோஷமும் ஒரு விதமான மனவேகமும் உண்டாகி விட்டன.

ஆனால், ஏகாம்பரத்திற்குமட்டும் தாம் வெற்றி பெற்று விட்டதாக எண்ணும் சந்தோஷமும் திருப்தியும் உண்டாகவே இல்லை. "தன் மனைவியைக் கொலை செய்துவிட்ட கூட்டத்தில் இம் மனிதன் எவ்விதம் சம்பந்தப்பட்டிருப்பான்? அம்மாதிரி செய்ய மனம் வருமா?....ஒரு வேளை வயிற்றுக்கில்லாத கொடுமையால், இவ்விதம் செய்திருப்பானா! பிழைக்க வழியுந்தான் வேணுமோன்னோ? ஆனால், அவன் தான் நிரபராதி என்று கதறுவதைப் பார்த்தால் பரிதாபகரமாக விருக்கிறது. வீட்டில் சோதனை செய்ததிலோ அவன் அதில் கட்டாயம் சம்பந்தப்பட்டவன்தான் என்பதற்கு ஆதாரம் கிடைத்திருக்கிறது. எது உண்மை? எதை நம்புவது? என்ன மாய உலகம்?" என்றெல்லாம் தனக்குள் எண்ணமிட்ட வண்ணம் ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தார்.

அவர் மனத்தில் போராடும் எண்ணமெல்லாம் தங்கள் டிவிஷன் போலீஸார் கையாலாகாதவர்கள், எதையும் திறமையுடன் செய்யும் சாமர்த்தியம் இல்லாதவர்கள் என்று மற்ற போலீஸார் சொல்லிவிடப் போகிறார்களே! அந்த இழிவான பேர் இன்றித் தங்கள் ஜில்லாவில் தான் உத்தியோகம் பார்க்கும் டிவிஷனிலேயே தங்களுக்கு நல்ல பேர் கிடைத்துவிட வேண்டும் என்ற பெரிய எதிர்ப் பார்ப்பும் ஆவலும் நிறைந்திருந்தது.

மூர்த்தியுடன்கூட கைதியாக்கிய மனிதனை எத்தனை உதைத்தாலும், சித்திரவதை செய்தாலும் அவன் சாவதற்கும் தயாராக விருக்கிறனே யன்றி, ஒரு விஷயத்தையும் சொல்ல முன்வரவில்லை. தங்கள் கூட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் நோக்கம் அவனிடம் ஒரு சிறிதுமில்லை. அடித்து அடித்து ஆள் பிரக்ஞையற்று விட்டான். மூர்த்திக்கோ பயித்தியமே பிடித்துவிட்ட மாதிரியாகி விட்டது. இவ்விருவர்களின் மூலம் எவ்விதம் இந்தப் பெரிய கூட்டத்தின் மர்மத்தை யறிவது?

"இந்தப் பச்சிலை எங்கெந்தக் காட்டிலிருக்கிறதோ அங்கெல்லாம் ரகசிய போலீஸாரை நியமித்து, அதை யார் யார் பறிக்க வருகிறார்களோ அவர்களை அப்படி யப்படியே ஓடவிடாமல் காலில் சுட்டுத் தடுத்துப் பிடித்துவிட வேண்டும். மலைகள், காடுகள் எங்கும் ரிஸர்வ் போலீஸ் ரகசியமாகப் பதுங்கிக் கிடக்க வேண்டும். உயிருக்குப் பயப்படக் கூடாது; துணிந்துதான் செல்ல வேண்டும்" என்று ஓர் யோசனை செய்து, மேலதிகாரிகளின் உத்திரவு பெற்று, மேற்குறித்தவாறு செய்ய ஏற்பாடு செய்து விட்டார்கள்.

எங்கு பார்த்தாலும் போலீஸார் ரகசியமாகப் பதுங்கி இருந்து வலை போட்டுத் தேடவாரம்பித்து விட்டார்கள். ஒரு தினம் ஏகாம்பரம் இதர விஷயமாக யோசித்துக் கொண்டே ஸ்டேஷனில் தன் தனியறையில் உட்கார்ந்திருக்கையில், அவருடைய வேலைக்காரன் அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தான். "எஜமான்! எஜமான்! நம்ப ஊட்டுலே மாயக் கொள்ளைக்காரங்க வந்து, அம்மாளே மழக்கமா தள்ளிப்புட்டு, நகைங்களே கழட்டிகிணு பூட்டாங்க. அம்மாளுக்கு இன்னும் நன்ணு தெளியில்லேங்க. அக்குறும்பாக இருக்குங்க!" என்று பயத்தோடு தெரிவித்தான்.

இந்த வார்த்தை ஏகாம்பரத்தின் காதில் முற்றிலும் விழுவதற்குள்ளேயே அவர் தலைமீது எரிமலையே புரண்டு விட்டது போலான சங்கடமும் தவிப்பும் வியப்பும் உண்டாகிவிட்டன. உட்கார்ந்த இடத்திலிருந்து அலறி யடித்துக் கொண்டு எழுந்து, "ஹா!....என்ன! மாயக் கொள்ளையா? நம்ப வீட்லேயா? நம்ப

அம்மாக்கு பயக்கமா? நப்ப அம்மா நகை திருடி போயிட்டதா? என்ன அக்கிரமம் இது? என்ன அவமானம்? ஏன்டா திம்மா! நீங்கள்ளாம் அப்போ எங்கேடா செத்துப்போனங்கோ? சேவகன் எல்லாம் எங்கேடா தொலைஞ்சாங்க?" என்றார்.

திம்மன்:—எஜமான்! நானு தோட்ட வேலை செஞ்சிகினு இருந்தேன். சேவகனே எங்கேயோ அம்மா வெளியே வேலையா அனுப்பினாங்க. சப்பு இஞ்சிபட்டரு ஊட்டேருந்து புஸ்ப்பம் குடுத்துட்டு வரச் சொன்னாங்கன்னு ஒரு வேலெக்காரி வந்து அம்மாகிட்டே குடுத்தா. அம்மா அதை வாங்கி மூந்து பார்த்தாங்க. ஒடனே உயிந்துட்டாங்க. நகைங்கல்லாம் பூட்டுது. நானு உள்ளரே போனபோதுதான் அம்மா இந்த சங்கதியெ சொல்லி ஐயாவெ இட்டுகினு வான்னாங்க. ஓடியாந்தேன். எஜமான்! சீக்கிரம் வாங்க" என்றான்.

ஏகாம்பரத்தின் நிலைமையைக் கூற வேண்டுமா? கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க தானே முயற்சி செய்து விபரீத ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருக்கையில், தன்னுடைய வீட்டிலேயே இந்தக் கொள்ளை நடந்து விட்டதென்றால், இதைவிட அவமானமும், ஆத்திரமும் வேறு என்னதான் வேண்டும்? "இது வெளியில் தெரிந்தால், ஜனங்கள் கை கொட்டிச் சிரிப்பார்களே! ஐயோ என்ன செய்வது?" என்ற அபாரமான மன அதிர்ச்சியும் அவமானமும் அவரை வதைக்கின்றன. உடனே வாயைத் திறக்காமல் வீட்டுக்குக் கிளம்பி வந்தார்.

47

முகத்தில் பலவித உணர்ச்சிகள் ஜொலித்தபடியே ஏகாம்பரம் ஸ்டேஷன் வாசலில் வந்தார். அவர் மனத்தில் ஏற்கெனவேயுள்ள கவலையுடனும் புதிதாகக் கொந்தளிக்கும் பலவிதமான கலக்கத்துடனும் இவர் வீதியில் வந்ததும் அங்குள்ள அதிகோரமான காட்சியைக் கண்டதும், தன் மனக் கொதிப்பையும் மறந்து திடுக்கிட்டு, கண் கலங்கியவாறு சில விநாடி நேரம் அப்படியே தம்பித்து நின்றுவிட்டார்.

அத்தகைய மனத்தை யுருக்கும் காட்சி யாதாக விருக்கும்? ழந்தை வாஸந்தியும் ராஜுவும் ஸ்டேஷனின் வாசலில் நிற்கும் போலீஸ் கான்ஸ்டேபிளை நோக்கி, "ஐயா! எங்களே உள்ளே விடுங்கோ! எங்கப்பாவே கண்ணுலே பாத்துட்டுப் போயிட்ரோம். ங்க உசிர் தவிக்கிறது. அவரே பாக்காட்டா எங்க பிராணனே போயிடும். எங்கப்பா ஒருநாளும் சத்தியமா தப்பே செய்யல்லே. ங்களே உள்ளே விடுங்கோ" என்று கண்ணீர் பெருக வாஸந்தி கெஞ்சினுள்; ராஜுவும் விம்மி விம்மி அழுகிருன்.

நெஞ்சில் ஈவிரக்க மற்ற சேவகன், "சீச்சீ! போ கொள்ளைக்காரன் பொண்ணுன்னு அந்த சாமர்த்தியத்தெ அப் டியே காட்ருயே! உள்ளெ விடவே முடியாது, ஓடிப்போ?" ன்று நிர்த்தாக்ஷிண்யமாகப் பிடித்துத் தள்ளும் காக்ஷியை ஏகாம் ரம் கண்டதும் மனம் தத்தளித்துப்போய், "அடேய் 130! நில்லு. வாளெ குழந்தெகன்னு நெனச்சியா, பெரியவான்னு பாத்தியா!" ன்று கூறிக்கொண்டேபோய் குழந்தைகளைத் தட்டிக்கொடுத்து ணைத்துக் கொண்டார்.

அனுதைப் பக்ஷிகள்போல் நிராதரவாய்த் தெருவில் நின்று ிட்ட இப்பரதேசிகளுக்கு ஒரு பெரிய உத்தியோகஸ்தர் ஆதரவு ாட்ட கடவுள் திருவுள்ளமிருந்ததை யறிந்த வாஸந்திக்குச் ந்தோஷமும் துக்கமும் கலந்து பீறிக்கொண்டு வந்துவிட்டன. மாமா! எங்கப்பாவெ பாக்க விடமாட்டங்களா? தினம் இங்கே ந்து வந்து அழுது கெஞ்சி கேட்டும் விடமாட்டேங்கரா மாமா! ங்க அனுதைகள் மாமா! எங்களுக்குத் தெரிஞ்ச மைதிலி மாமி ங்களெ அன்னிக்கே அழச்சிண்டு வரேன்னு. அந்தத் தாதா ந்த மாமியெ அடி அடின்னு அடிச்சு உள்ளே போட்டுப் பூட்டிட் ார். அதனுலே அந்த மாமிக்கு மூளெ கலங்கி பயித்தியம் டிச்சு போச்சாம். சதா கத்தராளாம். அழராளாம். சிரிக் ராளாம். வேலெக்கார கருப்பன் சொன்னுன். அவளுக்கும் ப்படியாயிட்டதால் எங்களுக்கு வேறே கதியே இல்லே மாமா! ங்கப்பாவெ ஒரு நிமிஷம் கண்ணுலெ பாக்கக் காட்டுங்கோ பாரும் மாமா!" என்று கோவெனக் கதறியழுதாள்.

மகா கடின இதயத்துடன் செய்யவேண்டிய உத்யோகத்தை வகித்தவராயினும் இவ்வார்த்தைகள் ஏகாம்பரத்தின் இயற்கையான தயாளகுணத்தை மேலோங்கச் செய்து அவர் மனத்தை உருக்கிவிட்டது. தற்போது அவருக்குள்ள மிகவும் நெருக்கடியான சமயத்தில் இக்குழந்தைகளுக்காக நேரத்தைச் செலவு செய்ய அவகாசமில்லை யாதலால், வாஸந்தியைத் தடவிக் கொடுத்து, "அம்மா! நான் ரொம்ப அவசரமும் ஆபத்துமான காரியமாக வெளியில் செல்கிறேன். நீங்களும் சமத்தாக வீட்டுக்குப் போங்கள். ஒங்கப்பா சௌக்கியமா இருக்கிறார். நான் நாளைக்கு உன்னெ அழைச்சிண்டு போறேன். போம்மா" என்று சமாதானம் செய்து அனுப்பிவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றார். வாஸந்தியும் அழுதவாறு ராஜூவை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டாள்.

ஏகாம்பரம் அலையக்குலைய வீட்டிற்கு வரும்போது அக்கம் பக்கம் கும்பு கூடிவிட்டதைக் காண அவர் மனம் புழுங்கியது. "போலீஸ்காரன் வூட்டேகூட கொள்ளை யடிச்சுப்புட்டான்னாக்கா வேறே யாரு ஊட்டேதான் வரமாட்டாங்க? அநியாயக் கொள்ளையா யிருக்கே!" என்று பொது ஜனங்கள் கூறும் வார்த்தைகள் ஏகாம்பரத்தின் வேதனையை இன்னும் அதிகப்படுத்தியது. அவர் வீதியிலிருந்த கும்பல்களை விலக்கிவிட்டு வீட்டினுள்ளே சென்றார்.

அவர் மனைவி கற்பகாம்பாள் அப்போதுதான் மயக்கம் தெளியப் பெற்றவளாய் வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். அந்தம்பாளுக்குத் தன் முகத்தைப் பார்க்கவும் மிகவும் கஷ்டமாயிருந்தது. ஏகாம்பரம் அவளுடைய வேதனையை உணர்ந்தவராய் "என்ன நடந்தது கற்பகம்?" என்றார்.

கற்பகம்:—சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிலிருந்து புஷ்பம் கொடுக்கச் சொன்னதாக ஒரு வேலைக்காரி கொண்டுவந்தாள்: சப்-இன்ஸ்பெக்டர் வீட்டில் அடிக்கடி அனுப்புகிற வழக்கமுண்டு. அதனால் வாங்கி மோந்து பார்த்தவுடனே மயக்கமா வந்தது. விழித்துப் பார்க்கும்போது நகைகளைக் காணவில்லை. ஒடனே ஒங்களுக்கு

ஆள் அனுப்பினேன். பிறகு எனக்குக் கொஞ்சம் நன்ருகத் தெளிந்த அப்பறம் சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிலே விசாரித்ததிலே அவா ஒன்றுமே இன்னிக்கு அனுப்பல்லெ. இது மோசமானது என்று சொல்லிட்டா. என்ன செய்யறது. எனக்கு ஒன்னுமே தோணலியே! இதோ பாருங்கோ! இந்தத் துண்டு கடுதாசியே என் மடியிலேயே சொருகி இருந்தது. இதைவிட வெக்கக்கேடு வேறே என்னவேணும்.?

ஏகாம்பரம் :—"என்ன! கடுதாசியா!" என்று கூறிக் கொண்டே அதை வாங்கிப் படித்தார். "போலீஸ் புலியே! எங்களையா நீ பிடிக்கப் போகிருய்? இதோ யாருடைய சாமர்த்தியம் முதலில் ஜனங்களுக்குத் தெரிந்தது பாரு. இனிமே எங்களைப் பிடிக்கும் நோக்கத்தை விட்டு விட்டு சிவனே என்று இரு. இன்னும் ஆபத்துக்கு ஆளாகாதே; ஜாக்கிரதை" என்று எழுதியிருந்ததைப் படித்தும் அவர் இதயம் துடித்தது.

கற்பகம் :—(எழுந்து அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு) இந்தக் கடிதாசியைப் பார்த்தா எனக்கு ரொம்ப பயமா இருக்கு! வேறே ஏதாவது ஆபத்து வந்துட்டா என்ன செய்றது. நீங்க வெளியிலே போயி வீட்டுக்குத் திரும்பி வரவரைக்கும் என் மனது தவிக்கிறது. இன்னும் இது வேறே பயமுறுத்தி இருக்கிறது. நீங்க ரெண்டு மாசத்துக்கு லீவு வாங்கிண்டு ஊருக்குப்போயிடலாமே!—என்று விசனமும் பயமும் கலந்த உணர்ச்சியுடன் கூறிஞள்.

ஏகாம்பரம் :—(பெரிதாகச் சிரித்துக்கொண்டே) கற்பகம்! நீ கூடவா இத்தனை அசட்டுத்தனமாகப் பேசறெ. ஏற்கெனவே போலீஸ்காரன் வீட்டிலேயெ திருட்டுப் போயிட்டதைப்பத்தி ஜனங்கள் சிரிப்பார்களேன்னு நான் பயந்து சாகிறேன். இன்னும் ஊரையும் விட்டுப் போயிட்டா உத்தியோகத்தை ராஜீநாமா கொடுத்துவிட்டே போகவேண்டியதுதான். இனுமே மனுஷா மூஞ்சிலெ முழிக்க யோக்கியதையே இல்லே. அந்தமாதிரி ஆபத்து வரனும்னு இருந்தா அதைத் தடுக்க முடியுமா என்ன? வரது

வந்துதான் தீரும். இதுக்கெல்லாம் பயப்படாதே! கடவுளைப் பஜனை பண்ணு. அவன் காப்பாத்துவான்—என்று அவனுக்குத் தைரியங் கூறிவிட்டுப் போய்விட்டார்.

48

"வந்தேமாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே! ராஷ்டிரபதிக்கு ஜே! சுபாஷ் பாபு கி ஜே! வந்தே மாதரம்.

('மேரே மவுலாபுலா' மெட்டு)

வந்தேமாதரமே மங்களகோஷமே
நம்தேயம் வாழ்ந்திட வந்தனை செய்குவோம் (வ)

சாந்தமாமுனி காந்தியின்வழி
மாந்தர் ஒன்றாய்ச் சேர்ந்திடில்
இன்னல்கள் நிற்குமோ ஏழ்மை நிலைக்குமோ (வ)

வேற்றுமையை அகற்றி யாவரும்
ஒற்றுமையாய் உழைத்திடில்
க்ஷேமம் நிறைந்திடும். க்ஷாமம் மறைந்திடும் (வ)

அன்னை நாட்டினில் அன்புகொள்ளா
கன்னெஞ்சரைக் கண்டுருகுவோம்
காந்திக்கதரை கட்டுமென்று நாம்
சாந்தமாகவே மொழிகுவோம்
அஹிம்சையை மறந்திடாததன் வழி செல்லுவோம் (வ)

அன்பர்களே! உலகம் போற்றும் உத்தம தியாக மூர்த்தியான காந்தியடிகளின் பிறந்த தினக் கொண்டாட்டத்தை இன்று எல்லோரும் கொண்டாடி அவரவர் தொழும் தெய்வங்களை வேண்டி, மகாத்மா காந்தி, சென்றது போக இன்னும் ஒரு மார்க்கண்டேயனைப்போல் சிரஞ்சீவியாக வாழும்படிக்கு அருள் செய்யு

மாறு பிரார்த்தனை செய்யுங்கள். ஏழை மக்களின் இடர் தீர்க்க அவதரித்த வள்ளல். அவர் தாய்நாட்டின் சிறப்பிற்கும்—பண்டைய பெருமைக்கும்—புத்துயிர் அளிக்கத் தோன்றிய பெருமான். அடிமையை அகற்றவந்த அழியாச்சுடர். அறியாமையின் அந்தகாரத்தைப் போக்கி, சுதந்தர ஒளியை விளக்கவந்த அவதாரப் புருடரான மகாத்மா காந்தியடிகள் நமக்கு அழியாப் பொருளாய் அவனியிலிருந்து அனேக அரிய தொண்டுகளை ஆற்றி உதவும் சக்தியை அவருக்குக் கொடுக்கும்படி எல்லோரும் இன்று ஆண்டவனை வேண்டிக் கொள்ளுங்கள். இது ஓர் பெரிய கஷ்டமில்லை. மனமுண்டாயின் மார்க்கமுண்டு. மகாத்மா காந்திக்கு ஜே! பாரதமாதாவுக்கு ஜே! வந்தேமாதரம்"

என்று கூறிக்கொண்டே காந்திக் குல்லாய தரித்து கதரணிந்து தேசியக் கொடி தாங்கிய தொண்டர்களும் தேச சேவகிகளும் அடங்கிய அதியற்புதமும் ஆநந்தமும் கூடிய ஊர்வலம் வீதியில் வந்தது. எத்தகைய அடிமை புத்தியும், சுதந்திர உணர்ச்சியற்றத்தன்மையும் இருப்பவர்கள்கூடத் தேசிய ஊர்வலத்தைப் பார்க்க மனங்கூசி கண்ணை மூடிக்கொள்பவர் உலகில் அனேகமாக இல்லை என்றே சொல்லலாம்.

தேச பக்தியில்லாதவர்களுக்குக்கூட தேச பக்தி ஊற்றுச் சுறக்குமன்றோ! இந்த அற்புத ஊர்வலத்தின் காந்தம் இழுக்கப் பட்டு அதில் வந்து கலந்துகொண்ட ஆண் பெண்கள் எத்தனையோ பேர்கள். தம்மை மறந்து உற்சாகத்துடன் மக்களின் இதயம் அந்த மகாத்மாவை வாழ்த்தி ஆசி கூறிற்று. "வாழ்க மகாத்மா! வாழ்க நம் பாரதநாடு!" என்ற ஆர்வத்துடன் கூடிய கோஷம் வாயிலிருந்து வெளிப்பட்டது. உலக விவகாரமே தெரியாத தெள்ளிய மனதுடைய குழந்தைகள் எல்லாம் தம்மை யறியாத ஆநந்தத்துடன், "மகாத்மா காந்திக்கு ஜே! பாரதமாதா கி ஜே!" என்று கத்திக்கொண்டு, இந்தப் பஜனையில் வந்து சேர்ந்தார்கள்.

இத்தகைய அதி மனோகரமான பஜனை வீதியில் வரும் போது நமது பச்சிளங் குழந்தைகளாகிய வாஸந்தியும் ராஜுவும்

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து திரும்பி வருகையில், இளந்தளிர்களா கையால் சோகமும் பசியும் தாங்காமல் களைப்பு மேலிட்டு உடைந்த மனத்துடன் நடக்கமாட்டாது நடு வீதியில் விழுந்துவிட்டார்கள்.

ஏழைகளுக்கும், எளியவர்களுக்கும் உழைப்பதற்கென்றே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் இந்தத் தொண்டர் படையினர் இந்தக் குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்டு சகிக்காமல், ஓட்டமாக ஓடி வந்து, இரு குழந்தைகளையும் தூக்கி மடியில் போட்டுக்கொண்டு, ஜலம் விட்டு முகத்தைக் கழுவினார்கள். அப்படியும் தெளியவில்லை.

உடனே தொண்டர் படையின் தலைவன், "நான் இவர்களை நமது ஆச்ரமத்திற்குக் கொண்டுபோய் தெளியச் செய்து பின் வீட்டிற்கனுப்புகிறேன். நீங்கள் பஜனையை முடித்துக்கொண்டு வாருங்கள்" என்று கூறிவிட்டு, குழந்தைகளைத் தோளில் தாங்கிக் கொண்டு சென்றான். 'ஜே! வந்தேமாதரம். பாரதமாதாவுக்கு ஜே!' என்ற கோஷத்துடன் ஊர்வலம் சென்றது.

49

காந்தி ஆசிரமம் என்ற பெயருடன் விளங்கும் ஓர் சாதாரணமான பெரிய வீட்டில் எங்கு பார்த்தாலும் தேசியத் தலைவர்களின் படங்களும், கடவுளின் படங்களும், தேசியக்கொடியும் ராட்டினங்களும் பஞ்சுச் சுருள்களும் நூற்ற நூல்களும் நெய்வதற்குத் தயாராகச் சுற்றி வைத்திருக்கும் நூல்களுமாக நிறைந்திருக்கின்றன.

அன்று மகாத்மா காந்தியின் பிறந்த தினமாகையால், மாவிலை முதலிய தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பின்புறத்தில் பெரிய அண்டாக்களில் சுமார் 500 பேர்களுக்கு ஆகக்கூடிய சமயல் தயாராகிக்கொண்டிருக்கிறது. அதற்கான காய்



கறிகளை ஒருபுறம் சிலர் நறுக்கிக்கொண்டிருந்தார்கள். இவைகளை எல்லாம் சில தேச சேவகிகள் மேல் பார்வை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இத்தகைய ஆரவாரமான இடத்தில் தொண்டர் படையின் தலைவன் குழந்தைகளைக் கொண்டு வந்து அவர்களுக்கு ஒரு டம்ளர் பாலை வார்த்துக் குடிக்கச் செய்து களை தெளிவித்தான். வாஸந்தி முதலில் தெளிவு பெற்றுக் கண்ணைத் திறந்து பார்க்கையில், "அப்பா!....இல்லெ....மாமா....இல்லெ. இல்லெ....மாமி! ஊஹூம்....பாட்டீ....என்று விவரமில்லாது கேட்டபடியே நாற்புறமும் திரும்பிப் பார்த்தாள்.

அந்தக் கூடத்தில் மகாத்மா காந்தியின் பெரிய உருவப் படத்திற்குப் புஷ்ப மாலைகள் போட்டு அலங்காரம் செய்திருப்பதைப் பார்த்ததும் அவளை யறியாமல் அவள் முகத்தில் ஒரு புதிய உணர்ச்சியும், தேஜஸும், புன்சிரிப்பும் தவழ்ந்தன. ஹா! மகாத்மா காந்தி! காந்தி. ராஜு! காந்தி பாருடா! என்று ஒரு நிமிடத்தில் தன் விசனத்தையும் மனக் கலக்கத்தையும் மறந்து போய், படத்தின் முன்பு ஓடினாள்.

தொண்டர் படைத் தலைவனும் 'அவள் போகிற வழியே விட்டுப் பிடிப்போம்' என்ற நோக்கத்துடன் ஆநந்தமாகப் பார்த்துக் கொண்டே நின்றான். ராஜுவும் எழுந்து வாஸந்தி பின்னோடு சென்றான். வாஸந்திக்கு அங்குள்ள படங்களையும் ராட்டினங்களையும் பார்த்ததும் பிரமித்து விட்டது. ஒன்றுமே தோன்றவில்லை. மகாத்மா காந்தி படத்தை உற்று உற்று பார்த்தாள். மகாத்மா காந்தீ தாதா! நீங்க ரொம்ம நல்லவ ராச்சே! எங்கப்பாவே விட்டுவிடுவாளா! எங்கப்பா குத்தமே பண்ணலேயே! அதெ போலீஸாருக்கு நீங்க சொல்லுவங்களா!" என்று வாய்விட்டுக் கூறும்போது, அவளுக்குப் பழைய உணர்ச்சிகளும் துக்கமும் பொங்கி வந்து விட்டது. குலுங்கக் குலுங்க அழத் தொடங்கி விட்டாள்.

உடனே தொண்டர் படைத் தலைவன் ஓடி வந்து, வாஸந்தியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, "அம்மா! குழந்தாய்! ஏம்மா"

அழறே! ஓங்கப்பா எங்கே இருக்கா! சொல்லும்மா!" என்று நயமாகக் கேட்டுக் கண்ணைத் துடைத்துச் சமாதானம் செய்தான்.

வாஸந்தி :—மாமா! நீங்க யாரு. இது எந்த எடம்?

தலைவன் :—நான் காந்தியின் தொண்டன். இது காந்தியின் ஆசிரமம். நீ பயப்படாதெ சொல்லும்மா!

வாஸந்தி :—"மாமா! மாயக் கொள்ளெக்காரராளாலே எங்கம்மா செத்துப்போயிட்டா! எங்கப்பாவேயும் அதெ கொள்ளெலெ சேந்திருக்கான்னு போலீஸார் புடிச்சிண்டு போயிட்டா. எங்க மாமிக்கும் பயித்தியம் புடிச்சுடுத்து. எங்க பாட்டி தள்ளாதவ. நாங்க எங்கப்பாவே பாக்கக்கூட போலீஸார் விடமாட்டேன்னுட்டா மாமா! எங்கப்பாவே பாத்து எத்தனையோ நாளாச்சு மாமா! எங்கப்பாக்குக் கையும் நொண்டி மாமா! நாங்க பரதேசியாப் பூட்டோம் மாமா! நாங்க சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு மாமா! எங்கப்பாவெ பார்க்கணுமே....மாமா....மாமா!" என்று கண்ணீர் பெருகத் தாங்கமாட்டாது விக்கி விக்கி அழுது விட்டாள்.

தலைவன் :—அம்மா! அழாதே. நீங்க பரதேசி இல்லெ. இதோ இந்த மகாத்மா காந்தி உங்களுக்கு ஆதரவு இருக்கார். பயப்படாதே. கண்ணு! இதோ பாரு. அழாதெ. ஒங்கப்பாவுண்டே நானே அழைச்சிண்டு போறேன். நீ பயப்படாதே! நீ இந்த ஆசிரமத்திலேயே இரு. நாங்கள்ளாம் ஒங்க மனுஷா தான். கடவுள் இருக்கும்போது உனக்கு குறைவு ஒன்னுமே இல்லே. அழாதேம்மா!—என்று வெகு வாஞ்சையோடு சொல்லி, அவள் புத்தியை மாற்றுவதற்கு ராட்டினத்தை எல்லாம் சுற்றிக் காட்டினான்.

வாஸந்தி :—மாமா! நாங்க இங்கேயே இருக்கலாமா? எங்க பாட்டீ....

தலைவன் :—அவகூடதாம்மா!

வாஸந்தி :—மாமா! நீங்க எவ்வளவு நல்லவா மாமா!—என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு ஆநந்த நர்த்தனம் செய்தாள். மாமா! எங்கப்பாவே பாக்க அழச்சிண்டு போரங்களா?

தலைவன் :—ஆகட்டும். இன்னிக்கு மகாத்மா காந்திக்குப் பிறந்த நாள் பஜனை ஊர்வலம் வெளியிலே போயிருக்கு. அவா வந்தாலும் இங்கே பஜனை நடக்கும். 500 பேர் ஏழைகளுக்குச் சாப்பாடு நடக்கும். அப்புறம் சாயங்காலம் மீட்டிங்கு; இன்னிக்கு திருநாள் மாதிரிதான்.

வாஸந்தி :—(அடங்காத சந்தோஷத்துடன் தலைவனின் இடுப்பில் கையைப் போட்டு வளைத்துக்கொண்டு) "ஆ! மாமா! நானும் பஜனையிலேயே வரேனே! எனக்கும் காந்தி பாட்டுத் தெரியுமே! ஆனா கதர் பாவாடெ இல்லேயே மாமா!" என்று முகத்தைச் சுணுக்கிக் கொண்டாள்.

உடனே தலைவன் உள்ளே போய் கதர்ப் பாவாடை, சொக்காய், ராஜுவுக்குக் கதர் நிஜார், சொக்காய் இரண்டும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து "சரிதானா? இப்போ நீயும் காந்திக்காரியாயிட்டே இல்லையா ?" என்றான். வாஸந்தி தாங்கமாட்டாத ஆனந்தத்துடன் உள்ளே ஓடிப்போய் தூய்மையான கதருடை யணிந்து கொண்டு ஆநந்த பிம்பமாய் வெளியில் ஓடிவந்து, "ராஜு! பாருடா நன்னா இருக்காடா! மகாத்மாவெ நமஸ்காரம் செய்வோம்டா!" என்று கூறி இருவரும் நமஸ்கரித்தார்கள்.

இதற்குள் ஊர்வலம் அத்தெருவில் வரும் சப்தம் வந்தே மாதரம் என்ற கோஷத்துடன் கேட்டதும் வாஸந்தி, "மாமா! வாங்கோ மாமா! வாங்கோ!" என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வாசலில் சென்று பஜனையில் கலந்து கொண்டாள். வாஸந்திக்கும் ராஜுவுக்கும் உண்டான ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை. தங்களையே மறந்து விட்டார்களென்றும் கூறலாம்.

அன்று நடந்த சகல வைபவங்களிலும் இவர்கள் கலந்து கொண்டதோடு ஏழைகளுக்கு அன்னமளிக்கையில், அவர்களுக்கு வாஸந்தி தீர்த்தங் கொடுத்து மகிழும் கைங்கரியத்திலும் ஈடு பட்டாள். அன்றே தொண்டர் தலைவன் வாஸந்தியுடன் அவள் வீட்டிற்குச் சென்று கிழவியையும், சாமான்களையும், தையல்

மோஹிநியும் தங்களுடைய ஆசிரமத்திற்குக் கொண்டு வந்து விட்டான். கிழவியின் நிலைமை இருக்குமோ, போய் விடுமோ என்ற கதியில் இருப்பதை குழந்தை வாஸந்தி எப்படி அறிவாள்? சதா தன் பிதாவின் விடுதலையையே கோரி அங்குள்ள கடவுளின் முன்பும், மகாத்மா காந்தியின் படத்திற்கு முன்பும் வாஸந்தி தன் பிதாவைச் சீக்கிரம் விடுதலை செய்யும்படி வேண்டித் தொழுவாள்.

50

பொன்னை உருக்கி வார்த்ததுபோல் சூரியன் உலகத்தை பொன்மயமாக்கி விட்டான். வெளியில் எங்கு பார்த்தாலும் ஒரே பொன்வர்ணமாய் ஜகஜ்ஜோதியாய் மின்னும் காக்ஷி மக்களைப் பரவசமுறச் செய்கிறது. ஆனால், வெளிச்சமும் இருளும் ஒன்றாகவே ஆய்விட்ட மைதிலிக்கு எதுதான் தெரியப்போகிறது. சுதந்திரத்துடன் சுயேச்சையாயும் ஆநந்தமாயும் பறக்கக்கூடிய கிளியைக் கூட்டிலேயே அடைத்து வைத்துக் கொல்வதுபோல் மைதிலி இளப்பிராயத்தின் சுகபோக பாக்கியங்களை யொன்றுமே யறியாது சதா விசனமும், கவலையும், விரக்தியும் கொண்டு ஒரு தனி அறையிலும் போட்டு அடைபட்டு விட்டதால், அவளுக்குப் பயித்தியம் பிடிப்பது இயற்கை யல்லவா?

தலைவிரி கோலமும் சதா பெருங் கூக்குரலும் ஓலமும் சிரிப்பும் அழுகையும் அவளுடைய பரிதாபமும் கருப்பனால் கண்டு சகிக்கவே முடியவில்லை. அவன் மனம் உருகியோடுகிறது. மைதிலி இம்மாதிரி ஒரு நிலைமையை அடைவாள் என்று அவன் கனவுகூடக் காணவில்லையாகையால், அவளுக்கு ஏற்பட்ட இக்கதியை எண்ண எண்ண கருப்பனால் தாங்க முடியாத துக்கம் மேலிட்டு விட்டது. இம்மாதிரி இந்த இளந்தளிர் அல்லல் படுவதைக் காட்டிலும் இவள் இறந்து விட்டாலும் தேவலையே

என்ற எண்ணம் அன்பின் ஆழத்தின் வேகத்தால் கருப்பனின் இதயத்தில் தோன்றி வதைக்க ஆரம்பித்தது.

மைதிலிக்குப் பயித்தியம் பிடித்ததை யறிந்த பிறகு கிழவர் அவளைப் புறக்கடைப் பக்கம் உள்ள தனியறையில் போட்டுப் பூட்டி விட்டார். கருப்பனைத் தவிர மற்ற எவருக்கும் மைதிலி அடங்கி சாப்பிடுவது கிடையாது. சதா தலையணைகளை நோக்கி "வேணீ! பேசேன். ஒரு வார்த்தை சொல்லேன். வாஸந்தி! அழாதே கண்ணு! ஹி ஹி ஹி ஹி" என்று பெரிதாகச் சிரிப்பதும், "ஐயோ! மூர்த்தி! ஒன் கை நொண்டியாயிடுத்தே. அடாடா!" என்று அழுவதும், "வேணுசாமீ! வராதே. கெழவன் ஒன்னெ கொன்னுப்புடுவான். போயிடு, போயிடு!" என்று முகத்தைச் சிணுப்பதுமாக ஆய்விட்டாள்.

தன் மனைவிக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று வெளியில் சொல்லிக்கொள்ள கிழவருக்குப் பெரிய அவமானம். ஆனால், அவள் அடங்கி ஒடுங்கி இருப்பதற்காகவும் பிறர் அவளைப் பார்த்துக் கண்ணைப் போடாமலிருப்பதற்காகவும் வீட்டை விட்டு வெளிவராதபடி கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன் என்று ஜம்பம் சொல்லிக்கொள்ளும் அல்ப புத்தி, பயித்தியம் என்று கூறுவதைவிடக் கேவலமானது என்று அவர் எண்ணவே இல்லை. இம் மாதிரி சொல்வதில் மகா உத்தம சிகாமணியாகிய மைதிலியின் கற்புக்குப் பங்கமாக முடியுமே என்று அந்தப் படு பாவி கிழம் நினைக்கவே இல்லை.

வீட்டின் அலங்கோலம் இம்மாதிரியாகிவிட்டதால், மீனுவும் முத்துச்சாமியும் வேதனை யொருபுறமும், சரியாக கவனிப்பாரற்ற பரதேசித்தன மொருபுறமும் ஒன்று கூடி அவர்கள் துரும்பென மெலிந்துவிட்டார்கள். கிழவர் ஆத்திரத்தில் எத்தனை திட்டிய போதிலும் வேணுசாமியின் மனம் தாங்காமல் ஒரு தகுந்த ஆளை யனுப்பி, அவ்விருவர்களையும் அழைத்துக்கொண்டு போய்விட்டான். கிழவரும் இச்சமயம் அவர்கள் வெளியூருக்குச் சென்றிருப்பதே நலமென்று கருதிப் பேசாதிருந்துவிட்டார்.

கருப்பன், தன் வீட்டில் காவல் காப்பதற்கும் மைதிலியைக் கவனிப்பதற்கும் பொறுப்பாளியாகிவிட்டான். வேளா வேளைக்கு மைதிலிக்கு நல்ல வார்த்தைகள் சொல்வதுடன் வேணி உயிருடனிருப்பதாகவே கதைகளைச் சொல்லி, அவளை ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது சாப்பிடச் செய்வான். மனம் திரும்பியபோது அவள் ஒரு கவளம் சாப்பிடுவாள். மனம் திரும்பாதபோது கடவுளே வந்தாலும் தொட்டுப் பார்க்கமாட்டாள். மைதிலிக்காக உண்மையில் மனம் உருகி பரிதாபத்துடன் கண்ணீர் பெருக்கக்கூடிய பாசமுள்ள மனிதன் கருப்பன் ஒருவன்தான்; ஆகையால் அவன் அவளைக் குழந்தை முதல் தூக்கி வளர்த்த பேரன்பின் வேகத்தினால் நாம் முன் கூறியபடி உன்றுயிலைக் கண்டு சகிக்காமல் அவளது மரணத்தையே கோரவும் துணிந்தான்.

மைதிலி தலைவிரி கோலமாய் கட்டிலில் உட்கார்ந்து கடகடவென்று சிரித்துக்கொண்டும் தலையையும் முகத்தையும் பிச்சிக்கொண்டும் இருக்கையில் கருப்பன் ஆகாரத்துடன் உள்ளே வந்தான். கருப்பனின் மனைவியும் கூட வந்தாள். இருவருடைய கண்களிலும் கண்ணீர் பெருகுகிறது.

கருப்பன்:—(கெஞ்சிய குரலில்) சின்னம்மா! இதைச் சாப்பிட்டுடும்மா! இன்னிக்கு வேணியம்மா கட்டாயம் ஒன்னெ பாக்க வராங்களாம். சீக்கிரம் துண்ணுபுட்டு பாக்கலாம். காத்தாயி கிட்டெ தலை சிவிக்கோ பாக்கலாம்.

மைதிலி:—அஹ் ஹ ஹ் ஹ் ஹா........போடா போ! மன்மத பாண சஞ்சீவி சாப்பாட்ரவளுக்குக் குடுடா! எனக்கு வேண்டாண்டா! வாஸந்தி! நீயுமா செத்துபுட்டே........ராஜு! ஐயையோ! நீயும் செத்துப்பூட்டயா....வேணி! நீ ஏன் செத்துப் போனே?....மூர்த்தி! நீ ஏன் செத்துபோகவே,.........நீ அசடு. நீயும் செத்துப்போ....ஹி ஹி ஹி—என்று சம்பந்தமில்லாது பிதற்றியபடியே சாப்பாட்டை எட்டி உதைத்துத் தள்ளினாள். கருப்பனும் காத்தாயியும் கண்ணீர்விட்டார்கள்.

கருப்பன்:—அம்மா! நீ அவங்களை எல்லாம் இதோ பாக்கரயா! இதோ பாரேன் அவங்களே—என்று கூறிக்கொண்டே

மூர்த்தி, வேணி, குழந்தைகள் ஆகியோரடங்கிய புகைப்படத்தை அவளுக்குக் காட்டினான். அதைக் கண்ட உடன் மைதிலியின் ஆவேசமும் நிலைமையும் கரைபுரண்டன. ஹா! வேணி! வேணி! நீ செத்துப்போகல்லையே....என் கண்மணிகளே! மூர்த்தி!....அதோ! அதோ! கை ஒடயலேயே. நன்னா இருக்கே. வாளந்தியெ கட்டிண்டிருக்கயே. அப்பாடா! இப்பதான் சரியாச்சு....கரப்பா! இவாளுக்கெல்லாம் சாப்பாடு போட்ரா! பசிக்கிறதான்னு அழராடா! ஊம்....போடு. போடடா!" என்று அந்தப் படத்துடன் குலாவிச் சிரிப்பதும் அழுவதுமாக வாரம்பித்தாள்.

இதை வெளியிலிருந்து பார்த்துக்கொண்டே வந்த கிழவர் தலையில் இரண்டு கையாலும் அடித்துக்கொண்டு, 'உம்....கிரகச் சாரம்; தலையெழுத்து. ஊர்லே தினம் தினம் எத்தனையோ பேர் செத்துப்போராளே. இந்தச் சனியனுக்குச் சாவு வரக்கூடாதா! என் மானத்தெ வாங்க இன்னும் சாகாதெ இருக்கே பீடை" என்ற குரல் கருப்பனின் காதில் விழுந்ததும் அவன் இதயமே பிளந்துவிடும்போலாகிவிட்டது.

அவன் மனத்தைப் பீறிக்கொண்டு வரும் ஆத்திரத்தினாலும் அனுதாபத்தினாலும் எஜமான் என்ற மரியாதையையும் மறந்து "எஜமான்! நீங்க சொல்றது ரொம்ப உளுமெங்க. எங்காச்சும் ஒரு விஷம் அம்பிட்டுதுன்னா ஒங்களுக்குப் பலியான இந்தம்மாளுக்குக் குடுத்து நானும் துன்னுப்புடுவேன். சாவாத பொணமா இருக்கரத்துலே செத்த பொணமாயிட்டா ரொம்ப நல்லா இருக்கும்" என்று மனம் கொதிக்கக் கூறினான். அதே சமயம் எதிர் வீட்டுக் கிழவர் வேதாசலத்தைக் கூப்பிட்ட குரல் கேட்டதும் அவர் கருப்பனை ஒருதரம் முறைத்துப் பார்த்துவிட்டு ஓட்டமாக ஓடினார்.

51

கிழவர் தன் அந்தரங்க தோழருடன் தமது தனியறைக்குச் சென்றார். வேதாசலத்தின் தோளில் தட்டிக் கொடுத்து, "அடேய் வேதாசலம்! நமக்கு நல்ல காலம் பிறக்கும் நாள் வந்துடுத்துடா! நேத்திக்கி ஒரு பைராகி வந்தான் பாரு. அவன் யாரோ ஒரு பெரிய மகா தபசிகிட்டெ ஏதேதோ மந்திரம் தந்திரம் மருந்து வகை எல்லாம் கத்துண்டு பெரிய நிபுணனாயிட்டானும். தங்கம் பண்ணத் தெரியுமாம். வெள்ளி பண்ணத் தெரியுமாம். அதெல்லாங் கடக்கட்டும். நம்மைப்போல கிழவன்களெ—

கிழவர்:—(குறுக்கே விழுந்து) டேய்! நீ நாசமாப்போக. பாக்கரவாள்ளாம் கிழவன்னு சொல்ரபோதே என் உசிரு போராப்பலெ இருக்கு. இன்னும் நீயும் சொல்லி எழவெடுக்கிறயெ! இனுமே இப்படி சொல்லாதேடா!

எ. கி.:—இல்லெ! இல்லெ.... அப்படிப்பட்டவாளுக்கு மருந்து குடுத்தாக்கா ஒடனே சின்னபிள்ளை மாதிரி பலமும் சுறு சுறுப்பும் வாலிபமும் தேகக்கட்டும் வந்துட்ரதாண்டா! அந்த மாதிரி எத்தனையோ பேர் சாப்பிட்டு வாலிபமா இருக்கறவாளே நேரில் அழைச்சிண்டு போய் அவன் காட்டினான். எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்தப் பைராகியெ இப்பொ இங்கே வரச்சொல்லி இருக்கேன். அதெ ஒன்னிடம் முன்னதாகத் தெரிவிக்கவே வந்தேன். அதோ பைராகி வரான். பாத்தியா எப்படி இருக்கான்? "வாங்கோ பைராகிவாள்! ஆயியெ இதர் பைட்டியே!" என்றார். பைராகியும் வந்து உட்கார்ந்தார். "ஜெ ஸீதாராம்! ஜெ ஸீதாராம்!" என்று கூறியபடியே மருந்துப் பெட்டியை அவிழ்த்தார்.

வேதாசலம்:—(சந்தோஷத்துடன்) என் ஐயா! இதெல்லாம் நன்னா பலிச்சிருக்கா.

பைராகி:—பேஷா பலிச்சிருக்கு; இவாளேதான் நேத்திக்கு பழைச்சிண்டு போய் காட்டினேனே. அவ்வளவு என்னத்துக்கு. எனக்கே முதல்லே சந்தேகமாயிருந்தது. என் தமயனுக்கே கொடுத்துப் பரீக்ஷித்த பிறகே பொது மக்களுக்குக் குடுக்கவாரம்பிச்சேன். இதோ! இது மன்மதபாண லேகியம். இது மதன

பாண சூர்ணம். இது மாரலீலா ஷர்பத்து. மூணு மாதிரி செய்திருக்கிறது. எல்லாம் ஒரே சத்துள்ளதுதான். ரூபந்தான் வேறு. இதோ ஒரு உருண்டெ சாப்பிட்டுப் பாருமே. இப்பவே நல்ல தென்பு உண்டாகும்—என்று லேகியத்தில் ஒரு உருண்டை கொடுத்தார்.

கிழவர் கைகளை நன்றாகத் துடைத்துக்கொண்டு மன்மதனை நினைத்தபடியே லேகியத்தை வாங்கிச் சாப்பிட்டார். "அடாடாடா! என்ன ருசியா இருக்கு? என்ன ஆநந்தமா இருக்கு ? நீ சாப்பிட்டு பாருடா!" என்றார். மற்றொரு கிழவரும் வாங்கி சாப்பிட்டார். இருவருக்கும் சந்தோஷம் சொல்லத் திறமில்லை. "சரி. இந்த லேகியத்தை அப்படியே எனக்குக் குடுத்துடும். அவருக்கு நாளைக்கு பண்ணித் தரலாம்" என்று கிழவர் டப்பியுடன் வாங்கிக் கொண்டு "பணம் எவ்வளவு?" என்று கேட்டார்.

பைராகி சற்றுத் தயங்கியபடியே "கடவுள் சாக்ஷியாக 15 ரூபாய் செலவாச்சு. ஐயா அதுக்குமேலே என்ன குடுத்தாலும் சரி" என்றார். கிழவர் இரண்டு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். அவ்வறையின் ஜன்னலுக்கு வெளியே நின்ற கருப்பன் ஜன்னலால் இவைகளைப் பார்த்துக்கொண்டே "ஐயோ! தலைவிதியே! இவன் யாரோ இந்தக் கிழவனின் பைத்தியத்தைத் தெரிஞ்சுகிணு பணம் அடிச்சிகிணு போக வந்திருக்கான். இப்படி ஏமாற்றதே! ஊம். விதி! விதி! கிளியாட்டும் பொண்ணை கொண்ணு புட்டு இதுக்கு மருந்து வேரயா!" என்று முணு முணுத்தான்.

52

கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், கருப்பைக்குள்ளிருக்கும் சிசுவுக்கும், காட்டிலிருக்கும் மரங்களுக்கும் கடவுள் தம் பொறுப்பாக உணவளித்துக் காக்கவில்லையா! அதுபோல் அவரால் ஆக்கப்பட்ட உலகத்தில் அவரால் படைக்கப்பட்ட ஒரு குடும்பத்தைக் காக்காது கைவிடுவாரா! விடமாட்டார். யார் மூலமேனும் தம் காத்தலான

தொழிலை நடத்தியே தீருவார். நமது குழந்தைகளுக்கு இத் தேசியத் தொண்டர்களை ஏவி உதவி புரியச் செய்தார்போலும்.

கிழவி ஆசிரமத்திற்கு வந்ததும், சற்று தேறினாள். குழந்தைகள் ஆசிரமத்தின் ஆனந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு நூல் நூற்கவும், பஞ்சு பதம் செய்யவும், வீடு வீடாகச் சென்று, "காங்கிரஸில் அங்கத்தினர்களாகச் சேருங்கள். தேசியக் கக்ஷியைப் பலப்படுத்துங்கள். பாரத தேசத்தின் கௌரவத்தைக் காக்க முன்னால் வாருங்கள். கதரணியும் விரதம் எடுத்துக்கொள்ளுங்கள். சுதேசி சாமான்களை வாங்குங்கள். பகவத் கீதையைப் பாராயணம் செய்யுங்கள்" என்றெல்லாம் காங்கிரஸ்காரர்களின் கொள்கைகளைப் ப்ரப்பவும் பழகிவிட்டார்கள்.

இந்த ஆனந்தகரமான வேலையிலீடுபட்டுக் கவலை இன்றிச் சந்தோஷமாகக் காலங்கழிக்கும் மார்க்கம் ஏற்பட்டிருப்பினும் வாஸந்தியின் மனத்தில் தன் பிதாவின் கதி, பளிச் பளிச் என்று தோன்றிக் கவலையையும், அபாரமான துக்கத்தையும் உண்டாக்கி வருத்தாமலில்லை. 'அப்பாவும் இங்குகூட விருந்தால் எத்தனை ஆனந்தமாக விருக்கும்?' என்று சதா எண்ணுவாள். அவ்வாறு எண்ணும்போதெல்லாம் கண்ணீர் தானாகப் பெருகி வழியும். அந்தச் சமயங்களிலெல்லாம் ஆசிரம வாஸிகளும் தொண்டர் தலைவனும் இவளுக்குத் தேறுதல் கூறுவார்கள். தொண்டர் தலைவன் அதிகாரிகளின் உத்திரவு பெற்று இரண்டு மூன்று தரம் குழந்தைகளை அழைத்துச் சென்று மூர்த்திக்குக் காட்டிவந்தான். தன் கதி இவ்விதமாயினும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உண்மையாக உழைக்கும் தேசத் தொண்டர்கள் கிடைத்தது பற்றி மூர்த்தியின் உள்ளம் ஆனந்தத்தினால் பரவச முற்றது.

வாஸந்தி கையில் ஒரு சிறு கதர்க் கொடியும் புத்தகமும் எடுத்துக்கொண்டு தலைவனுடனும் மற்றும் சில தேச ஸேவிகைகளுடனும் வழக்கம்போல் காங்கிரஸ் அங்கத்தினர்களைச் சேர்க்கக் கிளம்பினாள். சுறுசுறுப்பும், வேலையில் உத்ஸாகமும் கொண்ட வாஸந்தி ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்கி, தக்காருக்குத் தக்கபடிப் பேசி, "ஐயா! நாலணா ஒரு வருஷத்திற்கெல்லாம் உங்கள் தேசத்திற்காக உபயோகப்படறதை நீங்க தடுக்கலாமா? நம்ப பாரத நாடு க்ஷேமமடைய வாண்டாமா? நமக்கெல்லாம்

சுதந்திரம் வாண்டாமா? நாலணு கட்டிக் கையெழுத்துப் போடுங்க சார்!" என்று ஆடவர்களிடம் கூறுவாள்.

ஸ்திரீகளிடம், "மாமீ! ஒரு நாளேக்கு மார்க்கட்டிலே காய்கறி வாங்கிண எட்டணு செலவாரது. இரண்டு அல்லது மூறு நாள்ளே ஜீரணமாயிட்ரது. ஒரு வாயல் ரவிக்கே வாங்கிணு அடுத்த மாசம் கிழிஞ்சிபோறது. தேசத்தின் பெருமையை நிலே நாட்ட ஒரு நாலணு கொடுக்கக் கூடாதா? அது முடியாதா? குடுத்து காங்கிரஸ் மெம்பராகச் சேருங்கோ மாமீ!" என்பாள்

சிறுவர் சிறுமியரிடம் பேசும்போது, "இதோ பாருங்க. ஒங்கப்பாவெயும் அம்மாவெயும் காங்கிரஸில் மெம்பரா சேரச் சொல்லுங்க. கதர் வாங்கிக் கட்டுங்க. நீங்களும் இங்கே வந்து சேந்துடுங்கோ! நாம்பல்லாம் ரொம்ப தமாஷா வேலே செய்யலாம். காந்தி தாதா வரப்போருராம். அப்ப நாம்பளே தொண்டரா இருந்து அவருக்கு வேலெ செய்யலாம்!" என்று தூண்டி விடுவாள்.

இம்மாதிரியே காங்கிரஸ் அங்கத்தினர்களேச் சேர்ப்பதில் வெகு சாமர்த்தியசாலியாகிவிட்டாள். அவ்வாறு சேர்க்கப் போகும் இடங்களில் இவளுடைய சமத்காரத்திற்கு மெச்சியும் குழந்தை இத்தனே பேசுகிறதே என்று சந்தோஷப்பட்டும், அங்கத் தினர்கள் சேர்ந்தார்கள். அவ்வாறு கேட்கும் இடங்களில் சில கொழுப்புப் பிடித்தவர்கள் 'இந்தப் பெண் யாரு? மாயக் கொள்ளேயிலே சம்பந்தப்பட்டிருக்கும் மூர்த்தியின் பெண் ணல்லாவா?' என்று கேட்கும்போது, வாஸந்தியின் உத்சாக மெல்லாம் பறந்துபோய் முகத்தில் விசனமும் கோபமும் ஜொலிக்கும்.

அப்போதும் சேர்ந்த இடத்து சகவர்ஸத்தின் மனத் தால் சாந்தத்தை இழக்காமல், "ஐயா! அநியாயமாக எங்கப் பாவெ பழிக்காதேங்கொ! இந்த அநியாய அபாண்டத்தையும் கடவுள் ஒரு நாளேக்கி நிரூபிப்பார். இப்படியே குத்தவாளியா இருக்கமாட்டார் எங்கப்பா" என்று கண்ணீர் பெருகக் கூறிக் கொண்டே வந்துவிடுவாள்.

ஒரு தினம் அங்கத்தினர்கள் சேர்த்துக்கொண்டு வருகையில் மைதிலியின் வீட்டுப் பக்கம் வரும்போது வாஸந்தி தலைகட்டிய நாகம்போல் நின்றுவிட்டாள். தன் தாயாரின் சவத்தை எடுத்துச் செல்கையில் நடந்த சம்பவமும், மைதிலியின் அன்பும், அவளுக்குப் பயித்தியம் பிடித்திருக்கும் கண்றாவியும். சிறிய பெண்ணுயினும் ஞாபகம் வந்து, அவளால் தாங்கமுடியாத வேதனையுண்டாகிவிட்டது. மைதிலியைப் பார்த்து எத்தனையோ நாளாகிவிட்டதால், அவளைப் பார்க்க வேண்டுமென்று தடுக்கமுடியாத ஆசையும் மனத்தில் போராடுகிறது. போனுல் கிழவன் என்ன செய்வானே என்ற பயமும் கூடவே நெஞ்சை அள்ளுகிறது. இத்தனை பேர்கள் இருப்பதால் தைரியமாக உள்ளே சென்று பார்த்துவிட்டே வருவது என்று தைரியங்கொண்டாள்.

தலைவனை நோக்கி, "மாமா! இந்த வீட்டில் எங்களுக்கு மிகவும் வேண்டிய மாமி இருக்கா! அவளே பாத்துட்டு வரேன். நீங்களும் கூடவே வாங்கோ மாமா! அங்கே ஒரு தாதா இருக்கு. அது மகா பொல்லாத கெழம். அடிச்சுடும். அதுக்காக நீங்க வாங்கோ மாமா!" வென்று கையைப் பிடித்து இழுத்தாள். இதற்குள் மற்ற தொண்டர்கள் வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்! பாரத மாதாக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே! பாரத நாட்டின் பெருமையை நிலை நாட்ட எல்லோரும் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருங்கள். தேசத்திற்கு ஒத்துழையுங்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக நாலணு கொடுத்து அங்கத்தினராகுங்கள்" என்று கோஷித்தார்கள்.

வாஸந்தி, தலைவனை அழைத்துக் கொண்டு, மைதிலியின் வீட்டிற்குள் தைரியத்துடன் ஏறினுள். கிழவர் இருக்கிறரோ வென்று நாற்புறமும் சுற்றிப் பார்த்துக் கொண்டே மெல்ல நடந்தாள். அப்போதுதான் கருப்பன் சோப்பாக்களை எல்லாம் தட்டிக் கொண்டிருந்தான். வாஸந்தி மெல்லஅவனருகில் சென்று கையைப் பிடித்து அசைத்தபடியே, "கருப்பா! அம்மா எங்கே? அம்மாக்கு எப்படி இருக்கு? அம்மாளே பாக்கணும்னு ஆசெ அடிச்சுண்டுது. அதுக்காக வந்தேன். அந்தக் கெழம் இருக்கோ?" என்று வாஞ்சை ததும்பக் கேட்டாள்.

கருப்பனுக்கு வாஸந்தியைப் பார்த்த சந்தோஷம் ஒரு பெரிய காட்டு வெள்ளம்போல் பொங்கிவிட்டது. அவளை ஒரு சிறுமியாக என்றுமல் பெரிய தேவதையைப் பார்ப்பதுபோல் எண்ணி, வாஸந்தியைக் கட்டியணைத்துத் தடவியபடியே "கொயந்தே....சவுக்யமா இருக்கியாம்மா! எங்கண்ணூ! என் ராசாத்தின்னு அம்மா சதா ஒன்னேயே நெனச்சுகிட்டு இருக்காங்கோ! ஓடியாம்மா!" என்று கையைப் பிடித்துக் கொண்டு ஓடி, மைதிலி இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்று "அம்மா! சின்னம்மா! இதோ பாருங்க. ஒங்க ராசாத்தி யம்மா வந்திருக்குதுங்க" என்று காட்டினன்.

மைதிலியின் தலைவிரி கோலமும், முக விகாரமும், பரிதாபமும் வாஸந்தியை ஒரே கலக்கு கலக்கிவிட்டன. அவள் தாங்க முடியாத விசனத்துடனும், பயத்துடனும் மைதிலியை உற்றுப் பார்த்தபடியே, "மாமீ! மாமீ! என்னெ தெரியறதா மாமீ!" என்று கோவெனக் கதறிவிட்டாள். அத்தகைய நிலைமையிலும் மைதிலி வாஸந்தியைப் பார்த்த உடனே இரு கைகளையும் விரித்துக் கொண்டு பயங்கரமாகக் கண்களை விழித்துப் பார்த்தபடியே ஓடி வந்து, "வாஸந்தீ! வாஸந்தீ! நீ செத்துபோகல்லே? ஒம் பொணத்தெ எடுத்துண்டு போகல்லே....கண்ணூ! நீ செத்துப் போகவேண்டாம். அழாதேடா ராஜா! என் கண்ணல்ல" என்று ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாது கூறி, வாஸந்தியைக் கட்டியணைத்து, கண்ணில் கொட்டிய ஜலத்தினல் வாஸந்தியின் தலையை நனைத்துவிட்டாள்.

வாஸந்திக்குக் கரை காணுத அன்பு ஒரு புறமிருப்பினும் சிறுமியானதால் பயமும் கூடவே நடுக்குகிறது. மைதிலியின் முகத்தைப் பார்க்கிறள்; பயந்து தலை குனிகிறள். மைதிலி கடகடவென்று சிரிப்பதும் கண்ணீர் விடுவதும் வாஸந்தியின் முகத்தைத் தன் முகத்தோடு முகம் பதித்துக் கொண்டு அழுவதுமாக விருந்தாள்.

இந்தப் பரிதாபத்தைக் கண்ட தொண்டர் தலைவன் "ஐயோ! என்ன கன்ருவிக் காட்சி! எம்பா! எதனலே இந்தம்மா இப்படி இருக்காங்கோ?" என்று கருப்பனைக் கேட்டான். கருப்பன் கண்ணீர் பெருக சகல சரிதையையும் கூறிப் பின்னர் "சாமீ! இனுமே இந்தம்மாளும் பழயமாதிரி தெளிஞ்சு வருவாங்களா!

இதுக்கு ஏதாச்சும் வயி சொல்லுங்களேன். எம் பெத்த பொண்ணு மாதிரி வளத்துப்புட்டேஞ் சாமி! வவுறு பத்தி எரியுது சாமி! இப்படி பாக்கரத்தெவிட இந்தம்மா செத்துட்டாகூட தேவலென்னு தோணுது சாமி!'' என்று அழுதான்.

தலைவனுக்கும் மனம் தாங்காமல் கண்ணீர் துளிர்த்து விட்டது. கருப்பனை நோக்கி, “அப்பா! இந்தம்மாளின் உடம்பு வாசியாகலாம். ஒரே எடத்துலே போட்டு அடச்சுட்டதாலே இப்படி யாயிடுத்துன்னு நெனக்கிறேன். நீ இவாளே மெல்ல வெளியிலே அழைச்சிண்டு போயி பலாக்குக் காட்டு. புத்தி தெளிய லாம். எங்க ஆசிரமத்துக்கு அழைச்சுண்டு வா! அங்கே வந்து பாத்தாலே மனம் சாந்தி யடையும்'' என்றான்.

கருப்பன் :—ஐயையோ! இந்த ஊட்லே பெரும் பூதம் ஒன்று இருக்கே. அது சும்மா இருக்குமா?........(சற்று யோசித்து) சரி சாமீ! ஆவுட்டங்க. அப்படியே பண்ரேன். கடவுள் எந்த கதி குடுக்கராருன்னு பாக்கலாம்.

தலைவன் :—வாஸந்தீ! மாமியெ நம்ப ஆசிரமத்துக்கு வரா ளான்னு கேளும்மா.

வாஸந்தி :—மாமீ! என்னோடெ காந்தி ஆசிரமத்துக்கு வரங் களா மாமீ!

மைதிலி :—ஹி ஹி ஹி! காந்தீ! காந்தீ! மகாத்மா காந்தீ! மகாத்மா காந்திக்கு ஜே!....ஜே!....ஜே!....வந்தேமாதரம்....

வாஸந்தி .—(கண்ணீர் பெருக) ஆமாம் மாமீ! வந்தேமாதரம் தான். வரயா மாமீ!

மைதிலி :—வேணி இருக்காளா?....வேணி கிட்டயா போக லாம். சரி. எனக்கும் பாடெ கொண்டு வா. அதுலெ வரேன். ஹி ஹி ஹி!

வாஸந்தி :—கருப்பா! எங்க மாமா சொன்னப்பலெ எப்படி யாவது அழெச்சிண்டு வரயா. நானு போரேன். மாமீ! நானு போகட்டுமா?—என்றாள். மைதிலி அவளை இறுகத் தழுவி முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டுப் “போம்மா! போ! செத்துப் போ! நானும் செத்துப் போரேன். வேணியும் செத்துப் போயிட்டா. மூர்த்தியும் செத்துப் போயிட்டான், எல்லாரும்

செத்துப் போயிட்டா. தாதா மாத்திரம் செத்துப் போகல்லே.... ஹி ஹி" என்றாள். கண்ணீர் பெருக வாஸந்தி கருப்பனிடம் சொல்லிக் கொண்டு, வெளியில் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டாள்.

53

"காத்தாயி! அல்லாஞ் செஞ்சுபுட்டாயா?" என்று கருப்பன் கேட்டான். காத்தாயி சந்தோஷத்துடன் "தலெ சீவினேன். பொட்டு வெச்சேன். வேறெ சீலெ கட்டினேன். அல்லாம் செஞ்சுப் புட்டேன்", என்றாள்.

கருப்பன்:—ரொம்ப சந்தோஷம்டெ! சரி. நீ போயி அம்மா பொடவெயெ கட்டிண்டு தலெ விரிச்சிண்டு அம்மாளெ போலயே அழு, சிரி, பேசு. அல்லாம் பண்ணிக்கிட்டு இரு. கெழவன் வந்தாக்கா கதவெ தொரக்காதே. இடிச்சிட்டுப் போவட்டும். நானு நம்ப வீரம்மாளெ இட்டுகினு சின்னம்மாளெ அழச்சிட்டு போரேன். சங்கதி வெளியிலே தெரிஞ்சுதோ ஒண்ணெ கொன்னுபுடுவேன். போயி நீ சிங்காரம் பண்ணிக்கோ.—என்று சந்தோஷத்தால் தட்டிக் கொடுத்தான். காத்தாயியும் எழுந்து உட்புறம் ஓடினாள்.

பின்னும் 5 நிமிஷத்துக்கெல்லாம் கருப்பன் வீரம்மாள் என்ற ஒரு கிழவியை உதவிக்குக் கொண்டு மைதிலியை மெல்ல அவ்வறையிலிருந்து வெளியே அழைத்து வந்தான். "சின்னம்மா! நீங்க வாங்க. வேணியம்மா ஒங்களெ பாக்கணுமாம். இட்டாரச் சொன்னாங்க. பேசாதே வாங்க" என்றான். வீரம்மாள் மைதிலியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். கருப்பன் முன்னே சென்றான். மைதிலி பைத்தியக்காரப் பார்வையும் சிரிப்பும் அழுகையும் முகக் கோணலுமாக மெல்ல நடந்தாள். தயாராக நிற்கும் வண்டியில் ஏற்றிவிட்டு, கருப்பன் வண்டியை ஓட்ட வாரம்பித்தான். வீரம்மா மைதிலியைப் பிடித்துக் கொண்டாள். பிரமிப்புடன் மைதிலி உட்கார்ந்திருந்தாள்.

இவர்கள் சென்ற 5 நிமிடத்திற்கெல்லாம் கிழவர் ஒய்யார நடையுடன் அந்தப் பக்கம் வந்து, "கருப்பா! கருப்பா!" என்றார். சந்தடி இல்லை. "காத்தாயி" என்றார். அதற்கும் பதிலில்லை. "எங்கே தொலைந்தது சனிகள்?" என்று கூறியபடியே மைதிலியின் அறையில் ஜன்னலால் எட்டிப் பார்த்தார். காத்தாயி சிரிப்பும் அழுகையுமாக ஜன்னல் பக்கம் முதுகு காட்டியவாறு "மன்மத பாண சஞ்சீவி....ஹி ஹி ஹி....மன்மத பாண சஞ்சீவி ஈஈஈஈ" என்ற வார்த்தையைப் பாட்டாக இழுத்து பெரிய நடனம் செய்ய வாரம்பித்தாள்.

வெளியிலிருந்து பார்க்கும் கிழவர் தலையிலடித்துக்கொண்டு, 'கிரகசாரம்!....தலை யெழுத்து, ஏ மூதேவி! ஏய் இதென்னக் கூத்து? மானம் போரதுடீ சனியனே! நிக்கறையா வந்து பெரம்பு முறியும்படி அடிச்சுப் புடட்டுமா?" என்று கத்தினார். அதே சமயம் காத்தாயி தலை மயிரால் முகத்தை நன்றாக மூடிக்கொண்டு, ஜன்னல் பக்கம் வந்து திடீரென்று "ஹி ஹி ஹி! தாதா! மன்மதனுட்டமே இருக்கீங்களே....மன்மதனே....கிழ மன்மதனே!" என்று அபிநயம் பிடிக்க வாரம்பித்தாள். கிழவர் முதலில் திடுக்கிட்டு நடுங்கி விட்டார். பின்னர் கோபத்துடன் தலையிலடித்துக் கொண்டே "பாவி முண்டே. ஒனக்கேண்டி சாவு வரல்லே?" என்று கூறிக்கொண்டே போய் விட்டார். அதே சமயம் காத்தாயி, "சனி! தொலைஞ்சு போ" என்றாள்.

54

மூர்த்தி மாயக்கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்தவன்தான் என்று தீர்மானித்து, அவனுக்கு அதிகாரிகள், இரண்டு வருட காலம் தண்டனை விதித்துவிட்டார்கள். இதைக் கேட்ட வாஸந்தியும் கிழவியும் மூர்ச்சையேயாகி விட்டார்கள் என்றே கூறலாம். தொண்டர் தலைவனின் பேரன்பினால் சற்று தேறுதலடைந்த வாஸந்தி, கிழவியைத் தேற்றிவந்தாள்.

கையுமில்லாமல் சிறைச் சாலையில் தவிக்கும் மூர்த்தியின் கதி எப்படித்தானிருக்கும்? அவன் மனது என்ன பாடுதான் பட்டுத் தத்தளிக்கும்? சதா கண்ணீர் சிந்தியபடியே இருக்கிறான். மற்ற கைதிகளைப்போல் இவன் வேலை செய்யவும் கை இல்லாததால் இடக் கையினால் இவன் என்னதான் செய்யமுடியும்?

வேலை செய்யவும் வக்கில்லாத நொண்டி என்று கைதிகளை வசி வனம் செய்யும்போது, அவன் உயிரே போய்விட்டதுபோலாகி விடும். தலையில் கையை வைத்துக்கொண்டு பயித்தியம்போல் புலம்பித் துடிப்பான்.

அங்கு காவலிருக்கும் வார்டர் உண்மையில் உத்தமமான குணமும் நல்லொழுக்கமும் தயாளத்தனமும் கொண்டவனாகை யினால் மூர்த்தியின் ஆதிமுதலான சரிதையைக் கேட்டுப் பரிதாபப் பட்டு, அவ்வப்போது அவனுக்குத் தேறுதல் கூறுவதும், வைராக்ய மான கதைகளைப் போதிப்பதுமாக சமாதானம் செய்வான். அவன் அடிக்கடி வெளியில் சென்று வரும்போது வாஸந்தி, ராஜு, கிழவி முதலியவர்களைப்பற்றிய தகவலைத் தொண்டர் தலைவன் மூலமாக விசாரித்துக் கொண்டுவந்து மூர்த்தியினிடம் ரகசியமாகக் கூறுவான்.

மூர்த்தி, தன் குழந்தைகளைவிடத் தனது அந்திய காலத்தில் அவதிப்படும் தாயை நினைத்து நினைத்துக் கதறித் தேகம் மெலிந்து குச்சிபோலாகிவிட்டான். சதா "அம்மா! நான் மகா பாவி. ஒரு நாளாவது ஒன்னெ வெச்சு நான் காப்பாத்தல்லேயே. நீ கிராமத்துலே அழுதபோது உன்னை இனிமே யாரிடமும் விட மாட்டேன். நானே காப்பேன்னு சொன்னேனே! அந்த மாத்ரு கைங்கர்யம் செய்யாத பாவியாய் நொண்டியாயிட்டேனே! என்று வருத்தப்பட்டேனே, இப்போ அடியோடு படுபாவியாய் பழியோடெ ஜெயிலில் தவிக்க விதியாச்சே. ஈசா! என்னெ ஒன் திருவடியிலே சேர்க்கக்கூடாதா?" என்று கதறுவான்.

மூர்த்தி :—ஐயா! வார்டர்! இன்னிக்காவது அந்தப் பக்கம் போனங்களா! எங்கம்மா எப்படி இருக்கா! சமாசாரம் தெரியுமா? குழந்தைகள் என்ன பண்ரா! அழாமே இருக்காளா! கொஞ்சம் சொல்லுங்களேன்.

வார்டர் :—மூர்த்தி! நான் என்னத்தெச் சொல்வேன்! கிழ விக்கு ஸ்வாசம் வாங்கரதாம். ஆனா அப்பவும் நெனவுமட்டும் தெரிய ரதாம். மூர்த்தி! மூர்த்தீன்னு கத்தருளாம்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மூர்த்தி வெட்டிச் சாய்த்த மரம்போல் "அம்மா! அம்மா!" வென்று கர்ஜித்தபடியே விழுந்தான். "ஐயோ! நாம் என் சொன்னோம்? பெரிய ஆபத் தாயிடுத்தே!" என்று வார்டர் கூறிக்கொண்டே "மூர்த்தி! மூர்த்தி! எழுந்திரு; எழுந்திரு. ஐயோ! அதோ தொரெ வெந்தூட் டாரு! நீ இப்படி விழுந்து கடந்தா ஒன்னெ ஆஸ்பத்திரி வார்டுலே போட்டுடுவா! கண்ணெ தொற!" என்றான்.



எத்தகைய கடின சித்தமும் கொடிய மிருகத்தன்மையும் படைத்தவர்களானாலும் சரி, முற்றுந் துறந்த முனிவர்களானாலும் சரி, பெற்ற அன்னையின் பாசத்தை அகற்ற முடியுமா? பட்டினத்து அடிகள் அத்தனை பெருந் துறவியாயினும் தன் அன்னையின்பால் கொண்ட பேரன்பை மாற்ற முடிந்ததா? அங்ஙனமிருக்க இந்த ஏழையின் மன நிலையைப்பற்றிக் கூறவேண்டுமா?

சில நிமிடங்கள் பிரக்ஞையற்றுச் சவம்போலக் கிடந்தான். பிறகு சற்றுத் தெளிவு பெற்று, "அம்மா! அம்மா! ஒன்னெ நான் கடைசிதரம் பார்க்கக்கூட குடுத்துவெக்காத பாவியாயிட்டேனே! அம்மா! என்னாலே சகிக்க முடியல்லயே! ஒன்னெ நான் பாக்காமல் பறிகுடுத்துடுவேன்னு கனவிலேகூட நெனைக்கல்லயே! பெத்த தாயின் அந்திம காலத்தில் பக்கத்திலிருந்து பஞ்சினாலே பால் வாத்து அனுப்பாத பிள்ளை இருந்தென்ன? இறந்தென்ன? ரெண்டும் ஒன்னுதானேன்னு உன் உள்ளம் நினைக்காதா? ஊர் ஏசாதா? ஐயோ! மகாபாவி எனக்கு இத்தனை சங்கடப்படுவதற்கு விதி இருக்கும்போது என் பிராணன்தான் எப்படிப் போகும். சண்டாளன்! பாவி! நான் பாவி. அம்மா! அம்மா!" வென்று பயித்தியம் பிடித்தவன்போலத் தன் ஒரு கையால் தலையைப் பிச்சிக் கொண்டும், மென்னியை இருக்கிக் கொண்டும், தலையைக் கதவிலும் சுவரிலும் போட்டு மோதிக்கொண்டும் துடித்தான். தன் தாயின் உயிர் ஊசலாடுவதுபோலும், அவள் பக்கத்தில் குழந்தைகள் கண்ணீருடன் உட்கார்ந்திருப்பதுபோலும் தாயார், 'மூர்த்தீ! மூர்த்தீ! உன் முகத்தைக் காட்டமாட்டாயா? என் பிராணன் போகப்போகிறதே!' என்று கூறிக் கண்ணீர் பெருக்குவதுபோலும், பெற்ற தாயைச் சம்ரக்ஷிக்க கையாலாகாத பாவி என்று பொது மக்கள் வசை கூறுவதுபோலும் உருவெளித் தோற்றம் மூர்த்திக்குத் தோன்றியதால் உடனே அவன் எழுந்து அச்சிறை முற்றும் சுவரெல்லாம் தடவிப் பார்த்தபடியே சுற்றிச் சுற்றி வந்து மீண்டும் தடாரென்று கீழே விழுந்து விட்டான்.

55

கருப்பனும் வீரம்மாளும் மைதிலியை மெல்ல நடத்தி ஆசிரமத்திற்குள் அழைத்து வந்தார்கள். மைதிலி ஆசிரமத்தையும் அங்குள்ளோர்களையும் மிரள மிரளப் பார்க்கிறாள். முகத்தை ஏதோ விகாரப் படுத்துகிறாள். கையைப் பிசைகிறாள். கட கடவென்று சிரிக்கிறாள். இம்மாதிரி செய்தபடியே ஆசிரமத்திலுள்ள சர்க்காக்களையும், தேசியக் கொடிகளையும் தலைவர்களின் படங்களையும் வெறி பிடித்ததுபோல் பார்த்துக் கொண்டே வந்தாள்.

இதற்குள் வாஸந்திக்கு இச்செய்தி தெரிந்து ஓட்டமாக ஓடி வந்து, "மாமீ! மாமீ! எங்க பாட்டிக்கு ஒடம்பு ரொம்ப அதிகமாயிருக்கு மாமீ! செத்துப் போயிடுவா போலிருக்கு மாமீ!" என்று மைதிலியைக் கட்டிக் கொண்டு அழுதாள். மைதிலியும் வாஸந்தியை ஆவலுடன் இழுத்துக் கட்டிக் கொண்டு, "வாஸந்தீ! நீ செத்துப்போகல்லெ. நீ! நீ! நீ! செத்துப்போகப் போரயா?.... என்றாள். ஆனல் கண்ணீர் மட்டும் கொட்டுகிறது.

வாஸந்தி:—மாமீ! நான் செத்துப்போகல்லெ. அதோ பாருங்கோ பாரதமாதா படம். இதோ பாருங்கோ சரோஜனி தேவி. கமலாநேரு. ஜவஹர்லால் நேரு. மாமீ! இப்படி வாங்கோ! பால கங்காதர திலகர், அன்னிபெஸண்டு, மகாத்மாவின் மனைவி கஸ்தூரிபாய் காந்தி....மாமீ! இதோ பாத்தங்களா மகாத்மா காந்தி—என்று மைதிலிக்குப் பலாக்குக் காட்டும் பொருட்டு இழுத்துக் கொண்டுபோய் ஒவ்வொன்றாகக் காட்டினாள்.

மைதிலியும் பிரமை பிடித்தவாறே எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே எந்திரம்போல் நடந்து வந்தாள். மகாத்மாவைப் பார்த்ததும் தன்னை யறியாமல், "மகாத்மா காந்திக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கூச்சலிட்டாள். ஆசிரமத்திலிருந்த எல்லோரும் ஜே! கோஷம் போட்டார்கள். மைதிலியின் மனத்தில் ஒரு மின்சாரம் தாக்குவதுபோல இந்த ஜே! கோஷம் தாக்கியது. ஒரு முறை முற்றிலும் மானைப்போல் மிரள மிரளப் பார்த்தாள்.

சர்க்காவை எல்லாம் தானே கிரு கிரு என்று சுத்திப் பார்த்தாள். முகத்தில் களை கொஞ்சங் கொஞ்சமாக மாறிக் கொண்டே வருவதைப் பார்த்த கருப்பனின் உள்ளம் பூரித்தது. வாஸந்தியின் மனமும் மலர்ந்தது. மைதிலியே அங்கிருந்த தேசியக் கொடியைப் பிடித்துக் கொண்டு, அவ்விடத்திலே ஒய்யாரமாக நடந்தபடியே, "வந்தேமாதரம், பாரத மாதாவுக்கு ஜே" என்று தானே கத்தியவாறு இரண்டு மூன்று முறை உலாவினாள். பிறகு அந்தக் கொடியையும் பாரதமாதாவின் படத்தையும் உத்து உத்துப் பார்த்தாள்.

ஒன்றும் பேசத் தெரியாது கண்ணீர் பெருக விழித்தாள். கருப்பன் "அம்மா நீங்க வாங்கோ! நம்ப வீட்டுக்குப் போகலாம்" என்றான். மைதிலி "இந்தக் கொடி எனக்குதான்" என்றாள். "ஊம். எடுத்துக்கோங்கோ; வாங்கோ" என்றான். மைதிலி மற்றொரு முறை எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தாள்.

இவ்வாறே கருப்பன் தினம் தன் மனைவியை அவ்வறையில் போட்டுப் பூட்டிவிட்டு மைதிலியை ஆசிரமத்துக்கு அழைத்து வருவதும், சினிமாவுக்கு அழைத்துச் செல்வதும், பீபிள்ஸ் பார்க்கு முதலிய சில கண்காக்ஷிகளுக்கு அழைத்துச் செல்வதுமாக இருந்தான்.

அம்மாதிரி செய்ததில் மைதிலிக்கு அவைகளை எல்லாம்விட ஆசிரமமே நன்கு பிடித்தது. கிழவர் இரண்டுநாள் ஊருக்குப் போயிருந்ததால், மைதிலியை ஆசிரமத்திலேயே இரண்டு நாளும் வைத்திருந்தான். ஆசிரமத்தில் விடியற்காலம் பிரார்த்தனை, பிறகு தேகப்பயிற்சி, அதன்பிறகு நூல் நூற்றல் முதலிய முறைப்படி நடக்கும் வேலைகளைப் பார்க்கப் பார்க்க பஜனையில் அவள் மனம் லயித்தது.

இம்மாதிரி மாறுதலைக் கண்ட கருப்பன் பாரதமாதாவின் முன்பு நின்று மைதிலிக்குச் சீக்கிரம் தெளிவு கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து வேண்டுவான். வேணியின் படத்திற்குமுன் சென்று, "தாயே! நீ எங்காச்சிலும் தெய்வமா

இருந்து காப்பாத்து. ஒனக்குப் பூவாடை கும்பிட்ரேன்; இந்தம் மாளுக்கு தெளிஞ்சாக்கா ஒம் பசங்களுக்குத்தான் சொகம். தாயே வேணீயம்மா! காப்பாத்து" என்று இறைஞ்சுவான்.

எந்தத் தெய்வங்களின் சக்தியாலோ மைதிலிக்குத் தெளிவு உண்டாகி "பாரதமாதா, மகாத்மா காந்தி" என்ற உச்சரிப்பும் பழய ஞாபகங்களும் சிறிது சிறிதாக உண்டாகியது. தனக்கு இத்தனை நாளாக புத்தியே தடுமாறி இருந்ததை எண்ணி, சிந்திக்கவும் தலைப் பட்டாள். ஆனால், ஆசிரமத்தின் வாழ்க்கைகளும் செய்கைகளும் அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டதால், இனிமேல் தான் வீட்டிற்கே வரமுடியாதென்று கண்டிப்பாய்த் தீர்மானித்துவிட்டாள்.

56

மைதிலி ஆசிரமத்திலிருப்பது தெரியாதிருக்கும் பொருட்டு, கருப்பன் தன் மனைவியை மைதிலி போல நடிக்கும்படிச் செய்திருந்தான். இதனால் கிழவர் கிணற்றில் கல் போட்டதுபோல் பேசாதிருந்தார். வழக்கம்போல் ஆசிரமத்துக்காரர்கள் சுதேசி சாமான்கள் வாங்கும்படியும், காங்கிரஸ் அங்கத்தினர்களைச் சேர்க்கும் பொருட்டும் புறப்பட்ட ஊர்வலத்தில் மைதிலியும் தைரியமாக கையில் ஒரு கொடியைத் தாங்கிக் கதர் சேலையுடன் கிளம்பினாள்.

"ஜே! வந்தேமாதரம்! பாரதமாதாக்கி ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கூவிய பின்பு மைதிலி பாட வாரம் பித்தாள்.

("மயிலே உன் சாயல் கொண்ட" மெட்டு)

நம் தேயப் பொருள்கள் கொள்வோம்
நம் தேய உடை யணிவோம்
சிந்தைக் களிப்புடனே
வந்தே மாதரம் என்று சொல்வோம்

நம் நாட்டு விளை—பருத்தி
நம் நாட்டிலே—இருத்தி
நம் நேயர் மனம்—திருத்தி
நம் நாட்டு கதர்—தரித்து (நம்)

தொகையறா

வருடந்தோறும் நம் நாட்டினின்று
அறுபது கோடி பணம் சென்று
வறுமைப் பிணியை நம் நாட்டிற்கு
வருவித்தல் நன்றோ! புகல்வீர்.

மாறா மனமுவந்து
தீரமாய் கதரணிந்து
யாரும் அறிய மொழிந்து
பாரில் புகழ் சீர்மிகுந்த (நம்)

கூட்டம் கூடிவிட்டது. ஆசிரமத்திற்கு அரிசியும் பருப்பும் நிறைய சேர்வதோடு நான்கணு மெம்பர்களும் சேர்ந்தார்கள். எல்லாவற்றையும்விட அதிசயம் வீட்டை விட்டு வெளியில் வரா திருந்த அனேக பெண்பிள்ளைகளும், பாட்டிமார்களும் கூட மைதிலி வீராவேசத்துடன் கொடி தாங்கி பஜனை செய்து கொண்டு செல்லும் அழகில் ஈடுபட்டு அவளே பாரதமாதாவென்று எண்ணிப் பஜனையில் வந்து கலந்துகொண்டார்கள் என்றால் வேறு கூறவேண்டுமா?

பெருங் கூட்டமாக பஜனை வருவதைக் கண்ட கிழவர் மன் மதபாண சஞ்சீவியை வாங்கிக்கொண்டு போகையில், கூட்டத் தைப் பார்த்தார். எப்போதும் காங்கிரஸ் கூட்டம், கதர் என் றாலே பிடிக்காத கிழவர் பெருங்கூட்டத்தில், தன் மனைவியின் குரல் போல் கேட்டதால், அப்படியே நின்று கூட்டத்தை விலக்கி, யார் என்று பார்த்தார்.

அவ்வளவுதான். ஆத்திரம் பொங்கும் வேகத்தில் "ஐயையோ!" என்று கூவிக்கொண்டே இரு கைகளையும் விரித்து வயிற்றில் அடித்துக்கொண்டார். இந்தச் செய்கையில் மன்மத பாண சஞ்சீவி தடாரென்று கீழே விழுந்து உடைந்தது. கிழவர்

ஆவேசத்துடன் உள்ளே வந்து, "மைதிலிதான். சந்தேகமே இல்லே. சத்தெ முன்னெ நான் விட்டுக்குள்ளே பாத்தேனே. இதுக்குள்ளே எப்படி இந்தமாதிரி வந்துட்டா!" என்று சொல்லிக்கொண்டே ஓட்ட ஓட்டமாக ஓடி, தன் வீட்டில் மைதிலி இருக்கும் அறையைத் திறந்து பார்த்தார்.

காத்தாயி தூங்கிக்கொண்டிருந்தாள். கிழவர் ஆத்திரத்துடன் "இதோ தூங்கராளே....ஜன்னல் கதவுகளை எல்லாம் திறந்து வெளிச்சம் செய்துகொண்டு உற்றுப் பார்த்தார். முகத்தில் தலை மயிர் மறைத்துக்கொண்டிருந்ததால், அவர் "அடீ மைதிலி!" என்று தலை மயிரைப் பிடித்து உலுக்கியபோது, காத்தாயி விழித்துக்கொண்டு அலறியவாறு எழுந்து கிழவனைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

கிழவர் அவளை நன்ருக உற்றுப் பார்த்துவிட்டு, "அடி தடிப் பிணமே! ஐயையோ! மோசம்! மோசம்! காத்தாயி முண்டேயாடீ நீ? நீயாடி இந்த வேஷம் போட்டுண்டு அந்த முண்டெயெ வெளிலே அனுப்பிச்சுட்டே....அட ராமா! ஐயோ! வெக்கக்கேடே ஏண்டீ இப்படி வேஷம் போட்டுண்டு ஆட்ரே. எங்கேடீ அந்தக் கட்டெத் தடியன் கருப்பன்! அந்தச் சிறுக்கி மைதிலி எப்படி அந்த சோம்பேறிக் கூட்டத்துலே சேந்தா. உண்மெயே சொல்றயா கொண்ணுபுடட்டுமா" என்று அவள் தலை மயிரைப் பிடித்து உலுக்கினர்.

காத்தாயியா பயப்பட்ரவ! "ஊம். பச்சே கிளியே புடிச்சி கூண்டிலே வச்சி அடச்சாக்கா அது ஒரு காக்காயே அடெச்சு ஒன்னே ஏச்சுப்புட்டு பறந்து பூட்டுச்சு. அது தெரியல்லேயா" என்று ஏளனமாகக் கூறி விலகி நின்ருள். கிழவரின் ஆத்திரம் உச்ச நிலைமைக்கு எட்டி விட்டது. அவர் துணியை இழுத்து கட்டிக்கொண்டு, வீட்டையே பூட்டிவிட்டு ஓட்டமாக பஜனை வரும் இடத்திற்கு ஓடி வந்தார்.

அப்போது மைதிலி, தன் குயிலினும் இனிய குரலால் "தாய்மார்களே! நம் பாரத நாட்டின் க்ஷேமத்தைக் கோரி, நம் ஏழை சகோதர சகோதரிகளின் பஞ்சப் பிணியை-பசிப் பிணியை-

ண்ணீரைப் போக்குவதற்காக நீங்கள் எல்லோரும் சுதேசி
ாமான்களையே வாங்குங்கள். நாலணு கொடுத்து காங்கிரஸில்
சர்ந்து தேச சேவையில் ஈடுபடுங்கள். தேசம் சுதந்திரமடைந்
ால்தான் நமக்குச் சுகமுண்டாகும். பாரதத் தாய் கண்ணீர்
ட்டுக் கதறும்படி நாம் பார்த்திருத்தல் தருமமா? முறையா?
து தகுமா? தகாது; தகாது. ஒரு நாளும் தகாது. பாரத
ன்னையின் வயிறெரிந்த சாபத்திற்கு ஆளாவோம். அவள் விடும்
வ்வொரு சொட்டுக் கண்ணீரும் நம்மை அழித்துவிடும். சகோதரி
ளே! அன்னையின் துயர் தீர்க்க இன்னமும் தாமதமா? நாலணு
காடுத்துக் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேருங்கள்" என்று
ரஸங்கம் செய்வதுபோல் கூறுகையில், கண்கள் சிவக்க, தேகமே
படபடக்க ஓட்டமாக கிழவர் அங்கு ஓடி வந்தார்.

"ஆஹ்ஹா! அடீ சண்டாளீ! இத்தனை நாள் பயித்தியம்
பால வேஷம் போட்டு நடிச்சு, கடைசீலே இப்படியா ஆய்பூட்டே!
த்தனை தைரியமா ஒனக்கு வந்துட்டது. ஹா!....இரு இரு"
ன்று கூறிக்கொண்டே கையிலிருந்த கொடியைப் பிடுங்க வந்தார்.
மதிலி கொடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "தாதா!
னுமே நான் பழைய மைதிலி இல்லே. நான் புனர்ஜென்மம்
டுத்த புது மைதிலி! எனக்கும் உமக்கும் இனி யாதொரு சம்பந்த
ம் இல்லே. அனுவசியமாகப் பேசினல் ஒமக்குத்தான் ஆபத்து.
ன் இனி மனிதருக்கு அடிமை இல்லே. பாரத மாதாவுக்கு
டிமை. மரியாதையாகப் போய்விடும். உமது கை வரிசைகளை
ரம்பித்தால், உமது ஊழல்கள் சந்தியில் பறக்கும் என்பது ஞாபக
ருக்கட்டும். போய் வாரும். பாரத நாட்டின் நாரீமணிகளின்
ளரவத்திற்கு இழிவு உண்டாக்கும் செய்கையை நான் செய்யக்
டாதென்ற கட்டுப்பாட்டுக்கு அஞ்சி, உம்மை இம்மட்டுடன்
டுகிறேன். பொறுமையைச் சோதிக்கவும் ஒரு எல்லையுண்டு. இனி
சிரமத்தைவிட்டு நான் வரமாட்டேன். தேசத் தொண்டே
ய்வத் தொண்டாகும். ஏழைகளுக் குழைப்பதே எனக்குச்
ார்க்கப் பதவியாகும். போய் வாரும்" என்று அத்தனை
யரும் வியக்கும்படிக் கூறினள். மேற்கொண்டு கூட்டத்தினர்
ந்தேமாதரம் என்று கோஷித்தபடி நடந்தார்கள்.

வாஸந்தி மைதிலியின் இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்ததை விடாமல் பிடித்தபடியே, "தாதா! தாதா! இனிமே ஒங்க ஜபம் சாயாது. ஒண்ணு நீங்களும் ஆசிரமத்துக்கு வாங்கோ பஜனை பண்ணலாம். காந்தி தாதாவைப்போல் ஆகணும்னு வேண்டுங்கோ" என்று முகத்தை நன்கு காட்டியபடியே கூறியவாறு சென்றாள்.

கிழவர் என்ன செய்வார் பாவம்! கூட்டமோ ஏராளமாயிருக்கிறது. ஏற்கெனவே கிழவரின் செய்கையை எல்லோரும் வெறுத்துத் திட்டுவது அவருக்குத் தெரியாமலில்லை. இப்போது தான் வாலை யாட்டினால், வேணி விஷயத்தில் அவமானப்பட்டது, மூர்த்தியின் கையை உடைத்தது, மன்மத பாண சஞ்சீவி முதலிய ரகசியங்கள் அம்பலமாகிவிட்டால் என்ன செய்வதென்ற பயத்தினால், கிழவர் பேசாமல் பெட்டிப் பாம்புபோலக் கூட்டத்தில் மெல்ல நழுவி மறைந்துவிட்டார்.

57

சிறைச்சாலையில் ஒரே கலாட்டா; ஊரில் எங்கே பார்த்தாலும் கூக்குரலாகவே இருக்கிறது. "எப்படித்தான் அந்தக் கைதி தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் இருக்கக்கூடும். இது நம்பமுடியாத ஆச்சரியமா யிருக்கிறதே! ராத்திரி லாக்கப் செய்த பிறகும் கைதிகள் அவரவர் உள்ளே இருக்கிறதை எல்லோரும் பார்த்தார்களாமே! அதிலும் அந்தக் கைதி ஒரு கை இல்லாத நொண்டி. எப்படித்தான் இந்தச் சிறைச்சாலையை விட்டுத் தப்பித்துக் கொண்டிருக்க முடியும்? இதில் ஏதோ சூதோ, வாதோ, மந்திரமோ, தந்திரமோதான் நடந்திருக்க வேண்டும்" என்று அதிகாரிகளும், வார்டர்களும் மற்ற கைதிகளும் தனித் தனியே கூறுகிறார்கள்.

இந்த விஷயம் தந்தியிலும், டெலிபோனிலும் போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் பறக்கிறது. எங்கு பார்த்தாலும் ஒரே

பரபரப்பு. மூர்த்தியின் புகைப் படத்தைப் பல முக்கியமான பத்திரிகைகளில் பிரசுரித்துக் கொட்டை எழுத்தில்,

"நர்ஜி மூர்த்தி,—ஒரு கை இல்லாத நொண்டி, மாயக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவன்—சிறைச் சாலையிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடி விட்டான். அவனது புகைப் படம் இதோடு இருக்கிறது. அவனை யார் பார்த்தாலும் உடனே பிடித்துக் கொடுப்பவர்களுக்குச் சர்க்காரில் தகுந்த இனும் கொடுக்கப்படும்."

என்று எழுதி இருந்தது. பிரபல பத்திரிகாலயங்களில் எல்லாம் பத்திரிகைகள் ஆயிரக் கணக்கில் மிஷினில் போய்க் கொண்டிருக்கின்றன.

சிறு பையன்கள் உற்சாகத்துடன் பத்திரிகையைக் கூவிய படியே தெருவில் விற்கிறார்கள். எந்த மனிதரின் கையில் பார்த்தாலும் ஒரு பத்திரிகையும் அதைப்பற்றிய பேச்சுமாகவே இருக்கிறது. சிலர் அக்குற்றவாளியைப் பிடித்துக் கொடுத்தால் நல்ல வெகுமானம் கிடைக்குமென்றதால், எங்கு பார்த்தாலும் மூர்த்தியைத் தேட ஆரம்பித்து விட்டார்கள்.

இந்தப் பத்திரிகையை வேதாசலமும் பார்த்து வியப்பும் திகைப்பும் அடைந்து, "அட அநியாயமே! ஜெயில்லேந்து அந்த மாயக் கொள்ளைக்கார மூர்த்தி தப்பிச்சுண்டு ஓடி பூட்டானுமே! அட எழவே!" என்று ஆச்சரியத்துடன் மேல் உத்திரியத்தை இழுத்துப் போட்டுக்கொண்டு, போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓட்டமாக ஓடினார்.

58

மைதிலிக்கு நன்றாகப் புத்தி தெளிந்த பிறகுதான் மூர்த்தி தண்டனை யடைந்து ஜெயிலிலிருப்பது தெரிந்ததாகையால், அந்த அனுதாபத்துடன் கிழவியையும் குழந்தைகளையும் ஆசிரமத்திலேயே இருந்து கவனித்து வந்தாள். கிழவிக்கு உடம்பு அதிகமாகி

விட்டது. ஸ்வாசம் இழுக்கிறது. அப்போதும், "மூர்த்தி! மூர்த்தி!" என்று கூப்பிட்டுக் கண்ணீர் வடிக்கும் கிழவியைப் பார்த்தால் யாருடைய மனந்தான் கொதிக்காது?

மைதிலி, கிழவியின் அருகிலேயே உட்கார்ந்து பால் வார்ப்பதும், ஈ எறும்பு வராது ஓட்டுவதும் குழந்தைகளைத் தேற்றுவதுமாக விருக்கிறாள். ஆசிரமத்துத் தலைவனுக்கு "சாகப்போகும் கிழவியை எப்படி திருப்தி செய்ய முடியும். ஈசா! இப்படியும் சோதிக்கலாமா?" என்ற விசனம் பொங்கி வருகிறது.

இரவு ஏற ஏற நோயாளியின் பாதையும் அதிகரித்துக் கூட இருப்பவர்களின் திகிலும் அதிகரிப்பது சகஜமல்லவா? கிழவியின் இழுப்பின் ஓசையும், "மூர்த்தி! மூர்த்தி!" என்று கூப்பிடும் சப்தமும் அந்த நிசப்தமான வேளையில் மிகவும் பயங்கரமாக விருந்தது. "ஐயோ! இந்த அவஸ்தை இல்லாமல் கிழவியின் பிராணனாவது சீக்கிரம் போய்விடக் கூடாதா!" என்று மைதிலி எண்ணிக் கண்ணீர் விடுகிறாள்.

விடியற்காலை நாலு மணி சுமார் இருக்கும். இந்தப் பயங்கர வேளையில் "ஆ! அம்மா! என்னருமை அம்மா! என்னுருயிர் அம்மா!" என்று கதறிக்கொண்டே மூர்த்தி, தன் தாயின் முகத்தோடு முகம் வைத்துக் கதறினான். சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்கும் மூர்த்தி இங்கு எப்படி திடீரென்று வந்தான் என்ற ஆச்சரியம் எல்லோரையும் பிரமித்துத் திடுக்கிடச் செய்தது. "ஹா! மூர்த்தியா! சிறையிலிருந்து எப்படி வந்தே?" என்று கேட்பதற்குள் மூர்த்தி "ஆம்! நான் கைதி என்ற போர்வையிலிருப்பவன்தான். தாயைப் பார்க்கும் மனோ வேகத்தினால் தப்பித்துக் கொண்டு வந்தேன்" என்றான்.

'அப்பா! அப்பா!' என்று கதறிக்கொண்டே வாஸந்தியும் ராஜுவும் ஓடிப்போய்க் கட்டிக்கொண்டார்கள். ச்வாஸம் வாங்கும் கிழவி தன்னருமை மகனின் குரலைக் கேட்டதும் ஏதோ ஒரு புத்துயிரும் சக்தியும் அடையப் பெற்றவளாய்க் கண்களை மலர விழித்துப் பார்த்தாள். "மூர்த்தி! மூர்த்தி!" என்று கூப்பிட்டாள்.

"அம்மா! மகா பாவி நான் இதோ வந்திருக்கேன். என் தாயே! நீ ஒருவிதமான குறைவுமின்றி இறைவனடி சேர்ப்

போகிறாய். மகா கொடிய சண்டாளனாகிய நான் தவிக்கிறேன். தாயைக் காக்கச் சக்தி இல்லாத கட்டை, அன்னையின் அந்திம காலத்தில் அனாதரவாய்விட்ட கட்டை இதோ இருக்கிறது. அம்மா! அம்மா! அம்மா! நான் உனக்குப் பிள்ளை இல்லை. உனக்குப் பிள்ளை சாக்ஷாத் நாராயண மூர்த்தி. பரமேச்வர மூர்த்தி, என்னை நம்பாதே. என்னை நினைக்காதே!" என்று கதறினான்.

கிழவி! "மூர்த்தீ! மூர்த்தீ! மூர்த்தீ!" என்று மூன்று முறை கூப்பிட்டாள். அவள் கண்களில் ஒரு தேஜஸ் பளிச் சென்று பிரகாசித்தது. அடுத்த விநாடியே கிழவியின் ஆவி நீங்கியது. மூர்த்தி "அம்மா! அம்மா!" என்று கதறித் தாயின்மீது விழுந்தான்.

மைதிலி குழந்தைகளைக் கட்டியணைத்து, தூர அழைத்துக் கொண்டு போய்விட்டாள். பொழுதும் விடிந்துவிட்டது.

வாஸந்தி:—"அப்பா! பாட்டிகூட செத்துப் போயிட்டா! இனுமே எங்களை விட்டுப்போக மாட்டயேப்பா!" என்று கூறிக் கொண்டே தகப்பனாரைக் கட்டிக் கொண்டாள்.

மூர்த்தி:—கண்மணீ! வாஸந்தீ! நான் ஒங்கப்பா இல்லெ. ஒங்கப்பா கோவில்லெ இருக்கர பெருமாள்தான். நான் கைதி இத்தனெ நாளா ஒரு பாவத்தையும் அறியாமல் அபாண்ட பழியால் கைதியாயிருந்தேன். தப்பு பண்ணாதே கைதியாயிருப் பதைவிட தப்பு பண்ணியே கைதியாகலாம்னுதான் இப்படித் துணிஞ்சேன்.

வாஸந்தி:—ஐயையோ! நீ கைதியாப்பா! திரும்பி ஜெயி லுக்குப் போயிடுவையா!

மைதிலி:—ஐயா! நீங்க எப்படி வந்தங்கோ! ஒங்களை போலீஸார் தேடிண்டு வந்துடுவாளே!

மூர்த்தி:—அம்மணீ! போலீஸார் என்னைத் தேடிண்டு வரத் துக்கு முன்னே நானே போலீஸாரிடம் போய் விடுவேன். என் அன்னையைப் பார்க்காமல் பறி கொடுக்க மனசு சகிக்கல்லெ. தெய்

வத்துக்கு என் வரையில் கன் இல்லேன்னுதான் சொல்லணும். ஒரு பாவமும் செய்யாதிருந்த என்னே ஒங்க புருஷ....

மைதிலி :—(இடை மறுத்து) ஹா....என்ன ! என்ன ! என் புருஷர் காட்டிக் குடுத்தாரா ! சொல்லுங்கோ ! விவரத்தைச் சொல்லுங்கோ.

மூர்த்தி :—அம்பணீ ! அதெல்லாம் ஒன்னுமில்லெ. என் தலை விதி என்னேப் பழி சுமக்கச் செய்தது. குத்தம் செய்யாமல் சிறையிலடைபட்டுச் சாவதைவிட பெத்த தாயைப் பார்த்துவிட்டுக் குத்தத்தோடுதான் ஜெயிலில் சந்தோஷமாக இருந்தால் போரா துன்னு தான் தப்பித்துக் கொண்டு இரவோடிரவா வந்துட்டேன். என் தாயாரை இப்போது நான் பார்க்காதிருந்தா இனுமே எந்த ஜென்மத்துலெ பார்ப்பேன். அதனுல்தான் இங்கு ஓடி வந்தேன்.

தலைவன் :—(தயங்கியபடியே) ஐயா ! நீங்க கோவிச்சுக்கக் கூடாது. நீங்க தாயின் அளப்பரிய அன்பினுல் தப்பித்துக் கொண்டு வந்ததை உலகம் அறியாது. அதோடு ஏற்கெனவே எங்கள்மேல் கண் பார்வையுடனிருக்கும் போலீஸ்காரர்கள் நீங்கள் தப்பித்ததற்கு நாங்கள்தான் உடந்தை என்று கற்பனை செய்து ஆசிரமத்தையும் அதிலுள்ளோரையும் துன்புறுத்து வார்கள். தயவு செய்து........

மூர்த்தி :—"ஐயா ! நீங்கள் சொல்லாமலேயே எனக்குத் தெரியும். அதோ வாசலில் பையன்கள் பேப்பர் விற்கிருர்கள் கேட்டீர்களா ? "மாயக் (கொள்ளேயில் சம்பந்தப்பட்டுச் சிறைச் சாலையிலிருந்த கைதி மூர்த்தி தப்பித்து விட்டான். அவனேப் பிடித்துத் தருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனும். காலணு பேப்பர். காலணு !" என்று விற்கும் சப்தம் கேட்டது.) ஐயா ! என்னே நீங்களே காட்டிக் கொடுத்து அந்தப் பரிசுத் தொகையைப் பெற்று ஆசிரமத்திற்கு உதவி செய்யுங்கள். நான் இந்த ஊர்க் கோடியிலிருக்கும் பாழும் சத்திரத்திலிருக்கிறேன். நீங்க அங்கே வந்து என்னேப் பிடித்துக் கொடுங்கள். ஆசிரமத்திற்காவது உதவி கிடைக்கட்டும். நான் இங்கு வந்தது, போனது ஒன்றும் தெரிய வேண்டாம்....நான் போறேன்....அம்மணீ ! இந்தப் பர

தேசிகள் உங்களுடையது. கண்ணு வாஸந்தீ! ராஜு! என்னை மறந்துடுங்கோ! என்னை மறந்துடுங்கோ!" என்று கண்ணீர் பெருகக் கூறியவாறே தாயாரைப் பிரதக்ஷணம் செய்து நமஸ்கரித்துவிட்டுப் பதிலுக்கும் எதிர் பார்க்காமல் சடக்கென்று சென்று மறைந்தான். இதைக்கண்டு எல்லோரும் திகைத்துப் போய் விட்டார்கள்.

59

"என்ன ஆச்சரியம்! தங்க ஆசிரமத்திலிருக்கும் குழந்தைகளின் தகப்பனார் என்றதுகூட கவனிக்காமல் ஆசிரமத்துத் தலைவன் மூர்த்தியைப் பிடிச்சுக் குடுத்துட்டு 1000 ரூபாயை சொளசொளன்னு வாங்கிண்டு பூட்டானுமே!" என்று பொதுஜனங்கள் எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகப் பேசுகிறார்கள். இதனால் அந்தத் தொண்டனின் மதிப்பும் கவுரவமும் அதிகரித்தது. இவ்விஷயத்தில் ஆசிரமத்திலுள்ள எல்லோரும் கட்டுப்பாடாக இருந்தது மிகவும் மெச்சத் தகுந்ததேயாகும்.

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் தன் வீட்டில் இந்த மாயக் கொள்ளை நடந்துவிட்ட பின்னர் எப்பாடுபட்டேனும் அந்தக் கூட்டத்தைத் தான் கண்டு பிடிக்காது விடுவதில்லை என்ற தீர வைராக்கிய கங்கணங் கட்டிக் கொண்டார். இவர் கீழிருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் அங்கு வந்து "எஜமான்! நீங்கள் சொன்னபடியே 28 நம்பர் வீட்டை வாச் செய்ததில் சந்தேகமாத்தான் இருக்கு. அவர்களில் சிலரைப் பார்த்தால், காட்டு மிருண்டிகள் போலிருக்கிறார்கள். அங்கு நான் ஒட்டுக் கேட்டதில் 'மலைக் குகை' என்ற வார்த்தை மட்டும் காதில் விழுந்தது. அது ஊர்க் கோடியிலிருப்பதாகத் தெரிகிறது. 'ச. ம. கு.' என்று ஏதோ சொல்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை" என்றான்.

ஏகாம்பரம் :—"என்ன! ச. ம. கு. என்று சொல்கிறார்கள். சங்கரபுரம் மலைக் குகை என்ற அர்த்தமிருக்கலாமோ! சரி! நீ

போய் வறகு சுள்ளி ஒரு சொமை உடைத்துக் கட்டி தோட்டத்துப் பக்கம் வை. நான் வரேன்" என்று அனுப்பிவிட்டுத் தானும் தோட்டத்திற்குச் சென்றார்.

தோட்டத்திலுள்ள ஒரு குடிசையிலிருந்து ஏகாம்பரம் வெளிவரும்போது அவரை யாரும் ஏகாம்பரமென்று சொல்லவே முடியாது. அசல் பட்டிக்காட்டு மனிதன்போல் முழங் காலுக்கு மேல் வரிந்து கீழ்ப்பாச்சி கட்டிக் கொண்டு, பெரிய மீசை வீர பத்திரசாமியைப்போல் வைத்துக் கொண்டார். பெரிய துணியைத் தலைக்கு முண்டாசாகக் கட்டிக் கொண்டு நெற்றியில் பட்டையாக நாமத்தைப் போட்டுக் கொண்டு விறகு சுமையைத் தலையில் தாங்கியபடியே இவர்களுக்கு ஏதேதோ குறிப்புகள் கூறி விட்டு வேகமாக நடக்கவாரம்பித்தார்.

60

ஜாமீ! ஓ! ஜாமீ! இருவத்தெட்டாம் நம்பரு பங்காளா இதுங்களா! ஜாமீ! யாரு உள்ளரகிறது—என்று விறகு சுமையுடன் கத்தினார். உள்ளிருந்து ஒரு வாலிபன் எட்டிப் பார்த்தான். "யாருடாது கூச்சப் போட்ரது?" என்றான்.

நாட்டுப்புறத்தான் :—"இப்பிடி வாங்க ஜாமீ! ஒரு ஜமாஜாரம். நானு காட்டுலே கட்டெ, சுள்ளி, அல்லாம் பொறுக்கி பொழக்கரவனுங்க. இன்னிக்குச் சுள்ளி பொறுக்கச்செலெ யாரோ ஒரு ஆளு அந்த காட்லே ஏதோ பச்செலெ கிள்ளிகினு இருந்தான். அவனுக்கு திடீன்னு மாரடச்சி மழக்கமா வந்திடுச்சாம். நான் சுள்ளி பொறுக்கிகினு இருக்கச் செல 'இங்கே வாய்யா! ஐயா!' இன்னு பலவீனமா கூட்டானுங்க. ஆபத்துன்னுக்கா அல்லாருக்கும் ஒன்னுதானே ஜாமீ! ஓடியாந்தேன். அவன் இந்தத் தெரு அடயாளத்தெ சொல்லி, "28-வது நம்பரு ஊட்டெ விசாரிச்சிகினு போடா! போயி, ச. ம. கு. ஆளு காட்லே மழக்கமாகிரான்;

...க்கரம் அங்கே வரச் சொன்னுங்கன்னு சொல்லிட்டுப் பூட்ரா".
...ன்னு சொன்னுன்.

ஜாமீ! சொல்லிப்புட்டேன். எங்க ஊட்டெ எம் பொஞ்...
...னுக்குக் கொயந்தே பொறக்கப் போவுது. அவளே ஆஸ்பத்...
...திரிக்குக் கொண்டு போகணும். பாதெபட்டுகிணுக் கீரா! எம்
...பொண்டாட்டி செத்துப் பூட்டா! ஏதாச்சும் இந்த ஏழெக்கி
...ஒபகாரம் பண்ணுக்கா ரொம்ப நல்லதுங்க" என்று தான் கூறும்
...போதே அந்த ஆளின் முகத்தின் போக்கைக் கவனித்து மனத்திற்
...குள் பதிய வைத்துக் கொண்டார்.

இதைக் கேட்டதும் அந்த ஆள் சற்றுப் பதறிப்போய்
"என்ன! என்ன! மயக்கமா விழுந்துட்டானு. நீ பாத்தையா?"
...என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

ஏகாம் :—ஆமாங்க. மாரடைக்கராப்போலெக் கீதுன்னு
...சொன்னுனுங்க. ஆள் நல்ல வாட்டசாட்டமாக்கீரானுங்க. சீக்கிரம்
...போங்க—என்றதும் முகத்தில் பலவித களைகள் வந்து அம் மனி
...தனை மூடிக் கொண்டன. "சரி! போடா! இந்தா!" என்று ஒரு
...ரூபாயை ஏகாம்பரத்தினிடம் வீசி எறிந்துவிட்டு அவசரமாக
...உள்ளே போனுன். ஏகாம்பரமும் ரூபாயை வாங்கிக்கொண்டு
...நமஸ்காரம் செய்துவிட்டுப் பின்னர் நகர்ந்தார். கால் இடறித்
...தடுக்கி விழுந்தவன்போல் பாவனை செய்து சுள்ளிகளைக் கீழே
...கொட்டிவிட்டு, அதைப் பொறுக்கும் நடிப்புடன் உள்ளே என்ன
...பேச்சு வருகிறதென்று கவனித்தார்.

உள்ளே சென்றவன் குசு குசுவென்ற குரலில் "மாயாண்டீ!
உடனே காரைப் போட்டுக்கொண்டு பச்சிலைக் காட்டுக்குப் போ.
அங்கு யாரோ நம்ப ஆள் மயக்கமா விழுந்துவிட்டானும். ஒரு
விறகுதலையானிடம் அவன் சொல்லியனுப்பினுன். ஏற்கெனவே
போலீஸ் பருந்து வட்டமிட்டுக்கொண்டே இருக்கு. அந்த ஆள்
மயக்கமா விழுந்து கடக்கச்சே பச்சிலையுடன் கையும் மெய்யுமா
புடிச்சிப்புட்டாக்கா கஷ்டம். அவனண்டே நம்ப போராத காலத்
துக்கு ஏதாவது அடையாளம் அகப்பட்டுவிட்டால், அதோகதி
தான். ஓடு சீக்கிரம் ஓடு. உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்
டாலும் வண்டியிலே போட்டுண்டு வா" என்று கூறினுன்.

இதை விதிப்பக்கம் உள்ள ஜன்னலுக்குச் சமீபத்தில் நின்று பாம்பு சுழி போன்ற செவியில் வாங்கிக்கொண்ட ஏகாம்பரத்தின் சந்தேகம் நன்ருக நிவர்த்தியாகிவிட்டது. உடனே அவர் மனத்தில் எங்குமில்லாத ஓர் புதிய சக்தியும் தெம்பும் குபீரென்று கிளம்பியது. "தான் இந்த நிமிடமே இவர்களைக் கைது செய்து விடலாமாவென்று எண்ணிஞர். ஆனல் அடுத்த நிமிடம் யோசனை மாறிவிட்டது. ச. ப. கு. எங்கிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது முக்யமல்லவா? பிடிபட்டவர்கள் உயிருக்கும் துணிந்தவர்கள்தானே. அதைச் சொல்ல மறுத்துவிட்டால் பிறகு வேலை முற்றுப் புள்ளி விழாது போய்விடும்" என்று தீர்மானித்துக் கொண்டு சுள்ளியுடன் வெளியில் வந்தார். அங்கு தயாராயிருந்த சப்-இன்ஸ்பெக்டரை நோக்கி, "இப்போது இங்கிருந்து புறப்படும் காரை பின்னலேயே தொடர்ந்து சென்று நடு வழில் காரோடு ஆளைப்பிடித்து கைதியாக்கிவிடு. மிகுதியை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ருர்.

61

வேதாசலத்திற்கு மைதிலி ஊர்வலத்தில் கூறிய வார்த்தைகளால் நெஞ்சு கொதிக்கின்றது. வீட்டை விட்டு வெளியில் வராத பெண்பிள்ளைகளெல்லாம் இவளைக் கண்டு பெரிய மதிப்பும், பக்தியும் வைத்துத் தாமும் வெளியில் வந்து பஜனையில் கலந்து கொள்ளும் ஆச்சரியத்தைக் காண அவருடைய ஆத்திரத்தை இன்னும் தூண்டி எரிய விடுவதுபோலவிருக்கிறது. தன்னை அத்தனை பெயர்களின் முன்னிலையில் அவமானப்படுத்திய மைதிலியைக் கொலை செய்தாலும் தீராது என்ற துணிவும் கடுங் கோபமும் அவருக்கு மூண்டுவிட்டது.

நாஸ்திகம் என்றுமே விரோதமாக எண்ணும் இவருக்குத் தன் மனைவியே அதில் சேர்ந்ததுடன் நில்லாமல் தன்னையும் அவமானப்

படுத்திப் பேசியதை அவர் எப்படிச் சகிப்பார்? இதற்கு என்ன யுக்தி செய்து அவளை இங்கு இழுத்துக் கொண்டு வரலாம்? என்று பலமாக யோசனை செய்துகொண்டே உட்கார்ந்திருந்தார். அவருடைய யோசனை பலமான வழியில் சென்று முடிவைக் காட்டியது. உடனே எழுந்து தடதடவென்று ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்.

அப்போது அந்த ஆசிரமத்தில் அந்திவேளை பூஜை நேரமாக இருந்ததால், எல்லோரும் கடவுள் படத்திற்கு முன்னால் உட்கார்ந்து பக்தி சிரத்தையுடன் பகவத்கீதை ச்லோகமும் தேசியப் பாடல்களும் பாடி, பஜனை செய்து கொண்டிருக்கும் கீத ஒலி, நாத ஒலி, கிழவர் வீதியில் வரும்போதே அவர் காதில் நாராசம்போல் விழுந்தது. முகத்தைச் சுளித்தும், செவியைப் பொத்திக் கொண்டும், தொப்பையையும் தலையையும் தடவிக் கொண்டும், கையை நீட்டி மடித்தும் பலவிதமான அங்க சேஷ்டைகளினால், தன் வெறுப்பைத் தெரிவித்தார்.

இந்தப் பஜனை சமயத்தில்தான், தான் சென்று அட்டகாஸம் செய்ய வேண்டுமென்று எண்ணியவராய், கிழவர் தட தடவென்று விசையாகக் கைகால்களை ஆட்டிக் கொண்டே உள்ளே சென்றார். அப்போது கவிச்சக்ரவர்த்தி பாரதியார் பாடியுள்ள, "என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்" என்ற பாட்டை மைதிலியும், வாஸந்தியும் சேர்ந்து யாழும் குழலும், தேனும் பாலும் இனிப்பதுபோல் இனிமையாய், கர்ணாம்ருதமாகப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அச் சமயம் ஊசி போட்டாலும் ஓசை கேட்கும்படியான நிசப்தம் குடி கொண்டிருந்தது. அத்தகைய மனோகரமான சமயத்தில், 'சிவ பூஜை வேளையில் கரடி பாய்ந்தது' என்பதுபோலக் கிழவர் தன் பீரங்கிபோன்ற தொண்டையால் ஒரு பெருங் கனைப்பு கனைத்துக் கொண்டே வந்து சேர்ந்தார். எல்லோரும் அசந்து போய்த் திரும்பிப் பார்த்தார்கள். வாஸந்தியும், மைதிலியும் பாட்டைச் சடக்கென்று நிறுத்திவிட்டு, இந்தப் பக்கமே பார்த்தார்கள். வாஸந்திக்குக் கிழவரிடம் உள்ளூறப் பயமாதலால் அவர் முகத்தைப் பார்த்ததும் பயந்து கொண்டே, மைதிலியை இழுத்துக் கட்டிக் கொண்டாள்.

மைதிலி மகா சாந்த சொரூபியாய் வாஸந்தியை விட்டு விட்டுத் தட தடவென்று உள்ளே சென்று, ஒரு கதர்க் குல்லாய், சால்வையோடு வெளியில் திரும்பி வந்து "தாதா! வாங்கோ! வாங்கோ! ஏதேது நல்ல காலம் பிறந்து விட்டது போலிருக்கே! பாரத மாதாவின் அருள் கிடைத்து விட்டதா?" என்று

கூறிக் கொண்டே கிழவரின் தலையில் குல்லாயை மாட்டி, சால்வையை மேலே போட்டுவிட்டு, "பேஷ்! பேஷ்! தாதா! தாதா! வெகு அழகாயிருக்கு. அசல் நம் தேசத் தலைவர்போலிருக்கிறது" என்று கூறினாள். எல்லோரும் சிரித்தார்கள்.

வாஸந்தியும், ராஜுவும் "தாதா! தாதா! காந்திக்கார தாதாவாயிட்டீர்களே! பேஷ்! தாதா!" என்று சிரித்தார்கள். இந்தச் செய்கைகளெல்லாம் தன்னை அவமானப்படுத்தி ஏளனம் செய்வதாகக் கிழவருக்குத் தோன்றிவிட்டது. தேகம் படபடக்கக் கண்கள் சிவந்து நாலா பக்கமும் உருள, அடித் தொண்டையால் கர்ஜித்தபடியே குல்லாயையும் சால்வையையும் கழற்றி வீசி எறிந்தபடியே, "தூத்தூ! தரித்திர மூதேவித் துணிக்குப் படிகிறவன் நானா? உங்கள் எல்லோருடைய வேஷமும் தெரியும்டீ; தெரியும்.

அடேய் வேஷக்காரா! தலைவனாம் தலைவன்! வெட்கங் கெட்டத் தலைவன்! காந்தியாம் காந்தி! காரா பூந்தி! ஒங்க காந்தி இப்படித்தான் ஊரான் பெண்டாட்டியை இழுத்துண்டு வந்து கூத்தடிக்கச் சொல்லி இருக்கானோ? ஒங்க காங்கிரஸின் சத்திய சேவை இதுதானோ? இருடா! இப்பவே ஒம்மேலே பெரிய போலீஸ் கம்ப்ளேண்டு குடுத்து ஒன்னே என்ன பாடு படுத்தப் போறேன் பாருடா? என் பெண்டாட்டியெ எப்பிடிடா நீ இங்கு இழுத்துண்டு வருவே?" என்று அடாத வார்த்தைகளாகிய பாணத்தை மகா சாதுவாயும் சத்தியசந்தனாயும் இருக்கும் தலைவன்மீது பிரயோகித்ததைக் கேட்ட உடனே ஆசிரமமே பூகம்பத்தினால் ஆடுவதுபோல் ஒரு ஆட்டம் ஆடியது.

மைதிலியின் தலையில் பெரிய இடி விழுந்திருந்தால்கூட இத்தனை அதிர்ச்சியும் தத்தளிப்பும் ஏற்பட்டிருக்காது. தலைவன் ஒன்றுமே சொல்லத் தெரியாது செயலற்றுத் துவண்டு சுவருடன் சாய்ந்து விட்டான். ஒரு சில வினாடிகள் எல்லோருடைய ரத்தமும் கொதித்தது. நிசப்தம் குடி கொண்டது.

பிறகு, சற்றுத் தெளிவு பெற்ற தலைவன், தட தடவென்று வந்து கிழவரின் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, சாஷ்டாங்கமாய் கீழே விழுந்து வணங்கியவாறு, "ஐயா! நீர் எத்தனையோ பெரியவர்; உலகானுபவங்களை அறிந்தவர். அப்படி இருக்க இந்த ஏழையின் மேல் இப்படிப்பட்ட அபவாதத்தைச் சொல்ல எப்படித்தான் துணிந்தீர்? இந்தப் பாரத மாதா சாக்ஷியாக நான் ஒரு பாபமும் செய்யல்லே! அவரவர் கருத்து இருக்கும் சுதந்திரத்துடன் அத்தம்மாளே இங்கு வந்து தேச கைங்கரியம் செய்கிறாளேயன்றி, அவர் மிதித்த மண்ணும்

நீர் நினைக்கிறபடிச் செய்யாது. இது கடவுளறிய உண்மை. அபாயமாய் இனிமேல் இப்படி பேசாதேங்கோ! இது தெய்வத் துக்குப் பொறுக்காது" என்று முடிப்பதற்குள்,

"ஆமாண்டா! திருட்டுப்பயலே! செய்யறதையும் செய்து விட்டு தெய்வமாம் தேவாதியாம். நீ தெய்வத்தெ கண்ணை கண்ட வண்டா! கண்டவன்! அந்தத் தெய்வம் இருக்கறது உன்னையாண்டை வந்து நேரே சொல்லிட்டுண்டா? வேஷக்காரப் பரதேசிப் பயலே! பிச்சைக்காரப் பயலே!" என்று கிழவர் ஆத்திரத்துடன் பேசுகையில்,

மைதிலி ரணபத்திர காளியைப்போல் இழுத்துக் கட்டிக் கொண்டு, கிழவரின் முன்புவந்து, "தாதா! நீங்க மனுஷத்தனமாக நடக்கப் போறங்களா அல்லது வேறே விதமா பேசப்போறங் களா? நானும் பொறுமையையும் பெருமையையும் இழக்கக்கூடா தென்று பாத்துப் பாத்துதான் இதுவரை என் விதியைக் கடத் திண்டு வந்தேன். இன்னமும் வரேன்.

தாதா! உலகத்தில் ஒரு ஜென்மம் இருந்ததென்றால் அதனால் பிறருக்காவது சுகமிருக்கணும்; நன்மை இருக்கணும். அல்லது தன்னைத்தானாவது உபயோகப்படணும். ரெண்டுங்கெட்டு, இருக் கிற பாவத்துக்கெல்லாம் உடந்தையா யிருப்பதோடு, பயித்தியம் பிடித்துப் பாழாய்ப்போக இனிமேல் உடன்பட மாட்டேன். என் ஜென்மத்திற்கும் சாபல்யமாக ஒரு வழியைக் கடவுள் காட்டினர். அதை நான் இனிமே விடமாட்டேன். அனாவசியமாக வாயை விடாதேங்கோ! உத்தமர்களின் வயிறு எரியச் செய்யாதேங்கோ! ஒரு குடும்பத்தைக் கோர்ட்டே பண்ணி சின்ன பின்னமா சிதறவடிப் பதைவிடக் கேவலமானது வேறே ஒன்றுமே இல்லை.

தாதா! என் வயித்தெரிச்சலே கௌப்பாதேங்கோ! நான் இப்பவும் என் சாந்தத்தை இழக்காமல் அதன் எல்லையிலிருந்து தான் பேசறேன். ஒங்க நெஞ்சிலே நீங்க கையை வைத்துக் கொண்டு பாருங்கோ! அப்போ தெரியும் குற்றவாளி நீங்களா, நானா அல்லது அந்தத் தம்பிரா என்பது. இப்பகூட ஒன்றும் மூழ்கிப் போகல்லே. நடந்ததெல்லாம் போகட்டும். இந்தப் பாரதமாதாவுக்கு அடி பணிந்து, தேசத்தொண்டில் ஈடுபட்டு தேசத் துக்கும் தேசமக்களுக்கும் ஒப்புச்சு ஒங்க பாவத்தெப் போக்குங் கோ. தேசம் யாவரையும் ஏத்துக் கொள்ளும். 'தேசப் பணியே தெய்வப் பணி' என்ற மகாத்மா வாக்கியத்தை விரதமாக எடுத்துக் கொண்டு நடவுங்கள். வேணியின் சாபமு இதனால் தீரட்டும். மூர்த்தியின் மனக்கொதிப்பும் இதயத் துடிப்பும் இதனால் குறை யட்டும்" என்று சரமாரியாகப் பொழிந்தபடியே மறுபடியும்

காந்திக் குல்லாயையும், கதர்ச்சால்வையையும் எடுத்துக் கிழவருக்கு மாட்டினுள்.

கிழவரா இதற்கு மசிகிறவர்? "ஆஹ்ஹா! ஒங்களேப்போல என்னேயும் சோம்பேறிக் கூட்டத்துலேயா சேரச் சொல்றே! இரு! இரு. . இந்தத் திமிரெல்லாம் அஞ்சு நிமிஷத்துலே அடக்கிப் புட்றேன். . நீ இப்போ வீட்டுக்கு வரப்போறயா, இல்லேயா? ஒங்க மேலே கப்பிளேண்டு குடுத்து சந்தி சிரிக்க அடிச்சுடட்டுமா!" என்று கூறி முடிப்பதற்குள், மைதிலி "ஹா! ஹா!....அப்படியா செய்யப் போறங்கோ! பேஷா செய்யுங்கள். சந்தி மட்டுமல்ல. உலகமே சிரிக்கும்படி என் தலைவிதி இருந்தால், அதைத் தடுக்க யாரால் முடியும்? கடவுள் என் பங்கிலிருந்தால், எது சந்தி சிரிக்குமோ அவர் காட்டிவிடட்டும். நான் வீட்டிற்கு வந்தால், வீடும் இதேபோல் ஒரு ஆசிரமமாகத்தான் ஆகும். அதற்குச் சம்மதமானுல்; இதோ இப்போதே வறேன்.

கிழவர் இடைமறுத்து, "என்ன! என்ன! ஆசிரமமா! ஆசிரமம்! ஓஹோ! இந்த வேதாசலமா இதற்கு இடங் கொடுப்பான்? சீச்சி! மூதேவியே! இரு; இரு. உன்னே வெக்க வேண்டிய எடத்துலே வெக்கரேன்" என்று கூறிக் கொண்டே வெகு விசையாய்ப் போய் விட்டார்.

ஆசிரமத்துத் தலைவன் மைதிலியின் காலில் விழுந்து வணங்கி, "அம்மணீ! தாயே! ஒங்க புருஷன் இருக்கர வேகத்தெ பார்த்தால் ஆசிரமத்துக்கும், ஆசிரம வாசிகளுக்கும், எனக்கும்—நம் காங்கிரஸின் கௌரவத்திற்குமே—பெருத்த ஹானியையும், அபவாதத்தையும் உண்டாக்கி, வீணுக உபத்திரவம் செய்வார்போலிருக்கு. நீங்கள் இந்த ஏழைத் தொண்டன்மேல் ஆயாசப்படாமல், கோபிக்காமல், தயவு செய்து உங்கள் வீட்டிற்குப் போய் விடுங்கள். உங்களுக்குக் கெட்ட பெயரும் எங்களுக்கு ஆபத்தும் ஒன்றும் இல்லாமல் போய்விடும்.

தாயே! ஏற்கெனவே சில போலி காங்கிரஸ்காரா மேலே இருக்கும் ஊழல்கள் ஒன்ருென்ணு வெளியில் வரத்தெ நாம்ப பார்க்கிரேும். நாம் அநியாயமா ஒரு பாவமும் இல்லாமெ கெட்ட பெயர் வாங்க வாண்டாம். தயவுசெய்து போயிடுங்கோ. அவருக்கும் புத்தி திருப்பி, நல்ல காலம் பிறந்தால், ரெண்டு பேருமா ஆசிரமத்துக்கு வாங்கோ" என்று கண்ணீர் பெருகக் கூறினுன்.

மைதிலியின் செவியில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் நின்ற இடத்திலேயே கல்போல் நின்றுவிட்டாள். அவள் இதயமாகிய உலகத்திற்குள் எண்ணங்களாகிய புயற்காற்றடித்துப் பெரிய

பூகம்பத்தை உண்டாக்கிவிட்டது. அந்த உலகமே தலை கீழாகச் சுற்றுவதுபோல் தோன்றியது. "ஆம்; வாஸ்தவம்! உலகம் நன்மை தீமை யறியாது. தலைவனுக்கும் ஆசிரமத்திற்கும் இழிவு வரும் என்பது உண்மைதான். நெருப்புக்குச் சமமாக இதுகாறும் இருந்த நமக்கும் கேவலமான பழியாகிய போர்வை வந்து சேரும். என்னால் இந்த ஜென்மத்தில் ஒரு சிறு துரும்புக்கும் உபகாரமில்லை எனின், உபத்திரவமாவது இல்லாதிருக்க வேண்டுமல்லவா?"

"ஏ பாவி! உனக்கு எங்கும் இடங் கிடையாது. எங்கும் நிம்மதி கிடையாது. என்றும் சுகங் கிடையாது. இன்னும் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்துச் சாக வேண்டுமோ அதற்குத் தயாராகவிரு. உடனே இந்தப் புனிதமான இடத்தைவிட்டுப் போய்விடு. நிற்காதே. உன்னால் புனிதமான ஆசிரமத்தைப் பாழ்ப் படச் செய்யாதே" என்று அவள் மனத்திற்குள் ஏதோ ஒரு அந்தராத்மா கூறியது.

வாய் திறக்கவில்லை. கண்ணில் நீர் தாரை தாரையாகப் பெருகுகிறது. பாரதமாதாவின் முன் விழுந்து வணங்கி எழுந்தாள். புலம்பும் வேகத்தினால் நாக்கு நடுங்குகிறது. கைகுவித்தபடியே எல்லோரையும் நீர்வழியும் கண்ணால் ஒரு சுற்றுப் பார்த்தாள். வாஸந்தியையும் ராஜூவையும் இறுகக் கட்டி யணைத்துக் கொண்டு, ஒரு முத்தமிட்டாள். தலை குனிந்தபடியே சொர்ண விக்ரகம்போல் நடந்து சென்று விட்டாள்.

ஆசிரமத்திலுள்ள அத்தனை பெயர்களின் கண்களும் தாமரையிலையின் நீர்போல் தண்ணீர் துளிகளைச் சிந்துகின்றன. வாஸந்தியும், ராஜூவும் மட்டும் "மாமீ! மாமீ!" என்று வீறிட்டுக் கத்தினார்கள். அத்தனை பெயர்களின் இதயத்திலும் கோடாரி கொண்டு பிளப்பதுபோல் படபடக்கின்றது. அச்சமயம் வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த சந்திரனும் மேகத்திற்குள் மறைந்தான். ஆசிரமத்திலிருந்த எல்லோருடைய மனத்தையும் போல் ஆகாயமும் இருண்டது.

62

"ஆஹா! இந்த உதவாக் கட்டைக்குக்கூட தினந் தோறும் கோவிலின் ஆனந்தமான பூஜை நேர மணியோசை கேட்டு அதனால் கொஞ்சம் சந்தோஷத்தை உண்டாக்குகிறன் என்னப்பன். இப்பொழும் ஜென்மத்துக்கு முடிவு காலமும் இல்லேபோலிருக்கு. சிறைவாசம் செய்ய விதி இருக்கும்னு யாராவது சொப்பனமாவது கண்டிருப்பாளா! என் வேணி மகாலக்ஷ்மிபோலக் கிளம்பிவிட்ட அப்பறமே என் வாழ்வு முற்றும் தாழ்வாய்விட்டது.

ஐயோ! அது எப்படி இருந்தாலும் நான் ஒரு குத்தமும் செய்யாமல் அபாண்டப் பழியை ஏந்தி ஜெயில்லே இருக்கேன்றது மட்டுமாவது கடவுள் விளக்குவாரா? எனது நிரபராதித்தன்மையை உலகம் அறியுமா? ஊம். ஏது? அறிவது ஏது? உண்மைக்கு இந்த உலகத்தில் மதிப்பில்லே. சத்தியத்திற்குச் செல்வாக்கில்லே. நிரபராதிக்கு நியாயமில்லே.

அநியாயக்காரனுக்குத்தான் நீதி கிடைக்கிறது. அசத்யத்தைத் தான் ஜனங்கள் நம்புகிறார்கள். அதுக்குத்தான் மதிப்பும் கொடுக்கின்றனர். ஹா! விதியே! நீ செய்யும் கூத்து இப்படியா தலைகீழா இருக்கணும்; உண்மைக்கு மதிப்பில்லே. நியாயத்திற்கு ஆதரவில்லே" என்று மூர்த்தி சிறைச்சாலைக்குள்ளேயே உட்கார்ந்து கண்ணீர்விட்டுக் கலங்கியவாறு சிந்திக்கையில், வானக்குயிலின் அபூர்வ கானம் பின் வருமாறு அவனுக்குக் கேட்டது.

(முன் தொடர்ச்சி)

வத்திடாக் கடல்போல் மதி, ரவி, வானம்போல்
சத்தியம் அழியா ; அசத்தியம் வீழ்ந்திடும்
தத்துவங் காண் மனமே! (தூய்மை)

என்ற தீங்குயிலினும் இனிய கானத்தின் ஒலியைக் கேட்ட மூர்த்தியின் மனம் அப்படியே ஆனந்தப் பரவசமுற்று, மதியைக் கண்டு ஆம்பல் மலருவதுபோல் மலர்ந்தது. ஹா! இறைவா! பகவானே! இந்தத் தேவகானம் எங்கிருந்து வருகிறதோ! அல்லது நீதான் பாடுகிறாயோ? உண்மை! உண்மை! கடலுக்கு வற்றுதலில்லே. வானத்திற்கும் சூர்யன், சந்திரன் முதலிய கிரகங்களுக்கும் அழிவே இல்லே. அதுபோல சத்தியத்திற்கும் நீதிக்கும்

அழிவில்லை என்ற அற்புதமான வாக்கியம் என்ன பிரம்மானந்தமா யிருக்கிறது. ஹா! அப்படியும் ஒரு காலம் வருமா?" என்று மயங்கி அப்படியே சாய்ந்தான்.

அச்சமயம் மூர்த்திக்கு வேண்டிய வார்டர் அங்கு வந்து, "மூர்த்தி! ஒரு ரகசிய விசேஷங் கேட்டாயா? அந்த மாயக் கொள்ளையிலே சேர்ந்த பல பேரைப் போலீஸ்காரா ரொம்ப சிரமப்பட்டுக் கண்டு பிடிச்சுட்டாளாம். எத்தனையோ ரகசியமான துப்பெல்லாம் கிடைச்சிருக்காம். போலீஸ்காரா ரொம்ப சந்தோஷமாயும் குசாலாயும் வேலை செய்யராளாம். ஒரு வேளை ஒன்னுடைய நிரபராதித்தன்மைகூட கடவுள் கிருபையால் வெளிப்பட்டாலும் படலாம் அல்லவா?" என்று அன்போடு கூறினான்.

மூர்த்தி, "ஹா! அப்படியும் ஒரு காலம் வருமா? என் கண்மணிகளை நான் கட்டித் தழுவி முத்தமிட்டு, அவாளோடே கூடவே இருந்து மகிழும் பாக்கியம் கிடைக்குமா?....உம். மகா பாவி நான். எனக்காவது, கிடைப்பதாவது?" என்று சலிப்புடன் சொல்லிக் கண்ணீர் விட்டபடியே பசங்கள்மீது கவனம் பாய, பிரமித்துப் போய் விட்டான்.

63

ஆத்திரத்துடன் வீடு சென்ற கிழவர் சற்றும் முன்பின் யோசிக்காமல் பேனாவைப் பிடித்து ஆசிரமத்துத் தலைவன்மீது, தன் மனைவியை இழுத்துக் கொண்டு போய் விட்டதாகக் குற்றச்சாட்டு, கை கூசாமல் தட தடவென்று எழுத வாரம்பித்து விட்டார். அதில் பெரும் பாகமும் காங்கிரஸையும், ஆசிரமத்தையும் தாறுமாறாகத் திட்டுவதற்கே சரியா யிருந்தது. அச் சமயம் தேவகானத்திற்கு ஒப்பான மதுரகானம் வழக்கம்போல் கேட்டது.

(முன் தொடர்ச்சி மெட்டு)

போய்யும் புரட்டலும் பிழைகளும் பாபமும்
மெய்ப்பொரு ளாவியை எரித்து நரகில் வீழ்த்தும்
தத்துவங் காண் மனமே! (தூய்மை)

என்ற பாடல் கிழவரின் காதில் கேட்டதும் முகம் சுணங்கியது. பேனா ஓட்டம் சற்றுத் தடைபட்டு நின்றது. கோபம் கண்களில்

ஜ்வலித்தது. ஒரு விநாடி நேரம் பிரமை கொண்டு நின்றார். பிறகு தன்னையே தான் தேற்றிக் கொண்டு, ஒரு ஏளனமான சிரிப்புச் சிரித்துவிட்டுப் பின்னர், "தரித்திர மூதேவி! இவன் மகா யோக்கியன். சாபங் குடுக்க வந்துட்டான்; சோம்பேறித் தடியன். இந்தக் கழுதைகளையெல்லாம் பிடிச்சு கம்பத்தில் கட்டியடிக்கணும். அந்த மூதேவி மைதிலி இந்தப் பீடை பாட்டில் மயங்கரா. எனக்கு வயித்தெ எரியறது. இவன் கடக்கரான் தடியன்" என்று மனத்தை முற்றிலும் தேற்றிக் கொண்டு, மீண்டும் எழுதவாரம்பித்தார். அவருக்கிருந்த ஆத்திரத்தில் அந்தச் சந்நியாசியை அப்படியே கொன்று விடலாமாவென்ற எண்ணம் பரிபூரணமாக உண்டாயிற்று. திட்டிக் கொண்டே வெகு மும்முரமாகவும் ஸ்வாரஸ்யமாகவும் எழுதிக் கொண்டிருக்கையில், முன்பு மன்மத பாண லேகியம் கொடுத்த பைராகி மீண்டும் பலவித மருந்தோடு அங்கு வந்து, "ஜே ஸீதாராம் நமஸ்தே! பாபூ!" என்றான். கிழவருக்கு இவன் வருகை தற்சமயம் சற்று இடைஞ்சலாகவே தோன்றியது. எனினும் தன்னைத் தேடி மருந்து கொண்டு வந்திருப்பதனால் மருந்தின் ஆசைக்காக வரவேற்று உட்கார வைத்தார்.

பைராகி:—ஓ! நானு என்னமோ தடங்கலா வந்துட்டாப்பிலெ இருக்கு. அவசரமா என்னமோ எழுதுரங்களே! நான் போயிட்டு அப்ரம் வரட்டுமா?

கிழவர்:—ஆ! ஆ! பரவா இல்லென்னு. ஒக்காருங்கோ! இது என்னமோ சொந்த வேலெ. அப்ரம் பாத்துண்டா போறது. என்னென்ன கொண்டு வந்திருக்கங்கோ?

பைராகி:—நீங்க கேட்ட லேகியம் மட்டும் ஸ்பெஷலா பண்ணிண்டு வந்திருக்கேன். அதிருக்கட்டும். ஒரு சந்தேகம்; ஒங்களுக்குத் தைலங் குடுக்கரானே சாயப்பு அவன் எப்போ இங்கே வந்தான்?

கிழவர்:—(சற்று ஆச்சரியத்துடனும், ஒரு விதமான பரபரப்புடனும்) என்! வாரா வாரந்தான் வர வழக்கம். போன வாரம் வந்தான். இந்த வாரம் நாளைக்கி வருவான். என்! எதுக்கு கேக்கரங்கோ?

பைராகி:—ஒங்களுக்குச் சமாச்சாரமெ தெரியாதுங்களா! ஐயையோ! அந்த சாயப்புவெ அரெஸ்டு பண்ணிப் பூட்டாங்களே.

கிழவர்:—என்ன! என்ன! அரெஸ்டு பண்ணிப் புட்டாங்களா! எதுக்காக?

பைராகி :—அரே ஸீதாராம் ! ஒங்களுக்கு ஊருலெ நடக்கர சமாச்சாரமெ தெரியாதா! என்னமோ மாயக் கொள்ளையாம். அந்தக் கொள்ளேலே சம்பந்தப்பட்டவங்களெல்லாம் போலீஸார் புடிச்சுட்டாங்களாம். அதிலெ சாயப்புவும் ஆப்ட்டுகினும். ஐயா பேருகூட....என்னமொ அடி பட்ராப்புலே....

கிழவரின் தேகம் நடுங்குகிறது. முகத்தில் பலவிதமான விகாரத் தோற்றங்கள் வந்து சூழ்ந்துகொண்டன. அவருடைய தேகமே தீப்பிடித்து எரிவதுபோன்ற வேதனையினால் விழிகள் சுழலமிடுகின்றன. மெல்ல அவைகளைச் சமாளித்துக் கொண்டு, "என்னய்யா ! ஏதேதோ ஒளறுகிறீர் ? என் பேரு எதுக்கய்யா வரது ? என்ன பேச்சு தாறுமாறுமா இருக்கே ?" என்றார்.

இவருடைய மாறுதலை முற்றுமறிந்த பைராகி வியப்புடன் மீண்டும் பேசத் தொடங்கி, "ஏன் சாமீ ! எனக்கு என்ன தெரியுங்க. நீங்க மாயக் கொள்ளெக்காராளுக்குச் சாயபூ மூலமா தைலங்கள் சப்ளை செய்ரத்தை பக்காப் பேர்வழிகளான போலீஸாரு கண்டு பிடிச்சுட்டாளாம். சாயப்புவே ஒங்களெப் பத்தி சொல்லிட்டாரு. அதோடு ஒங்க வீட்லேயே நகைங்க திருடு போனபோது நீங்க கடபுடல் செஞ்சவங்க அப்பறம் அதெப் பத்தி ஒன்னுமே பேசாமெ இருந்துட்டீங்களா !

அதுவே போலீஸாருக்குப் பெரிய சந்தேகமாகி அது விஷயத்தைக் கவனிச்சாங்களாம். நீங்க நகெ போனப்பறம் அவங்களெ புடிச்சுருக்காமெ அவங்களோடெ சேந்துண்டு நகெயெ ரகஸ்யமா வாங்கிகிட்டு வித்து பணமாக்கிப் புட்டீங்களாம். அந்த நகெ வாங்கின மார்வாடியும் ஆப்ட்டுகினு. ஒங்களுக்குக் கடன் ஏறிப் போச்சுன்னு வரும்படிக்காவ அவங்களோடெ சேந்துட்டீங்களாம். இதெல்லாம் வெட்ட வெளியாப் பூட்டுதுங்களாம். ஐயாவெகூட அரெஸ்டு பண்ணப் போராங்களாமே!

இந்த வார்த்தையைக் கேட்கும்போதே கிழவரின் உயிர் பெரும் பாகமும் நீங்கிப் போய் விட்டது எனலாம். அகத்தில் செய்யும் சித்திரவதை முகத்தில் பளிச்சென்று மின்னுகிறது. பைராகி பின்னும் விடாமல் பேசத் தொடங்கி, "ஒங்க மேலெ அந்தத் தப்புமட்டுமில்லையே. மூர்த்தியெ நீங்கதான் கையெழுடச்சுட்டீங்களாம். அதோடெ அவரெ ஒண்ணு மாயக் கொள்ளெலெ சம்பந்தப்படுத்தி கைதியாக்கித் தண்டனையும் அடையும்படிச் செய்து விட்டீராம். இத்தனைக்கும் காரணம் வேணி மேலெ கொண்ட த்வேஷந்தானாம். வேணியெ மோசம் செய்ததும், மாயக் கொள்ளையை ஏவினதுங்கூட நீர்தானாம். என்ன அநியாயம் சார்" என்று பைராகி சொல்லும்போது கிழவருக்கு மூளையே

தூக்கிக் கொண்டு வந்து விட்டது என்றால் மிகையாகாது. கிழவர் உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே கிறு கிறு என்று சுற்றுவதுபோல் வேதனைப்பட்டுச் சாகிறார். எனினும் அவைகளைச் சற்றுச் சமாளித்துக் கொண்டு, "ஏ பைராகி! ஒனக்கு என்னமோ கேடு காலந்தான் வந்துடுத்து. எந்தக் கழுதை என்னைப் பத்தி யப்படி எல்லாம் ஒளறது. நாக்கெ அறுத்துப்புட்டேன் பாரு" என்று கையையும் முகத்தையும் ஆட்டிக் கொண்டே ஆத்திரமாகக் கூறினார்.

பைராகி சிரித்துக் கொண்டே, "சார்! கழுதையைப் போல உபகாரப் பிராணியும், தன் இனிய சங்கீதத்தால் நல்ல சகுனத்தைக் கொடுக்கக்கூடியதுமான பிராணி வேறே இல்லே. ஐயா! நீர் மனிதனாக இருந்தும் கழுதையைவிடக் கேவலமான ஜந்துவைப்போல் நீர் செய்த காரியத்தால் ஊரே சிரிக்கிறது சார்! எதோ நாக்கை அறுத்துவிடும் பார்க்கலாம்" என்று கூறிக் கொண்டே, தன் பைராகி வேஷத்தைக் களைந்துவிட்டு, பரோபகார சிந்தையும், பரிசுத்த இதயமும் உடைய ஏகாம்பரம் சேவை சாதிப்பதைக் கண்ட கிழவர், தன்னை மீறிய பீதியுடன் அலறி யடித்துக் கொண்டு, "ஐயோ! இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமா!" என்று வாய்விட்டுக் கூவியபடியே சுவரில் சாய்ந்து விட்டார்.

அதே சமயம் எதிர் வீட்டுக் கிழவர், தன் தொந்தியைத் தடவிக் கொண்டே, "ஏண்டா வேதாசலம்! இங்கே பைராகி வந்தானே! லேகியம் குடுத்தானா? எனக்கும் வாங்கினயா?" என்று ஆனந்தமாய்க் கேட்டுக் கொண்டே வந்தார். சுவரில் சாய்ந்து கிடக்கும் கிழவரையும், ஏகாம்பரம் மந்தகாஸமாக நிற்பதையும் பார்த்துத் திடுக்கிட்டு, நடுங்கிய கிழவர், "என்னடா சமாச்சாரம்? என்ன! என்ன!" என்று பதறப் பதறக் கேட்டார்.

சற்றுத் தெளிவு கொண்ட வேதாசலம் தாங்கமாட்டாத ஆத்திரத்துடன் எதிர் வீட்டுக் கிழவரைப் பார்த்து, நீ நாசமாப் போக. ஒன் எழவெடுக்க. பைராகியாடா! பைராகி. இந்த ஆசாமிதாண்டா பைராகின்னு ஒன்னெ ஏமாத்திப்புட்டான். நீ என் தலெக்கி கொள்ளி வெச்சுட்டே. குடி முழுகிப் போச்சுடா முழுகிப் போச்சு" என்று அபரிமிதமான ஆத்திரத்துடன் வேதாசலம், எதிர் வீட்டுக் கிழவரின் முதுகில் தடால்புடால் என்று நகர்த்தி விட்டார். இதற்குள் ஏகாம்பரம் தடுத்து விலக்கி விட்டு, "பெரியவரே! உமக்கு மட்டும் சர்க்காரின் அருமையான அன்பான அழைப்பு வரலேன்னு நினைக்க வேண்டாம். உமக்குங்கூடத்தான் தாம்பூலம் வெச்சு அழைப்பு வந்திருக்கு. இருவரும் புறப்படுங்கள்" என்று தமது அதிகாரத் தொனியுடன் கூறினார்.

இரண்டு கிழங்களும் மன்மத பாண சஞ்சீவிக்குப் போட்டி போட்டுத் தமாஷாவாகவிருந்ததுபோல் இப்போதும் இருக்கும்படி கடவுள் அருள் செய்துவிட்டார் போலும். இரு கிழங்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு வயிற்றிலும் தலையிலும் அடித்துக் கொண்டு பிரலாபித்தார்கள். இரு சிறு பிள்ளைகள் 'உன்னால் நான் கேட்டேன்; என்னாலே நீ கெட்டாய்' என்று ஆடுவதுபோலிருந்தது அத்தோற்றம். கருப்பன் இக் கோரக் காக்ஷியைப் பார்த்துக் கொண்டே வந்து பிரமித்துப் போய், "ஐயையோ! எஜமான்! இப்பிடி ஒருகாலம் வரும்னு நெனச்சிருந்தா இந்தக் கதி வந்திருக்காதுங்களே! சின்னம்மாவுத்தெரிச்சல், வேணியம்மா சாவம், மூர்த்தி ஐயாவின் மனக் கொதிப்பு சும்மா போவுமா? ஊம். என்னிக்கோ இப்பிடி வந்துடும்னு எதிர்பாத்தேனுங்க. நெசமாப் பூட்டுதுங்களே!" என்று வருந்தினான்.

64

அந்த ஆசிரமத்தை விட்டு வெளியே வந்த மைதிலியின் நெஞ்சு நெருப்பின்மீது புழுவெனத் துடிக்கின்றது. அவளுடைய பரிதாப நிலைமையைக் காண்போரின் மனம் கனலாய் எரியும் எனலாம். ஆனால், அந்த அநாதைக்கு அம்மாதிரி உள்ளன்புடன் அனுதாபப் பட இந்த ஜன்மத்தில் மனித வர்க்கத்தில் யார் இருக்கிறார்கள்? ஒருவருமில்லாப் பரதேசி, ஒண்டிப் பறவை நடக்கவும் மாட்டாது கண்ணீர் வழியக் கால்கள் பின்னலிட்டவாறு ஏதோ ஒரு எந்திரம் போல் நடந்து செல்லவாரம்பித்தாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொள்கிறது. மூச்சும் தடுமாறுகிறது. இந் நிலைமையில் அவள் மனத்தில் செய்யும் வேதனைகளின் போராட்டமோ ஒரு அபலைப் பக்ஷி சகிக்கக்கூடியதா?

"பாழும் பிறவியே! நீ ஏன் இம்மண்ணுலகில் வெட்கமின்றி வந்து பிறந்தாய்? அப்போதே நாய், நரி முதலிய ஜந்துக்களுக்கு இரையாகி இருக்கலாகாதா! உலகத்தில் பிறந்த யாராவது உன்போல் துரதிருஷ்டப் பாவிகளாயிருப்பார்களா! பிறந்தாய்! துயரக் கடலில் துளைந்தாய், கவலைக் கவசத்திற்குள் மறைந்தாய், சாகாப் பிணமாய் இருந்தாய், ஊம். ஆய்விட்டதா! நீ பிறந்த

தற்கு உன்னால் உனக்காவது அன்றிப் பிறருக்காவது லவலேசமாவது நன்மை, உதவி, பயன் ஏதாவது உண்டா? இல்லை. இல்லை. ஒரு சிறு உபகாரமும் இல்லை.

நீ சென்ற இடமெல்லாம் விபரீத பயங்கரத்தையும் உபத்திரவத்தையுமே உண்டாக்குகிறாய். உனக்கு இவ்வுலகில் எவ்வித சுகமும் சந்தோஷமும் இல்லை எனினும் மண்ணில் மடியும் வரையில் நிற்க இடமும், யோக்கியதையுங் கூட இல்லாத ஜென்மமாகிவிட்டாய். இனி இம்மாதிரி இருக்கவேண்டாம். தொலைந்து போ! உலகை விட்டு மறைந்துபோ! மகா லக்ஷ்மிபோல் வேணி சென்ற திக்கை நோக்கி நீ சென்றுவிடு. உனக்கு இனி தற்கொலைதான் பிராப்தி! இனி யார் முகத்திலும் விழிக்கவேண்டாம். எத்தகைய அபவாதத்தையும் கேட்கவேண்டாம். உன் முடிவும் சமீபித்துவிட்டது" என்று தனக்குள் எண்ணமிட்ட வண்ணம் வெகு தூரம் கால் சென்ற திக்கில் திசை தெரியாது நடந்து சென்றாள்.

இடை யிடையே உட்காருவதும், பின்னும் எழுந்து நடப்பதும் தலைவிரி கோலமாகச் செல்கையில், வீதியில் ஒரு மோட்டார் இவளைக் கடந்து சென்றது. அது செல்லும்போது அதற்குள் இருந்து, "ஹா! மைதிலீ! மைதிலீ!" என்ற பெரிய குரல் கேட்டதும், மைதிலி திடுக்கிட்டு நடு நடுங்கித் திரும்பிப் பார்ப்பதற்குள் கார் ஓடி மறைந்துவிட்டது. ஆனால், காருக்குப் பின்னால் வீதியில் கும்பல் தனித்தனியே பேசும் குரல் மட்டும் மைதிலியின் காதைத் துளைத்துக்கொண்டு உள்ளே சென்று, அவளை ஒரு ஆட்டு ஆட்டிப் பேரிடி விழுந்தவள்போலச் செய்துவிட்டது.

அதாவது, "அடாடா! ரெண்டு கிழங்களும் மாயக் கொள்ளேலே சம்பந்தப்பட்டிருக்கான்னு ரெண்டு பேரையும் போலீஸ்காரன் புடிச்சிண்டு பூட்டானுமே! அதோ காரிலே கொண்டு போறாளே! என்ன அக்கிரமம். அந்தக் கெழவன் போட்ட வேஷமென்ன? நடிச்ச நடிப்பென்ன? இப்போ நடந்த நடப்பென்ன? ஐயையோ! அக்கிரமமே! அந்தப் பாவி கிழவன் பொண்டாட்டியே படுத்தின பாடென்ன? அவன் சந்தி சிரிக்கிற சிரிப்பென்ன? ஒரு கெழத்துக்குப் பதில் ரெண்டு கெழமும் ஆப்ட்டுண்டுடுத்தாமே!" என்று பேசிய பொதுஜனங்களின் பேச்சேயாகும்.

அதற்குமேல் மைதிலியின் நிலைமையை விவரிக்கவேண்டுமா? "ஹா!" வென்று வாய்விட்டுக் கத்திவிட்டாள். தன்னிரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டு நின்ற இடத்திலேயே கல்லாய்ச் சமைந்துவிட்டாள். மோட்டாரில் கேட்ட குரல் தன் புருஷனுடையதுதான் என்பது நன்கு விளங்கிவிட்டது. ஆகாயமும்

பூமியும் பம்பரம்போல் சுழல்வதுதாகத் தோன்றுகிறது. பித்துப் பிடித்தவள்போல் "தாதா!" வென்று ஒரு கூச்சலிட்டவாறு திடீரென்று கீழே விழுந்தாள். வீதியில் கூட்டமும் கூடிவிட்டது.

அதே சமயம் தலைவிரி கோலமாய் ஓடி வரும் கருப்பனும் காத்தாயியும், "ஐயையோ! இந்தக் குடும்பத்துக்கு இப்படியொரு கெதி வருமா?" வென்று உள்ளூற வயிற்றெரிச்சலுடன் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்தக் கும்பலைப் பார்த்த உடனே அங்கு எட்டிப் பார்த்ததும் தாங்கள் ஆசிரமத்திற்குத் தேடிச் செல்லும் மைதிலியே விழுந்து கிடப்பதைக் கண்டு, அலறியடித்துக் கொண்டு, "ஹா! காத்தாயி! நம்ப எஜமானி இதோ உயிந்து கெடக்கராங்கோ! ஐயோ! கண்ருவியே!" என்று பெரிய சத்தமிட்டுக் கத்தியபடியே கும்பலில் தம்பதிகளிருவரும் புகுந்து, காத்தாயி மைதிலியைத் தூக்கி மேலே சாத்திக்கொண்டு, "அம்மா! அம்மா! சின்னம்மா! இதோ பாருங்க. காத்தாயி வந்திருக்கேன்" என்று அன்போடு கூப்பிட்டாள். காத்தாயியின் கண்கள் நீரைக் கக்குகின்றன.

மைதிலி கண்ணைத் திறந்து பார்க்கையில், அவள் சொப்பன உலகத்திலிருந்து இறங்கி வருபவள்போல் தோன்றியது. அவளையறியாது அவள் வாய் முன்பு வானக்குயில் பாடிய இரண்டடிகளை முணுமுணுத்தது. கண்ணீர் ஆருய் ஓடுகிறது.

"பாலைவனந் தன்னில் பதறித் துடிக்கினும்
காலக் கூத்தனின் கொடுமையால் கதறினும்
மாலின் பதம் மறவேல்" (தூய்மை)

இப்பாடலைப் பாடும்போது கருப்பனுக்கும், காத்தாயிக்கும் வயிறு பத்தி எரிகிறது. விசனம் தாங்காமல் பொங்கிப் பொங்கி வருகிறது. "அப்பா! சின்னப்பா! என்ன பாட்டு வேண்டிருக்கும்மா? இதோ பாருங்களேன். தாதா சமாசாரம் தெரியுங்களா!" என்ருன்.

மைதிலி :—கருப்பா! எல்லா சமாசாரமும் தெரியும். இப்படியொரு நாள் வந்துடுமோன்னு நான் பயந்துண்டே இருந்தேன். கழுத்து மட்டும் ஜலத்தில் இருக்கறவளுயிருந்தா நீந்தி யடிச்சு பொழைக்கலாம். தலைக்கு மேலே ஒரு முழம் போனப்பறம் பொழைக்கிற வழி ஏது?........மகா பாவி என்னெ கடவுள் படச்ச தின் வேலே முடிஞ்சு போச்சு........ஹா....அதோ....வானக்குயில் பாடுகிறது. இனிமே இந்தப் பறவெ கூண்டுக்குள்ளே அடைபட்டுச் சாகவேண்டாம். பறந்துபோய் அந்த ஸ்வரூபத்தைப் பார்க்கிறேன்" என்று எழுந்து ஓடவாரம்பித்தாள்.

காத்தாயி தடுத்து, "அப்பா! அம்மா! எங்கே ஓட்றங்கோ! வீட்டுக்கு வாங்கப்பா!" என்று கூறினாள். மைதிலி திமிறிக் கொண்டு, "ஹா! இனிமே வீடா! வாசலா! வாழ்வா! ஊஹூம். ஒன்றுமில்லே. எல்லாம் போச்சு. என்னைத் தடுக்காதே. காத்தாயீ! கருப்பா! விட்டுடுங்கோ! நான் நிக்கமாட்டேன். என்னாலே சகிக்க முடியாது. என் வாழ்க்கைக்கு நாதமாயமைந்ததும் பல முறை என்னைத் துன்பத்திலிருந்து காத்து மனச் சாந்தியைக் கொடுத்த அற்புத கானம், வசீகர சக்தி பொருந்திய மகிமையான கானம், அதோ கேட்கிறது. அதோடு நான் ஐக்யமாயிட்றேன். போங்கோ! போங்கோ!" என்று விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறாள். கருப்பனும், காத்தாயியும் கூடவே ஓடினார்கள்.

65

இரு கிழவர்களும் போலீஸ் ஸ்டேஷனில் பெஞ்சியின்மீது 'ஆந்தை விழிக்குமாம் போலே போலே' என்பது போல், விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றார்கள். போலீஸ்காரர் பலமாக பாரா நிற்கிறார்கள்.

(முன் தொடர்ச்சி)

"ஆண்டவன் ஆணையை அகந்தையால் மறந்து
தாண்டவ மாடித் துன்மார்க்கத்தில் திளைந்து
மூண்டது தீவினையே" (தூய்மை)

இச் சமயத்தில் தேனினும் இனிய கானத்தின் இன்னொலி கிழங்களின் காதில் விழுந்ததும் ஒருவரையொருவர் பார்ப்பதும் விழிப்பதும், தலையையும் தொந்தியையும் தடவுவதும் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு அழுவதும் 'நாசமாப் போனவனே ஒன்றாலே தானே எனக்கு இந்தக் கதி வந்தது' என்று ஒருவரையொருவர் குறை கூறிக்கொள்ளும் காட்சி, போலீஸ் சேவகனுக்கு நகைப்பாயிருந்தது. இது பரியந்தம் காதில் விழுந்தாலும் வெறுப்புற்றுக் கவனிக்காது அலக்ஷியமாகச் சென்ற கிழவருக்குச் இச்சமயத்தில் தனக்கென்றே பாடுவதுபோல் தோன்றி இதுகாறும் காணாத ஒரு விதமான உணர்ச்சியும் மனக் கவர்ச்சியும் துக்கமும் பொங்கின.

மைதிலி அடிக்கடி இக்கானத்தைக் கேட்டு மயங்கி நின்ற ரகசியத்தை இப்போதுதான் அறிந்தார். இனி என்ன செய்து, என்ன உணர்ந்து பலன் என்ன?

* * *

அதே சமயந்தான் மைதிலி அந்த அற்புத தேவகானம் வரும் திசையை நோக்கி ஓடினாள். கால் தடுக்கி விழுந்தும் எழுந்தும் வீராவேசத்துடன் ஏரிக் கரைப் பக்கம் ஓடினாள். அப்போது,

"ஆவதும் அவனால் அழிவதும் அவனால்
ஏவலின்படியே இன்பத் தொண்டாற்றி நின்
பாவங்கள் போக்கிடுவாய்!" (தூய்மை)

என்ற பாடலைப் பாடிக் கொண்டு ஓர் சந்நியாசி—கையில் ஜபமாலையும், காஷாய உடையும், நீண்டு வளர்ந்துள்ள தாடி மீசையும் ஜடைகள் நிறைந்த பயங்கரப் புதர்போன்ற தலையும், சாந்தமும் கருணையும் பரிபூரணமாக நிறைந்து ஒளி வீசும் கண்களுடனும் பழுத்த பழமாய் தள்ளாத கிழவர்—மெல்ல நடந்து வருவதைப் பார்த்த மைதிலி, ஓட்டமாக ஓடி, அந்தச் சாதுவின் காலில் விழுந்து, காலைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "ஸ்வாமீ! மகா புனிதமான யோகீச்வரரே! இவ்வடியாளை ஆட்கொள்ள வேண்டும். இப் பாவியைப் பரமன் இப் பாழும் உலகில் படைத்தான். படாத பாட்டிற்கும் இலக்காக்கினான். சந்தோஷமென்றும், சுகமென்றும் கூறும் பதங்களை எனக்கு அடியோடு பகையாளிகளாக்கி விலக்கினான்.

கருத்து இருண்டு நீரைக் கக்கும் மேகத்தையுடைய பயங்கரமான வானத்திலும் ஒரு பளிச்சென்ற மின்னல் தோன்றி வெளிச்சங் கொடுப்பதுபோல், இருண்டு அந்தகாரமாகிவிட்ட என் வாழ்க்கையிலும் இனிய சுகம் ஒன்று உண்டு என்றால், அது தங்களுடைய அருமையான குயிலினும் இனிய கானமே யாகும்.

முனிபுங்கவா! அந்தக் கானந்தான் என் வாழ்க்கைக்கு நாதமாயிருந்தது. அந்தக் கானமே என்னைக் களிக்கச் செய்யும் தேவாம்ருதமாயிருந்தது. என்னைப் பலகாலும் காத்து ரக்ஷித்தது. நீதி தவறி நடக்கவிருந்த தருணமெல்லாம் தங்கள் கானம்ருதமே என்னை உணர்வு பெற்று உய்யச் செய்தது. இப் பாவியின் சரிதம் முடிவு பெற்று விட்டது. இனி ஒன்று தற்கொலை, அன்றித் தங்களுடைய சித்த மிரங்கினால் தங்கள் பாத சேவை செய்து பிழைக்கும் வழி. இவைகளைத் தவிர வேறில்லை. என்னை ஆட்

கொள்ள வேண்டும்” என்று கண்ணீர் பெருகக் கல்லும் கரையும்படிக் கூறி யழுதாள்.

பாடிக் கொண்டே வந்த சந்நியாசி, ஆகாயத்தை நோக்கிய படியே, “கடவுள் காப்பாராக! பெண்ணே! எழுந்திரு. நானா உன்னைக் காக்க வேண்டும்? முடியாது. முடியாது; நானும் உன்னைப்போன்ற ஒரு மாமிசப் பிண்டந்தான். உண்டு உலாவித் திரியும் ஜந்து; ஊனைச் சுமந்து நிற்கும் சுமைதாங்கி. கேவலம் நசித்துப் போகக்கூடிய அற்ப ஜந்து. என் காலை விடு. இக்கால் அசேதனமான முள், கல் முதலிய பொத்தினாலும் தாங்காது சீழ் வழியும் கால்.

எந்தக் கால் இப் பூவுலகை மூவடியா யளந்ததோ—எந்தக் கால் கல்லைப் பெண்ணாக்கியதோ—அந்தக் காலால் உன் உள்ளத்தை அளக்கும்படி வேண்டு. எந்த ஒரு அபாரமான குணத்தினால் மங்கையின் மானத்தை மாபெருஞ் சபையில் காத்துத் துயில் கொடுத்தானோ அந்தக் குணத்தினனை வேண்டி உன்னையும் காக்கச் சொல். ஆதியந்த மில்லாது, எங்கும் நிறைந்த பொருளாய், அணுக்குள் அணுவாய், மலைக்குள் மலையாய், சிலைக்குள் உருவாய், ஜோதிக்குள் சுடராய், மணிக்குள் ஒளியாய், மலருக்குள் மணமாய், கனிக்குள் இனிப்பாய், கண்டு பிடிக்க முடியாத பரஞ்சோதியாய் விளங்கும் ஆனந்த மூர்த்தியை, அற்புத வடிவை அடைய வேண்டிக் கொள்” என்று கருணை நிறைந்த கனிந்த தொனியில் கூறினார்.

இதைக் கேட்டதும், மைதிலியின் தேகம் சிலிர்த்தது. ஒரு விதமான பக்திப் பரவசத்தினால் வெயர்வை வெள்ளம் பொங்கியது. கண்கள் மடை திறந்ததுபோலாகிவிட்டன. ‘நாம் எங்கிருக்கிறோம்; என்ன பேசுகிறோம்’ என்ற தன் நிலையையே மறந்து சந்நியாசியின் வாக்கிலிருந்து வரும் அம்ருத தாரையைப் பருகிக் கொண்டிருந்தாள். கருப்பனுக்கும் காத்தாயிக்குங்கூட மனம் கலங்கி ஒருவித உணர்ச்சி உண்டாகியது.

மைதிலி :—எதீச்வரரே! தாங்கள் தெரிவித்த அந்தப் பரம் பொருளைக் கேவலம் அந்தகாரத்தில் உழலும் நான் எங்ஙனம் அடையமுடியும்? என் அந்தகாரத்தைப் போக்க குருவென்ற வெளிச்சம் வேண்டாமா? தங்கள் அடி பணிந்து அடிமையாயிருந்து நான் அந்த உயர்ந்த நிலைமையை அடையலாமன்றோ!

சந்நியாசி :—பெண்ணே! நீ சொல்வதும் வாஸ்தவம். குருவின் துணையில்லாது சாமீப்ய பதவியை யாரும் அடையமுடியாது. இது நம் முத்தோர்களின் சித்தாந்தம். இருப்பினும் நீயோ பால்மணம் மாறாத பச்சைக் குழந்தைபோல் காணப்படுகிறாய்.

டன் மனமோ பாப விரக்தியை அடைந்திருக்கிறதாகத் தெரிகிறது. இத்தனை சிறு வயதில் இப்பாதிரியான மனப்பான்மை உண்டாவதே கடினம்.

பெண்ணே! நானோ நாடோடி. இன்றிருக்கும் ஊரில் நாளை இல்லாதவன். கல்லும் முள்ளும், காடும், புதரும் துஷ்ட மிருகங்களின் கர்ஜனையும், பசி தாகம் முதலியவையும் எனக்கு சர்வ சகஜம். என் மடியில் நானே தீயைக் கட்டிக் கொள்வதுபோல் உன்னைச் சேர்த்துக் கொள்வது உனக்கும் எனக்கும் எமனாக முடியும். ஆகையால், உன்னை நான் ஏற்றுக் கொள்ள ஒருபோதும் முடியாது.

மைதிலி :—(அலறியபடியே) ஹா! மகாபாவி நான் தற்கொலைக்குத்தான் லாயக்குள்ளவளா! ஸ்வாமீ! எனக்கு என்னதான் விமோசனம்? அதையாவது உபதேசம் செய்யலாகாதா? திக்கற்றவர்களுக்குத் துணை யார்?

சந்நியாசி :—தெய்வம் ஒன்று. அவரவர்களின் ஒழுக்கம், சீலம், மன உறுதி, வைராக்கியம், தயாள குணம், கருணை இவைகளும் இவை போன்றவைகளுந்தான் மற்றொன்று.

மைதிலி :—ஸ்வாமீ! அவைகள் இருப்பினும் அபவாதம், பழி, பாவம் இவைகள் பாணம்போல் தாக்காமலிருக்குமா?

சந்நியாசி :—பெண்ணே! நீ மகா விவேகி! இச் சிறு பிராயத்தில் இத்தனை ஆழமான விசாரணைகளில் உன் மனம் சென்றிருப்பது மிகவும் போற்றத் தக்கதாகும். ஒரு சுத்த வீரன் யுத்த களத்திலிறங்கி யுத்தம் செய்து ஜெயிக்கிறான். அவன் தேகத்தில் எத்தனையோ பாணங்களின் துளைப்பு இருக்கத்தான் இருக்கும். அவைகளைச் சகித்துக் கொண்டு ஜெயக்கொடி நாட்டிய பின், ஜய பேரிகையின் ஒலி அவன் காதில் விழும்போது அவன் தேகத்திலுள்ள ரணங்களும், தழும்புகளும் தான் பெற்ற வெற்றியின் பரிசாகவன்றோ தோன்றின என்று மகிழ்வான். அதேபோல் இம் மாய உலகத்தில் பாவப் பிறவி எடுத்த பின் இவைகளை ஜெயிப்பது தான் வீரம். உன்னழகும் உன் யௌவனமும் உனக்குச் சத்துருவாகவே இருக்கும். ஆனால், அதை ஜெயித்து நீ வெற்றி பெறுவாய்.

மைதிலி :—ஸ்வாமீ! நான் எந்த வழியில் என் காலத்தைக் கடத்துவேன்? எனக்கு ஏதாவது உபதேசம் செய்யக் கூடாதா! நான் அதற்கும் அருகதையற்ற மகா பாவியா?

சந்நியாசி :—பெண்ணே! அன்ன சத்திரங் கட்டு; வஸ்திர தானம் செய்; எல்லோரையும் சகோதரிகளாக்கி, சோப்பேறி.

மடத்தில் உட்கார சேவை என்று நான் சொல்ல வரவில்லை. நீ செய்யும் சேவை மக்களது ஆத்மாவின் விழிப்பை உண்டாக்க வேண்டும். ஜனங்கள் மனதைத் திறக்கச் செய்து அவர்களையும், “ நாம் மிருகமல்ல, மனிதர்கள் தான் ” என்று உணரும்படிச் செய்யும் புனிதமான சேவை செய்து பயனடைய வேண்டும். பரந்த ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களே, அதன் ஒரு பகுதியான ஹரிஜன சமூகத்தைக் கேவலப்படுத்தி இருக்கிறார்களே அந்தச் சமூகத்தினருக்கே சேவை செய்து, அவர்களுக்கு அறிவை ஊட்டி, மனத்துணிவை முதலில் உண்டாக்கி விடு. பிறகு எம்பெருமான் நடக்கும் வழியைக் காட்டுவான். தயங்காதே! கலங்காதே! பயப்படாதே! எதிர்ப்புக்கு அஞ்சாதே! அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்கள் என்ற உறுதியுடன் செய்து வா.... நான் போகிறேன்.

மைதிலி :—(மீண்டும் காலில் விழுந்து வணங்கி) ஸ்வாமீ! என் ஜென்மம் சாபல்யமாயிற்று. இந்த அடிமைமீது கிருபை இருக்கட்டும். எப்போதாவது இங்கு வந்தால் இப்பாவிக்குத் தரிசனங் கொடுத்து ஆதரியுங்கள்—என்று வேண்டினாள். சந்நியாசி அவளை எழுந்திருக்கச் சொல்லி, கையை உயர்த்தி ஆசீர்வதித்துப் பின்,

(முன் தொடர்ச்சி மெட்டு)

சரண் புகுந்தோர்க்குத் தாசானு தாசனாய்
கருணை புரிந்திடும் கண்ணனை யனுதினம்
ஸ்மரணை செய்வாய் மனமே! (தாய்மை)

என்ற பாடலைப் பாடிக்கொண்டே போய்விட்டார்.

மைதிலிக்கு மனம் ஒரே நிலையான வைராக்யத்தில் நின்று ஒருவித வீராவேசத்தை யுண்டாக்கி விட்டது. சந்நியாசி சென்ற திக்கையே நோக்கிப் பிரமித்து நின்று விட்டாள். கருப்பனும் காத்தாயியும் அவளைப் பார்த்து கொண்டே திகைத்து விட்டார்கள்.

66

அபாரமான புகழ் மாலைகள் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்திற்கும், அவர் கோஷ்டியினருக்கும் வந்து குவிய வாரம்பித்தன. ஏகாம்பரம் அதற்குள், அதை விரும்பவில்லை. ஏனெனில் இன்னும் ச. ம. கு. என்ற பதத்திற்கும் பொருள் கண்டு பிடிக்கப்படவில்லையாதலால் இந்த 28-ம் நம்பர் வீட்டில் கிடைத்த ஒரு மேப்பை வைத்துக்கொண்டு, "அந்த இடம் எங்கிருக்கலாம். எதுவா யிருக்கலாம்" என்று ஆராய்ச்சி செய்து, செய்து மூளையும் கலங்கிவிடும் போலாய் விட்டது.

ஆதலால் ஒன்றுமே புலப்படவில்லை. எனினும் பூதக் கண்ணாடிகளின் உதவியால் பார்த்ததில் இது ஒரு மலைக் குகையின் ரகசியமாகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் தனக்குச் சந்தேகமான இடத்திலெல்லாம் மோட்டாரிலும், சைக்கிளிலும், கால் நடையாகவும் சென்று தேடினார். ஒருவிதமான அடையாளமும் தெரியவில்லை. தான் பிடித்துக் கைதியாக்கியுள்ளவர்களை எத்தனை மிரட்டி, உருட்டி, அதட்டி, அடித்தும் இந்த ச. ம. குவின் ரகசியத்தைச் சொல்ல அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

இதில் சம்பந்தப்பட்டிருக்கும் பெண்கள் சிலருங் கூட அதற்கு ஒப்பாது பிடிவாதமே செய்து சாகவும் துணிந்தார்கள். எல்லாவற்றையும்விட அதிசயம் இம்மாயக் கொள்ளைக்காரர்களில் சிலரைப் பிடித்த பிறகு போலீஸ்காரர்களே திடீர் திடீர் என்று காணாமல் போய்விட வாரம்பித்த வெட்கக்கேடும், வயிற்றெரிச்சலும் அதிகாரிகளால் சகிக்க முடியவில்லை. போலீஸ்காரர்களையே காணாமல் ஆளையே கொள்ளை யடிப்பதென்றால், இந்த அதிசயத்தைக் கண்டு யார்தான் வியக்கவும் பயப்படவும் மாட்டார்கள்!

காணாது போய்விட்ட போலீஸ்காரர்களின் பிரேதச் சின்னம் ஒன்றும் காணப்படவில்லை. அவர்கள் வீட்டு மக்கள் மனிதர்களெல்லாம் அதிகாரிகளிடம் வந்து கூக்குரல் போட வாரம்பித்தார்கள். சில்லரை போலீஸ்காரர்கள் இந்த ஆள் கொள்ளைக்குப் பயந்து கொண்டு, துணிந்து வெளியே போகவும் தேடவும் முடியாது, சிலர் உடம்பு அசௌகரியம் என்று லீவு போடவும், சிலர் இந்தப் பீதியால் உண்மையில் ஜீக்காகவே விழவும், சிலர், 'எங்களுக்கு வேலையே வேண்டாம், ராஜீநாமாச் செய்துவிட்டு எங்காவது பிச்சை எடுத்துப் பிழைக்கிறோம்: எங்களுக்கு இந்த வேலை உயிருக்கே பயமாயிருக்கிறது' என்று கூறவும் தொடங்கினார்கள்.

இத்தகைய ஓர் விபரீத சம்பவம் இந்த ஊர் போலீஸில் ஏகாம்பரம் உத்தியோகத்திற்கு வந்த நாள்முதல் இதுவரை ஒரு நாளும் ஏற்பட்டதில்லை. அதற்கு முன்னும் இப்படி நடந்தது கிடையாது. ஆகையால் ஏகாம்பரத்திற்கு தன் வீட்டிலேயே கொள்ளையடித்தபோது உண்டான கஷ்டத்தைவிட அதிகமான விசனமும், அவமானமும், மனத்தில் ஒருவிதமான ஏக்கமும் உண்டாகிவிட்டது.

இதே கவலையுடன் யோசித்துக்கொண்டிருக்கையில், இவருக்கு மேலதிகாரியிடமிருந்து சுடுசரப்போன்ற கடிதம் ஒன்று வந்து இவரை இன்னும் வாட்டி வருத்தியது. உடனே தன் மனத்திற்குள் ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டார். தனக்கு வேண்டிய முக்யமான சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு தன் மனைவியிடம் சென்றார்.

அந்தம்மாள் அப்போதுதான் கடவுளுக்கு நிறைய விளக்கேற்றிப் பூஜை செய்து கற்பூர ஹாரத்தி எடுத்துப் பின் "என்னப்பனே! சர்வலோக சரண்யா! தயாபரனே! அம்பிகே! ஜகந்தோத்தாரகி! என் கணவருக்கு ஒருவிதமான ஆபத்துமில்லாது காப்பாற்றி எனக்கு மாங்கல்ய பிச்சையைக் கொடுத்து ரக்ஷிப்பாய் அருள் ஜோதியே! எனது கணவரின் மனக்குறையைத் தீர்த்து அவருக்கு இது பரியந்தம் ஜெய மளித்ததுபோல் இம்முறையும் ஜெய மளித்துக் காப்பாற்றவேண்டும் தாயே! இப்பாலை நீ பருகி என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும்" என்று மெய்ம்மறந்த தெய்வ பக்தியும், பதிபக்தியும் ஒருங்கே பொங்கியவாறு கற்பகாம்பாள் பிரார்த்தனை செய்வதைப் பார்த்த ஏகாம்பரத்தின் கண்களில் ஆனந்த பாஷ்பம் உதிர்ந்தது. அவர் இதயத்தில் உண்டாகிய சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. 'இந்த உத்தமியின் பிரார்த்தனைக்கு இரங்கி எனக்கு இம்முறை ஜெயத்தை அளிக்கவேண்டும்' என்று தனக்குள் கடவுளை வேண்டியபடியே, "கற்பகம்! உன் பிரார்த்தனைதான் ஜெயம் பெறவேண்டும். நான் போய் வருகிறேன். பகவான் நமக்குத் துணை. ஜெயம் பெற்றுத் திரும்பினால் உன் அதிர்ஷ்டம். இல்லையேல்........"

கற்பகம் இடைமறுத்து பரபரப்புடன், "ஹா! இதென்ன வார்த்தை! இப்படிச் சொல்லிவிட்டுப்போனால், என் மனசு எப்படி நிம்மதியாகும்? அம்பிகையின் பாதமே கதி என இருக்கும் நம்மைக் கைவிடமாட்டாள். நாதா! தாங்கள் இப்போது போய்த்தான் ஆக வேண்டுமோ?" என்றாள்.

ஏகாம்பரம் :—இதென்னக் கேள்வி? கற்பகம்! போய்த்தான் ஆகணும். ஜெயம் உண்டா, இல்லையா? அது இவர்களுடையது.

ஜெயம் பெற்றே வருவேன் என்று எனக்கு ஏதோ ஒன்றான் மற்ற சொல்கிறது. ஆகையால் பயப்படாமலிரு; நான் வருகிறே,

கற்பகம் :—நாதா! ஸ்வாமியின் பிரசாதம் பெற்றுலக்காகத் ளுங்கள்.—என்று கூறி நிவேத்யம் செய்த பாலைக் கொடுத்திருந்த ஏகாம்பரமும் அதைப் பருகிவிட்டு, கற்பகத்தினிடம் விடையுடன் றுக்கொண்டு கடவுளை வேண்டியபடியே வெளியே போய்விட்டாரிய

67

அந்தரமான காட்டில் மோட்டார் வெகு வேகமாகப் பறக்கின்றது. எங்கு பார்த்தாலும் காற்றில் மரங்கள் அலையும் பேரொலியும் சில பக்ஷிகள் சப்திக்கும் குரலும், சிறிது தூரத்தில் சில துஷ்ட மிருகங்களின் பயங்கரமான சப்தமும் ஒன்று கூடிக் கேட்கும் போது எத்தகைய கல் நெஞ்சர்களையும் கலங்க வடித்துவிடு மல்லவா!

ஏகாம்பரம் தன்னுயிரைப்பற்றிச் சற்றும் பயமே கொள்ள வில்லை. அவர், தான் எடுத்த காரியம் வெற்றி பெறும் முன்பு தான் இறந்துபோவதில் மட்டும் சற்றும் இஷ்டப்படவில்லை. அதோடு தன்னருமை மனைவியின் பரிதாபம் அவரைப் பலமாகத் தாக்கியது. இவ்விரண்டு போராட்டத்தைத் தவிர வேறு எதையுமே லக்ஷ்யம் செய்யவில்லை. அவருடன் கூடவிருக்கும் போலீஸ்காரர்கள் பல மான காற்றடிக்கும் சப்தத்தைக் கேட்டு குடல் நடுக்கமும் பட படப்பும் கொண்டு தவித்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஏகாம்பரம் :—ஏண்டா 103! இந்தக் காட்டிலா மோட்டார் போச்சு? நீ நன்னு கவனிச்சயா?

103 :—ஆமாம் எஜமான்! நன்னு பாத்தேன். நான் கள்ளு எறக்கரவன்போலே மரத்துமேலே எறிகினு இருந்தேன். மான் வேகமா ஒரு காரு போச்சு. அதுபோன வேகத்துலே எங்கே உருண்டுபோவுதோன்னு கூட பாத்தேன்.

ஏகாம்பரம் :—எவ்வளவு தூரம் போறவரைக்கும் பாத்தே?

103 :—மாயமா மறைஞ்சு போச்சுங்க. என்னாலே கண்டு புடிக்கவே முடியலேங்க.

இத்தகைய ஓர் விபரீத சம்பவம் இந்த ஊர் போலீஸில் ஏகாம்பரம் உத்தியோகத்திற்கு வந்த நாள்முதல் இதுவரை ஒரு நாளும் ஏற்பட்டதில்லை. அதற்கு முன்னும் இம்மாதிரி நடந்தது கிடையாது. ஆகையால் ஏகாம்பரத்திற்கு தன் வீட்டிலேயே கொள்ளையடித்தபோது உண்டான கஷ்டத்தைவிட அதிகமான விசனமும், அவமானமும், மனத்தில் ஒருவிதமான ஏக்கமும் உண்டாகிவிட்டது.

இதே கவலையுடன் யோசித்துக்கொண்டிருக்கையில், இவருக்கு மேலதிகாரியிடமிருந்து சுடுசரம்போன்ற கடிதம் ஒன்று வந்து இவரை இன்னும் வாட்டி வருத்தியது. உடனே தன் மனத்திற்குள் ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டார். தனக்கு வேண்டிய முக்யமான சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு தன் மனைவியிடம் சென்றார்.

அந்தம்மாள் அப்போதுதான் கடவுளுக்கு நிறைய விளக்கேற்றிப் பூஜை செய்து கற்பூர ஹாரத்தி எடுத்துப் பின் "என்னப்பனே! சர்வலோக சரண்யா! தயாபரனே! அம்பிகே! ஜகஜோத்காரகீ! என் கணவருக்கு ஒருவிதமான ஆபத்துமில்லாது காப்பாற்றி எனக்கு மாங்கல்ய பிச்சையைக் கொடுத்து ரக்ஷிப்பாய் அருள் ஜோதியே! எனது கணவரின் மனக்குறையைத் தீர்த்து அவருக்கு இது பரியந்தம் ஜெயமளித்ததுபோல் இம்முறையும் ஜெயமளித்துக் காப்பாற்றவேண்டும் தாயே! இப்பாலை நீ பருகி என் வயிற்றில் பாலை வார்க்கவேண்டும்" என்று மெய்ம்மறந்த தெய்வ பக்தியும், பதிபக்தியும் ஒருங்கே பொங்கியவாறு கற்பகாம்பாள் பிரார்த்தனை செய்வதைப் பார்த்த ஏகாம்பரத்தின் கண்களில் ஆனந்த பாஷ்பம் உதிர்ந்தது. அவர் இதயத்தில் உண்டாகிய சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. 'இந்த உத்தமியின் பிரார்த்தனைக்கு இரங்கி எனக்கு இம்முறை ஜெயத்தை அளிக்கவேண்டும்' என்று தனக்குள் கடவுளை வேண்டியபடியே, "கற்பகம்! உன் பிரார்த்தனைதான் ஜெயம் பெறவேண்டும். நான் போய் வருகிறேன். பகவான் நமக்குத் துணை. ஜெயம் பெற்றுத் திரும்பினால் உன் அதிர்ஷ்டம். இல்லையேல்........"

கற்பகம் இடைமறித்து பரபரப்புடன், "ஹா! இதென்ன வார்த்தை! இப்படிச் சொல்லிவிட்டுப்போனால், என் மனது எப்படி நிம்மதியாகும்? அம்மையின் பாதமே கதி என இருக்கும் நம்மைக் கைவிடமாட்டாள். நாதா! தாங்கள் இப்போது போய்த்தான் ஆகவேண்டுமோ?" என்றாள்.

ஏகாம்பரம் :—இதென்னக் கேள்வி? கற்பகம்! போய்த்தான் ஆகணும். ஜெயம் உண்டா, இல்லையா? அது இவர்களுடையது.

அசங்காதா பாருங்கோ!" என்றார். அதற்குப் பிறகுதான் மற்றவர்களுக்குச் சரியாக மூச்சு வந்தது.

தைரியமாய் ஏகாம்பரம் சென்று புலியை அலாக்காகத் தூக்கி அப்புறம் தள்ளினார். என்ன ஆச்சரியம். புலி இருந்த இடத்தில் கீழே பெரிய வழி தெரிந்தது. அஞ்சாத மனத்துடன் உள்ளே சென்று பார்த்ததில், பெரிய வீடுபோல் கல் பாறைகளையே செதுக்கி அறை அறையாய் செய்திருந்தது தெரியவந்தது.

ஒரு இடத்தில் பச்சிலைகளும், மூலிகைகளும் மலைபோல் குவித்திருந்தது. மற்றோர் இடத்தில் அடுப்பில் பெரிய பெரிய கடாய்களில் ஏதோ காய்ந்துகொண்டிருந்தது. ஒரு அறையில் காணாதுபோன போலீஸ்காரர்களை எல்லாம் பின் கட்டும் முன் கட்டுமாகக் கட்டி உருட்டி இருக்கிறது. சில தடியர்கள் சவுக்கைக் கொண்டு அவர்களை அடித்தபடியே, "போருமாடா, இன்னும் ஓலமா! எங்களையா பிடிக்கப் போரங்கோ! எங்களையாடா பிடித்துவிட்டு உத்தியோகம் ஒஸ்திக்கப்போரங்கோ! பட்டமும் பதக்கமும் வாங்கப்போரங்கோ. ஏகாம்பரத்துக்கும் சீக்கிரம் இந்தக் கதியாயிடும். இருங்கோ" என்று சொல்லும்போது ஏகாம்பரத்தின் ஆத்திரம் தலைக்கேறியது.

சற்றும் தாமதிக்காமல் நிர்த்தாக்ஷிண்யமாய் அங்குள்ள அத்தனை பெயரையும் காலிலும், கைகளிலும் 'டப் டப்' என்று சுட்டு வீழ்த்தியபடியே, "கிராதகப் பதர்களே! அகம்பாவம் பிடித்த அரக்கர்களான ராவணனும், ஹிரண்யனும், சிசுபாலனும், கம்ஸனும், ஜராஸந்தனும், நரகாசுரனும் அதிக நாள் வாழவில்லை. எத்தனையோ வரம் பெற்றவர்களின் கதியே அப்படியிருக்க நீங்கள் எந்த மூலேடா? ஏகாம்பரத்தையா கொல்லப்போகிறீர்கள்? இதோ ஏகாம்பரம் உங்களையே பிடித்துவிட்டான்!" என்று கூறிக்கொண்டே அவ்விடத்திலுள்ள ஒருவரைக்கூட நகரவிடாமல் சுட்டு வீழ்த்திக் குவித்துவிட்டார்.

இந்த மாதிரி இந்த இடத்திலும் தமக்கு ஆபத்து வரும் என்று நினையாது இறுமாப்புடனிருந்ததால், அவர்கள் சற்று அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள். இரண்டொருவர் எழுந்து வந்தும் சண்டைக்குத் தயாரானார்கள். ஆனால் அந்த மொண்டிச் சண்டைக்கு ஏகாம்பரம் விடாது பின்னும் சில இடங்களில் சுட்டு வீழ்த்தினார்.

கட்டுண்டு கிடந்த போலீஸ்காரர்களை எல்லாம் கட்டை அவிழ்த்துவிட்டுக் காப்பாற்றித் தேற்றினார். அதற்குள் ஒரு போலீஸ்காரனை ஓட்டமாக ஊருக்குள் செல்வதற்காகத் தாம் வந்த காரையே கொடுத்து, மற்றும் சில ஆட்களையும், அதிகாரிகளையும்,

லாரிகளையும் கொண்டு வரும்படி ஏகாம்பரம் ஆக்ஞாபித்தார்; அந்தக் கான்ஸ்டேபிள் உடனே புறப்பட்டுச் சென்றான்.

கட்டிலிருந்து விடுபட்ட அத்தனை போலீஸ்காரர்களும் ஏகாம்பரத்தின் காலில் விழுந்து வணங்கி, கண்ணீர் பெருக தங்களைச் சமயத்தில் காப்பாற்றியதற்கு நன்றியறிதலும், உபசாரமும் கூறினார்கள். இதற்குள் ஏகாம்பரம் அந்தக் குகையை முற்றும் சோதனை செய்து, நகைகள் நாணயங்கள் முதலிய சகலத்தையும் ஒன்று திரட்டினார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மேலதிகாரியும் மற்றையோரும் வந்தார்கள். லாரியும் வந்தது. கமிஷனர், ஏகாம்பரத்துடன் கை குலுக்கி, புகழ் வார்த்தைகள் பல கூறித் தட்டிக்கொடுத்து, "வெரி குட் ஏகாம்பரம்! ரொம்ப திறமையுடன் கண்டுபிடித்ததற்காக உமக்கு அரசாங்கத்தார் தகுந்த மரியாதை கொடுப்பார்கள். போலீஸின் சார்பில் உங்களை நான் மிக மிகப் பாராட்டுகிறேன்" என்று அபாரமான சந்தோஷத்துடன் பலமாகப் புகழ்ந்தார்.

ஏகாம்பரம் :—சார்! எல்லாம் கடவுளின் செயல். எனக்கு அரசாங்கத்தார் உயரிய பதவியோ, பட்டமோ கொடுப்பதை எதிர் பார்த்து இந்தக் காரியத்தை நான் செய்யவில்லை. பொது ஜனங்களின் ஊழியன் நான். அவர்களின் நன்மைக்காகப் பாடு பட்டேன். அவர்களுக்கு அமைதியும் சந்தோஷமும் கிடைத்ததே போதுமானது—என்று பெருந்தன்மையுடன் கூறினார்.

அடுத்த நிமிடமே அங்குள்ள அத்தனை பேரும் சங்கிலியால் பிணைத்து லாரியில் ஏற்றப்பட்டனர். பொருள்களுடன் எல்லோரும் கிளம்பினார்கள். சேவகனின் சவத்தைக் கொண்டு வந்து போலீஸ் மரியாதையுடன் அடக்கம் செய்தார்கள். அவன் குடும்பத்திற்கு உபகாரம் செய்யும்படி கவர்ன்மெண்டிற்கு ஏகாம்பரமே எழுதினார்.

68

மாயங் கொள்ளை நடந்தபோது ஊர் எவ்விதம் நடுங்கியதோ அதற்கு நேர்மாறாக இப்போது ஊரில் ஒரே குதூகலமும், பரபரப்பும், சந்தோஷமும் இன்ஸ்பெக்டரின் தீர வீரத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதுமாக ஆகிவிட்டது.'

கிழவர் கைதியான பிறகு தன் குற்றம் பூராவும் அறிந்து விசனப்பட்டு, அழுது அழுது துடித்தார். மைதிலியைத் தான் நடத்தி அநியாயம் செய்ததெல்லாம் அப்போதுதான் அவருக்குக் கண்ணாடியின் முன்பு தெரிவதுபோல் தோன்றியது. அதனால் அவளைப் பார்க்கவும் அவர் விரும்பாது தன்னையே தான் நொந்து கொண்டு உருக வாரம்பித்தார். எங்கோ கேட்கும் அற்புதமான கானத்தின் மகிமையையும் பிறகே உணர்ந்தார். கையிலிருந்த பால் கீழே கொட்டிய பிறகு இனி ஜாக்கிரதையைப்பற்றி நினைத்து என்ன பலன் ?

“ஐயோ! மைதிலி என்ற தளிரைத் தீயில் போட்டுப் பொசுக்கி விட்டேனே! அவள் வயதில் சிறுமியாயிருந்தபோதிலும் மகா உத்தமியாயும், அறிவாளியாயும், நெருப்பைப்போல் கற்பில் சிறந்தவளாயும் இருந்த மகிமை இப்பாவிக்கு அப்போது தெரியாமல் போய், அவளைப் பலவிதத்திலும் சந்தேகித்துச் செய்யாத இம்சையும் செய்து, படுத்தாத பாடும் படுத்திய சண்டாளன் அல்லவா நான்? மூளையே கலங்கி விடும்படிச் சிதற வடித்த பாவம் என்னைவிட்டுப் போகுமா?

மகா உத்தமியான வேணியின் வதை என்னைத் தாக்காமலிருக்குமா? என் காம புத்தி எனக்குத் தெரியாது மூர்த்திக்குத் துரோகம் செய்த சதி என்னைச் சுட்டுப் பொசுக்காமலிருக்குமா? ஐயையோ! மகா மானியாயும், பாரத நாட்டு நாரீமணிகளின் சிறந்த ஒழுக்கத்தை உடையவளாயுமிருந்ததாலன்றோ மைதிலி இதுபரியந்தம் என்னைக் காட்டிக் கொடுக்காமலிருந்தாள். உபயோகமற்ற இப்பாவி, அவள் வாழ்க்கையைக் குலைக்கும் எமனாக ஏற்பட்டிருந்தும், புருஷன் என்ற பதத்திற்கு மதிப்பும் கௌரவமும் கொடுத்து, என்னைக் காட்டிக்கொடாதிருந்த மகிமையைச் சற்றும் அறியாது, ‘அவள் உயிருடனிருந்தால் ஆபத்து வந்துவிடும். அவளையும் ஒழித்து விடவேண்டும்’ என்றல்லவா மகா பாவியும், சண்டாளனுமான நான் நினைத்தேன்.

கொலைக்கும் அஞ்சாக் கொலை பாதகனைக் காத்த உத்தமி என்ற மகிமையைச் சிறிது அறிந்திருப்பின் இந்தக் கதி வந்திருக்குமா? ஐயோ! இனி அந்தப் பரதேசியின் கதி என்னவாகும்? நெருப்பை ஈ மொய்ப்பதாக எண்ணி, பலர் முன்பு தாறுமாறாகத் திட்டி விட்டேனே! வழியில் அவள் சென்ற கண்றாவியைக் கண்டால், தற்கொலை புரிந்துகொண்டுவிடுவாள் போலிருக்கிறதே. ஹா! இனிமேல் என்ன கதறி என்ன பயன்? அந்த உத்தமி இந்தப் பாவியைப்பற்றி என்ன நினைக்கிறாளோ!

ஐயோ! இப்போதுதான் அவளுடைய தாயார், குழந்தை மைதிலியை, என் தாயின் கையில் கொடுத்துக் காப்பாற்று என்று..

கூறிப் பிராணனை விட்டதுபோலிருக்கிறது. அந்தக் காலத்தின் வாக்கை அடியோடு மறந்து, அந்த உத்தமிக்குத் துரோகம் நினைத்த சண்டாளத்தனம் என்னைச் சும்மா விடுமா? இதுதான் அவைகளுக்குப் பலன். நம்பி ஒப்புவித்த குழந்தையை நாசம் செய்தால் அது தெய்வத்திற்குப் பொறுக்குமா?

ஐயோ! மகா தேசோத்தாரணஞ் செய்யும் புனிதமான காங்கிரஸ்காரர்களைத் தூஷித்தும் அவமதித்தும் பாழானேனே! அவர்களைப்போல் நான் கவுரவமான பேரால் சிறைக்கு வந்தேனா! திருடன், கொலைகாரன், மோசக்காரன் என்ற அவமான கவசத்திற்குள் அல்லவா நான் கிடக்கிறேன். ஐயோ! இந்த உணர்ச்சி சற்று முன்பு வரைக்கும் இல்லாது போய்விட்டதே!" என்று பல விதமாக எண்ணி மனங் குழம்பிப் போய்விட்டார்.

அதே சமயம் ஏகாம்பரம் அங்கு வந்தார். கிழவரின் முகத்தைப் பார்த்ததும் வெறுப்பும் அதிருப்தியுமே உண்டாகியது. "என்ன யோசிக்கிறீர் தாதா! மன்மதபாண சஞ்சீவியும் லேகியமும் ஒணுமா?" என்றார். கிழவரின் மானம் சிந்திப்போய்விட்டது. பரிதாபமாகக் கண்ணீர் பெருகியவாறு, "ஐயா! எரியிற அடுப்புலே எண்ணெயே வார்க்காதெங்கோ! எல்லா பாணமும் ஒன்னு சேந்துதான் என்னை வதைக்கறது. தயவு செய்து ஒரு காகிதம் பேனா வேணும். ஒரு கடுதாசி எழுதித் தரேன்; அதை மைதிலி கிட்டெ குடுத்துடுங்கோ" என்றார்.

உடனே காகிதம் பேனா கொடுக்கப்பட்டதும் விருவிரு வென்று கிழவர் ஒரு கடிதம் எழுதி, ஏகாம்பரத்தினிடம் கொடுத்தார். ஏகாம்பரம் அதைப் பார்த்துவிட்டு மைதிலிக்கு அனுப்பி விட்டார்.

69

"ஏற்கெனவே துர்ப்பிணி, மேலும் கர்ப்பிணி" என்பது போல் மைதிலிக்கு ஏற்கெனவே இருந்த கஷ்டத்திற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் கிழவரின் குட்டு வெளியாகிக் கைதியாயும் செய்துவிட்டதானது அவளால் தாங்கமுடியாத பெரும் வேதனையை யுண்டாக்கி விட்டது. சாதுவின் உபதேசமாகிய அமிருத வசனங்களின் சக்திதான் அவளுடைய உயிரையாவது போக்காது நிலைக்கச்

செய்தது. சாதுவிடமிருந்து நேரே வீட்டிற்கு வந்து விழுந்தவள் கண்ணையே திறக்கவில்லை.

ஆயிரம் வாள் கொண்டு அவள் நெஞ்சை அறுக்கிறது. இச்சமயம் தன்னைத் துக்கம் விசாரிக்க வருவதுபோல் வந்துவிடும் மனிதர்களுக்குத் தான் என்ன பதில் சொல்வது என்ற விசனம் அவளைப் பெரிதும் பாதித்து வாட்டியது. கலங்கிப்போய் புரண்டு கொண்டே கருப்பனையும் காத்தாயியையும் கூப்பிட்டாள்.

மைதிலி :—கருப்பா! தாதா போகும்போது என்னவாவது சொன்னாரா!

கருப்பன் :—ஒன்னுமே இல்லேம்மா! இதோ பாருங்கோ! ஏதோ கடுதாசி எழுதினுங்க. அதுக்குள்ளற அந்தப் போலீஸ் காரன் வந்துட்டானுங்க—என்று கிழவர் எழுதிய கடிதத்தைக் கொணர்ந்து காட்டினன். மைதிலி அதைப் படித்ததும் முன்னிலும் அதிகரித்த விசனத்துடன் துடித்தாள். "ஹா! தீன சரண்யா! இந்த ஓர் பெரிய அபாண்டப் பழியிலிருந்தும், அவமானத்திலிருந்தும் காத்த உன் கருணையை என்னென்று சொல்வது? நிரபராதியான தலைவனையும் ஆசிரமத்தையும் இப் பாவியால் சிதற அடிக்காமல் காப்பாற்றினையே" என்று கடவுளை நோக்கித் தொழுதாள். "கருப்பா! நாம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயி, தாதாவைப் பாத்துட்டு வரலாமா! எது எப்படி இருந்தாலும் பார்க்கவேண்டியது என் கடமை இல்லையா!" என்றாள்.

அதே சமயம் ஒரு போலீஸ் ஜவான் கடிதம் ஒன்றைக் கொணர்ந்து, " அம்மா! மைதிலியம்மாள் நீங்கதானே! வேதாசலம் இந்தக் கடிதத்தைக் குடுக்கச் சொன்னர் " என்று கொடுத்து விட்டுப் போய்விட்டான். மைதிலி பரபரப்புடன் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

" என் பிரிய மைதிலீ!

நான் மகாபாவி! கொடும் பாதகன்! சண்டாளன். இளந்தளிராகிய உன்னைத் தீயிலிட்டுப் பொசுக்கி விட்டேன். நான் துரோகம் செய்தவை எல்லாம் ஒன்று கூடி என்னைத் தாக்கிவிட்டது. உன்னுடைய அரிய புத்திமதிகளை ஏற்காமலும் உனது தூய உள்ளத்தை யறியாமலும் பாதகனுகிவிட்டேன். இனி சொல்வதில் உபயோகமில்லை. என் கர்மத்தை நான் அனுபவித்தே தீரவேண்டும். சத்தியம் உண்டு. கடவுள் ஒருவன் உண்மையான சட்டம் விதிக்கும் கர்த்தன். அவன்

சட்டம்தான் ஜெயிக்கும் என்பதை இப்போதே உணர்ந்தேன்.

மைதிலீ! நீ மகா பதிவிருதை; உத்தமி. பாரத நாட்டின் புகழுக்கு மெருகு கொடுக்க வந்த மாணிக்கம். ஆகையால் உன்னை இப்பாவி பார்க்க இனி சகியேன். இந்தக் கசடன் உன் முகத்தில் விழிக்க அருகதை இல்லை. ஆகையால், நீ இங்கு வாராதே! என்னைப் பார்க்காதே! என்னைப்பற்றி இனி நீ நினைக்காதே. ஆனால் ஒன்று மட்டும் செய்ய வேண்டுகிறேன். இப்பாவியின் பாவங்களை க்ஷமிக்கும்படி, இறைவனைப் பிரார்த்தனை செய்து எனக்காக வேண்டு. அதொன்றுதான் எனக்காக நீ செய்ய வேண்டியது.

மைதிலீ! 'நான் வீட்டிற்கு வந்தால் வீடும் ஆசிரமமாகிவிடும்' என்று நீ கூறியதின் மகிமையை இப்போதுதான் என் உள்ளம் அறிகிறது. உன்னிஷ்டப்படியே அந்த வீட்டை நீ ஆசிரமமாகச் செய்து தேச சேவையை மனப்பூர்வமாக நடத்து. பாவி நான் துவம்ஸம் செய்து மிஞ்சிய செல்வத்தைப் பரோபகாரத்திற்கே அர்ப்பணம் செய்துவிடு. இதுதான் என் வேண்டுகோள். இந்தப் புத்தி முன்பே இருந்தால், நானும் அந்த ஆநந்தமான கைங்கரியத்தைச் செய்து மகிழ்ந்து அதன் மூலம் கம்பீரமாகச் சிறைக்குச் சென்றிருப்பேன். மகா பாவியாகையால், எனக்கு இதுதான் கதி. என்னை மறந்துவிடு. இங்கு வாராதே. கடவுள் உன்னைக் காப்பாராக. இனியாவது நீ மனச் சாந்தியுடன் இரு.

இங்ஙனம்,
வேதாசலம்"

இதைப் படித்த உடனே மைதிலியின் தலை சுழன்றது. உலகமே இருண்டு போய் அந்தகாரமாகி விட்டது. "ஹா! பகவானே! கடவுளே!" என்று ஒரு சத்தமிட்டாள். அதே சமயம் வாஸந்தி, ராஜு, தலைவன் மூவரும் வந்தார்கள். "மாமீ! மாமீ! தாதாவெ புடிச்சிண்டு போயிட்டாளாமே. தாதாவும் மாயக் கொள்ளெலெ சேந்துட்டாராமே. ஐயோ! என்ன செய்றது மாமீ!" என்று வாஸந்தி மைதிலியைக் கட்டிக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

தலைவன்:—(தலை குனிந்தபடியே கண்ணீர் பெருக). அம்மணீ! என்னை மன்னிக்கணும். இப்படியொரு சோதனை வந்தது பற்றி என் மனம் துடிக்கிறது. எல்லாம் வேளையின் கூத்து.

மைதிலி:—ஐயா! சோதனைக்கென்றே கடவுள் இந்தப் பாவியைப் பிறப்பித்தான். நீர் மகா உத்தமர். உம்மேல் என்ன குற்றம்? எல்லாம் என் தலைவிதியினால்தான்—என்றாள். அதற்கு மேல் அவளால் பேச முடியாமல் சோர்ந்து துவண்டு போய் விட்டாள்.

70

கமிஷனர் ஆபீஸிலேயே உட்கார்ந்திருந்த கிழங்களைக் கமிஷனரிடம் முறைப்படி கொண்டுபோய்ப் பரிசோதித்துவிட்டுப் பிறகு லாக்கப்பிற்கு அழைத்துச் சென்றார்கள். இவர்களை ஜாக்கிரதையாய்க் கொண்டு போய் லாக்கப்பில் போடும்படி ஏகாம்பரம், சப்-இன்ஸ்பெக்டருக்கு உத்தரவிட்டுவிட்டுத் தன் ஆபீஸ் ரூமில் வேலை செய்து கொண்டிருந்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் இரு கிழங்களையும் கமிஷனர் ஆபீஸிலேயே பின்புறமாயுள்ள லாக்கப்பிற்குப் பாராவுடன் அழைத்துச் சென்றார். அம்மன் கோயிலுக்குச் செல்லும் ஆட்டுக்கிடாக்களைப் போல் இரு கிழங்களும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே சென்றார்கள்.

தீய வழியில் எத்தனை பலமாகக் கிழவரின் மூளை வேலை செய்ததோ அது இப்போது மட்டும் ஓய்வெடுத்துக் கொள்ளுமா? அவருடைய கண்கள் சப்-இன்ஸ்பெக்டரின்மீதே ஆழ்ந்திருந்தன. இன்ஸ்பெக்டர் பின்னால் வருகிறார். முன்னால் இரண்டு ஜெவான்கள் சென்று, பூட்டைத் திறந்து கொண்டிருந்தார்கள்.

யாரும் சற்றும் எதிர்பாராத விதமாய் வேதாசலம் முன் சென்றவர் திடீரென்று பின்னால் ஒரு சுழல் சுழன்று திரும்பி சப்-இன்ஸ்பெக்டரின் ஜேபியிலிருந்த ரிவால்வரை இமைப்பொழுதில் வெடுக்கென்று எடுத்துக்கொண்டு, அதைக் கையில் பிடித்தபடியே சப்-இன்ஸ்பெக்டரின் முன்பே நீட்டிப் பயமுறுத்தினார்.

சப்-இன்ஸ்பெக்டரும், சேவகன்களும் நடு நடுங்கி பயந்து போய், குய்யோ முறையோ வென்று கத்திக் கொண்டே கிழவரைப் பிடிக்க வருவதற்குள், கிழவர் துப்பாக்கியை அவர்கள் பக்கமாகவே காட்டிப் பயமுறுத்தியபடியே, இமை கொட்டும் நேரத்தில் தன் மார்புக்கு நேரே பிடித்து தடாரென்று சுட்டுக் கொண்டு, வெட்டிச் சாய்த்த மரம்போல் கீழே விழுந்துவிட்டார்.

விநாடிப் பொழுதில் நடந்துவிட்ட இந்த அதிபயங்கரமான சம்பவத்தினால் எல்லோரும் நடு நடுங்கிப் போய் விட்டார்கள். தன்னறையில் வேலை செய்து கொண்டிருந்த ஏகாம்பரம் டமீர் என்று துப்பாக்கி வெடி சத்தம் கேட்டதும், அலறி யடித்துக் கொண்டு எழுந்து, உள் பக்கம் ஓடி வந்து பார்த்தார். கிழவர் ரத்தத்தில் மிதக்கும் காக்ஷியும், மற்றவர்கள் நடுங்கும் பரிதாபமும் கண்டதும், அவர் கண்கள் சிவக்க "என்ன! என்ன?" என்று கேட்டார்.

சப்-இன்ஸ்பெக்டர் நடந்த விஷயங்களைக் கூறுவதற்குள் தவித்துக் கொண்டிருக்கும் வேதாசலம், "ஹா! கடவுளே! கடவுளே! என் பாபங்களை மன்னித்து விடு. மிஸ்டர் ஏகாம்பரம்! மூர்த்தி நிரபராதி. நானே என்னைக் கொன்று கொண்டேன். ஒருவர் மேலும் தப்பில்லை. ஈசா! நான் செய்த சரிதான்" என்று முணு முணுத்துக் கூறினார். பின்னும் சில நிமிடத்திற்கெல்லாம் கிழவர் மறு உலகத்திற்குப் போய்விட்டார். சப்-இன்ஸ்பெக்டரின் குலை நடுக்கலைக் கூற வேண்டுமா? அவர் அஜாக்கிரதையாய்த் துப்பாக்கியை வெளியில் தெரியும்படி வைத்திருந்தது குற்றமல்லவா என்று ஏகாம்பரம் அவரைத் திட்டினார். இச் செய்தி அந்தப் போலீஸ் ஸ்டேஷன் பூராவும் காற்றுபோல் பரவி விட்டது.

71

தற்சமயம் ஊரில் ஜனங்களுக்கு வேறு பேச்சே இல்லை. கல்யாண வீடு முதல் கச்சேரி வரையில் சகல இடங்களிலும் மாயக் கொள்ளைக் கூட்டம் பிடிபட்ட அதிசயமும், அவரவர்களின் சொத்துக்களைக் கூடுமான வரையில் திருப்பிக் கொடுத்துவிட்ட ஆச்சரியமும், எல்லாவற்றையும் விட தர்ஜி மூர்த்தியை நிரபராதி என்று கவர்ன்

மென்டாலே தீர்ப்பளித்து விட்டுவிட்ட சந்தோஷமும், கிழவரின் முடிவும் பற்றித்தான் எப்போதும் பேச்சு.

மூர்த்தி நிரபராதி என்று கூறி விடுதலை செய்த சமயம் அவன் இருதயம் சந்தோஷத்தால் பொங்கியதைக் கூறவேண்டுமா! ஆசிரமத்து வாசிகளே அவனை வரவேற்று ஆசிரமத்திற்கே அழைத்துக்கொண்டு வந்தார்கள். மூர்த்தி, குழந்தைகளைச் சேர்த் தணைத்துக் கொண்டு ஆனந்தப் பரவசனாகிவிட்டான். குழந்தை களும் தகப்பனாரைக் கட்டிக் கொண்டு இன்பக் கண்ணீர் பெருகிய வாறு "அப்பா! அப்பா! இனிமே எங்களே விட்டுப் போகவே மாட்டாயே?" என்று கேட்டார்கள்.

மூர்த்தி:—கண்ணு! போகவேமாட்டேன்—என்று கூறிக் கொண்டே, தன் தையல் மெஷின் அங்கு வைத்திருப்பதைப் பார்த்து அதனிடம் ஓடினான். குழந்தையை விட அருமையாக எண்ணும் அந்த மெஷினைப் பார்த்த உடனே பழைய கதைகள் எல்லாம் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்துவிட்டன. அவன் கண்கள் நீரைச் சொறிந்தபடியே அதற்கு நேரே மாட்டப்பட்டிருந்த வேணியின் படத்தின்மீது பாய்ந்தன. அதிலேயே லயித்துப் போய் சற்று நேரம் நின்றான். பின்னர்தான், சிறிது தெளிவு கொண்டு குழந்தைகளைப் பார்த்தான்.

வாஸந்தி:—அப்பா! அம்மா படத்துக்குத் தினம் நாங்க ரெண்டு பேரும் நமஸ்காரம் பண்ரோம்பா! அப்பா! மாமியெ பாக்கலாம் வாப்பா!—என்றாள். மூர்த்தியும் மைதிலியைப் பார்க்க அவாக்கொண்டிருந்ததால், குழந்தைகள், தலைவன் எல்லோ ருடனும் மைதிலியின் வீட்டிற்குச் சென்றான்.

அப்போது மைதிலி, கருப்பன், காத்தாயி மூவரும் ராட் டினங்களில் நூல் நூற்றுக்கொண்டே இருந்த காட்சியைக் கண்டு மூர்த்தியின் உள்ளம் உருகியது. வாஸந்தி, "மாமீ! மாமீ! எங் கப்பாவே ஜெயில்லேந்து விட்டுட்டா மாமீ! இதோ ஒங்களே பாக்க வந்திருக்கா" என்று சந்தோஷத்துடன் கூறினாள்.

மைதிலியின் முன்பிருந்த தோற்றமும் இப்போதிருக்கும் தோற்றமும் கண்ட யாருடைய மனந்தான் கொதிக்காது. பற்றி எரியாது. பால்மணம் மாறாத பச்சைக் குழந்தை என்றால் அவளுக்கே தகும். அத்தகைய செல்வச் சிறுமி இந்தப் பாழும் கிழத்தின் வஞ்சனையால் விதவை என்ற கொடிய பயங்கரப் போர்வைக்குள் அமுங்கிப் போய் மங்களகரமற்ற தோற்றத்துடன் காட்சியளிப்பதை மூர்த்தியால் கண்டு சகிக்க முடியவில்லை.

சில விநாடிகள் அப்படியே தம்பித்துக் கண்ணீர் பெருக நின்றுவிட்டான். பேச முடியவில்லை. இதற்குள் மைதிலி ஒரு விதமான சோகச் சிரிப்பு சிரித்தபடியே "ஐயா! என் இத்தனை துக்கம்? கள்ளனின் பெண்டாட்டி என்னிக்கும் கைம்பெண்தான். அதோடு கிழவனின் பெண்டாட்டியும் என்றும் கைம்பெண்தான்—இரண்டும் ஒன்று சேர்ந்த இடத்திலே அதிசயமொன்றுமில்லையே! அண்ணா! உங்களுக்கு அவர் செய்த தீங்குகளுக்கெல்லாம் நான் மன்னிப்பு வேண்டுகிறேன். பொறுமைக்கே இருப்பிடமான நீங்கள் அவர் ஆத்மா சாந்தியடையும்படி மன்னித்து, இந்த ஏழைச் சகோதரிக்கு ஒரு ஆதரவாயிருந்து காப்பாற்றவேணும். வேணுவும், குழந்தைகளும் கூட இங்கேயே இருக்கும்படி சொல்லி விட்டேன். எல்லோரும் ஒன்றாக தேச சேவை செய்து காலத்தை ஓட்டுவோம். இதைத் தவிர இனி இன்பமளிக்கக்கூடியது என்ன இருக்கிறது?" என்றாள்.

மூர்த்தியின் துக்கம் வெகு நேரம் அடங்காமல் ஆறு பொங்கி விம்மி வடிந்தது. "சகோதரி! நீ எங்களுக்காகச் செய்த பேருபகாரத்திற்கு நான் எந்த வழியில்தான் நன்றியைத் தீர்ப்பேன்? நான் மன்னிப்பதாவது. அவரவர் செய்த பாபத்திற்குக் கடவுள் தண்டித்தார். எல்லாவற்றையும் அவனே மன்னிக்கும் கர்த்தனாயிருக்கையில் நாம் என்ன செய்யக் கிடக்கிறது? அவன் விட்ட வழியே செல்வோம்.

72

கார்த்திகைப் பண்டிகை. எங்கு பார்த்தாலும் குதூகலமான இன்பம் தாண்டவமாடுகிறது. பட்டாஸின் இனிய ஒலியும், பாணங்களின் இன்ப ஒளியும் பசங்களைக் கவர்ந்து ஆனந்தத்தை ஊட்டுகிறது. மேலே குறிப்பிட்ட சம்பவம் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. மைதிலியின் வீடு ஓர் குட்டி ஆசிரமமாக மாறிவிட்டது. பல ராட்டினங்களின் இன்ப ஒலியானது மதுவையருந்திய பின் ரீங்காரம் செய்யும் வண்டின் இனிய நாதம்போல் சப்திக்கின்ற

சப்தத்தைக் கேட்டதே தன் துக்கமெல்லாம் மறந்து தன் வாழ்க்கையின் இன்ப நாதம் இதுதான் என்று ஆனந்தகரமாய் ஐக்யமாகி விட்டாள்.

கார்த்திகைப் பண்டிகை யன்று யாருடைய மனமும் இன்ப மயமாயிருந்தபோதிலும் மைதிலியின் மனமும், மூர்த்தியின் மனமும், குழந்தைகளின் மனமும் சில வருடங்களுக்கு முன்பு நடந்த கார்த்திகையின் ஞாபகத்தை மறக்கமாட்டாது எண்ணிக் கண்ணீர் சிந்தும்படிச் செய்துவிட்டது. ஒரு பட்டாசுக்காக அன்று பதறித் தவித்த வாஸந்தியும், ராஜுவும் தங்கள் கையினால் இன்று சுதேசி மத்தாப்புக்களையும், வாணங்களையும் ஏழைக் குழந்தைகளுக்கு ஏராளமாக வாரிக் கொடுத்தார்கள். ஆனால் அந்த இறந்த காலத்தின் உணர்ச்சி அவர்களைப் பாதிக்காமலிருந்ததா? தன் தாயாரை நினைக்காமலிருக்க முடிந்ததா? தந்தை அடி பட்டதை எண்ணாமலிருக்கச் சாத்தியமா? அவைகளை நினைந்து உருகியபடியே இன்று ஆனந்தத்தையும் அனுபவித்தார்கள்.

மாலை நேரம் எங்கு பார்த்தாலும், தீபாலங்காரமும் கோலமும் பிரகாசிக்கின்றன. ஆசிரமத்திலிருந்து மைதிலி, வாஸந்தி, மீனாக்ஷி உள்பட எல்லோரும் வழக்கம்போல் மாலை ஊர்வலம் கிளம்பினார்கள். இனிமையான தேசீய கீதத்தை மைதிலி பாடவும் அவளுடன் எல்லோரும் பின் பாட்டுப் பாடவும் ஆனந்தமாக ஊர்வலம் செல்வதைக் கண்ட ஏகாம்பரமும், கற்பகமும் உள்ளம் பூரித்துப் பரவசமுற்றுத் தம்மை யறியாது, அவர்கள் வந்தே மாதரம் என்றபோது தாமும் 'வந்தேமாதரம்' என்று கூறினார்கள். 'மகாத்மா காந்திக்கு ஜே! பாரத மாதாவுக்கு ஜே' என்ற கோஷம் வானையளாவியது.

> " கடவுள் ஒருவனே காத்திடும் கர்த்தனும்
> திடமுட னறிந் தவன் சேவடி போற்றிடில்
> இடர்க்கடல் நீந்திடுவோம். " (தூய்மை)

அதே சமயம் முன்பு தெரிவித்த சந்நியாசி வழக்கம்போல் பாடும் கானத்தைக் கேட்டதும் மைதிலி முதலிய எல்லோரும் மெய்ம்மறந்து அப்படியே ஆனந்தப் பரவசம் அடைந்தவர்களாய் அசைவற்று நின்றுவிட்டார்கள். மைதிலி தன் உள்ளத்தை ஆதி முதல் கொள்ளை கொண்டு, அவளுடைய வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஓர் கருவிபோன்றமைந்த அதே நாதத்தினிடம்—கானத்தினிடம்—லயித்துக் காதல் கொண்டாள் என்றால் மிகையாகாது. அத்தகைய கானத்தைக் கேட்டு இன்புறுவதற்கே அவளுடைய ஆத்மா அலைந்துகொண்டிருந்தது. மைதிலியின்

வாழ்நாளில் அவள் என்றாவது ஆனந்தம் என்ற ஒன்றை அனுப வித்திருக்கிறாள் என்றால், அது இந்த அற்புதமான சக்தி வாய்ந்த கானத்தை இன்றி வேறில்லை. துன்பத்தை யோட்டும் துணைக் கருவியாயும், இன்பத்தை யூட்டும் இணையிலா நேசனாயும், அறிவை விளக்கும் அரிய குருவாயும், அஞ்ஞான இருளைப் போக்கும் ஒளி யாயும் அமைந்திருந்த கானச் சுடரமுதை உண்பதற்கே சதா காலமும் காத்திருந்தாள். அனித்யமான பொருள்களின்மீதும், அல்ப சுகத்தை யளிக்கும் சிற்றின்பத்தின்மீதும் அவளது சிறிய மனம் நாடாதது வியப்பிலும் வியப்பல்லவா! அவளுடைய காதல் தெய்வீகமான காதல்; கரைகாணாத பேரின்பக் களஞ்சியத்தில் புகும் காதல்; பகவானை இடைவிடாது துதிக்கும் இன்பக் காதல்; கானாம்ருதத்தில் மிதக்கும் கண்ணியக் காதலில் மூழ்கிப் பரவச மானாள். ஆதலால், அந்த கான மழையினால் மைதிலியின் வாடிப் போன பயிருக்கொப்பான மனம் துளிர்த்தது. ஆனந்தத்தால் அவ்விளந்தளிர் காற்றில் அசைவதுபோல் அவள் மனம் இன்ப எழுச்சியினால் ஆடியது. வானம் மப்பு மந்தாரமில்லாமல் துல்லிய மாக இருந்தது. பூர்ண சந்திரன் பிரம்மானந்தமான தோற்றத் துடன் கீழ்த் திசையில் நகை முகத்துடன் தோன்றினான்.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

"ஜகன்மோகினி" பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.